
நீங்காத
நிலா
காஞ்சனா ஜெயதிலகர்

# நீங்காத நிலா

## 1

குனிந்து ரயிலோடு கூட ஓடி வந்த அப்பாவைப் பார்த்தாள் தேனுகா - அதுவரை ஒளிந்திருந்த பந்து திடீரென எம்பி அவளது தொண்டையை அடைத்தது.

"வரேம்ப்பா... நீங்க ஓடாதீங்க..."

ரயிலின் கம்பிகள் ஊடே கை நீட்டி ஆட்டியபடி கத்தினாள்.

அப்பாவின் கண்களில் மெல்லிய நீர்த்திரை.

முகமெல்லாம் வியர்வையுடன் கசங்கிய கதர்சட்டை... ஆனாலும் கசங்காத புன்னகை. புன்னகைக் கலைந்த அவர் முகத்தை அவள் பார்க்க நேர்ந்ததில்லை. பெரிதாய் எல்லாம் சிரிக்க மாட்டார்.

இளம் வயதிலேயே மனைவியை இழந்து ஒரு பெண் குழந்தையுடன் விடப்பட்ட நடுத்தரத்திற்கும் சற்று கீழுள்ள வர்க்கத் தகப்பனுக்கு வாய் விட்டு சிரிக்கச் சந்தர்ப்பம் எங்கே?

தனியார் நிறுவனம் ஒன்றில் கணக்கராய் வேலைப் பார்த்தவரால் மகளுக்கு படிப்பு தர முடிந்ததே ஒழிய பவுசான வாழ்க்கையைக் காட்ட முடியவில்லை.

தேனுகா புத்திசாலி குழந்தை மட்டுமல்ல குணசாலியும் கூட. வானத்து நட்சத்திரங்களை அவள் கேட்டதில்லை. கலர் பென்ஸில் டப்பா, முழம் பூ, அரை டஜன் கண்ணாடி வளையல்கள், பள்ளியின் புது வகுப்பில் பழைய புத்தகங்கள் தான் என்றாலும் புது நோட்டுக்கள், அப்பாவோடு கடற்கரைக் காற்றில் சாப்பிடும் சுண்டல் - இவற்றிலேயே திருப்தி கண்டவள்.

ஆனால் எளியவளான அவளுக்குள் நுண்ணிய கலை உணர்வு ததும்பிக் கிடந்ததை பள்ளி ஆசிரியைகள் கண்டு, அதற்கான மேடை சந்தர்ப்பங்களை அளித்தார்கள்.

சகுந்தலை, கண்ணகி, காரைக்கால் அம்மை, நவீன நாடக நாயகியர் என்று பல பாத்திரங்களை ஏற்றவள் தன் திறமையையும் பட்டைத் தீட்டிக் கொண்டாள்.

மாலை டிபனுக்கு அப்பாவிற்குப் பிடித்த ரவை தோசை ஊற்றி, பரிமாறியபடியே கேட்டாள் -

''அப்பா, நான் நடிப்புப் பழகணும்... அதாவது படிக்கட்டுமா?''

''அதான் உனக்குள்ளே ஊறியிருக்கேம்மா.''

''அதில்லை.. தரமணியில் அதற்கான கல்லூரியே இருக்காம்...''

''அதெல்லாம் நமக்கெதுக்கும்மா?''

''ஆசையாய் இருக்குப்பா'' என்று சொல்ல முடியாமல் தலை கவிழ்ந்தாள்.

''ஆகக்கூடிய கதையாய் பாரும்மா. உனக்குக் கணக்கு அருமையாய் வருது. காமர்ஸ் படி - நம்ப கம்பெனியின் கணக்கு வழக்குப் பிரிவிலேயே உனக்கும் வேலை வாங்கிடலாம்.''



''சரிப்பா...'' - முணங்கினாள்.

பி.காம். படிக்கும் போதே கம்பெனியில் பகுதி நேர வேலை அமைய, வந்து எட்டு நூறுகள் உதவியாகவே இருந்தது. படிப்பின் அருமை புரிந்து முழு மூச்சாய் படித்தாள். அதே சமயம் கல்லூரி மேடையிலும் இவள் திறமை பளிச்சிட... அந்த வாய்ப்பு வந்தது.

''தேனுகாவாம்மா..? இயல்பாய், அழுத்தமாய் நடிக்கறேம்மா...'' மேடை ஏறி பாராட்டிய பெரியவரை வணங்கினாள்.

''என் பேர் நெடுமாறன். நாடகக் குழு ஒன்று நடத்தறேன் - வெளி நாடுகளுக்கும் போயிருக்கோம் - வீதி நாடகமும் நடத்துவோம்.''

''நல்லதுய்யா...''

''எங்கக் குழுவில் சேர்ந்திடேம்மா...''

''எங்கப்பா சம்மதிக்க மாட்டாங்க.''

''அப்ப... உனக்குச் சம்மதம் - அப்படித்தானே?''

''எனக்கு நடிப்பு பிடிக்கும்.. நான் ரசித்துச் செய்யக் கூடிய ஒரு... அல்லது ஒரே விஷயம்னு வைங்களேன். ஃபிலிம் இன்ஸ்டியூட்டில் சேரணும்னு ஆசை... ஆனா அப்பா அனுமதிக்கலை.''

ஒரு புதுநபரிடம் இத்தனை பேசியது பற்றி அவளுக்கே ஆச்சரியம்தான். ''அதுவும் நல்லதுக்குத்தாம்மா - அங்கே மூணு வருஷம் படிச்ச பிறகு அதற்குப் பொருந்தாமல் இடுப்பை வளைச்சு ஆடணும் - ரெண்டே சீன்ல அரை குறையாய் வந்து நின்னுட்டுப் போக அது எதுக்கு? எங்கக் குழுவில் சேரு - முதல்ல சின்னதாய் சில ரோல்ஸ் செய். எந்த

லைட் மேடையில் எந்தப் பகுதியில் விழுது... நாம அங்கே எந்தக் கோணத்தில் நிற்கணும். எங்கே பார்த்து எவ்வளவு உரக்கப் பேசணும், உடல் அசைவு, உடுத்தும் முறை எல்லாம் பழகிக்கலாம்...''

''நல்லதுய்யா... ஆனா அப்பாட்ட..''

''நான் வந்து பேசறேன்.''

நெடுமாறன் அப்பாவிடம் வந்து பேசி மசித்தும் விட்டார்!

முதன் முறை 'மாறன் நாடக மன்ற'த்திற்குள் போன வளுக்கு புல்லரித்துப் போனது!

ஒருபுறம் இருவர் வசனம் பேசியபடி இருக்க, மறுபுறம் போர்க்களத்திற்கான ஒத்திகை உக்கிரமாய்...!

''கல்கியின் சரித்திர நாவலம்மா - அதன் ஒரு பகுதியை மட்டும் அனுமதி பெற்று நாடகமாக்கியிருக்கோம். இன்னும் 15 நாட்களில் பெரிய மைதானத்தில் நாலு வித செட்ஸ் போட்டு அரங்கேறும். ஒரு அரைவட்டம் மேடையாகவும் மற்ற பாதி பார்வையாளர் அரங்கமாயும் இருக்கும். காட்சிக்கு ஏற்ப அந்தந்தப் பகுதி மட்டும் ஒளியேற்றப்படும்.''

''அருமையாய் இருக்கும்'' - ஆர்வமானாள்.

''தினம் வந்து இங்கு நடக்கும் ஒத்திகையைக் கவனி. மறுவாரத்திலிருந்து ஓரளவு ஒப்பனையோடு ஒத்திகை அந்த அரங்கிலேயே நடக்கும். இவங்க ஒப்பனை போடறப்ப, உடுத்தறப்ப ஒத்தாசையாய் நில்லு. சரித்திர நாடகத்தில் கங்கணம், வங்கி, பில்லாக்கு, கழல் எல்லாம் உண்டு... கவனி... பிறகு.''

அவர் கோடு போட, இவள் கோலம் இழுத்து விட்டாள்.

அவளது ஆர்வம் அப்படி.



அலுவலக பகுதி நேர வேலையோடு, படிப்பு, நாடக ஒத்திகை என்றால் கடுமையாய் உழைக்க வேண்டியிருந்தது.

அதற்கு அவள் தயங்கவில்லை.

சில மாதங்களில் ஓரளவு முக்கிய பாத்திரங்களில் நடித்தாள். பஞ்சகச்சத்திலிருந்து கண்டாங்கி கட்டுரை வரை அத்துப்படியானது.

நெடுமாறன் இதைக் கவனிக்கத் தவறவில்லை.

''ஒரு நடிகைக்கு நடன அடிப்படை இருக்கணும்மா. இங்கே வரும் சுதா மூர்த்தியிடம் சொல்லியிருக்கேன். ஞாயிறு காலை தேவலைன்னா - போய் அடிப்படையாச்சும் தெரிஞ்சுக்கோ...''

அன்று ஒரு நாள்தான் தேனுகா வீட்டு வேலைக்கென ஒதுக்கியது. சற்று அசந்து உறங்குவதும் அன்றுதான்.

அதையெல்லாம் பொருட்படுத்தாது ஒதுக்கினாள். சுதா மூர்த்தியிடம் ஓடினாள்.

புடவையை கணுக்காலுக்கு மேல் சற்று உயர்த்திக் கட்டியதும் அவள் தயங்கிக் கேட்ட முதல் கேள்வி -

''சுதாக்கா, உங்க ஃபீஸ்?''

''சிரமங்களோடு கத்துக்க வர்றே தேனு... ஆர்வமுள்ள உனக்குக் கற்றுத் தர்றதில் எனக்கும் திருப்தி. அது போதும் - ஆரம்பிப்போமா?''

''தைய்யா - தை.''

வீட்டிலும் வந்து 'தித் தித் தை' அடவைப் போட்டுப் பார்ப்பாள்.

கையும் காலும் ஒருங்கிணைய அசைவது சிரம சமாச்சாரம்தான் - ஆனால் அதுவே சவாலாயும் இருந்தது.

முதலில் உடற்பயிற்சி போலப் பழகி பின் சற்று நளினம் சேர்க்க சற்று நடனம் போலானது. போகப் போக பாதம் இடுப்பு, கைவிரல்கள், கழுத்து, கண், ஏன் புருவம்கூட இசைவாக இணைய குதூகலித்தாள்.

தன் நடை சற்று மாறியது புரிந்தது - ஒரு அழகான அழுத்தம் கொண்ட நடை.

ஒப்பனை பற்றிய அடிப்படை அறிந்த பின் அதிலும் சற்று மெனக் கெட, தோற்றத்தில் எளிய ஆனால் பளிச் மாறுதல்கள்!

குரல் தெளிவாகி கண்களில் தன்னம்பிக்கையின் சுடர். உதட்டில் தனக்குப் பிடித்தத் துறையில் தான் ஈடுபட்டிருப்பது குறித்த திருப்தி வளைவு.

ஏறக்குறைய ஒரு வருடம் ஓடிவிட திடும்மென ஒரு நாள் நெடுமாறன் இவள் வீட்டிற்கே வந்தார்.

''வாங்க ஸார்... இருங்க... என்ன குடிக்கறீங்க?'' - உற்சாகமாய் உபசரித்தாள்.

''காபி கொடும்மா - உன் அப்பாட்டப் பேசணும்...'' என்ற வர். சாவகாசமாய் அமர்ந்து பேசலானார். காலில் சக்கரம் கட்டியவராய் சுழலும் மனிதர் இப்படி காலாட்டியபடி பேசி யது அவளைக் குழப்பினாலும் அவர்கள் தனித்துப் பேசவே விரும்பியது புரிந்து ஒதுங்கினாள்... மனமெங்கும் பரபரப்பு.

கடைசியாய் நெடுமாறன் அழைத்து விஷயத்தை உடைத்தார். ''ஃபிலிம் பெஸ்டிவல் டெல்லியில் நடக்குதும்மா..''

''தெரியும் ஸார் - இம்முறை அக்டோபரிலேயே.''

''ம்ம் - நம்ப குழுவிலேருந்து பத்து பேர் போறோம் - அதில் நீயும் உண்டு.''



இவளுக்கு ஆனந்தத்தில் மூச்சடைத்தது.

ஆனால் அப்பாவின் முகத்தைப் பார்த்தாள்.

அதிலிருந்த ஏக்க இறைஞ்சலை உணர்ந்தவர் -

''காலேஜ் படிப்பு முடிஞ்சாச்சு - வேணும்னா போய்ட்டு வாம்மா.''

அனுமதி தந்தார் -

சந்தோஷ மிகுதியில் கண்ணைக் கரித்தது... மென்று மென்று விழுங்கினாள். ''சுந்தரம் சார்... உங்க பொண்ணு திறமைசாலி - அது ஒரு பக்கம் இருக்கட்டும்... நல்ல பொண்ணு. நாடகக்காரங்க பல பேர் பர்ஸனாலிட்டி யானவங்க... ஆனா யார்ட்டேயும் அநாவசியமாய் நின்னு பேச மாட்டா. ஆர்வமாய் பலதும் கத்துகிட்டா - மைக் அட்ஜஸ்மெண்ட் கூடத்தான்.

இது மாதிரியான பிள்ளைங்க வந்து உலகத்தரமான படைப்புகளைப் பார்க்கணும்... புரிஞ்சுக்கணும். இம்மாதிரி தீனி அவங்களை வளர்க்கும். இத்தனை சீக்கிரமாய் நான் யாரையும் அழைச்சுட்டுப் போறதில்லை... ஆனா தேனுகா விசேஷம்...''

ஆசி கூறுவதாய் அவள் தலையில் கை வைத்தார்.

தழுதழுத்த குரலை சமாளித்து,

''ஸார், டிக்கெட்... அங்கே தங்கும் செலவெல்லாம்?'' பெரும் தொகையெனில் அப்பா மறுக்கக் கூடும் என்ற ஆதங்கத்துடன் கேட்டாள்.

''அதெல்லாம் நம் குழுவின் செலவு. வர்ற 28-ம் தேதி தமிழ்நாடு எக்ஸ்பிரஸ்ல கிளம்பறோம். அக்டோபர் 12 திரும்பிடறோம் - சரியா?''

கிளம்பும் பரபரப்பில் பரவசத்தில் இருந்தவளுக்கு, இப்போதுதான்... தகப்பன் ரயிலின் கூடவே ஓடி வரும் போதுதான் உயிரான அவரை விட்டு, தமிழ் மணக்கும் நம்மூரை விட்டு, சாதம், பொரியல், காபி துறந்து பரிச்சய முகங்களற்ற தொலைவிற்குப் போகப் போவது உறைத்தது...

முழங்காலில் முகம் புதைத்து விம்மி அழுதாள்.

## 2

"அடடே... தேனுவை கெட்டின்னு நினைச்சது தப்புப் போலவே..." முதல் வகுப்புப் பெட்டியிலிருந்து வந்த மாறன் கிண்டலடித்தார்.

"அப்பாவை விட்டுப் பிரிஞ்சதே இல்லை, ஸார்..."

"மாசம், வருஷமாப் போறோம்? ரெண்டே வாரம்மா..."

ஈரமுகத்தை அழுந்தத் துடைத்தாள்.

"விழாவில் திரையிடப் போகும் படங்களின் அறிமுகப் புத்தகம் பார்த்தேன் - அதில் ஒரு சீனப்படம் நம்மூர் **'12B'** சாயலில் இருக்குது. அதாவது தண்டவாளமாய் போகும் இரட்டைக் கதை - நமக்குப் பிடிச்ச போக்கை நாம் எடுத்துக்கலாம்.

தேனுகாவின் விழிகளில் நீர் வற்றி, ஆர்வம் நிரம்பியது.

"ஒரு இட்டாலியன் சினிமா கூட பிரமாதமாய் இருக்குதாம் ஸார். தன் தாயை மாஃபியா கொலை செய்ததைக் கண்ட ஒரு சிறுவனின் மனச் சிதைவு, பிசைவு பற்றி..." - என்றாள்.

"அடடே நீயும் அந்தப் புத்தகத்தைப் பார்த்தாச்சா?"



"உங்க மேஜையில் இருந்தது - புரட்டினேன்."

பேச்சு உலக சினிமாவைக் கடைந்தது.

"அம்மாவைத் தேடும் குழந்தைக்கு கிலுகிலுப்பையைக் குலுக்கறது போல தேனுகாக்கு சினிமா பற்றிப் பேச, அழுகாச்சி மறந்தாச்சு..."

லதா கேலி செய்ய சிரிப்புப் பரவியது.

பேச்சும் சிரிப்புமாய் ரயிலைப் போலவே நேரமும் பறந்தது. வேளைக்கு உணவு, உறக்கம் என்றிருந்தது. 36 மணி நேர பயணத்தின் பிறகு அவர்கள் இந்திய தலை நகரில் இறங்கியது போல உடல், உள்ளம் முழுக்க புத்துணர்ச்சி!

தமிழ்நாட்டு தொழில் அதிபரின் விருந்தினர் மாளிகையில் தங்கிய அவர்களின் குழுவிற்கு அவரவர் பேரிட்ட அட்டையும், போக வர வாகனமும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

குளித்து ஆரம்ப விழாவிற்குத் தயாராகிப் போனவளுக்கு அங்கு திரண்ட கதம்பக் கூட்ட மக்களைக் கண்டு ஆச்சரியம்தான். அவர்களின் மொழி மட்டுமல்ல நாகரீகமும் கதம்பம்தான்.

நவீன நாகரீகத்தை உருவாக்கவும் காக்கவுமே பிறவி எடுத்தது போன்ற பகட்டான கூட்டத்தோடு, கசங்கிய குர்தா, ஜோல்னாப் பை சகிதம் அறிவு ஜீவிகளும் கலந்திருந்தார்கள்.

மூளை மழுங்கும்வரை ஒரு நாளைக்கு மூன்று, நான்கு எனப் படங்களைப் பார்ப்பதும், பின் அவற்றை அலசி விவாதிப்பதுமாய் ஐந்து நாட்கள் கழிந்த பிறகுதான் அவளுக்கு உறைத்தது -

"எங்கே மாறன் சாரைக் காணோம்?"

"அவர் சிநேகிதரைப் பார்க்கப் போயிருக்கார்."

''எங்கே?''

''சிம்லா!''

''அது ஹிமாச்சலப் பிரதேசத்திலேல்ல இருக்கு?''

''அதுக்காக கூப்பிட்டா இங்கே வருமா என்ன? தலைநகரே அதுதான். ஆக நாமதான் போகணும்'' - நக்கலடித்தான் விஸ்வாஸ்.

''எப்போ திரும்புவாராம்?''

''நாளை மறுநாள் வந்திடுவார் போல - விமான போக்குவரத்தும் இருக்குதே...''

''ஒரு வார்த்தை சொல்லலியே, ஸார்?'' - குறைபட்டாள்.

''பால்ய சிநேகிதமாம்... அதான்.''

''ஒரு வேளை சிநேகிதியோ... இல்லைன்னா ஏனிந்த ரகசியம்?''

லதா இழுத்தாள்.

''சந்தேகப் பிசாசே... யோகினைப் பார்க்கப் போயிருக்கார் - எழுத்தாளர் யோக தேவனை...''

''அடடே... இம்முறை சாகித்ய அகாடமி விருதுக்குக் கூட அவர் பேர் அடிபட்டுதே?''

''ரெண்டு, மூணு படைப்புகள்தான் - ஆனா பிரமாதமான எழுத்து...''

''நம்மையும் கூட்டிட்டுப் போயிருக்கலாம்.''

''ஆங்... இதுக்குத்தான் ஆசான் நழுவிட்டார். தவிர மணாலி கொள்ளை அழகாய் இருக்குமாமேன்னு ஆளாளுக்கு டூர் அடிக்கக் கிளம்பிட்டால்?''



''நாம வந்த வேலையைப் பார்ப்போம்ப்பா... உலகச் சினிமாக்களை இப்படி ஒரு சூழல்ல பார்க்கறதே பலர் கிடைக்காதான்னு ஏங்கற வாய்ப்பு - இருக்கறதை விட்டுப் பறக்கறதுக்கு ஆசை ஏன்?''

''இதெல்லாம் அன் - சென்சார்ட்... வேறு!''

''கிளுகிளுப்பை விட வயலன்ஸ்தான் அதிகம் - பதைக்குது...''

ஆனால் அடுத்த ஒரு மணி நேரத்தில் வந்த தொலைபேசி அழைப்பு மறுபடி சலசலப்பை உருவாக்கியது.

''என்ன தேனுகா சிம்லாவிற்குப் போகணுமா?''

''எதுக்காம் - மாறன் ஸார் சொன்னாரா?''

''தெரியலை - அவ சினிமா சுருளில் சுருண்டு கிடக்கிறா... விட்டுட்டுக் கிளம்புவாளா?''

''முக்கியமான செட் படங்களெல்லாம் பார்த்தாச்சே... தவிர யோகதேவன் பெரிய எழுத்தாளர்... சிம்லா போய் அவரைச் சந்திக்கறது சாதாரண வாய்ப்பா?''

விவரத்தைக் கேட்ட தேனுகாவிற்கு முதலில் திகைப்புதான். ஆனால் ஆளாளுக்கு விவரங்கள் சொல்லி ஊக்க, அவளுக்கே ஆர்வம் கிளர்ந்தது.

யோகதேவன் என்ற பெயர் பரிச்சயமாய் இருந்தாலும் அவர் எழுத்தை அனுபவித்ததில்லை...

ஆக ஏன் தனக்கு மட்டும் இந்த அழைப்பு?

ஆனால் கிளம்பத்தான் செய்தாள் - மாறனின் அழைப்பை மறுக்க மனமில்லை.

இரவு பத்து மணிக்கு டெல்லி ஸ்டேஷனில் ரயில் ஏற்றி விட்டார்கள். ''இது காலை ஐந்தரைக்கெல்லாம் 'கால்கா'

போகும். அங்கிருந்து ஒரு பொம்மை போலான சின்ன ரயிலில் ஏறினால் மூணு மணி நேரப் பிரயாணத்தில் சிம்லா'' - விவரம் சொன்னார்கள்.

அதிகாலை 'கால்கா'வில் சூடான சாய் பருகி, அழகான குட்டி ரயிலில் ஏறியவளுக்குள் இனம் புரியாத மகிழ்வு. ஒரு பெட்டிக்கு 12 நபர்களே - அதிலும் பெரும்பாலானோர் தேனிலவு ஜோடிகள். உற்சாகமாய் மலையேறிய ரயிலில் அமர்ந்தவள் கவனத்தை வெளியேயே வைத்தாள். உள்ளேயிருந்தவர்களில் கிசுகிசுப்புக்களும், கிளுகிளுவென்ற நகைப்பும், சின்ன உரசல்களும் இசகு பிசகான முத்தங்களும் இவளுக்கு மகா கூச்சமாயிருந்தது. ரயிலின் அசைவிற்கு ஏற்ப தன் இதயமும் தடதடத்தது போலிருந்தது... இனம் புரியாத இனிய பரபரப்பு ஒன்று உள்ளே பரவியது.

ஏன் அது...?

தன் வாழ்வில் ஒரு முக்கிய திருப்பம் ஏற்படப் போகிறது என்பது போல ஒரு உள்ளுணர்வு ஊறல்!

ஆனால் நெடுமாறனோ, ஏதோ மாதம் ஒருமுறை இவளை இது போல புதுமண்ணில் வரவேற்பவர் போல வெகு இயல்பாகவே சிம்லா ரயில் நிலையத்தில் நின்றார்.

''வாம்மா - எப்படியிருந்தது குட்டி ரயில் பயணம்?''

''சுவாரஸ்யம்தான் ஸார்... புது அனுபவம்...''

பிசின் போட்டு ஒட்டியதுபோல தேனிலவு தம்பதிகள் ஜோடிகட்டிப் போவதை ஓரக்கண்ணால் பார்த்து புன்னகைத்தவள் சொன்னார்.

''நான் இங்கே வந்து எட்டு, பத்து வருஷமிருக்கும்... ஊர் மாறிடுச்சம்மா. முன்னே சரிவெல்லாம் வரிசையாய் பைன் மரங்கள் நிற்கும் - இப்ப காண்க்ரீட் காடாட்டம் வீடுங்க...''



அவர் சொன்னது உண்மைதான். நெருங்க அடுக்கிய தீப்பெட்டிகளைப் போல மலைச்சரிவு எங்கிலும் வீடுகள்... புகை படிந்த தகரக் கூரைகள் காயப் போட்ட கம்பளி உடைகள்... ஜன நெரிசல்...

''ரொம்ப அழகும் அமைதியுமான ஊராய் இருக்கும்னு எதிர்பார்த்தேன் ஸார்...''

ஒடுங்கிய சாலைகளில் அவர்களது கார் ஊர்ந்து போனது. ''வட இந்தியா நம் பக்கத்தளவு சுத்தமும் விஸ்தாரமுமாய் இராது. ஜனத்தொகையும் அதிகம். தவிர இது டவுன் ஏரியா - ஆபீஸ், கடைகள் இருக்கற பகுதி... சற்று ஒதுங்கிப் போனால் பசுமையாய் இருக்கும்.

''ஓஹோ... ஆனா ஸார்... என்னை.. ஏன் திடீர்னு...?''

அவள் கேள்வியை முடிப்பதற்குள் அவர் முந்திக் கொண்டார்.

''இங்குள்ள கெஸ்ட் ஹவுஸில் நீ தங்க ஏற்பாடு செய்திருக்கேம்மா தேனு - அசதி தீர குளி, இன்னும் தூங்கணுமா தூங்கு... இல்லை ஊரை ஒரு சுற்று சுற்று... யோகினை நீ மாலை நாலரைக்குத்தான் சந்திக்கணும்...''

''எங்கே ஸார்... எதற்கு?''

''இங்குள்ள சமையல்காரருக்கு நம்மூர் சமையல் தெரியுமாம் - வத்தல் குழம்பும் அவியலும் செய்யச் சொன்னேன்... ஒரு பிடி பிடி.. நாலுக்கு நடக்க ஆரம்பிச்சா 15 நிமிஷத்து பொடி நடையில் யோகின் வீட்டிற்கு வந்திடுவே...''

''அப்ப நீங்க?''

''அவனோட சிலது பேச வேண்டியிருக்குது - அதான் - இது என் போன் நம்பர் - நாலு மணிக்கு போன் போடு - வழியைச் சொல்றேன். வரட்டா?''

இனி கேள்விகள் கேட்டாலும் பதில் வராது என்பது புரிந்து போனது. வெறுமே தலையாட்டினாள்.

ஆனால் அவளுள் பல கேள்விகள் பெருகிக் குதித்தன. அவற்றுள் முக்கியமானது தான் ஏன் இங்கே வரவழைக்கப்பட்டோம்...

அதன் காரணம் இத்தனை மர்மமாய் ஏன் வைக்கப்பட வேணும் என்பதுதான்.

## 3

அன்று மாலை சிம்லாவின் தெருவில் இறங்கி நடந்தவளுக்கு, கேள்விகள் எல்லாம் நீரில் இட்ட மணலாய் கரைந்து அடியில் தங்கி விட்டன.

சுற்றிலும் மயக்கிய இயற்கையே காரணம்.

ஒரு சில வளைவுகளிலேயே ஊரின் நெரிசலை விட்டு விலகி விட, பசுமை மிகுந்திருந்தது.

ஓங்கிய மரங்களிடையே நதி போல வளைந்து ஓடிய ஒடுங்கிய சாலைகள். முதுகில் பாரம் சுமந்து குனிந்தபடியே அதில் விரையும் சப்பை முக மனிதர்கள்.

உடன் நடந்த ஒரு பள்ளி மாணவியிடம் பேச்சுக் கொடுத்தாள் -

''என்ன விசேஷம்... ஏன் எல்லாரும் ஏதோ சுமந்தபடி போறாங்க?''

துல்லியமான ஆங்கிலத்திலேயே பதில் வந்தது.

''விசேஷமெல்லாம் இல்லை தீதி. இது இங்கு தினப்படி காட்சி. இந்தப் பகுதியில் லாரி, பஸ் போக்குவரத்து



கிடையாது. இங்கிருந்து மேலே போனால் கார்களுக்குக் கூட அனுமதி கிடையாது. மேலே இருக்கும் 'மால்' அதாவது கடைத் தெருவிற்குமான பொருட்களை அத்தனையையும் இப்படி மனிதர்கள் சுமந்துதான் போக வேணும்.''

''அப்ப 'மால்'லில் வாகனங்களே இருக்காதா?''

''விச்ராந்தியாய் நடக்கலாம் - அங்கு நாம் நம் கால்களை நம்பித்தான்.''

சிறுமி அழகாய் சிரித்தாள்.

''பஸ் ஸ்டான்ட் அருகே டாக்ஸி ஸ்டான்ட்டும் பார்த்தேனே?''

''அது வரைக்கும்தான் வாகனங்களுக்கு அனுமதி. முன்பு எல்லாரும் நடந்து மேலேறுவோம் - இப்போது அரசாங்கமே 'லிஃப்ட்' கட்டிட்டாங்க - டாப் லெவல் போக அஞ்சு ரூபாய்... ஆனால் மேலே போய் விட்டால் வாகன புகை, இரைச்சல்னு தொந்தரவு இல்லாமல் ஷாப்பிங் பண்ணலாம். சூடான பாப் கார்ன் சாப்பிட்டபடி நடுவீதியில் நடப்போம்.''

''வித்தியாசமான ஊர்தான் உங்களது.''

பாதை சரிவில் இவர்கள் கீழ் நோக்கி நடந்ததால் மூச்சு இரைக்காமல் பேச முடிந்தது. ஏறுவது இத்தனை சுளுவாய் இராது.

''கீழே போகப் போக வீடுகள்தான்.''

''நான் 'ரோஹாஸ்' எனும் வீட்டுக்குப் போகணும்.''

''ஐந்தே நிமிஷம்தான் ஆகும். இந்தப் பிரிவில் போங்க.''

சற்று கோணலாய் விலகிப் பிரிந்த பாதையைக் காட்டினாள் மாணவி.

''தாங்க்ஸ் - பை...''

மனித நடமாட்டம் மேலும் தனிமையாய் இருந்தது. இந்த பாதை. கண்டிப்பாய் லிஃப்டில் ஏறி அந்த 'மால்'லைப் பார்த்து வர வேண்டும் - நம் பாண்டி பஜாருக்கு நேர் மாறாய் இருக்குமோ?

அங்கும் ஒரு நாள் வாகனங்களைத் தடை செய்து விட்டால்? அமைதியான பாண்டி பஜாரை கற்பனையில் உருவாக்கித் தனக்குத் தானே புன்னகைத்து நடந்தவள். எதிரே வந்த அந்தக் காரை எதிர்பார்க்கவில்லை. வளைவில் சத்தமின்றி பாய்ந்த அது பிரேக்கிட்டு 'க்ரீச்'சென குலுங்கி நின்றபோதிலும் அதிர்ச்சியில் இவளுக்கு இதயம் தொண்டைக்கு எம்பி வந்திருந்தது!

காரின் நுனி தன்னைத் தொட்டதாலா அல்லது சத்தமின்றி வந்த அதைக் கண்ட அதிர்ச்சியாலா... அவள் ஏன் தடு மாறினாள் என்பது தெரியவில்லை... ஆனால் நிலைகுலைந்து பாதை ஓரத்தில் விழுந்திருந்தாள்... சரிந்த பாதை என்பதால் முழுக்கத் தரையில் கிடக்காமல் சரிவாய் விழுந்தவளுக்கு சற்று கண்ணை இருட்டியது.

ஆனாலும் புலம்பினாள் -

''கண் மண் தெரியாமல் ஓட்டறது. கையில் கார் வந்துட்டா ஊருக்கே ராஜான்ற நினைப்பு.''

''சினிமா நாயகின்ற நினைப்பில் மிதப்பாய் வர்றது. கை காலை உடைச்சு பிறகு நம்ப உயிரை வாங்கறது... ச்சே.''

காரின் உள்ளே பிரேக்கை அழுத்தியவனும், அதன் விளைவால் தப்பி ஆனால் அஞ்சி விழுந்தவளும் மற்றவரை ஏகக் காலத்தில் திட்டினார்கள் - தமிழில்!

இரண்டாயிர சொச்சம் மைல்களுக்கு அப்பால் தாய்மொழியைக் கேட்டதும் கடுத்திருந்த இருவரின்



கண்களும் சற்று கனிந்தன - ஆவலுடன் அடுத்தவரை ஆராய்ந்தன.

''தமிழா?''

''நீங்களும் தமிழர்தான் போல... ஆனாலும் காரை இப்படியா?'' ''ரோட்டிலேயே நடன அரங்கேற்றம் செய்வதற்காய் இத்தனை தூரம் வந்திருக்கீங்க போல... ஆனா அது எனக்குத் தெரியாதே...'' இடைமறித்து இடக்காகவே வந்தது பதில்.

கை ஊன்றி நின்றவள் மேலே ஒட்டியிருந்த சருகு, இலைகளைத் தட்டி விட்டாள்.

அவன் சொன்னது உண்மைதானோ?

''ஸாரி... ஏதோ நினைப்பு.. ஆனா நீங்களும் வளைவில் ஹார்ன் ஒலிக்காம வந்தது தப்புதான்.''

''ஊருக்குப் புதுசா?''

அவன் மன்னிப்புக் கோரவில்லை என்பதைக் கவனித்து மனதுள் பொருமினாள்.

''பண்றதைப் பண்ணிட்டு விசாரணையைப் பாரு?''

''இன்னைக்குக் காலைலதான் வந்தேன்.''

''அப்புறம் இயற்கையை ரசிக்காமல் வேறென்ன சிந்தனை?''

இப்போது சற்றுப் பரிவுடனேயே விசாரித்தவன், காரை விட்டு இறங்கினான்.

''சென்னை பற்றி நினைச்சேன்...''

''கூடவே சென்னையில் இருக்கும் உறவுகளைப் பற்றியும்... ம்ம்...''

''உறவைப் பொருத்துத்தானே ஊரின் மேல அபிமானம் வரும்... சென்னை வாழ்க்கை கொஞ்சம் அவசரக் கதியானது - அதே சமயம் சுவாரஸ்யத்திற்கும் குறைவில்லை... இந்த ரோடில் நிறைய திருப்பங்களா... ஆக வாழ்வின் திருப்பங்களையும் பற்றி யோசிச்சேன்...'' - பாதி தனக்குள்ளாகவே பேசினாள்.

முகவாய் தூக்கி அவளைக் கீழ் கண்ணால் பார்த்தவன் ''அம்மணி கற்பனாவாதி போல... என் பெரியப்பாவைப் போல. அவருக்கும் மனிதர்கள் முக்கியம். ஆக எல்லாரையும் நம்பிப் பழகுவார். மனுஷங்க ஆதாயத்திற்காகத்தான் பழகறாங்கன்றது மாமாக்குப் புரியலை.''

''எல்லாரும் அப்படியில்லை.''

''நான் பார்த்த வரை நெருக்கறவங்க காசு பிடுங்கத்தான் வர்றாங்க... அவரை அது மாதிரி ஏமாற்று பேர்வழி களிடமிருந்து காப்பாற்றும் சிந்தனையில் நானும் மும் முரமாய் இருந்ததால்தான்... காரை வளைவில் வேகம் குறைக்காமல் ஹாரனும் ஒலிக்காமல் வந்தாச்சு.. எதிர் பார்க்கலை...''

''அவரவர் வாழ்வில் நடக்க இருப்பது நடந்துதான் தீரும் - அதை நாம் எதிர்பார்க்கறோமோ இல்லையோ?''

அறிமுகம் இல்லாதவர்களிடம் இப்படி பேச்சு வளர்ப்பவளில்லை அவள் - ஆனால் இன்று பேசினாள் -

''விதியைக் குறிப்பிடறீங்களா? அப்ப மதி... புத்தியின் பங்கு என்ன?''

''கடவுள் ஒவ்வொரு வாழ்க்கைக்கும் ஒரு திட்டம் வச்சிருக்கார் - அது மனுஷ சாமர்த்தியங்களை மிஞ்சியதுன்னு நம்பறேன். ஆனா நல்லவர்களுக்கு நல்லதுதான் நடக்கும்...



அல்லது நல்லதாய் முடியும்? கேட்டவன், சற்று கோணலாய் புன்னகைத்தான்.

''ஏதோ நாடக வசனம் போலிருக்குது.''

அந்த அலட்சிய தோளின் குலுக்கலில் அவளது கோபம் மறுபடி துளிர்த்தது.

அதனால் சிவந்த முகத்தை அவனிடம் காட்ட விரும்பாமல் திரும்பி நடக்க ஆரம்பித்தாள் -

ச்சே... ஒரே மொழிக்காரர் என்ற அபிமானத்தில் வாய் கொடுத்தது தப்பு. மனுஷனுக்கு நாக்கு நீளம்!

அவனும் கிளம்பி விட்டது காரின் சன்ன உறுமலில் புரிந்தது.

தன் மாமாவைப் பொல்லாதவர்களிடமிருந்து காபந்து பண்ணுகிறாராம்... ஒருவேளை இவர் குறிப்பிட்ட மாமா யோகதேவனா? அவரும் தமிழர் என்பதால் இருவரும் உறவினராய்தான் இருக்க வேணுமா என்ன?

'நடக்க இருப்பவை நடந்தே தீரும் - யாரும் தடுக்க முடியாது.' என்ற ரீதியில் சற்று முன் தெரியாதவரிடம் முழங்கியவள் -

'ஆவது ஆகட்டும். அப்படி இருந்தால் இருக்கட்டுமே' என்று தேறிக்கொண்டு நடந்தாள்.

ஆனால் இன்னும் உடலில் ஒருவித பதட்டம் மிச்சமிருந்தது. இந்த மாறன் சாருக்கு அப்படியென்ன வேலை? இத்தனை தூரம் வந்தவளை வந்து கூட்டிப் போயிருக்க வேண்டாமா? போனிலேயே,

''உன் விடுதியிலிருந்து 15 நிமிஷ நடைதாம்மா. வந்திடு.'' என்றிராவிட்டால் இப்படி கற்பனையில் மிதந்து, தடுமாறி

விழுந்து, இந்தக் கார் பேர்வழியின் நக்கலை அனுபவித்திருக்க வேண்டாம்.

வேற்று மாநிலத்தில் தமிழரைப் பார்த்தால் ஒரு பாசம் தோன்றாதோ?

''அடி ஏதும் படலியே? ஸாரிங்க.''

''உங்களை எங்கேனும் இறக்கி விடணுமா?''

''எங்கே தங்கி இருக்கீங்க - முடிந்தால் மறுபடி பார்ப்போம்.''

இப்படி எந்த உபசார வார்த்தைகளும் இன்றி நான் ரோடில் நடனமாடுவது போல வந்தேனாம் - இவரது பெரியப்பாவை எல்லாரும் சுரண்ட நினைக்கிறாங்களாம்...!

பணம் படைத்தவர்களுக்கே ஆன பயம்!

அவன் வந்த காரும் கூட வினோத வடிவிலிருந்தது - பரிச்சயமான மாடல் அல்ல... வெளிநாட்டு தயாரிப்பு போலும். பழுப்பும் கருப்புமாய் குடம் போன்ற வடிவில்... ஆனால் அதிலிருந்து இறங்கியவன் மட்டும் நெடுநெடுவென்ற வளர்த்தி.

அதற்கேற்ற அகலமும் சேர்ந்த கம்பீரம். முகத்தில் மட்டும் கனிவும், புன்னகையும் சேர்ந்தால் ஆள் பேரழகன்! ம்ப்ச்... ஆனால் அவை இல்லையே.

இவளின் நினைவுகளுக்கு முற்றுப்புள்ளி இட்டது அந்த பச்சை கேட்.

மாறன் சார் அவளுக்குச் சொன்ன அடையாளக் குறிப்பு அது. அந்த அகன்ற பச்சை மரக் கதவைத் திறந்து தனக்குப் பின் சாத்தியவள் வீட்டை நோக்கி நடக்க, மீண்டும் அவள் கால்கள் திகைத்துத் தடுமாறின -



காரணம் அந்தக் கார்!

அவன் ஓட்டி வந்த வினோத வாகனம்.

வீட்டின் இடது கோடியில் நின்றது என்றாலும் மீண்டும் தன்னை நெட்டித் தள்ளியது போன்ற பிரமை.

ஆக யோக தேவன்தான் இந்த கார் ஆசாமியின் உறவினரா? அல்லது தன்னைப் போலப் பார்த்துப் போக வந்தவராயும் இருக்கலாமே... எதிர்க்கே போன வாகனம் எப்படி இங்கு வந்தது? காருக்கான தனி வழி உண்டு போலும்.

யாரோ தன்னைப் பார்ப்பது போன்ற உணர்வில் நிமிர்ந்தவளுக்கு, வீட்டு வாசலில் நின்று ஒரு பெண் தன்னையே பார்ப்பது புரிந்தது.

அவளது புடவைக் கட்டும் பொட்டும் 'நான் தமிழச்சி' என்று அறிவித்தன.

முகம் இளக, முறுவலித்தாள் தேனுகா.

''வாங்கம்மா... நீங்கதான தேனுகா?''

''ஆமா.'' - முறுவலை மேலும் அகலமாக்கினாள்.

''வாங்க - ஐயா உங்களை எதிர்பார்த்திருக்கார்.''

இந்தப் பெண்ணுமே விருந்தாளியை மிக எதிர்பார்த்த தினுசில் இவளையே குறுகுறுவென பார்த்த விதத்தில் இவளுக்குக் கூசியது.

''மாறன் ஸார்?''

''அவரும்தான் - இப்படி வாங்க.''

இவள் தொடர்ந்தாள்.

மரத்தளம் கொண்ட அவ்வீடு ஒவ்வொருவருடைய எடையையும் அவரவரின் பாத அழுத்தத்தைக் கொண்டே துல்லியமாய் கணித்து அதற்கேற்ப முணங்கியது!

''இந்த அறைதாம்மா...'' - பெண்மணி இடதுபுறம் கைகாட்டி விட்டு நகர, ஆழ மூச்செடுத்து விட்டபின் நுழைந்தாள். அங்கிருந்தது இரண்டே நபர்கள்தான்.

நெடுமாறனைத் தவிர்த்து தலை நரைத்த ஒருவர்... என்பதைக் கண்ட பிறகு அம்பாய் விறைத்திருந்த அவளது உடல் தளர்ந்தது.

மூச்சும் இயல்பாய் வெளியேறவும்தான். அதற்கு அந்த 'கார்' பேர்வழி அறைக்குள் இல்லாததே காரணம் என்பது உறைத்தது.

அமர்ந்திருந்த பெரியவர் எழுந்தார்.

சற்றுத் தளர்ந்திருந்தாலும் சீரான உடல் - நிமிர்ந்த தோற்றம்.

கைக்கூப்பி இவளை வரவேற்றார்.

தானும் அவசரமாய் கைக்கூப்பி, அவரை நோக்கி நடந்தவளுக்கு அவரது கண்கள் தன் மீது பதிந்த விதம் ஒருவித அவஸ்தையாய் இருந்தது.

மேலும் நெருங்கவும்தான் அவர் கண்கள் தளும்பியிருந்ததைக் கவனித்தாள். முகம் வெளுத்து, நீண்ட மூக்கின் நுனி மட்டும் சிவந்திருக்க கும்பிட்ட அவர் கைகள் அப்படியே இவளைத் தொழுவது போலவே இருந்தன...

## 4

இவள் தேநீரைப் பருகும் வரைக் காத்திருந்தவர், பின் பேசினார்.

''உன்னை வரவழைக்கச் சொன்னது நான்தான் தேனுகா.. என்ன ஏதுன்னு பிகு பண்ணாமல் வந்ததற்கு ரொம்ப நன்றிம்மா.''



''பரவால்ல ஸார்... நீங்க சிறந்த எழுத்தாளர்னு..''

''மனதில் ஊறியதை அப்பப்பக் காகிதத்தில் வடிச்சிருக்கேன். இப்ப ஏதும் எழுதத் தோணலை... பழசை அசைப் போட்டாலே போதுங்கற நிலை.''

மாறன் குறுக்கிட்டார் - ''நானும் சேர்ந்தே அசை போடலாம்னு சிம்லா வந்தேன். நம்ப நாடகக் குழு பற்றி யோகின் ஆர்வமாய் கேட்டதால் நம்ப குழு புகைப்படம் ஒன்றைக் காட்டினேன்.''

''அந்தக் குழுவின் முப்பது பேர்ல ஒருத்தியாய்தான் நீ நின்றாய். ஆனா உன்னை உடனே கண்டு பிடிச்சிட்டேன் நான்.''

இவள் புருவங்கள் புரியாமையில் சுருங்கின.

''அதாவது நீ அவளைப் போலவே இருப்பதைக் கண்டுட்டேன்... அதாவது.. இன்னொரு கப் டீ குடிக்கறியாம்மா.''

''நோ தாங்க்ஸ் ஸார்... யாரைப் போல?''

''எனக்கு ஒரு கப் ஊத்தறியா?''

இவள் கலந்து நீட்டியதை வாங்கிய அவரது விரல்கள் நடுங்கின. இரண்டு மிடறுகள் குடித்தவர் பேசினார் -

''நடிகையாவது அவள் லட்சியம்... வெறின்னே வை. அந்தளவு அழகும் திறமையும் கூடவே தன்னம்பிக்கையும் இருந்ததே. நான் சொல்றது 35 வருஷங்களுக்கு முந்தின காலத்தைப் பற்றி.. அப்பதான் என் முதல் நாவலை ஒரு பெங்காலி படமாய் எடுத்திருந்தாங்க. அதே சமயம் தான் அவ... என் ரேணுகாவும்... ரேணுகா தேவின்னால்தான் அவளைத் தெரியும் - சினிமாவில் துடியாய் கால் பதிச்சா.

நர்கீஸை விட அழகு, சாய்ராவை விட திறமையிருந்ததால் அவங்களை விட மேலான நட்சத்திர அந்தஸ்து அவளுக்காகக் காத்திருந்தது. மீனாகுமாரி இறந்தாச்சு... அந்த இடத்தை ரேணுகாதான் நிரப்ப முடியுங்கறது எல்லாருடைய முடிவு?''

''ஓ...?''

சொன்னவரின் கண்களில் வயோதிகத்தையும் மீறித் தெறித்த மின்னல், அந்த இளம் நட்சத்திரப் பெண்ணின் அழகு, ஆற்றலைத் தெரிவிக்க ஆவலாய் கவனித்தாள்.

''ரேணு ஆந்திரப் பெண். ஆனா வளர்ந்ததெல்லாம் பூனாவில். உன்னைப் போல் ஆரம்பத்தில் நாடகங்களில் நடிச்சா. ஒரு கலைப்படத்தில் நடிக்க கிடைத்த வாய்ப்பை தீர்க்கமாய் பயன்படுத்திக் கொண்டாள்.

படத்திற்கு அவளால் ஜீவனும் அந்தஸ்தும் சேர, விருதும் வந்தது. அந்தப் படத்தைப் பார்த்த நான் என் வசத்தில் இல்லை. ரேணுகாவைச் சந்திக்க என்றே விருது வழங்கும் வைபவத்திற்குப் போனேன். படத்தில் ஆக்ரோஷமான கிராமப் பெண்ணாய் நடிச்சவ நேரில் பனிப்பொம்மை போலிருந்தா... யாரிடமும் ஒரு அநாவசிய வார்த்தை ஏன் பார்வை கூட இல்லை.''

மாறன் இதெல்லாம் அறிந்தவர் எனினும் குறுக்கிடாமல் கவனித்தார்.

''நான் அவளது நடிப்பை, ஒவ்வொரு காட்சியிலும் அவள் நடிப்பின் வீச்சை, நுணுக்கத்தைப் பாராட்டினேன்... புகழ் அவளுடைய அழகிற்கில்லை தான் அனுபவித்து உருவாக்கிய பாத்திரத்திற்கு என்று புரிந்ததும், கனிந்தாள்.''

''ம்ம்...''

''தவிர இவன் எழுதிய கதைதான் இன்டஸ்ட்ரிய ஒரு குலுக்குக் குலுக்கியதென்பது தெரிய, அவளும் ஆர்வமா



கிட்டா. கலைஞர்களிடையே தோன்றும் பரஸ்பர மரியாதை, பிரியம் வளர்ந்து...''

காதல் கதை கேட்கும் லயிப்பில் இருந்தவளை அடுத்து வந்த வார்த்தைகள் உலுக்கி உதறியது.

''அடுத்த படம் பாதி வரை வளர, எங்க நேசம் இறுகிய சமயம் என் ரேணு ஒரு விபத்தில் இறந்துட்டா.''

''கடவுளே... என்ன... எப்படி?''

''காரோட்ட கற்றுகிட்டா... முழுக்க கண்ட்ரோல் வரும் முன் வரக்கூடாத வேகத்தில் ஓட்டி...''

அவர் கண்கள் வறண்டு இலக்கின்றி வெறித்தன.

''சினிமாவில் ஒரு கல்வெட்டாய் பதிஞ்சிருக்க வேண்டிய அவள் பேர் நட்சத்திரமாய் கண் சிமிட்டி மறைஞ்சிடுச்சு.''

''ரொம்ப வருத்தமாய் இருக்குதுங்க.''

''நானும் வருத்தப்பட்டேம்மா... இனி நானும் உயிர் வாழக் கூடாதுங்கற அளவு அவளை நேசித்ததற்காய்.. ஆனால் பெத்தவங்களுக்காய் நான் உயிரோட இருக்க வேண்டிய திருந்தது... நடை பிணமான ஒரு வாழ்க்கை. என் வாழ்விற்கு ஒரு அர்த்தம் தரணும்னு ரேணுவைப் பற்றி வருங்காலம் மறந்துடாத அளவு ஏதேனும் ஒரு தடயம் விட்டுட்டுப் போகணும்னு தோணுது...''

''புத்தகம் எழுதலாமேங்க?''

''அவ நடிகை... அவள் திறமையை, வாழ்வை சிறு கவிதை போல பட்ச்சுருளில் பதிவு செய்தால் பொருத்தமாய் இருக்கும். வெனிஸ் திரைவிழாவிற்கு அனுப்பக்கூடிய அளவில் சிறந்த, சுருக்கமான ஒரு படம்...''

இரு ஆண்களும் பேசப் பேச இவளுக்குக் குழப்பம் கூடியது.

இதையெல்லாம் தன்னிடம் சொல்ல வேண்டிய காரணம்? ''நீ ரேணுகாவின் சாயலில் இருக்கேம்மா... உங்க பெயரிலும் கூட ஒரு அபூர்வ ஒற்றுமை இருக்கே - அதே போல... அதே இதய வடிவ முகம் - விசாலமான கண்கள்... நினைப்பை அப்படியே காட்டக் கூடியவை அவை. என் கதையைக் கேட்டபோது உன் கண்களில் ஓடிய உணர்ச்சிகளும் லேசானவை அல்ல. சிறு சுழிப்பு, சிரிப்பிலும் அதிகம் பேசும் உதடுகள் அவளுக்கு... அற்புத முகத்திற்கு ஒத்துப் போகும் உடல்வாகு... அசாத்திய திறமை.''

அவர் பேசிக் கொண்டே போக, தன் மனதில் நிழலாய் உருவாகிக் கொண்டிருந்த அவரது கனவு தேவதை எப்படி இருந்திருப்பாள் என்ற ஆர்வத்தில் வீட்டின் சுவர்களைத் தன் பார்வையால் துழாவினாள்.

அங்கு பிரதானமாய் இருந்தது. ஒரே பெரிய படம்தான் - ஜோடியாய் இளம் தம்பதிகள் எடுத்துக் கொண்ட அந்தக் கால கேவா கலர் படம்.

''அவங்களா ரேணுகா தேவி?''

''இல்லை... அவ கங்கா. என் இரண்டாம் மனைவி.''

''ஓ... அப்ப...'' முதல் மனைவி பற்றியெல்லாம் விசாரிக்கும் வயதோ, தகுதியோ தனக்கில்லை என்பது புரிந்து நிறுத்தினாள்.

''ரேணுகாவைக் கல்யாணம் பண்ண என்னைப் பெத்தவங்க சம்மதிக்கலைம்மா. ரேணுகாவும் நடிப்பில் ஏதும் சாதிக்கணும்னு தவிச்ச அளவு கல்யாணம் பண்ணிக்கறதில் நாட்டம் காட்டலை... எங்களுக்கிடையே ஒரு ஒப்பந்தம் போல அவளுக்கு நான் மோதிரம் போட்டேன்... என்னைப் பொறுத்த வரையில் அதுதான் என் கல்யாணம்... அன்றிரவே



அந்த விபத்துல என் ரேணு மறைஞ்சுட்டா... அதன் பிறகு எங்கம்மா கண்ணீருக்காக நான் கங்காவைத் திருமணம் செய்ய நேர்ந்தது... ப்ச்... நாங்க சந்தோஷமாய் இல்லை.''

கண்களை மூடி ஆயாசத்துடன் தலை சாய்த்தார்.

''இப்ப கங்காவும் இல்லை... இறந்து ஒரு வருஷமாச்சு...'' விளக்கினார் மாறன்.

''நீ என் படத்தில் ரேணுகாவாய் நடிக்கணும்னு விரும்பறேம்மா - அவளை உயிரோட கொண்டு வர வெறும் சாயல் மட்டும் போதாது புத்திசாலித்தனமும் கலை தாகமும் கலந்த ஒரு பொண்ணு தேவை. உன்னால் அது முடியும்னு மாறன் சொன்னதை இப்ப... நானும் நம்பறேன்.''

கனவில் மிதந்த அவரது பழுப்பு கண்கள் கெஞ்சின.

''நான் அவங்களை... ரேணுகா தேவியின் படத்தைப் பார்க்கலாமா?''

''கண்டிப்பாய்... - விமலி, இங்க வாம்மா.''

உற்சாகமாய் குரல் கொடுத்தார்.

''அம்மாவை மாடி அறைக்கு அழைச்சிட்டுப் போ.''

வழிக்காட்டிய பணிப்பெண்ணைத் தொடர்ந்தாள் தேனுகா.

வீடு முழுக்கவே மரத்தளம்தான் - நீள வெட்டியிட்ட மரப்பாளங்கள் முதுமையில் முனங்கின. ஆனால் வீட்டைக் குளிரிலிருந்து பாதுகாத்தும் வைத்திருந்தன. வெளியே அடர்ந்த மரங்கள் குளிர்காற்றை வீசி வீசி இவளை நடுங்கச் செய்திருக்க,

'கொண்டு வந்த ஒரே சால்வை தாக்குப் பிடிக்காதோ' என்றிவள் அஞ்சியிருந்தாள்... உள்ளே கதகதவென்றிருக்க

சால்வையை விலக்கி ஒரு தோளில் வழிய விட்டபடி நடந்தாள் -

''விமலி, நீங்க எத்தனை வருஷங்களாய் இங்கே வேலை பார்க்கறீங்க?''

''ஏழெட்டு வருஷமாங்க.''

இவளுக்குச் சற்று ஏமாற்றம்தான். ஆக இந்தப் பெண் ரேணுகாதேவியைப் பார்த்திருக்க வாய்ப்பில்லை... ஆனாலும் வாசலில் நின்று தன்னை எதிர்பார்த்த ஆர்வத்தைப் பார்த்தால்...

''நீங்க அவங்களுக்கு உறவாம்மா?''

விமலி அடக்கமாட்டாமல் கேட்டாள்.

''யா... யாருக்கு?''

''ஐயாவின் முதல் சம்சாரத்துக்கு.''

''இல்லை... ஏன்?''

''அதே சாயல் தெரியுதே... ஐயா உங்களைப் பாக்க அத்தனை ஆசைப்பட்டார்... அதான்.''

''உங்களுக்குத்தான் ரேணுகாம்மாவைத் தெரியாதே விமலி?''

''படங்களில் பாத்திருக்கேன்? நிறைய ஆல்பம் இருக்கும்மா... கங்காம்மா இருக்கும் வரை இந்தப் படங்க எல்லாம் பெட்டிக்குள்ள இருந்திருக்கும் போல... இப்ப அறைக்கு நாலு படம்னு தொங்குதே.''

''ஹால்ல அவங்க படம் இல்லையே?''

''வர்ற போறவங்கட்ட எல்லாம் ஐயா அவுகளைப் பத்தி பேசமாட்டாங்க. வேண்டியவங்கதான் இப்படி வீட்டுக் குள்ளார வந்து பாக்கலாம்.''



வீட்டிற்குள்ளும் அவனை அன்று சந்தித்தவனைக் காணவில்லையே?

அவன் சிந்தனை ஓடியது. வீட்டின் வெளியே நின்றது. அதே கார்தான்... ஆக இங்குள்ள ஏதோ ஒரு அறையில்தான் அந்த 'சிடுசிடு' ஆசாமி இருக்க வேண்டும். முகம் திருப்பிக் கொண்டு போன இவர்களை ஒரே வீட்டில் கொண்டு சேர்த்ததை விதி என்பதா... கடவுளின் விளையாட்டு என்பதா...?

ஆனால் மாடியறையுள் நுழைந்து பெரிதாய் தொங்கிய அந்த நிழலோவியத்தைப் பார்த்ததும் மற்ற சிந்தனைகள் அறுந்து மறைந்தன.

படத்திலிருந்த பெண்... பேரழகி... ரேணுகாதேவி - இவளைத் தன் விழிகளால் அழைத்தாள்.

அந்த வளைவான ஈர உதடுகள் இவளிடம் பேசத் துடித்தன.

முழு ஈர்ப்புடன் அங்கிருந்த புகைப்படங்களில் ஒன்றிப் போனாள்.

## 5

வெட்டின் இருபுறமும் தன் கூந்தலை ஈரமாக்கிய விரல்களால் பொடிப் பின்னல்களாக்கினாள். கடைத் தெருவிலிருந்து வாங்கிய ட்வீஸரினால் வில்லாக்கப்பட்ட அவளது புருவங்களில் இன்னும் எரிச்சல் மிச்சமிருந்தது. அவளது சற்று கனத்த புருவங்கள் - சற்றே ஒதுக்கி சீர்படுத்தியிருப்பாள் - அவ்வளவுதான்.

இப்படி சன்னமாய் வில் புருவங்களாக்கிய பின், கண்ணாடியில் தெரிந்தது வேற்று முகம் போலத் தெரிந்தது -

வேற்று முகமென்ன - ரேணுகாதேவியின் முகத்தைத் தன்னில் காட்டும் முயற்சிதான் இது.

யோகதேவனின் முன்பு இப்படிப் போய் நிற்க.. அசந்து போய் விடுவார்!

ரேணுகாவின் கேச அமைப்பு அலை போன்றிருந்தது - இன்று அபூர்வமாய் கைக்குக் கிடைக்கும் 10 பைசா நாணயத்தின் விளிம்பினைப் போல பம்மி அடங்கி ஓடும் கூந்தல்.

இவளதோ பட்டான நீள முடி. இப்படி உச்சியிலிருந்து பொடிப் பின்னலாயிட்டால் மறுநாள் இவளது கூந்தலும் அலையடிக்கும். கரும் சிவப்பு உதட்டுச் சாயம், கரும் சாந்து பொட்டும் வாங்கி வந்திருந்தாள். இப்போதைய ஒப்பனைக்கு இவை போதும்.

ரேணுகாவின் சிரிப்பு, நடை, பேச்சு, ஒயில் இவற்றை அவர் நடித்த படங்களைப் பார்த்துப் பார்த்துப் பயின்று விடலாம்.

35 வருடங்களுக்கு முன் இறந்து போன ஒரு பெண்ணாகத் தான் நடிக்க வேண்டும் என்பதே அவளுள் ஒருவிதக் கிளர்ச்சியைக் கிளப்பியது. அச்சமும் ஆர்வமுமான ஒரு விநோத எதிர்பார்ப்பு.

கெஞ்சுவது போல தன் சம்மதம் வேண்டிய யோக தேவனிடமிருந்து ஒரு சிறு புன்னகையுடன் விடை பெற்றிருந்தாள்.

''டிரைவர் அம்மாவைக் கொண்டு கெஸ்ட் ஹவுஸில் இறக்கி விடணும்ப்பா...''

சற்று அச்சத்துடனேயே கார் ஓட்டியை நோட்டமிட்டாள். நல்லவேளை அந்த உயரமான, பந்தா பேர்வழி இல்லை... தவிர அவர் காரோட்டி போலவா இருந்தார்?



புகைப்படத்திலிருந்து ரேணுகாதேவி விட்ட சவாலை இவள் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும் எனப் பட முதலில் கடைத் தெருவிற்குப் போய் சில பொருட்களுடன் அறைக்குத் திரும்பினாள்.

சாயல் மாறியிருந்த தன் முகத்தை மீண்டும் மீண்டுமாய் கண்ணாடியில் பார்த்தாள். இந்த முகம் திரையில் தெரியப் போகிறது! நம்மூரின் பாப்-கார்ன், ஏலக்காய் டீ விற்கும் திரையரங்குகளில் இல்லை. உலகத் திரைப்பட விழாவிற்கான பிரத்தியேகப் படம்.

ஒரு காதலனின் ஏக்கத்தைத் தணிக்கப் போகும் காவியம்.

திரைப்படத் துறையினருக்கான ஒரு ஞாபக ஏடு.

வட இந்தியாவில் அப்படம் நிச்சயம் சலசலப்பை உண்டாக்கும். அங்கு காவிய நாயகியாய் உயர்ந்திருக்க வேண்டிய ஒரு நட்சத்திரத்தின் கதை அல்லவா?

தான் சில காலம் இந்த உலகில் வாழ்ந்ததற்கான சுவடே இன்றி போய் விடுவோமோ என்ற பயம்... ஏக்கம் ரேணுகாவிற்குள் அவ்வப்போது முட்டும்.. இப்போது ஒரு தடம் பதிப்பதற்கான வாய்ப்பு கிடைத்திருக்கிறது! இதை நழுவ விடலாமா?

ம்ஹூம்... ஆனால் அப்பாவை ஒரு வார்த்தைக் கேட்காமல் சம்மதிப்பதும் நெருடியது.

அப்பாவிற்குப் புரியும் என்ற சமாதானமும் கூடவே!

''எனக்கும் என் மனைவி கங்காவிற்கும் குழந்தைகள் இல்லைம்மா. ஆனால் பல வருடங்களின் நினைவுகள் உண்டு'' - என்ற யோகதேவனின் முகத்தில் படர்ந்த சிரிப்பு அந்நினைவுகள் அத்தனை சுகமானவை அல்ல என்றன.

இவருக்கு அது கட்டாயக் கல்யாணம்.

மனதில் ஒருத்தியுடனும் நிஜத்தில் வேறு ஒருத்தியுடனும் நடத்திய நச்சு நாடகம்... கசக்கத்தான் செய்யும்.

இதையெல்லாம் உணர்ந்தும் இவரது மனைவியாகவே முப்பது வருடங்களுக்கு மேலாக வாழ்ந்த கங்காவும் பரிதாபத்திற்குரியவள்தான். இயலாமையும் ஆங்காரமுமாய் வாழ்ந்து முடித்தவள்.

இத்தனைக்கும் காரணம் அந்தப் பேரழகி.

அல்பாயுசில் மறைந்து போன ரேணுகாதேவி!

'குறும்படம் என்றாலும் படத்திற்கு டைட்டில் ஒன்று தேவையில்லையா?''

கேட்டிருந்தாள்.

''நீங்காத நிலா...''

''ம்ம்... உங்க மனதை விட்டு நீங்காதவங்க?''

''திரைத்துறையிலும் அவ பேர் நிற்கணும்... யாரும் அவளை மறந்து ஒதுக்கிடக் கூடாது... அதற்கான முயற்சியும் தான் இது.'' மாறன் விளக்கினார் - 'அமுதபாரதியின் கவிதை ஒண்ணைப் பார்த்தானாம்-

'நீண்ட அலகு நாரை
நீரைக் கொத்தினாலும்
நீங்காத நிலா.'

'கல்யாணமாகி இத்தனை வருஷங்கள் போனாலும் ரேணுகாவின் நினைவு நீங்கவில்லை...'

'பௌர்ணமியாய் பெருகி இந்த உலகையே தன் பால் ஒளியால் குளிப்பாட்டியிருக்க வேண்டியவ... ஆனாலும்



இங்க அவ எப்பவும் உண்டு' - நெஞ்சைத் தொட்டுக் காட்டினார்.

இப்படி எல்லாம் பேசியபடி அவர்கள் இரவு உணவை முடித்தபோதும் கூட அந்த உயரமான இளைஞனைக் காணவேயில்லை.

அவனைப் பற்றி... அதாவது அவர்கள் சந்தித்த விதம் பற்றி இவர்களிடம் சொல்ல வேண்டுமோ?

கண்ணில் படாதவனைப் பற்றி ஏன் சொல்ல?

மனைவி கங்கா அம்மாளின் மூலம் யோகதேவனுக்கு உறவாய் இருப்பானோ?

அதனால்தான் ரேணுகாவின் சாயலில் தன்னைக் கண்டதும் அப்படி சிடுசிடுத்தானோ?

தேனைத் தொட்ட கையின் பிசுக்கு எத்தனைத் துடைத்தாலும் தீராதது போல ஏன் அவனது நினைவு இப்படி ஒட்டியபடி வருகிறது?

அப்படி அவனை தேன் என்றும் வர்ணிப்பது தப்பு -

சற்று தேள்தன்மையான நாக்கு... பார்வையும் மகாக் கூர்மை!

எதிர்பார்த்தது போலத்தான் நடந்தது. இவளைக் கண்டதும் 'விருட்'டென எழுந்த யோகின் (மாறன் அவரை அப்படிக் கூப்பிட்டதால் இவளும் அதே பாணியில் அவரை மனதுள் குறிப்பிட்டாள்) பின் அசையவும் முடியாதவர் போல நின்றார். ஆனால் அவர் விழிகளில் நூறு நூறாய் உணர்வுகள்! உதடு, கன்னத் தசைகளில் பரவச நெகிழ்வுகள்.

''நன்றிம்மா தேனுகா... ரேணுங்கறது போல உன்னைத் தேனுன்னே கூப்பிடலாமில்லையா? ரேணு பாத்திரத்தில் நடிக்க சம்மதிச்சதிற்கும்... அதை இத்தனைக் கவித்துவமாய்

வெளிப்படுத்தினதுக்கும்... அவளும் இப்படித்தான் - அதிகம் பேசமாட்டா... ஆனா தன் உணர்வை நமக்கு லேசாய் உணர்த்திடுவா. தினம் எனக்குக் காலை தேநீர் வரப்போ கூடவே ஒரு ரோஜாவும் வரும் அவ ஏற்பாடு. வெளிநாட்டு சென்ட்டை எனக்குத் தருவா... சதா அந்த மணத்தில் அவ என்னோட இருக்கிறாப்பல ஒரு பிரமையை ஏற்படுத்துவா. நான் கொஞ்சம் குடிக்கறதாய் செய்தி அவ காதுக்குப் போனதும் அவளின் பட்லரை என் வீட்டுக்கு அனுப்பிட்டா... அவன் விதவிதமாய் சூப்பம் பழரசமும் செய்து தந்து என் வயிற்றில் வேறெதுக்கும் இடம் இராதது போல பார்த்துகிட்டான்... எனக்கு ரோஸ் நிறம் பிடிக்குதுன்னு புரிய, என் முன் அவ வேறு நிற உடைகளே போட்டதில்லை. ஆனா இதைப் பற்றியெல்லாம் ஒரு வார்த்தை வராது...!''

''நீங்க கேட்டால்?''

''சன்னமாய் சிரிப்பாள் - அவ்வளவுதான் - கீழ் உதடு மடங்க இடது உதட்டோரம் ஒரு பொடி சுழி தோன்றும்... ஹா... அது சரி. ஒரே இரவில் உன் தலை முடி எப்படி மாறிச்சு... விக் இல்லையே?''

''இல்லை. இதெல்லாம் மாறன் சாரின் நாடகப் பள்ளியில் கிடைத்த பயிற்சி.''

''சேலையைக் கூட இப்படி ஒன்றையாய்தான் போடுவா.''

''கவனிச்சேங்க சார்.''

''ஹா... நீயும் அவளைப் போல புத்திசாலி ஆர்ட்டிஸ்டிமா. சிறு கவனிப்புகளில், அதைக் காட்ட மெனக்கெடறதில்தான் இருக்குது வெற்றி.. எனக்கு ஒரு ஆசைம்மா.''

''சொல்லுங்க சார்.''

''ரேணுவுடைய சில புடவை, நகைகள் என்னிடம் உண்டு எளிமைத்தனமானவைதான்... அதிலும் கூட கொஞ்சம்



விலை உயர்ந்தவற்றை அவ அம்மா, அக்கா எடுத்திட்டுப் போக மிஞ்சியதைத்தான் நான் கொண்டு வந்து பாதுகாப்பாய் வச்சிருக்கேன்... அதை உடுத்திக் காட்டறியா?''

நரை முடியும் தளர்ந்த உடலையும் மீறி அவருக்கு வாலிபம் திரும்பியிருந்தது... கண்கள் ஆவலாய் மின்னின.

''நிச்சயமாய்.''

அவர் தந்த சாவியோடும் விமலியோடும் மறுபடி மாடி அறைக்குப் போனாள். அவர் சொன்னதுபோல கட்டிலின் அருகே நின்ற ஓக் மர அலமாரியைத் திறக்க, மக்கின நெடி கிளம்பியது.

மங்கலாய் சில புடவைகள் உள்ளே அடுக்கப்பட்டிருந்தன. இந்தக் காலை நிறத்திற்கு ஆழ்நிறப் புடவைகள் பொருந்தாது எனத் தோன்ற இருந்த ஒரே ரோஜா வர்ணப் புடவையை மெள்ள உருவினாள்.

''நீங்க உடுத்துங்கம்மா - நான் போய் உங்களுக்குக் குடிக்க ஏதேனும் ஜூஸ் எடுத்து வரேன்'' - என்று விமலி கிளம்ப, கதவை மூடி சேலையைச் சுற்றிக் கொண்டாள் - ரவிக்கைப் பொருந்தாததால் முந்தானையை இழுத்து வலப்புறத் தோளையும் மறைத்தாள்.

கூந்தலை விரித்துப் போட்டு ஒப்பனையைக் கூட்ட, தன் தோற்றம் அவளையே வசீகரித்தது.

ஒரு கோப்பை செம்மதுவில் ஊற வைத்து எடுத்தது போல சிவந்து மினுங்கிய உதடுகள் அவளை கவர்ச்சியாய்க் காட்டின.

வெளித்தோற்றத்தில் மட்டுமல்ல உள்ளேயும் ஏதோ மாற்றம்... ஒப்பனை அறையில் அரிதாரத்தோடு பாத்திரத்தின் தன்மையையும் கலந்தே பூசும் தேர்ந்த நடிக நடிகைகளுடன் பழகியிருந்ததால் இவளுக்குள் நேர்ந்த மாற்றமோ?

கவனமாய் பாதுகாக்கப்பட்ட சேலைதான் - எனினும் மக்கின வாடை அடித்தது... தோளின் இருபுறம் பட்டை ஜரிகை மின்னினாலும் வெற்றுக் கழுத்து உறுத்த, அங்கிருந்த சிறு பெட்டியிலிருந்து ஒரு முத்துச் சரத்தை தேடி எடுத்துப் போட்டுக் கொண்டாள்.

அலமாரியைப் பூட்டி அறையிலிருந்து வெளியேறினாள்.

விமலியைக் காணவில்லை.

உடுத்தி, மேடைக்குப் போவது வேறு விஷயம்.

இப்படி அன்றாட உலகில் நிற்பது கூச்சமாய் இருந்தது.

தயங்கியே மாடிகளின் படி இறங்கினாள்.

கனத்த சேலையின் கொசுவங்கள் படிகளில் தடுமாறச் செய்யுமோ என்ற கவனத்துடன் குனிந்து நடந்தவளை அந்தக் குரல் உலுக்கி நிமிர்த்தியது.

''ஆக, நான் சந்தேகப்பட்டதில் தப்பில்லை.''

குரோதத்துடன் குற்றம் சாட்டியது.

மாடிப்படியின் கீழ் முனையில் கைகளைக் கட்டி சாய்ந்து நின்றது, இதுவரை அவள் 'எங்கே எங்கே' என்று தேடிய அவனேதான்!

இவளைத் தடுமாறி விழச் செய்து, உதவாமல், தன் உறவினரை எல்லாரும் காசிற்கு ஏமாற்றுவதாய் சலித்தவன்... இப்போதும் அதையேதான் குறிப்பிடுகிறான் - இவளும் அப்பெரியவரின் சொத்தை சுருட்டிக் கொண்டு போகிறாளாம்!

ஆனால் அலட்டாமல் பதிலளித்தாள் -

''சந்தேகமே தப்புத்தான்.''



''என்ன?''

''சந்தேகக் குணம் மெச்சத் தகுந்ததல்ல... அதுவும் ஆராயாமல் வரும் வெற்று சந்தேகம் ஆபத்தானது...''

''ஆக இப்படி வர்றவங்களை நம்பிக் கொண்டாடணுமா?''

அவன் குரலில் காரம் கூடியது.

''நம்பிக்கை வேணும். எதிர்மறை உணர்வுகள் பிறரை விட உங்களைத்தான் அழிக்கும்.''

சிறுவனுக்கு விளக்குவது போல சொன்னாள்.

அவன் முகம் கருத்து, உதடுகள் இறுகின.

''நீ நடிகையா வசனகர்த்தாவா? பேச்சு மொழியுது? உடம்பை அலங்கரிச்சது போலவே பேச்சும் ரொம்ப அலங்காரம்தான்...''

இவளை அவமானப்படுத்த என்றே குரலைக் குத்தலாக்கினான்.

இவளோ 'இந்தப் பேச்சு எனக்கு அநாவசியம்' என்பதாய் விலகி நடந்தாள் - ஆனால் ரேணுகாவின் நினைப்புடன் செய்த அலங்காரம், அதற்கொப்ப உள்ள ஊற்றெடுத்த பூரிப்பு எல்லாம் நடித்து நகங்கிப் போயின.

## 6

தரையைத் துடைத்து துணியை அலசிப் பிழிந்து காயப் போட்டவளுக்கு நடந்தது எல்லாம் கனவாய் தோன்றியது.

மிக அழகான கனவு.

வாளியின் அழுக்கு நீரை பின்புறத் தாழ்வாரத்தின் தொட்டிச் செடிகளுக்கு ஊற்றிய பின் தன் அடுக்கு மாடி

வீட்டின் இரும்பு வலைப்பின்னல் வழியே தெரிந்த நெரிசலான சென்னை நகரைப் பார்த்தாள்.

போன வாரம் இதே கண்களைக் கண்ட காட்சிதான் எத்தனை வித்தியாசம்! பனித்தொப்பி போட்ட பெரும் மலைகள், குழந்தை போல உருண்டு ஓடும் ஓடைகள், நெடுநெடுவென்ற பசும் மரங்கள்... முக்கியமாய் வாகனமற்ற கடைத் தெருக்கள் - அதில் முதுகு வளைய பாரம் சுமந்தபடி மனிதர்கள்...

''ரோட்டைப் பார்த்து நடக்கறதில்லை?'' என்று அதட்டிய அவன் - ரவிதேவ்!

அவனது பெயரை யோகின் மூலம்தான் அறிய நேர்ந்தது.

ரேணுகாதேவியின் ரோஜா நிறப் புடவையை அணிந்து வந்தவளை விழி நிறையப் பார்த்தவர் அச்சேலை நிறத்திற்கே சிவந்திருந்த அவள் முகத்தையும் கவனித்து விட்டார்...

''என்னம்மா - முகமேன் இப்படி சிவந்திருச்சு - என்ன?''

''இல்ல... ஒண்ணுமில்லை.''

''ரவியின் குரல் கேட்டுதே... உன்னிடமா பேசினான்?''

''அது யார்?''

''என் தம்பி மகன் - ரவிதேவ்.. நான் அவனது பொறுப்புங்கற நினைப்பில் எல்லாரையும் அதட்டுவான்.''

''பர... பரவாயில்லைங்க...''

''மன்னிச்சிடும்மா... என்ன சொன்னான்?''

''அலங்காரம் எப்படியிருக்குது... அதைச் சொல்லுங்க.''

பேச்சை மாற்றும் முயற்சி.

அவரது கண்கள் பனித்திருந்தன.



''என் நிலாப் பெண்ணை மறுபடி பார்க்கிறேன்... அவளுக்கும் இப்படித்தான்.. சிறு கோபத்திலும் முகம் சிவந்திடும்.''

நாற்காலி ஒன்றை இழுத்துப் போட்டு அவளை அதில் அமரச் செய்தார். ''ஆனால் ஒரு விஷயத்தில் நீ கொஞ்சம் மெனக்கெடணுமேம்மா.''

''சொல்லுங்க சார்.''

கனிவுடன் இவளையேப் பார்த்தார்.

''நீ அதிகம் உழைக்கறே - இல்லையா?''

''உழைச்சுத்தான் ஆகணும் சார். அப்பா தனியார் கம்பெனியில் கேஷியர். பொறுப்புக்கேற்ற சம்பளம் கிடையாது. அங்கேயே நானும் பகுதி நேர வேலை பார்க்கறேன். தபால் மூலம் ஒரு டிப்ளமோ கோர்ஸ் சேர்ந்திருக்கேன். கம்ப்யூட்டரும் அவசியம் - 'டேலி' படிச்சால் என் வேலைக்கு உதவும்... ஆனா...''

''உலக அழகிப் பட்டத்திற்காக வெளிநாடு போற பெண்களைப் பார்த்திருப்பே - கிள்ளியெடுக்க சதையிராது. 24 இஞ்ச் இடுப்புக்காக இலை, தழை ஜூஸ்னு வயிற்றைச் சுருக்கியிருப்பாங்க. நம்ப கிராம வயற்காட்டில் நாள் முழுக்க நாத்து நட்டு, களையெடுக்கும் பெண்ணுக்கும் அதே உடுக்கை இடுப்பு இருக்கும்... ஆனா, அவளை மேடையில் நிறுத்தினா ஜொலிப்பாய் இருக்காது - ஏன்?''

''சதா வெயிலில் வறண்ட சருமம்... உழைப்பால் முறுக்கேறிய உடம்பில் வலு இருக்கும்... ஆனா கவர்ச்சி இருக்காது.''

''எக்ஸ்டாக்ட்லி. துளிர் வெற்றிலையில் ஜொலிப்பு அவளுக்கு வாய்க்காது. அதிக உழைப்பு அவளது மிருதுத்

தன்மையை உருவிடுது. மினுமினுன்ற இளமையை உறிஞ்சிடுது. நீ நடிக்கப் போறது ஒரு கனவுக் கன்னியாய்...

'இப்படியும் ஒரு அழகா.. திறமையா?'ன்னு பார்த்தவர்கள் வியந்த ரேணுகா தேவியாய் நீ மாறணும்... இயற்கைத் தந்திருக்கும் அழகை மேலும் மெருகேற்றணும்மா தேனுகா...''

அவளுக்குப் புரிந்தது.

உழைப்பு தன்னை உருக்குலைத்து விடாமல் காத்துக் கொள்ள சொல்கிறார்.

அலுவலக வேலை, நடிப்புப் பட்டறைக்குப் போய் தன்னைக் கிடைத்ததில் எல்லாம் ஈடுபடுத்திக் கொள்வது, நடன வகுப்பு, வீட்டு பராமரிப்பு, சமையல், படிப்பு என்று சாவகாசமாய் உட்கார, கண்ணயர நேரமின்றி, பசித்ததும் உண்ண சமயமின்றி...

வேண்டிய ஓய்வும் உணவும் சேர்ந்தால்தானே அழகு வாய்க்கும்?

''மறுவாரம் நீ சென்னையில் இருப்பாய்...''

''ஆமா சார்'' - சந்தோஷமாய் சொன்னாள் - கூடவே அப்பா தன் நடிப்பு முடிவிற்கு ஒத்துக் கொள்வாரா என்ற சஞ்சலமும் அரித்தது.

''மாறனின் ஆலோசனைப்படி மிஸஸ். ரெட்டி உன் டயட்டீஷியனாய் இருப்பாங்க - அவங்க தரும் பட்டியலின் படி சாப்பிடு. கம்ப்யூட்டர் கோர்ஸ் இப்போதைக்கு வேண்டாம் - ஆயிரம் ரூபாய்க்காக உன்னைப் பிழிந்தெடுக்கற அந்த வேலையையும் விட்டுடு... ரெண்டு மாதத்தில் உன் உடம்பு தேறினதும் படப்பிடிப்பை ஆரம்பிக்கலாம்.''



இதெல்லாம் தனக்கு சாத்தியமா என்று அசந்தவளை அந்தச் சிரிப்பொலி தொட்டு உலுக்கியது.

ஆணும் பெண்ணுமாய் இணைந்து சிரித்த உல்லாச ஒலி.

தன்னிச்சையாய் யோகனின் முகத்திலும் புன்னகைத் திரண்டது. 'ரவி மற்றவர்களிடம் சிடுசிடுன்னாலும் யமுனாவிடம் வாலைச் சுருட்டிடுவான். அவ சிரித்தால் இவன் சிரிப்பான் - சிணுங்கினால் விழுந்து விழுந்து தாங்குவான்...'' என்றவர் சொல்ல இவளுக்கு 'சுருக்'கென்றது.

பிறகென்ன... கண்டதுமே தன்னைத் தூக்கி எறிந்து பேசியவன் இன்னொருத்தியிடம் விழுந்து வழிகிறான் என்பது... ஒருவிதமான அவமானம்தானே?

''அவர் இங்கேதான் இருக்காரா?''

''அடிக்கடி வந்து போவான் - தனக்கும் யாருமில்லை, எனக்கும் பிள்ளைகள் இல்லைன்னு ஒரு விதமான பரஸ்பர பாசம், பரிதாப உணர்வு, பாதுகாப்பு தேடல் எல்லாம் கலந்து... தவிர சிம்லாவின் அழகும் அவனை இழுக்குதும்மா... இஷ்டமாய் வருவான்...''

''பிறரை அலட்சியப்படுத்துவதும் இஷ்டம்தான் போல...'' சற்று காட்டமாய் நினைத்தவள் மேலும் கேட்டாள் -

''மற்றபடி அவர் இருப்பது எங்கே?''

இதெல்லாம் உனக்குத் தேவையா - என்று புத்தி அதட்டினாலும் மனம் மேலும் தகவல்களைச் சேகரிக்க ஆசைப்பட்டது.

''டெல்லி, மும்பைன்னு இருப்பான்மா... பெரும் புள்ளிகளுக்கு வெளிநாட்டு கார்களை தருவிச்சுக் கொடுக்

கறதுதான் தொழில். அதனால் அரசியல்வாதிகள், முன்னணி நட்சத்திரங்களுடன் நல்ல பழக்கம்.''

அவன் பவனி வந்ததுமே கூட விசித்திரமான ஒரு வாகனத்தில் தானே?

''இப்பகூட மும்பையின் ஒரு உச்ச நட்சத்திரத்திற்கு சிக்ஸ் - டோர் - பென்ஸ் வாங்கிக் கொடுத்திருக்கானாம்.''

இவள் பாமரத்தனமாய் மற்றபடி பென்ஸிற்கு எத்தனைக் கதவுகள் என்று மனக்கணக்கில் ஈடுபட்டாள்!

கூட இரு கதவுகள் எதற்கு?

மேலும் ஒரு வரிசை இருக்கைகளுக்காகவா?

''அது என்ன விலை இருக்கும்ன்ற யோசனையாமா தேனு?''

தன்னை நினைப்பைக் கூற கூசி வெறுமே தலையசைத்தாள்.

''எழுபது லட்சங்களுக்கு மேலே... நம்ப பயலுக்கு அதில் கனத்த கமிஷன்... ஆக பயல் பணக்காரன்!''

ஆக பணத்தில் புரள்பவன் - புகழ் போதையில் மிதப்பவர்களுடன் சகவாசம்... அதுதான் இத்தனை எகத்தாளம்... எளியவர்களிடம் அலட்சியம்.

சற்று தொலைவிலிருந்து மீண்டும் சிரிப்பொலி வந்து இவளைச் சீண்டியது.

''இந்த யமுனா யார்?''

''அவ அப்பா சிம்லாக்காரர்... ஆனா பெண் டெல்லிக் கல்லூரியில் படிச்சா. அப்படி ரவியோடு பழக்கம்னு நினைக்கறேன். சிம்லாவில் கைகளால் பின்னப்பட்ட காலுறைகள் பிரபலம் - எஞ்சிய பல வர்ண கம்பளி நூல் துண்டுகளால் பின்னப்படும் அவற்றைப் போட்டால்



பாதங்கள் வெது வெதுன்னு இருக்கும் - தவிர ஒன்று போல மற்றொரு ஜோடி அமையாது. நாடோடிக் கலையான அதை இங்கே ஜோடி 20 ரூபாய்க்கு வாங்கி இன்டியன் டிஸைனர் சாக்ஸ்னு அமெரிக்காவில் 20 டாலர்களுக்கு வித்துடறார்.''

''ஓஹோ...? அதனால்தான் அந்தப் பெண்ணும் சிம்லா வந்திருக்காங்க போல...''

''நம்ப ரவி ஐயா வர, கூடவே அம்மாளும் வருவாங்க - அவ்வளவுதான்;''

யோகின் சிரித்தார்... ஆனால் அது அவளுக்கு ரசிக்கவில்லை.

## 7

''தேனு, அரை கப் காபி தாயேன்.''

அப்பாவின் குரல் அவளை சட்டென நிகழ் உலகிற்கு இழுத்து இறக்கியது.

இதென்ன பைத்தியக்காரத்தனம்?

தீப்பெட்டி அடுக்கு போன்ற சென்னை ஃபிளாட்களைப் பார்த்ததும் சிம்லாவின் ஒப்பீடு மனதுள் வந்தது சரி...

ஒட்டினாற் போல யோகின் சாரின் அறிவுரைதான்... அதுவும் சரி.

பிறகு ஏன் ரவிதேவ்வைப் பற்றி தாங்கள் அவனைப் பேசியது எல்லாவற்றையும் விலாவாரியாய் அசை போட்டபடி நின்றாள்?

அவனது அலட்டலும் ஆணவமும்...

ஆனால் அவன் ஜம்பமெல்லாம் ஒரு பெண்ணிடம்... அதுதான் அந்த யமுனாவிடம் செல்லுபடியாகவில்லையே... அவளிடம் எப்படிக் குழைந்து சிரித்தான்..?

ச்சே... மறுபடி அவர்களைப் பற்றியே ஏன் யோசனை.

''இதோ கலக்கறேம்ப்பா...''

அப்பாவிடம் காபியை நீட்டியவள் சற்று திடுக்கிட்டாள்.

''ஏன்ப்பா, முகம் சரியில்லை?'' என்ற கேள்வியை அடக்கிக் கொண்டு அவர் காபியைக் குடிக்கும் மட்டும் காத்திருந்தாள்.

வழக்கமாய் ஒரு வாய் பருகியதும் மகளைப் பார்த்து புன்னகைக்கும் தகப்பன் முகத்தில் இன்று சுரத்தில்லை.

ஜுரம் வரும் முன் கன்றுவது போல கிடந்தது -

காலி டம்ளரை வாங்கியவள் அவரது நெற்றியில் கை வைத்தாள்.

அவளது கையை அழுந்தப் பற்றிக் கொண்டவர்... உடம்பு குலுங்கியது.

''என்னப்பா... அழுறீங்களே... என்ன?''

பதைத்து அவரருகே முழங்காலிட்டாள்.

''சொல்லுங்கப்பா... உடம்புக்கு முடியலியா? படுக்கறீங்களா?''

''இல்லை மகளே... இனி சும்மாவே படுத்துக் கிடக்க வேண்டியதுதான்.''

கேள்வியோடு அவரது விம்மிய தோளை நீவினாள் -

''வேலை போச்சம்மா... இனி எங்க வேலையை மெஷின்தான் செய்யுமாம்...''



அப்பா குறிப்பிடுவது கம்ப்யூட்டரை எனப் புரிந்தது.

இது காலத்தின் தவிர்க்க முடியாத மாற்றம்.

இனி அப்பாவினால் வேறு வேலை தேட முடியுமா?

கணினியைக் கற்கும் ஆர்வமும் வேகமும் அவருக்கில்லை.

''பென்ஷன் ஏதும் வராதும்மா - கிராஜுவிட்டின்னு கையில் ஒன்னரை லட்சம் வரும் - அதைக் கொண்டு நாம எவ்வளவு காலத்தை ஓட்டறது? சேமிப்புன்னும் அதிகமில்லை... சொந்தமாய் வீடு கூட இல்லியேடா. உன் கல்யாணத்தை... அந்த ஒன்னரை லட்சத்தில் உடனே... அதாவது அது கரைஞ்சு போறதுக்குள்ள முடிச்சிட்டா, நான் ஏதோ ஒரு முதியோர் இல்லத்துல சேர்ந்துடலாம்...''

''அந்த நிலைமை எல்லாம் நமக்கு வராதுப்பா. நாம சேர்ந்தேதான் இருப்போம். இந்த குறும்படத்தில் நடிச்சால்...''

கையைத் தூக்கி மறுத்தார் -

''வேண்டாம்டா... படம், சினிமா எல்லாம் இனி மறந்திடு தேனு. அதென்ன என்னருண்டையா... நமக்கு ஏற்காது. ஆக வேண்டியதைப் பார்ப்போம் - போதும்...''

இவளுக்குள் ஏதோ நொறுங்கியது.

வேறென்ன... சில நாட்களில் பிரம்மாண்டமாய் எழும்பியிருந்த அவளது கனவுகள்தான்..!

அன்றிரவு தலையணை நனைய அழுதாள்.

பகிர்ந்தால் துக்கம் பாதியாகும் என்பார்கள்.

ஆனால் இது பகிரக்கூடாத வருத்தம். அப்பாவிடம் தன் வேதனையைக் காட்டி அவரை மேலும் கவலைக்குள்ளாக்கக் கூடாது.

ஆக விசும்பலும் வெளிக் கேட்காதபடியே அழுதாள்.

அதுவே நெஞ்சின் பாரத்தை அதிகமாக்கியது.

தாய் இருந்திருந்தால் அவள் மேல் சாய்ந்து அரற்றியிருக்கலாம் -

''இது போல சான்ஸ் யாருக்கேனும் கிடைக்குமாம்மா? நானே கூட இப்படி ஒரு வாய்ப்பு வரும்னு கனவும் கண்டதில்லையே... வெனிஸ் பட விழாவில் என் படம்... அதிலும் என் முதல் படம்... போச்சேம்மா...'' என்று.

இப்பொழுதோ தந்தையைத் தேற்றும் நிலையில் நின்றாள்.

''விடுங்கப்பா... எனக்கு ஓரளவு கம்ப்யூட்டர் அடிப்படை அறிவுண்டு. ஒரு ஆறு மாசக் கோர்ஸ் முடிச்சால் உங்க கம்பெனியே கூட வேலை தரும். அந்த சம்பளம் போக அப்பப்ப நாடக உபரி வருமானம்... நம்ப ரெண்டு பேருக்கும் அது போதாது - இந்த ஒன்னரை லட்சம் பேசாமல் பாங்க்ல வட்டி குட்டி போட்டுட்டு இருக்கட்டும். சரிதான?''

ஆனால் அப்பா நிலை குலைந்திருந்தார்.

''உனக்கு உடனே கல்யாணத்தை முடிச்சிடணும்மா'' - என்ற புள்ளியிலேயே பம்பரமாய் சுழன்றார்.

''வாழ்க்கைன்னா மாற்றங்கள் இல்லாமலா? தெரிஞ்ச நீங்க இப்படி அலட்டிக்கலாமாப்பா?''

''எங்கம்மா சொல்வாங்கடா தேனு - வாழ்க்கைன்னா மாற்றங்கள் வரும், வேணும். ஆனால் நட்டாற்றில் குதிரையை மாற்ற நினைப்பது தவறுன்னு. ஒரு நடுத்தர வர்க்கக் குடும்பத்துக்கு நடிப்பு... இப்ப உலகத்தர சினிமா இதெல்லாம் சரிப்படாது.''

அப்பாவின் பேச்சிற்கு இவள் கட்டுப்பட வேண்டிய சூழ்நிலை. ஆனால் திருமணம் என்ற நினைப்பே கசந்தது.



இப்படி அவசர அவசரமாய் கடமைக்கு என்று ஏற்படும் ஒரு பந்தம் எப்படி அமையும்? மற்றபடி ஒருவாறாகத் தன்னைத் தேற்றி அப்பாவிற்குக் கட்டுப்படும் நிலைக்கு அவள் வர, வந்தது அடுத்த சோதனை!

அந்த பதிவுத் தபாலை அவள் பக்குவமாய் பிரிக்கும் போதே இதயம் படபடத்தது. தபாலில் இருந்தது ஹிமாச்சலின் முத்திரை. அதாவது யோகினிடமிருந்து...

என்ன எழுதியிருப்பார்?

விரைவில் அவரது கனவுப்பட நாயகி ஆக தனக்குக் கொடுப்பினை இல்லை என்று எழுத வேண்டுமென நினைத்து, அதற்கான தைரியம், பக்குவத்தைத் திரட்டிக் கொண்டிருக்கும் வேளையில், இக்கடிதம் சொல்லப் போவது என்ன?

முதலில் படபடப்பாய் கடித வரிகளில் ஓடிய அவளது விழிகள் மெள்ள பரவசமாகின.

எப்பேர்ப்பட்ட வாய்ப்பு!

'நீங்காத நிலா'வை இயக்கப் போவது பிரபல இயக்குநர் மயன்! சிறு விளம்பரமோ, முழுநீள படமோ, கவிதையாய் படமாக்கிப் பார்ப்பவர்களை அயர வைக்கும் அவரா தன்னை இயக்கப் போவது?

அவர் இயக்குவதைத் தொலைவில் இருந்து பார்ப்பதே கூட பாக்கியம் என்ற நிலையில் அவர் இயக்கி நடிப்பது அபூர்வ அனுபவமல்லவா? வாழ்நாள் முழுக்கப் பொக்கிஷமாய் பேணி, பிறரிடம் சொல்லி பெருமிதப்படக் கூடிய சந்தர்ப்பமல்லவா?

மயனை இவள் சந்திப்பதற்கான தேதியும் - போகும் முன் அவரிடம் 'பேசி' மூலம் வசதியான நேரமும் அறிந்து செல்ல

தொலைபேசி எண்ணும் தரப்பட்டிருந்தது. இந்த வாய்ப்பை ஏற்க முடியாது என்பதை நேரில் போய்த்தான் சொல்ல வேணும்... அதுதான் மரியாதை...

## 8

திரையுலகின் அந்த ஜாம்பவானைப் பார்த்தவளுக்கு எதையும் விளக்க முடியவில்லை. அவரது கேள்விகளுக்கு ஒற்றை வரியில் பதில் சொல்லத்தான் முடிந்தது.

''இப்ப என்ன செய்யப் போறதாய் திட்டம்?''

''கம்ப்யூட்டர் கோர்ஸ் சேரணுங்க.''

''அதாவது வேலையில் சேருவதற்காய்?''

''ஆமாங்க.''

''ஒரு வருஷங் கூட நீ வேலையில்லாமல் இருக்க முடியுதா?''

''ம்ம்... சம்பளம் இல்லாது இருக்க முடியாதுங்...'' தாடி, மீசைக்குள் பொதிந்திருந்த அவரது உதடுகள் முறுவலித்தன.

மயனுக்கு படைப்பாளிகளுக்கே உரிய கனவுக் கண்கள் - ஆனால் அதில் காரியக் கூர்மையும் இருந்தது.

நீண்ட விரல்கள், அதிகம் உட்கார்ந்து யோசிக்கும் மனிதர் இவர் எனச் சொல்லும் உடல்வாகு.

''ஆக யோகினுக்கு உன் சமீபப் பிரச்சினை பற்றி தெரியாது?''

முகவாயை நீவியபடி கேட்டார்.

''இப்பதான் எழுதிப் போட்டேங்க...''



எழுதிய தனக்கும், வாசிக்கும்போது யோகினுக்கும் அது தாளக் கூடாத ஏமாற்றம்தான்... ஆனால் வேறு வழியு மில்லையே.

ஆசைகளை ஊதி ஊதி அவை எம்பி ஜ்வாலையாய் எரியும்போது குளிர்நீரை வீசினது போன்ற அதிர்ச்சி...

யோகின் நிலைகுலைந்திருப்பாரோ?

ஒரே சாயலில் இருக்கும் தன் மீதே பாசம் காட்டுபவர் அன்று ரேணுகாவின் மீது உயிராயல்லவா இருந்திருப்பார்?

அன்று ரேணுகாவின் புடவையில் இருந்தவளை சில புகைப்படங்கள் எடுத்தவர், எல்லோரும் சேர்ந்தே சாப்பிடலாம் என்று சொல்லி ரவிதேவ், யமுனாவையும் மேசைக்கு அழைத்தார்.

ரேணுகாவிற்குத் தயக்கம். எனினும் மறுக்க வழியில்லை.

மேஜையில் உணவு வகைகள் வைக்கப்பட, முதன்மை இருக்கையைக் காட்டி, ''இது நம் முக்கிய விருந்தினர்க்காய்... மிக அழகான, சிம்லாவில் ஏன் உலகிலேயே அழகான ஒரு இளம் பெண்ணிற்காய்...'' என்று அவர் சொல்ல யமுனாவின் முகத்தில் பூரிப்பு கலந்த சிறு படபடப்பு.

''ரேணுகா இது உனக்கான இருக்கை - உட்காரம்மா...''

கன்றிப் போன யமுனாவின் முகத்தைக் காண்பதில் இவளுக்கொன்றும் ஆனந்தமாயில்லை.

''நான்... அப்படி ஒன்றும்...'' தடுமாறினாள் -

''இந்த வீடு என்னது - என் கண்களுக்கு மிக அழகிய, அருமையான பெண் நீ - அவ்வளவுதான் - இப்ப உட்கார்.''

இந்த 'இருக்கை' சம்பந்தமாய் கிளம்பிய சிறு ஒதுக்கலைக் கூட தாளமுடியாமல் யமுனா கடுகடுத்தாள்.

தன் நாற்காலியை ரவிக்கு மிக அருகே போட்டுக் கொண்டு அவனிடம் குனிந்து கிசுகிசுத்தாள்.

இவளைக் கண்டு கொள்ளவேயில்லை.

தேனுகா மரியாதை நிமித்தம் உணவு பற்றி பாராட்டாய் சில வார்த்தைகள் கூறவும் தன் குரலை உயர்த்தினாள் யமுனா -

''ஏன் ரவி? போன மாசம் மமதிக்கு ஒரு கார் வாங்கித் தந்தீங்களே - அதற்கான பேமென்ட் வந்தாச்சா... இல்லை ஜுமுபறிதானா?''

''ப்ரொட்யூசர் தந்த செக் பௌன்ஸ் ஆயிடுச்சாம் - வந்ததும் தர்றேன்னு இழுக்கறா...''

''நடிகைகளே இப்படித்தான் - தகுதிக்கு மீறின ஆசைகளை வளர்த்துக்கறது. கொஞ்சம் பல்லைக் காட்டினால் எவனும் தன் இழுப்புக்கெல்லாம் வருவாங்கற திமிரும் வேறு. நீங்க பணத்தை அழுத்திக் கேட்க மாட்டீங்கன்னு நினைச் சிருப்பா...''

''ஹையோ.. அதெப்படி இருபது லட்சத்தைப் போகுதுன்னு விட?''

''ஏன்னா நீங்க நடிகைன்னா 'ஆ'ன்னு பார்க்கற ரகமில்லை. இப்ப டி.வி.யில் நடிக்கறதுகளுக்குக்கூட மவுசைப் பாருங்களேன்.''

யமுனா தன்னை மட்டம் தட்டுவதற்காய் நடிகை வர்க்கத்தையே இழிவு படுத்துவது புரிந்த தேனுகா யோகினுடன் வேறு ஏதோ சம்பாஷிக்க, யமுனாவின் எரிச்சல் ஏனோ ரவி மீது பாய்ந்தது.

அவன் தனக்குப் பரிமாறிய கையோடு அவளுக்கும் ஒரு கரண்டி நூடுல்ஸ் வைக்க,



''ச்சே... எனக்கிது பிடிக்காதுன்னு தெரியாது? உங்க நினைப்பு இங்க இல்லை போலிருக்குது...'' சிடுசிடுத்தாள்.

''வேண்டாம்னா சாப்பிடாதே - ஒதுக்கி வச்சிடு.''

''நீங்க இன்னைக்கு வாங்கித் தந்த ஷால் கூட எனக்குப் பிடிக்கலை. என்ன ரசனையோ?''

ரவியின் முகம் இறுகியது.

தன்னை மட்டம் தட்டியவனைக் குட்டவும் ஒருத்தி இருக்கிறாள் என்ற அளவில் தேனுகாவிற்குத் திருப்திதான்.

''ரசனைகள் வேறுபடும்மா - மற்றவர்களின் ரசனையை நாம் மதிக்கணும்.'' பக்குவமாய் பேசினார் யோகின் -

''ஒரு ஓவியம் உன்னதம்னு நான் நினைக்க, வேறு ஒருவனுக்கு அது வெறும் வர்ணமெழுகல் - பலருக்கு புத்தகங்கள்னா உயிர் - வாசிப்பில் பிடிப்பு இல்லாதவனுக்கு அது வெறும் மையோடிய காகிதம் - சங்கீதம் அற்புதம்னு நெக்குருகறவங்க உண்டு - 'அது என்ன விலை'ன்னு கேட்பவங்களும் உண்டே... என்ன சரிதானே?''

பொதுவில் பேசி சூழ்நிலையை இதமாக்கினார்.

இப்போதும் அவர் தானிருக்கும் தன்னை இறுக்கும் சிக்கலைப் புரிந்து கொள்வாரா? இவள் விலகலில் ரவிக்கு திருப்தியாய்த்தான் இருக்கும் - யமுனாகூட 'ஒன்று வந்த பிடாரி ஒழிந்தாள் - இனி தான் ஒரே பிடாரியாய் ஆட்சி செய்யலாம்' என்று திருப்திப் படுவாள்!

''குட்மார்னிங் - யோகின் இருக்காரா?'' கணீர் என்ற பெண்ணின் குரலில் திரும்பி உள்ளே வந்தாள்.

ஹா'ய்... வழக்கம் போல தன் சிந்தனை ரவி, யமுனாவிடம் இந்தச் சூழலிலும் ஓடியது அவளுக்கு. அவமானமாயும்

குழப்பமாயும் இருந்தது. தொலைபேசி எண்களைத் தேடி தொடர்பு கிடைப்பதில் மயன் மும்முரமாய் இருக்க, இவளது சிந்தனையும் தறி கெட்டுப் போனது.

இன்னும் யோகினுக்கு தன் கடிதம் கிடைத்திராது.

ஏமாற்றமான இவள் விஷயத்தை போட்டு உடைக்கப் போகிறாரா மயன்?

''என்ன யோகின் கிளம்பியாச்சா - மறுவாரம் இங்கே இருப்பாரா? சரி'' குழம்பிய இவள் முகத்தைப் பார்த்தவர் -

''அப்ப வரும் வாரமே பேசி முடிவெடுக்கலாம். எனக்கு விளம்பர ஷூட்டிங் ஒன்று இருக்குது. என் மனைவி தன்மதி வருவா... இருந்து பேசிட்டுப் போ.''

## 9

மயனுடையது கேரள பாணியில் எளிமையான மர வீடு. வரவேற்பறையின் கண்ணாடி அடுக்குகளில் கம்பீரமாய் நின்ற தேசிய விருதைப் பார்த்தவளுக்குப் புல்லரித்தது. 'ஃபிலிம் ஃபேரின்' கோணல் மங்கை, நந்தி விருது என்று கலவையான அணிவகுப்பு.

நின்றபடி அவளை ஆவலாய்ப் பார்த்தவள் -

''இதுபோல விருதுகள் உங்களுக்கும் கிட்டும்'' என்ற இனிய குரலில் அவசரமாய்த் திரும்பினாள்.

முழுக்க உலராத கூந்தல் நுனி முடிச்சிட்டுக் கிடந்தது - நெற்றியில் சந்தனக் கீற்றும் குளிர் முகமுமான அப்பெண்,

''நான் தன்மதி - டைரக்டரின்ட சம்சாரம்'' அறிமுகப் படுத்திக் கொள்ள இவளும் கை குவித்துத் தலையாட்டினாள்.



''உங்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கேன் - மோகினி ஆட்டத்தில் பிரபல நடனமணியாச்சே.''

''நன்றி... பத்து நிமிஷத்தில் அவரை அனுப்பிட்டு வந்துடறேன். பிறகு நாம் சேர்ந்தே சாப்பிடலாம். நான் சில விவரங்களை உங்களிடம் சொல்ல வேணும்.''

''ஆகட்டுங்க... இருக்கேன்?''

''யோகினை போன முறை டெல்லி போயிருந்தப்ப சிம்லா போயே சந்திச்சோம். அருமையான மனுஷர்... அப்போ ரேணுகா தேவியின்ட படங்களைக் கண்டதுண்டு.. உங்க ரெண்டு பேருக்கும் அற்புதமான சாயல் ஒற்றுமை...'' வியந்து பாராட்டினாள்.

''ஆமா... ஆனால்...''

''இருங்க - ஐந்தே நிமிஷம்.''

சொன்னது போலவே சில நிமிடங்களில் வந்த தன்மதி சூடான குழாய்ப் புட்டு, பயிறு, பழம் எனப் பரிமாறி விட்டு, உடன் அமர்ந்து தன் பள்ளிப் பருவம், குடும்பம் பற்றியும் பிறகு தனக்கு நாட்டியத்திலுள்ள பிறகு மயன் மீதும் தோன்றிய ஈர்ப்பு பற்றியெல்லாம் சொல்ல, ஆர்வமாய் கேட்டாள் தேனுகா... இதெல்லாம் கனவு போல பட்டது அவளுக்கு.

இப்படி பிரபலங்களுடன் உட்கார்ந்து சாவகாசமாய் பேசக்கூடும் என்பதே பிரமிக்க செய்ய, தன்மதி மேலும் கூறிய விவரம் இவளை வாயடைக்கச் செய்தது.

''உன்னைப் பார்த்த டைரக்டருக்கு... அதாவது மயனுக்கு தன் அடுத்தப் படத்தில் உன்னை நடிக்கக் கேட்கணும்னு தோணிடுச்சு. உனக்கு மெல்லிய உணர்வுகளைக் கூட கூர்மையில் வெளிக்காட்டும் முகமாம் -

எங்களது அடுத்தத் தயாரிப்பு ஒரு சரித்திரப் படம் - ஒரு ராஜ்யம் எப்படிக் கட்டப்படுது, பிறகு எங்கனம் கட்டுக் குலைகிறது என்பது பற்றிய படம்... கிளைக்கதையாய் காதலும் உண்டு. சிற்பியின் மகளை பிரதம சீஷனும், இளவரசனும் பிரேமிப்பதாய்... நடிக்க வாய்ப்புள்ள பாத்திரம்... ஆனா முதல்ல யோகினுடைய படம் பூர்த்தியாகணும்... அதன் படப்பிடிப்பு ஆரம்பிக்கவே ரெண்டு மாசமாகலாம்... அதற்குள் உன் உடம்பும் தேறணும்...''

''நான்... இங்கே பேச வந்த விஷயமே வேறங்க...'' என்ற தேனுகா தன் தந்தை வேலை இழந்ததையும், பணப் பிரச்சினை அவளது கனவுகளுக்கு தடையாய் இருப்பதையும் அவசரமாய் விளக்கினாள்.

அத்தனையையும் ஒரு பரிவான புன்னகையுடன் கேட்ட தன்மதி -

''சந்தோஷமாய் இருக்கு தேனுகா...'' என்றாள் முடிவில் -

''என்ன புரியலையே?''

''அழகாயிருக்கும் பெண்களுக்கு இந்தக் காலம் பணம் ஒரு பிரச்சினையே இல்லை - மாடலிங்னு ஆரம்பிக்கறாங்க. மேடையில் அல்லது விளம்பரங்கள்ல வசீகரமாயிட்டு தோன்றும் இப்பெண்களுக்குச் செலவழிக்க பணக்கார பசங்க அல்லது பிரமுகர்கள் தயாராய் உண்டு. வெறும் டேட்டிங்னு ஆரம்பிக்கறது பிறகு பணத்தின் தேவை அல்லது மோகம் அதிகமாக ஆக பெண்கள் அதற்கு ஈடாய் எதையும் தரத் தயாராகி விடறாங்க. ஆனால் அப்ப போய் விடறது அவர்களின் பரிசுத்தம் மட்டுமல்ல, அதைத் தெரிவிக்கும் முகக் களையும்தான் என்பதை அவங்க அறியறதில்லை. ஆன்மா தூய்மையின் தெளிவோடு இருந்தால் அந்த தேஜஸின் முன் யாரும் பணிந்து விடுவார்கள்... உன்னிடம் அது உண்டு...



பணமும் பகட்டும் அதை உறிஞ்செடுக்காது நீ அதைக் காத்துக் கொண்டே இத்ர பவித்ரமான அழகுடைய, திறமையும் கொண்ட பெண் எங்கள்க்கு லேசில் கிடைக்காதே...''

''நன்றி... ஆனா என் படிப்பு, வேலை...''

''அதுக்கெல்லாம் இப்ப சமயமில்லா - டான்ஸ் கத்துக் குறியா?''

''சுதா மூர்த்தி - அந்த அக்கா கத்துத் தராங்க...''

''அடிப்படைத் தெரிஞ்சிருக்கும் - ஆனா உனக்கு உடலின் மொழி வலுப்படணும்... உணர்ச்சியை வெளிப்படுத்தும் முகம் உனக்கு என்றாலும் நாடகக் குழுவின் பயிற்சியும் உண்டல்லவா? ஆக இப்ப நடிப்பு இயல்பாய் வரும். உடம்பும் அதற்கு ஒத்துழைக்கணுமே - உடம்பின் ஒவ்வொரு அசைவும் அசைவின்மையும் நடிக்கணும்... அதற்கு உன்னைப் பயிற்றுவிக்க ரக்ஷாதாஸ் பொருத்தமானவங்க...''

இவளுக்குத் தலை சுழன்றது.

இவளது பிரச்சினையை, மறுப்பைக் காதிலேயே ஏற்றுக் கொள்ளாமல், இவர்கள் மேலும் மேலும் திட்டமிட்டு கனவு கட்டடத்தை எழுப்பிக் கொண்டே போகிறார்களே?

ரக்ஷா தாஸைக் கேள்விப்பட்ட பெயர்தான். ஆனால் அந்த அம்மையாருக்கு வயது எழுபது இருக்கும். ரஷ்யாவில் பல வருடங்கள் தங்கி பாலே நடனத்தையும் கற்று, அதை இந்திய நடனத்துடன் கலந்து சில நிகழ்ச்சிகளை அமைத்தவர்கள் - அவை சிலரின் வியப்பிற்கும் பலரின் கண்டனத்திற்கு ஆளானதெல்லாம் அவள் கேள்விப்பட்டதுண்டு - ஆனால் அதெல்லாம் 15, 20 ஆண்டுகளுக்கு முன்...

''மேடம் தாஸினால் இப்போ ஆட முடியாதுதான். ஆனா உன் அசைவுகளில் எங்கே தவறு இருக்குதுன்னு சொல்லித் திருத்துவாங்க... நடிப்பிற்கு அது முக்கியம்...''

''அது உண்மைதாங்க.. ஆனா என் நிலைமை...''

''எதுவும் லேசில்லை தேனுகா - ஆனா ஒன்று நினைப்பிருக்கணும்.

ஒன்பது மாடிக் கட்டிடமானாலும் அது கைப்பிடி மண்ணிலிருந்துதான் உருவாகிறது. சரித்திரப் படம் எடுப்பது லேசில்லை. அதற்கான டிமான்ட் இப்ப இல்லைங்கறதோடு செலவும் நாலு மடங்கு அதிகம். ஆனால் அதெல்லாம் நம் கற்பனைக்கும் குறிக்கோளுக்கும் தடையாய் இருக்கக் கூடாது.''

''நான் மட்டும்னால் துணிந்து நிற்பேன்ங்க... ஆனால் அப்பாவால்.. அவருக்கு என்னை விட்டால் யாருமில்லை.''

விரிந்த கூந்தலைக் கோதியபடி ஆமோதிப்பாய் தலையசைத்தாள் தன்மதி. ''என்னுடைய சமீப நாட்டிய நாடகம் - 'கடல் கன்னிகள்' நாகரீகப் பெண்ணைப் பற்றியது. நிகழ்காலப் பெண்ணைக் கடல் கன்னியுடன் ஒப்பீடு செய்திருந்தேன். அறிவு, ஆற்றல் எனும் துடுப்பால் முன்னே நகர்பவள் அதே சமயம் தன் முன்புற பெண் உருவில் மனைவி, தாய், மகளாய் நின்று குடும்பத்தையும் பேணணும் - இல்லையா?''

''நிஜந்தாங்க. வெளி வேலைக்குப் போகும் பெண் வீட்டை 'அம்போ' என்று விட்டுவிடுகிறாளா என்ன? பெண்ணும் மீனுமாய் நின்று இருவித கடமைகளிலும் பரிமளிக்கிறாள் தான்.''

எழுதிய காகிதத்தை நீட்டினாள் தன்மதி -

''இதில் ரக்ஷா தாஸின் விலாசம், தொலைபேசி எண், குறிச்சிருக்கேன். கற்றுத் தரும் சொற்ப நேரத்திற்கே ஆயிரக்கணக்கில் ஃபீஸ் வாங்குவாங்கன்னு கேள்வி. ஆனா



அந்தக் கொஞ்ச நேரத்தில் நீ கிரஹிக்கும் சில குறிப்புகள் உன் நடிப்பை ஆயுசுக்கும் மேம்படுத்தும்... வலிமையானதாக்கும். கவனமாய் சாப்பிடு. தேவையான ஓய்வும் அவசியம். வாழ்த்துக்கள்.''

ஒரு பிரம்பு கூடை நிறைய கனி வகைகளுடன் விடை கொடுத்தாள் தன்மதி.

''நன்றி... ஆனால்.''

''முகத்தில் இன்னும் குழப்பமிருக்கு... ம்ம்? யோகின் மறுவாரமே வர்றாராமே? உனக்காகச் சன்மானத்தை அவர் முன்னதாகவே கொடுக்கச் சொல்லி சமாளிச்சுடலாம் - பண விஷயம் பற்றி...?''

''நாங்க பேசவே இல்லை.''

வாஞ்சையுடன் இளையவளின் கன்னத்தைத் தட்டியவள், ''கனவுலகிலேயே சஞ்சரிக்கும் கலைஞர்கள்... ம்ம்? ஆனால் உன் பிரச்சினையைச் சொன்னால் யோகின் புரிஞ்சுக்குவார். ஆக தயங்காமல் உன் பிரச்சினைகளை அவரோடு பேசு.''

அதுதானே... இன்றைய புதுமுகங்கள் கூட கோடிகளில் சம்பளம் பெறுவதாய் செய்தி வரும் சினிமா உலகில் தனக்கு பல ஆயிரங்கள் வந்தாலும் போதுமே - சமாளித்து விடலாம்!

ஆக மறுக்கும் முடிவோடு வந்தவள் சமாளித்து விடும் தெம்புடன் வீடு திரும்பினாள்!

## 10

நெளிவாக்கப்பட்ட கேசமும், அதீத சிவப்பு இதழ்களுமாய் தயாராகிக் கொண்டிருந்த மகளைப் பார்த்த சுந்தரத்தின் முகம் சுருங்கியது.

தேனுகாவின் வீட்டில் தொலைபேசி இல்லாதது உணர்ந்த யோகின் ஒரு சென்னை நண்பரின் மூலம் செல்போனுக்கு ஏற்பாடு செய்ய, இருவரும் அடிக்கடி பேசிக் கொள்ள முடிந்தது.

இந்தியாவின் முன்னணி இயக்குநரின் அடுத்த படத்தில் சந்தர்ப்பம் கிடைத்தது பற்றியும் கூட யோகின்தான், சுந்தரத்திடம் மகிழ்ந்து பேசினார்.

''அருமையான திறமையான பொண்ணுங்க சுந்தரம் சார் உங்களுக்கு... அவளுக்கேற்ற சந்தர்ப்பங்களும் இப்ப வர்றதில் எனக்கு ரொம்ப மகிழ்ச்சி...''

ஆனால் விவரத்தில் சுந்தரம் மகிழ்வதாய் காணோம்.

''ஏம்மா இதெல்லாம் நமக்கு ஒத்து வராதுன்னு சொல்லியும் நீ விட்ட மாதிரியில்லையே?''

வாடாத அவரது புன்னகையை இப்போது முகத்தில் காணவேயில்லை.

''இல்லைப்பா... மறுத்து கடிதமெல்லாம் எழுதிப் போட்டாச்சு... யோகின் சார் இங்கே வரும்போது அழுந்தச் சொல்லிடறேன்... ஆனாப்பா அவங்க நடிக்கக் கேட்பது வழக்கமான படத்தில் இல்லைப்பா- அதாவது மூணு மணி நேரத்தில் ஆறு பாட்டுள்ள சினிமா இல்லை... நம்மூரில் படம் வெளியாகாது.''

''ஆனாலும் உன் பேருக்கு ஒரு பிரபலம் ஏற்பட்டிடும்மா - நடிக்கும் முன்னரே அடுத்தப் படத்திற்கான சந்தர்ப்பம் வந்திடுச்சு பாத்தியா?''

இவளாலும் அதை மறுக்க முடியவில்லை. ''இப்படி வரும் சந்தர்ப்பங்களை மறுக்க உனக்கு மனசு வராதுடா.



''இது ஒண்ணு மட்டும்''ன்னு நினைத்தபடி பல படிகளை ஏறிடுவே. பிறகு அந்த உயரத்துக்கு என்னால் மாப்பிள்ளைத் தேட முடியுமா? அதாவது நம் கையிலிருக்கும் சொற்ப வசதிக்கு அது முடியாதேம்மா.''

அப்பாவின் பிரச்சினை புரிந்தது.

அதே சமயம் இது போன்ற சந்தர்ப்பங்களையா நழுவ விடுவதா என்ற மருகல்!

'சந்தர்ப்பம் உன் கதவைத் தட்டாவிட்டால்

நீ ஒரு கதவைக் கட்டு' எனும் முன்னேற்ற மொழி அவளுக்கு மிகப் பிடிக்கும்.

இப்போதோ கதவைத் திறந்து நுழையத் துடிக்கும் அதிர்ஷ்டத்தை வெளியே தள்ளி கதவடைக்க வேண்டிய நிலை!

அதற்கான துணிச்சல்... திராணி இல்லையே.

ஆனால் யோகின் செல்போன் மூலம் அவளின் தந்தையிடம் எப்படி, என்ன எடுத்துச் சொன்னாரோ தெரியவில்லை. சில நாட்களில் -

''நான் சராசரித் தகப்பன்ம்மா... பெண்ணை நல்ல இடத்தில் கல்யாணம் செய்துக் கொடுத்து அவ நிறைவாய் வாழ்ந்தால் போதும்னு நினைக்கறவன் - ஆக பெரிய எட்டு எடுத்து வைக்கப் பயப்படறேன். ஆனா என் மறுப்பு உனக்கு வாழ்நாள் முழுக்க ஒரு ஏமாற்றத்தைத் தரும்னால் நான் எதையும் தடுக்கலை...''

சாப்பிடும் நேரத்தில் அப்பா மெதுவாக சொன்னதையே அவளது சம்மதமாய் எடுத்துக் கொண்டாள். ஆனாலும் கவர்ச்சியாக்கப்பட்ட தோற்றத்தில் யோகினைப் பார்க்க மகள் விரும்பியதை அவர் ரசிக்கவில்லை.

இவளும் இப்படி மெனக்கெட்டிருக்க வேண்டாம். ஆனாலும் கொப்பளித்த ஆர்வத்திற்கு அணை கட்ட முடியவில்லை. இத்தனை ஆர்வமுள்ளவளை எப்படி அடக்கி வைப்பது என்பதும் ஒரு தகப்பனின் நியாயமான கவலைதான்.

இவளுக்குள் யோகினை சிறு இடைவெளிக்குப் பின் பார்க்கப் போகும் உற்சாகம்.

பணப் பிரச்சினைப் பற்றிய பேச்சை அவரிடம் எப்படி எடுப்பது என்ற தயக்கமும்... கூடவே அவனது ஞாபகமும்... மலரோடு வரும் மணம் போல... சிம்லா அல்லது யோகினை நினைத்துக் கொண்டால் கூடவே இழுபடும் ரவிதேவ் பற்றிய நினைவுகள்...

ம்ஹூம்... அதை மணம் என்று சொல்ல முடியுமா?

ஒருவித நெருடலான காட்டமான... நெடி?

சென்னை மகாபலிபுர சாலையில் யோகின் தன் நண்பரது வீடு ஒன்றில் தங்கியிருக்கிறார்.

''காலியாய்க் கிடக்கிற, வீடு... நாங்க இருந்தால் நல்லதுன்னு சொந்தக்காரர் திறந்து விட்டிருக்கார்'' என்று யோகின் சொன்னதால் ரவியும் கூட வந்திருக்கிறானோ என்ற நெருடல் நினைப்பு!

நீலாங்கரையைத் தொட்ட நீண்ட பயணம் அவளுக்கு அசைபோட வேண்டிய நேரத்தைத் தந்தது.

பஸ்ஸிலிருந்து இறங்கியவள் யோகின் சொன்னது போலவே அங்கிருந்த 'சின்னப்பர் டீ ஸ்டால்'லில் விசாரித்து 'ரெட்டியார் வீட்'டை அடைவதற்குள் வேர்த்து விறுவிறுத்திருந்தாள்.



மெல்லிசாக்கப்பட்ட வளைபுருவங்களும் அடர் சிவப்பு சாய உதடுமாய் இப்படி பட்டப்பகலில் சூரிய தகிப்பில் அலைவது அவளுக்கே அசட்டுத்தனமாய் பட்டது.

யோகினுக்கு மறுப்பாய் கடிதம் எழுதியவள், நிலைமை இப்போது சீராகி விட்டது என்பதைச் சொல்லும் யுக்திதானே இது. கடலின் நீலப் பின்னணியில் முத்தின் வெண் திரட்சியுடன் அழகாய் நின்றது அவ்வீடு. கைக்கடிகாரத்தைப் பார்த்தாள் - மணி பதினொன்று.

சொன்ன நேரத்திற்கு வந்தாகி விட்டது.

வெளி கேட்டிலிருந்து வீடு போய்ச் சேரவே ஐந்து நிமிடமாகும் போலவே என்ற நினைப்புடன் காலை வீசிப் போட்டாள்.

வியர்த்த முகத்தை லேசாக ஒற்றிக் கொண்டாள் - இருந்த சில தென்னை மரங்களும் சோனியாய்.

''இவ்வளவு நிழலும் காற்றும் தான் தர எங்களால் ஆகும்'' என்பதாய் சோகையாய் அசைந்தன...

யோகினிடம் எல்லாம் சொல்ல வேணும்.

அப்பாவின் வேலை போனது, நடிப்புப் பற்றிய அவரது அதிருப்தி, யோகினின் பேச்சால் தந்த அரைகுறை ஒப்புதல் - எல்லாம்.

அவளது பசித்த வயிறு உறுமியது.

காலையில் சாப்பிட்டது போதவில்லை.

ரேகா ரெட்டி - அதாவது டயட்டீஷியன் எழுதித் தந்த பட்டியலின்படி சாப்பிட்டதுதான் -

பட்டியல் சரிதான் - ஆனால் அதன்படி உள்ள உணவு, பழரசங்களைத் தயாரித்துத் தர ஒரு ஆள் வேண்டுமென்பதே முக்கிய தேவை!

ஒரு நாள் காலை உணவு பெங்களூர் தக்காளிச் சாறு என்றால் மறுநாள் ஆர்கானிக், அதாவது இயற்கை உரத்தில் விளைந்த பீட்ரூட்டின் சாறாம்! அவற்றை வாங்க இவள் மெயின் மார்க்கெட் அல்லது 'நீல்க்ரீஸ்' வரை போக வேண்டியிருந்தது.

தவிர ஓட்டை மிக்ஸியுடன் போராடி அதைப் பிழிந்து குடிப்பதற்குள் 'அம்மாடி' என்றாகி விடுகிறது!

ஆக இப்போதைய அவசரத் தேவைப் பணம்!

கொடுக்கப்பட்ட சொற்ப டயட்டில் வீட்டு வேலைகளைச் செய்ய முடியவில்லை! ஆகக் கூடுதலாய் உண்டாலும், ஒத்தாசைக்கு ஒரு ஆள் போட்டால் தேவலை. தன் சம்பாத்தியமும் நின்று, சம்பளத்திற்கு ஒரு ஆளை நியமித்து... ஆங்... நடன, நடிப்புப் பயிற்சிக்கான கட்டணம் வேறு...

சிந்தனைகளுடன் நடந்தவளின் கால் தயங்கி நின்றது.

காரணம் - வீட்டின் மறுபுறம் ஒதுங்கி நின்ற கார்.

இலை பச்சையில் வினோத வடிவில் இருந்த அது... அவனுடையதா? நம்மூரில் பிஸ்தா, கரும் பச்சையில் வாகனங்களைப் பார்த்தது உண்டு. எனினும் இந்த ரகப் பச்சை, வடிவம்... இது அயல்நாட்டுத் தயாரிப்பே.

ஆம்! வந்திருப்பது சாட்சாத் நானேதான் என்பதுபோல கேட்டது அந்தச் சிரிப்பொலி...!

இப்போதும் இணைகுரல்களாகவே.

ஆக யமுனா இங்கும் வந்து விட்டாளா?

இதற்கு ஏன் தன் மனம் பொரும வேண்டும்? தன்னையே சாந்தப்படுத்தியபடி படியேறினாள் -

அதே நேரம் கதவு திறந்து வெளிப்பட்டனர் இருவர்.



"அடடே... நம்ப வசனகர்த்தா கம் நடிகை!"

ஏளனத்துடனேயே கண்டு கொண்டான் ரவிதேவ்!

"இங்கே... உன்னை எதிர்பார்க்கலை" - அலட்சியமாய் சொன்னது யமுனா.

"யோகின் சார் வரச் சொன்னார்."

"நானா அழைச்சதால் சிம்லாவிற்கே வந்தவங்க இங்கே வரமாட்டாங்களா? எவ்வளவு மெனக்கெடுவாங்க."

அவன் பேச்சு இவளை மறுபடி குத்தியது.

## 11

இந்தக் குத்தல் பேச்சு புதிதல்ல. இப்படிக் குத்திப் பேசுவதால்தானோ அவனைப் பற்றி அதிகம் நினைக்கிறாள்? இவர்கள் எப்படித் தூண்டில் வீசினாலும் வாய் கொடுத்துச் சிக்கிக் கொள்ளக் கூடாது என்ற முடிவோடு கதவைத் தட்டினாள்.

"மாமா உள்ளே முக்கிய விஷயமாய்ப் பேசறாங்க..."

உனக்கென்ன அவசரம் என்ற தோரணையில் சொன்னாள் யமுனா. தமிழ்த் தாய்க்கும் வடக்கத்திய தகப்பனுக்குமாய் பிறந்த அவளின் தமிழ் சற்று கொச்சையாய் இருந்தாலும் அழகான மொழி அப்போதும் இனிக்கத்தான் செய்தது.

ஆக இவள் குறுக்கிட அஞ்சி காத்து நின்றாள். வரவேற்பறையிலேனும் அவளை உட்காரச் செய்யலாம் என்ற எண்ணத்துடன் சற்றுத் தயங்கினான் போலும் ரவிதேவ்.

"என்ன ஸ்வீட்டி... இப்படி அசமந்தமாய் நிக்கறீங்க? இங்கேருந்து பாண்டி பஜார் போக ஓர் மணி நேரமாவும் - நடு வெயில்ல ஷாப்பிங் செய்ய வச்சுட்டீங்க."

சிணுங்கினாள் யமுனா.

''நவம்பர் மாசந்தானே யமூ... ரொம்பப் பொசுக்காது.''

''எனக்குப் பொறுமை இல்லியே - இவ்ள நேரம் மாமாவ தனியே விட்டு வர முடியாதுன்னீங்க... சரி - இப்பவாச்சும் சட்னு கிளம்புங்க.''

இழுத்தவளின் பின்னே நாய்குட்டியாய் தொடர்ந்தவனை சற்று இளக்காரமாய் பார்த்தாள் தேனுகா.

ஆகக் குட்டக் குட்டக் குனிபவர்களிடம்தான் ஐயாவின் ஜம்பம்! பணக்கார யமுனாவிடம் ஏதும் சொல்லவில்லை. எனினும் வயதான பெரியப்பாவை இந்தத் தனியிடத்தில் தனியே விட்டுப் போகாமல் இதுவரை காத்திருந்ததே ஒரு பொறுப்புள்ள பண்புதான்.

சன்ன உறுமலுடன் கார் பின்னடைந்து, முழு வட்டமடித்துப் புறப்பட்டதைப் பார்த்தபடி நின்றாள்.

கதவு திறந்தது.

''அடடே... வாம்மா குரல் தராமல் ஏன் இங்கயே நின்னுட்டே?''

''யோகினைப் பார்த்ததும் அதுவரை ஏறியிருந்த களைப்பெல்லாம் கரைந்தது போலிருக்க புன்னகைத்தான்.

''பரவாயில்லைங்க சார்... போனில் பேசிட்டிருந்தீங்க போல.''

''யாரோடன்னு நினைக்கறே? உங்கப்பாதான் -

என்ன தேனுகா கிளம்பிட்டாளா. அடுத்த முறை நீங்களும் வரணும் ரெண்டு நாள் தங்கி இருந்த கடல் காற்றை ஆனந்தமாய் சுவாசிச்சுப் போங்கன்னு அழைச்சேன்...''



இவளுக்குள் நன்றி உணர்வு பொங்கியது.

நினைவு தெரிந்து இவர்கள் யார் வீட்டிற்கும் விருந்தாடிப் போனதில்லை.

யாரும் இவர்களைத் தேடி வந்ததுமில்லை.

''ரொம்ப நன்றி சார்... அப்பா வர்றாங்களோ இல்லையோ... நீங்க அழைச்சதே எங்களுக்கு பெரிய கௌரவம், சந்தோஷம்.''

''முதல்ல உட்காரம்மா. பெரிய பெரிய வார்த்தையெல்லாம் பேசாதே. ரவி அடிக்கடி சொல்வான் - தேனுகாவையே உங்க படத்தின் வசனகர்த்தாவாயும் போட்டுடலாம்னு...'' - சிரித்தார்.

இவளுக்குள் கொதித்தது...! இதென்ன இடக்கு...? அவரது குத்தல் பேச்சுக்கெல்லாம் வாய் மூடி இருப்பவளுக்கு இப்படி ஒரு பட்டமா?

முன்பு பங்களாவில் அனைவருமாய் சேர்ந்தமர்ந்து உண்ட போதிலும் எக்கச்சக்கமான சீண்டல் பேச்சுதான்.

அதாவது சினிமாவில் தலைகாட்டும் பெண்களுக்குத் தன்மானம் புரியாது. கிடைக்கும் பணம், புகழுக்காய் எதையும் செய்யத் தயார் பேர்வழிகள் என்ற ரீதியில்...

சற்று முன்பு கூட இவன் வாய்ப்பிற்காக எந்தத் தொலைவிற்கும் விழுந்தடித்து ஓடுபவள் எனவில்லையா?

அத்தனை தாளித்த கட்டை எனில்தான் ஏனிப்படி கலங்க வேணும்?

பணமின்மை, அப்பாவின் அதிருப்தி என்றிவள் அல்லாடுவது அவர்களுக்குப் புரியாது.

இவளை மேலும் ஆழமாய் பார்த்த யோகதேவின் புருவங்கள் நெரிந்தன.

''இந்த ரெண்டு வாரத்தில் உன் உடம்பு தேறியிருக்கும்னு நினைச்சேன்மா தேனுகா - ஆனால் என் நிலாப் பெண் கொஞ்சம் தேய்ந்தாற் போலிருக்கிறதே?''

தன் பிரச்சினையைச் சொல்ல இதுதான் தருணம்...

தொண்டையைச் செருமிக் கொண்டு இவள் ஆரம்பிக்கும் முன் யோகினே தொடர்ந்து பேசினார் -

''பிரச்சினைகள் அதிகம்தான் தேனுகா - படம் தயாரிப்பது சுளுவானதில்லை - இத்தனை வருஷங்களில் விலைவாசி மிக எம்பிடுச்சு - மாறன் மூலம் மயனிடம் ஆரம்ப விவரங்களைத் தெரிவிச்சுட்டு, அவரிடம் நான் போனில் பேசிய போதும் மயனும் இதையேத்தான் சொன்னார்.''

''உங்க நிதிநிலைமை வலிமையாய் இருந்தால்தான் இந்தக் கிணறைத் தாண்ட முடியும் சார் - இல்லை நடுக்கிணற்றிலே விழுந்து தத்தளிக்க வேண்டியதாய் போயிடும்னு'' எச்சரித்தார்.

''அதே சமயம் என் அபிலாஷை புரிஞ்சு, படத்தைப் பணம் வாங்கிக்காமலேயே இயக்கித் தருவதாய் சொன்னார்... இத்தனைக்கும் சொந்தமாய் சரித்திரப் படமொன்றைத் தயாரிக்க இருக்கும் அவருக்கும் பணத் தேவை அதிகம்.''

தெரியும் என்ற தினுசில் தலையாட்டினாள்.

''தன்மதி உன்னிடம் எல்லாம் சொல்லியிருப்பாள்... அவளும் கலை பிரக்ஞை, திறமை உள்ள பெண்...''

''ஆமாங்க... அந்தப் படத்திலும் எனக்கு ஒரு பாத்திரம் இருப்பதைப் பற்றி உங்களிடம் சொன்னேன்...''

புன்னகையுடன் தலையசைத்தார்.

''உன்னைப் பார்த்த அன்றிரவே மயன் அது பற்றி என்னிடம் பேசினார். உன் திறமை, அழகு, முக்கியமாய்



நேர்மை, பரிசுத்தம் பற்றி ஒரே புகழ்ச்சி. அதிலும் அவர் படத்தின் நாயகி ரோல் கிடைத்தும் நீ பெரிசாய் மகிழ்ந்துடலைங்கறதில் மயனுக்கு ரொம்ப ஆச்சரியம்! சாதிக்கணும், அதற்கான சந்தர்ப்பங்களைத் தட்டிப் பிடுங்கணும்னு அலை மோதும் பெண்களில் தேனுகா வித்தியாசமானவள்னு சிலாகித்தார்.''

''அப்பாக்கு இதெல்லாம் பிடிக்கலைங்க சார்.''

''உங்க அப்பாவிடம் பேசினதுமே புரிஞ்சுகிட்டேன்... நயந்து பேசி அவரை ஒரு வழியாய் அசைத்து சம்மதிக்க வச்சிருக்கோம்.''

''நன்றிங்க... ஆனா..''

''உனக்குச் சாப்பிட ஏதும் தராமல் பேசிட்டே இருக்கேன் பார்.''

அவசரமாய் எழுந்தார் -

''விமலியை வரச் சொல்லவாய்யா?''

''அவ எங்கே வர முடிஞ்சது? கிளம்பறப்ப படிக்கட்டிலே வழுக்கி பாதத்தில் ஸ்பிரேன் - ஆகக் கட்டோடு சிம்லாவில் இருக்கறா - அவ வர முடியாததால் ரவி எங்கூட கிளம்ப வேண்டிய நிர்ப்பந்தம் - இந்த வீடும் கூட அவனுடைய நண்பருடையதுதான் - சமையலறையிலும் புகுந்து ஏதோ செய்றான்...''

இவள் விழிகள் உருண்டதைக் கண்டு நகைத்தார் -

''அதிகமில்லைம்மா - கார்ன் பிளேக்ஸ், டோஸ்ட்... அவ்வளவுதான் - காபி கலந்திடுவோம்...''

''அப்படீன்னா மதியச் சாப்பாடு?''

''வாங்கி வரேன்னான்.''

''ஓஹோ...?'' அவரைப் பின் தொடர்ந்து சமையலறைக்குள் போனவளுக்கு அது நினைத்த அளவு அலங்கோலமாய் இருக்கவில்லை என்பதும் சற்று ஆச்சரியம்தான்!

''என்னம்மா சாப்பி... இல்லை குடிக்கறே?''

''பால் இருந்தால் நமக்கு காபி கலக்கறேங்க.''

''இந்த டப்பாவில் பால் பவுடர் உண்டு - இது ஜீனி.''

கூடவே அணிவகுத்திருந்த மசாலா சாமான் வகைகளை ஆர்வமாய் நோட்டமிட்டாள். அத்தனை நவீன உபகரணங்களும் இருந்தன -

பெயரெழுதிய கண்ணாடி ஜாடிகளில் பொடி வகைகள்.

''வீட்டை அருமையாய் வச்சிருக்காங்க.''

''உரிமையாளர் தற்போது இருப்பது கானடாவில்'' என்றபடி தேக்கரண்டிகளை எடுத்துத் தந்தார் யோகின்.

கொதித்த நீரில் காபி பொடி கலக்க 'கும்'மென்று மணம் எழும்பியது. பிஸ்கெட்டுகளை எடுத்துத் தட்டில் வைத்தார் -

''அப்ப யார் இத்தனை நறுவிசாய் இதையெல்லாம் வச்சது?''

''வீட்டுப் பராமரிப்புக்கு என்றே ஆட்கள் இருக்காங்கம்மா - இல்லைன்னா இந்த பீச் வீடுகளை செல்வந்தர்கள் எப்படிப் பராமரிப்பாங்க? ஆக நாலு வீடுகளை ஒரு நபர் பராமரிப்பதாய் ஒப்பந்தம் - உரிமையாளர்கள் எப்ப வரோம், எத்தனை நாட்களுக்குன்னு தெரிவிச்சுட்டால் வீட்டைச் சுத்தம் பண்ணி இதெல்லாம் வாங்கி வச்சிடுவாங்க. கூடவே வரிகட்டுவது, வெள்ளையடிப்பது, பாதுகாப்பு - எல்லாம் அவங்க பொறுப்புதான்.''



''அடடே... செய்யணும்னு நினைச்சால் எத்தனை விதமான வேலைகள் கிடைக்குது - இல்லையா?''

''ம்ம்... நம்பப் படம் எடுக்கவும் லோனுக்கு அப்ளை பண்ணியிருக்கேன் - ரவி இப்படி வீடும் பார்த்துத் தந்து... அவனில்லாமல் முடியாதம்மா.''

தன்னிடம் சிடுசிடுவென்று விழுபவன், பெரியப்பாவிடம், முக்கியமாய் யமுனாவிடம் பாசமாய், ஏன் குழைவாகவும் தான் நடந்து கொள்கிறான்...

காபியைப் பருகியபடியே நினைத்தாள்.

## 12

''ஏம்மா, மீனு வேணுமா? இப்பத்தாம் பிடிச்சது.''

கூவிய பெண்ணை ஜன்னல் வழியே எம்பிப் பார்த்தாள். தலையிலிருந்த சிறு ஓலைக்கூடையில் மீன் இருந்தது போலும்.

''என்ன மீன்... காட்டேன்.''

சிரித்துக் காட்டினாள் - வெள்ளியில் செய்தவைப் போன்ற கடல் மீன்கள்.

''அவ்வளவாட்டம் இருக்கும்.. வாங்கும்மா.''

காபி குடித்தபடி இவளிடம் பேசிய யோகின் சற்றுக்கெல்லாம் கண்ணயர இவள் வீட்டைச் சுற்றி வந்தாள். மணி - பன்னிரெண்டுதான்.

மதிய உணவுடன் வருவதாய் சொல்லிச் சென்ற ரவி அப்படி விழுந்தடித்தெல்லாம் வந்துவிட முடியாது.

பாண்டி பஜார் போக, வரவே ஒன்றரை மணி நேரமாகி விடும். அந்தப் பகுதியில் ஷாப்பிங் என்றால் புடவையோ நகையோதான் - அதை யமுனா அரை மணி நேரத்தில் முடித்து விடக் கூடுமா?

பிறகு சாப்பாடு வாங்கி வீடு வர, மூன்று மணி கூட ஆகலாம். அரிசி, பருப்போடு பிற சமாச்சாரங்களும் இருக்க, சமைத்து விட்டால் என்ன?

சற்று நேரத்தில் கண் விழிக்கும் யோகினுக்கு நிச்சயம் பசிக்கும். காலையில் வறட்டு ரொட்டியைச் சாப்பிட்டவருக்கு சூடாய் வீட்டுச் சாப்பாடு இருந்தால் நல்லது - தவிர இப்போதைக்கு இவள் செய்யக் கூடிய உபகாரமும் இது மட்டும்தான்.

அரை மணி நேரத்தில் உணவு தயாராகி விட்டது.

உணவின் வாசனைதான் அவரை எழுப்பியிருக்க வேணும்.

''என்னம்மா நாக்கில் நீர் ஊற வைக்கிறே'' என்றபடி சமையலுள்ளில் எட்டிப் பார்த்தார்.

''பசித்தால் உட்காருங்க - சாப்பிடலாம்.''

பேசியபடி உணவுண்டனர். பின்பு ரேணுகா தேவியின் படங்கள் கொண்ட ஆல்பம், நடித்த படத்தின் ஒரு பகுதி... என்று நேரம் போனது. மறுபடி ஒரு காபி பருகியவர்கள், கடற்கரையின் உப்புக் காற்றை ஆழ சுவாசித்தபடி காலார நடந்து கொண்டிருந்தபோதுதான் ரவியின் கார் சீறலாய் வந்து நின்றது.

இறங்கி, கதவை அறைந்து சாத்தினான்.

முகத்தில் கோபச் சிடுசிடுப்பு.

''மன்னிக்கணும் பெரியப்பா... நாலு மணியாச்சு... இந்தாங்க உங்க லஞ்ச்.''



இரு உணவுப் பொட்டலங்களை நீட்டியவனின் தொனியில் மன்னிப்புக் கோரலை விடக் கோபமே இருந்தது.

''இருக்கட்டும்ப்பா... யமுனா எங்கே?''

இப்போது ரவியின் முகக் கடுப்பைக் காணச் சகிக்கவில்லை.

''அவ மைடாஸின் ராஜ பரம்பரை போல பெரியப்பா... தங்கத்தைக் கண்டே உயிர் வாழ முடிவு பண்ணிட்டா... ஆக மூன்று மணி நேரமாய் தங்கத்தைத் தடவவும், பார்த்துமே பசியாறிகிட்டிருக்கா.''

''பெண்கள் அப்படித்தாம்ப்பா... அதிலும் அழகிய பெண்களுக்கு நகை மீது அதிக ஆசை இருக்கும்...''

ரவியின் கண்கள் தன்னை யோசனையுடன் தடவுவது புரிந்தது.

தன் கழுத்துக் காதை ஆராய்கின்றானோ?

பெயருக்கே அங்கு கிடந்த பொட்டுத் தங்கத்தை அளவிடுகிறானா?

''முதல்ல சாப்பிடுங்க பெரியப்பா... ஸாரி உன்னையும் சேர்த்து பட்டினி போட்டுட்டேன்.''

இவளிடமும் அரை மனதாய் மன்னிப்புக் கோரினான்.

''இத்தனை கரிசனை உள்ளவர் நேரத்தே உணவுடன் கிளம்பியிருக்கலாமே'' இப்படி ரேணுகாவின் விழிகள் சொன்னது போல.

''முதல்ல கடை கடையாய் ஏறி இறங்கினோம்... நகைக் கடைகள் எல்லாம் ஏ.ஸி.ங்கறதால் உள்ளே நிம்மதியாய் உட்கார்ந்து என் செல்லில் பிஸினஸையும் பேசினதில் நேரம் நழுவினதேத் தெரியலை... மணி பார்த்தால் இரண்டரை - சாப்பாடு வாங்கப் போனால் கூட்ட நேரம், பார்சல் கட்டவே

25 நிமிஷமாச்சு - திரும்பும் போது பள்ளி, கல்லூரிகள் விடும் சமயம்... ஹெக்டிக் டிராஃபிக் - சிக்கிட்டேன்.''

''யமுனா எங்கேப்பா?''

''அவளுக்குப் பார்த்துத் தீரலை... எனக்கந்த மஞ்சள் உலோகத்தை ரெண்டு மணி நேரமாய் பார்த்ததில் கண் எரிச்சல்... சாப்பாடு ஆறிப் போயிருக்கும்... சூடு பண்ணிடவா?''

''நீங்க சாப்பிட்டீங்களா?''

மிருதுவாய் கேட்டவளை வியப்புடன் ஏறிட்டான்.

''நோ - உங்களை விட்டுட்டு எப்படி... இதோ எனக்கான பார்ஸல்.''

''என்ன வாங்கி வந்தீங்க?''

''ஃப்ரைட் ரைஸ், சில்லி சிக்கன்.''

''பிரிட்ஜில் வச்சிடலாம். இப்ப வீட்டுச் சாப்பாடு சாப்பிடறீங்களா?''

''அது... எப்படி... யார் வாங்கினது?''

''தேனுகா சமைச்சாப்பா. அருமையான வெங்காய சாம்பார், காரட் கூட்டு, மீன் வறுவல்... நீ கொண்டு வந்ததை ராத்திரிக்குச் சாப்பிடலாம். இப்ப இதை ஒரு பிடி பிடி!''

''ரைட்.''

சில நிமிடங்களில் முகம் கழுவி வந்தவன் முன் ஆவி பறக்கும் உணவு தட்டு வைக்கப்பட்டது.

''வாவ்..! நல்ல வாசனை'' - ஆவலாய்ப் பிசைந்தான்.

சென்னையின் வெளிநாட்டுக் கார் மோகம் எப்படி, இங்குள்ளவர்களின் ரசனை, பண வசதி பற்றியப் பேச்சுடன் ரசித்து உண்டான்.



கை கழுவியவன்,

''தாங்க்ஸ் தேனுகா - நைஸ் மீல் - திருப்தியாய் சாப்பிட்டேன்'' எனவும் தன் தன் பெயரை அவன் முதலாய் உச்சரித்ததை உணர்ந்தாள். ஏனோ அதுவும் அவளுக்கு ஒருவித திருப்தி தந்தது.

''ஒரு கப் டீ கிடைக்குமா? வழக்கமாய்ச் சாப்பிட்டதும்.''

''ம்ம்... அடுப்பில் தண்ணீர் வச்சிட்டேன். இப்ப ஆயிடும்.''

வியந்து பார்த்தான் -

''எப்படி?''

''போன முறை சிம்லாவில் நீங்க சாப்பிட்டதும் டீ கேட்டீங்க. நினைவிருந்தது.''

''சாரி தேனுகா...''

கவனமாய் தேநீரை வடிகட்டியபின் திரும்பிப் பார்த்தாள் -

''எதுக்கு?''

''இதுவே நினைவிருக்கும்னா உன்னைப் பற்றி நான், தாக்க காட்டமாய் பேசியதும் நினைப்பில் இருக்குமே?''

போனின் சமீப சினிமா பத்திரிகைகளுடன் முன்னறையில் இருந்தாலும் இளையவர்கள் இருவரும் சின்னக் குரலிலேயே சம்பாஷித்தனர்.

''ப்ச்... எளியவங்க அதை எல்லாம் பொருட் படுத்தக் கூடாது...'' சலிப்பைக் காட்டாத குரலில்தான் சொன்னாள்.

''அப்படி நினைச்சியா தேனுகா?''

''எப்படி?'' கேள்வியுடன் கலந்த தேநீரை பீங்கான் கோப்பையிலூற்றி நீட்டினாள்.

''அதாவது நீ எளியவள்... அதாவது பணக்காரி இல்லாததால் நான் மட்டமாய் பேசியதாய் நினைச்சியா?''

''டீயில் இனிப்புப் போதுமா?''

''நிச்சயமாய் அப்படியில்லை... எனக்கு சினிமா நட்சத்திரங்கள் மீது கொஞ்சம் வெறுப்பு, கோபம் உண்டு... அவர்களை ஓரளவு நெருக்கமாய் பார்த்ததால் சில அனுபவங்களால் ஏதோ கடுப்பு... உன் அழகை, அலங்காரத்தைப் பார்த்ததும்... நீ ஒரு நடிகைன்னு அனுமானிச்சேன்.''

''ஓ... ஆனா முதல் முறை நான் சாலையில் நடந்து போகும் போதே கூட என்னிடம் நீங்க எரிஞ்சு விழுந்ததாய்தான் ஞாபகம்...''

என்றான் வாய்க்குள் சிரிப்பொன்றை மென்றபடி.

''அது... அது... கீழே விழுந்த நீ என்னைத் திட்டுவதற்கு முன் நான் முற்றும்... ஒரு தற்காப்புத்தான்...''

இருவரும் வாய்விட்டுச் சிரித்தார்கள்..!

## 13

தேனுகாவின் சப்தநாடியும் ஒடுங்கிக் கிடந்தன. தொடைவரை நீண்ட, பின்னாமல் விடப்பட்ட வெள்ளை கேசம். மகாக் கூர்மையான நாசி, நயனங்கள்.

தீக்கங்காய் ஜ்வலித்த குங்குமமும், அதன் சிகப்பை எடுத்துக் காட்டவே மிகக் கருமையாக்கப்பட்ட ஜோடி விழிகள்.

வெட வெடப்பான உடல்...



அதட்டலான பேச்சு!

இப்படியிருந்த ரக்ஷா தாஸைப் பார்த்து, பேசக் கேட்டவளுக்கு ஏதும் ஓடவில்லை.

வெள்ளை மஸ்லின் புடவையைப் பல கொசுவங்களுடன் வித்தியாசமாய் கட்டி, இடது காலை மடக்கி மற்றதைத் தொங்க விட்டிருந்ததில் ஒருவிதத் தெய்வீகச் சாயல் சேர்ந்திருந்தது - வெள்ளைத் தாமரை இருக்கைதான் பாக்கி!

''ஆறு மாதங்களாய்தான் உனக்கு நாட்டிய பரிச்சயம் - ம்ம்?''

உறுமலாய் வந்தது கேள்வி.

''ஆமம்மா... எனக்கு நடிப்பு... நடிப்பில்தான் ஆர்வம்.''

''நடனம்தான் எல்லாவற்றிற்கும் அடிப்படை'' - தீர்ப்பாய் சொன்னாள்.

''ஆகட்டும்மா...''

''அதற்கு அடிப்படை ஆண்டவன் கொடுக்கும் பொறி. அது உன்னுள் இருந்தால் ஊதி விட்டு ஜோதியாக்கலாம்.''

பவ்யமாய் தலையசைத்தாள்.

''அந்தப் பொறி... அதாவது ஆண்டவனின் வரம் உனக்குள்ளே இல்லைன்னா நான் மெனக்கெட முடியாது. சரி. இப்ப நான் ஒரு சம்பவம் சொல்வேன். அதை நீ நாடக - நாட்டிய பாணியில் செய்து காட்டணும் - பார்ப்போம்.''

இவளுக்குள் வெலவெலத்தாலும் தலையாட்டினாள் - வேறு யார்? பவன் இவளுக்காய் தேர்ந்தெடுத்த பயிற்சியாளர் அல்லவா?

''ஒரு நூற்றாண்டிற்கு முன்னே வாழ்ந்த வேடுவ இளம் பெண் நீ... உன் காதலன் வரச்சொல்லி விட, நீ தனியே

அவனைப் பார்க்கும் ஆவலுடன் காட்டுக்குப் போகிறாய்... கோயிலுக்குப் போவது போல புஷ்பக் கூடையுடன்... ஆனால் அங்கே உனக்காய் காத்திருப்பது காதலன் அல்ல... உன்னை அடையப் பார்க்கும் ஒரு காமுகன் - செய்!''

துப்பாக்கியின் ரவை போல வெளிவந்தது உத்தரவு!

அவர் கையிலிருந்த ரிமோட் அழுத்தப்பட, அறையை இசை நிரப்பியது.

மெல்லிய தபேலா தட்டலும் புல்லாங்குழலுமாய் இணைந்த சுக ராகம்.

லயம்...

கண்களை மூடி நின்றாள்.

காட்டுப் பாதை, கையின் புஷ்பக் கூடை, மனதுள் காதலின் குதூகலம் அனைத்தையும் தன்னுள் பரவ விட்டாள்.

அதற்கு இசை உதவியது.

''எனக்கு உன் முகபாவனை கூடத் தேவையில்லை - உன் முதுகுப்புறம் பார்த்தாலே போதும்'' - வந்தது அடுத்தக் கட்டளை.

சற்று துணுக்குற்றாலும் இப்போது தேனுகா அசரவில்லை.

முதுகு காட்டி நின்றாள்... தபேலாவின் தாளத்திற்கு ஒப்ப நடந்தாள். சுற்றும் முற்றும் பார்த்தாள்...

கானகத்தில் மலர்களுக்கு ஏது குறை...?

கைக்கு எட்டியவற்றோடு, எம்பியும் சிலவற்றைக் கொய்து தன் மலர் கூடையை நிரப்பினாள்... அவற்றை முகர்ந்ததும் உடம்பு சிலிர்த்தது.

நடையின் துள்ளல் கூடியது.



சில நேரம் கால்கள் நாணிப் பின்னின...

சில பொழுது துள்ளி விரைந்தன...

காணப் போவது காதலனை அல்லவா?

நெற்றிக்கு மேல் கை வைத்துத் தேடினான்... உன்னிப்பாய் அவனது காலடி ஓசைக்காய் காத்திருந்தாள்...

அதோ... அதோ... காலடி சத்தம்!

அவன்தான்! இடை துவள மயங்கினாள்.

மலர் கூடையைக் கீழே வைத்து, தன் கூந்தலை, சேலைக் கட்டை [illegible] சீராக்கிக் கொண்டாள் - தன்னையே அழகுப் பார்த்து பின் திரும்பி... ஐயோ... இதென்ன?

இந்தக் கொடியவன் எப்படி இங்கே வந்தான்?

ஆசைக் காதலனைக் கொல்லிவிட்டது இந்தப் பைசாசமா? உடல் விறைக்கத் திகைத்து, பின் ஆத்திரத்துடன் மூச்சிரைத்தாள் - அகலும் [illegible] சிலிர்ப்பை ஓட விட்டாள்.

இசையின் அலை ஓய்ந்தது.

''போதும் - உனக்குக் கற்றுத் தரேன்.''

தேனுகா திரும்பி நின்று வணங்கினாள்.

''வாரம் இரண்டு வகுப்புகள் - உனக்குக் கற்பனையும், அதை வெளிப்படுத்தும் உடம்பும் வாய்த்திருக்குது... ஆக நான் அதிகம் [illegible] வேணாம். மற்றவர்களுக்கு வாரம் [illegible]... நீ அதில் பாதி தந்தால் போதும்...''

தேனுகாவிற்கு தலை சுழன்றது -

ஆனாலும் கணக்கிட்டாள்... மாதம் பத்தாயிரமா?

இது சலுகைக் கட்டணமாமே!

என்று, எப்போது வகுப்புகள் என்பதை ரக்ஷா தாஸ் சொல்ல, பலக்க தலையாட்டி விட்டுக் கிளம்பினாள்...

ஆனால் ஆட்டோவில் ஏறியவளுக்குள் இதைவிட... அதாவது உயர்ந்த கட்டணம் என்பது வேறு ஒரு அதிர்ச்சியின் குலுக்கல்.

ரக்ஷாவின் முன் நடனமாடியபோது காத்திருக்கும் காதலனாய் தன் மனக்கண்ணில் அவள் கொண்டு வந்து நிறுத்தியது... ரவிதேவ்! அவனை மனதில் வரித்தே அப்படி உல்லாச நடை போட்டாள்.

சந்தோஷத்தில் சுழன்றாடினாள்.

ஏன்?

கற்பனைக்கு ஷாருக்கான் அல்லது மாதவன் போதுமே! சமீப காலமாய் பிடிவாதமாய் தன் சிந்தனைகளில் ஒட்டிக் கிடப்பவன் ரவிதேவ். முதலில் கசப்பும் கோபமுமாயே இருப்பினும் கடந்த சில நாட்களில் அவர்களின் உறவு இலகுவாய்... இனிமையாகி இருந்தது.

அது அவளுள் பரப்பிய உற்சாக பரபரப்பு... இது வரை அனுபவியாத அனுபவம்!

''எப்போதுமே கனவு கண்டபடியேதான் நடக்கறதா?''

கேலியான கேள்வி அவளைத் தட்டியது.

''ஓ... நீங்க... எப்படி இங்கே?''

''ஹார்ன் அடிச்சும் மசியாத கனவு... ம்ம்? பெரியப்பா உன்னை வீட்டில் விடச் சொன்னார்.''

''உங்களுக்கேன் சிரமம்?''

''பொழுது போகிறதுதான் இங்கே சிரமமாய் இருக்குது.''



காரில் அவனருகே அமர்ந்தவள் கேட்டாள்.

''யமுனா எங்கே?''

''கோபம்.''

''ஏதோ நகை ஆசையில் உங்களை அன்று தாமதப் படுத்தினதற்காய் இன்னுமா கோவிச்சுக்கறது நீங்க?''

''தப்பாய் புரிஞ்சுகிட்டே.''

''என்ன?''

''கோபம் எனக்கில்ல - அவளுக்கு!''

அசட்டு சிரிப்புடன் அவன் சொல்ல இவளுக்குள்ளும் சிரிப்பு முட்டியது.

''வராதேனுட்டா.''

பிரதான சாலைக்குள் நுழையும் இடத்து சிக்னலில் கார் சன்னமாய் குலுங்கி நின்றது.

பிளாட்பாரத்தில் நின்ற ஒரு சேரிப்பெண் தன் குழந்தைக்கு பலூனைக் காட்ட, அது அந்த வர்ண உப்பலைப் பிடிக்க அவள் இடுப்பிலிருந்து மெனக்கெட்டது. கால்களை உதைத்து 'தா தா' என மழலையில் கூச்சலிட்டது. இந்தக் காட்சியை ரவி பார்க்கிறானா என்று ஓரக்கண்ணால் நோட்டமிட, அவனும் சிறு கவிதை போன்ற அக்காட்சியில் லயித்துதான் இருந்தான்!

## 14

கார் புறப்பட்டு நெரிசலான பகுதியைக் கடந்த பிறகு மெதுவாக ஆரம்பித்தாள் -

''அந்தக் குழந்தை ஏன் பலூனுக்காய் அத்தனை மெனக்கெட்டது தெரியுமா?''

முடியும் அடியும் இல்லாத அக்கேள்வியில் சில கணங்கள் தடுமாறி பின் கேட்டான் -

''ஓஹோ... சிக்னலுக்கு நின்றபோது பார்த்த அம்மா, குழந்தை பற்றி சொல்றியா?''

''அதேதான் - பதில் சொல்லுங்க.''

தான் இப்படிப் பேசுவது அதிகப் பிரசங்கித்தனம் என்பது புரிந்தும் ஏனோ சொல்லாமல் இருக்க முடியவில்லை.

''பதில்...? ஏன் அந்தப் பாப்பா பலூனுக்காய் தவிச்ச துன்னா? ம்ம்ம்... ஏன்னா அது லேசில் கைக்கு எட்டலை... அதான் அந்த ஈர்ப்பு.''

''ரொம்ப சரி. ஆண் பெண் ஈர்ப்பிலும் கொஞ்சம் விலகல், ஒதுங்கல், இருந்தால்தான் எடுபடும்.''

புரிந்து புருவங்களை உயர்த்தியவன் வாய் விட்டுச் சிரித்தான். மிகக் கவர்ச்சியான அச்சிரிப்பை விழியெடுக் காமல் பார்த்து ரசித்தாள் -

''குழந்தைக்கு சரி. யமுனா குமரியாச்சே?''

''கொஞ்சம் குழந்தைத்தனமான குமரி?''

''உண்மைதான் - ஆக நான் பலூனாட்டம் பறக்கணுமா?''

''அவங்க உங்களை ஒதுக்கினதும் நீங்க தவிச்சீங்க... யமுனாவையே நினைச்சு ஏங்குனீங்க.''

''நோ... அது தப்பு. பொழுது போகலையே ஒழிய ஏக்கமெல்லாம் இல்லை...''

அவன் அவசரமாய் மறுத்தது இவளுக்கு ஏனோ ஆசுவாச மாய் இருந்தது.

''நீங்களும் கொஞ்சம் எட்டியே இருந்தால் யமுனா தவிச்சு அல்லது போர் அடிச்சு வழிக்கு வந்திடுவாங்க.''



''மனோதத்துவ மாமேதை... இப்படி ஒரு பட்டமும் உனக்குத் தரலாம் போலவே தேனுகா மேம்!''

''அப்படின்னா பெரும்பாலான பெண்களுக்கு அதைக் கொடுக்கணும். பெண்களுக்கு இது மாதிரியான சூட்சுமங்கள் அதிகம்.''

''ஓஹோ... அதான் யமுனா நதியார் என்னை இப்படி மூழ்க விடுதா? ஹைதராபாத்ல வேலை இருக்குது. ஒரு சுற்று போயிட்டு வரட்டுமா?''

கேள்வியுடன் இவளைப் பார்த்தான்.

''அது உங்க வேலையைப் பொறுத்து.''

''பறக்கற... பிறகு உன் இஷ்டம்ங்கற? இதுவும் பெண்களின் சூட்சும விளையாட்டா?''

''கொஞ்சம் கண்டுக்காமல் விட்டால் போதும்... அதுக்காக இப்படி ஊரை விட்டேக் கிளம்பணும்னு இல்லை - அவ்வளவுதான்.''

''இப்ப குருதட்சணை ஏதாவது தரணுமே.''

காரை ஓரமாய் நிறுத்தினான்.

''அதிகப் பிரசங்கித்தனமாய் ஆலோசனை சொன்ன நான் குருவா?''

''பின்னே... அகக்கண்ணைத் திறந்து விட்டீர்களே...'' என்றபடி அவன் இறங்க இவளும் இறங்க வேண்டிய தாயிற்று.

'பாஸ்கின் ராபின்ஸ்' ஐஸ்க்ரீம் பார்லரில் அமர்ந்து, அவன் வரவழைத்த ஐஸ்க்ரீமை ரசித்துச் சாப்பிட்டாள்.

அவனைப் பார்ப்பதில் கண்களுக்கும் அலாதி குளிர்ச்சி எனப் பட்டது!

அடுத்ததாய் அருகிருந்த 'பொட்டீக்'கினுள் அவன் நுழைய, இவள் கடை வாசலிலேயே தயங்கினாள்.

''குருஜி வாங்க... தட்சணையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்க.''

''ஐஸ்க்ரீமே போதும்... அப்பா காத்திட்டிருப்பார்.''

தன் கைக்கடிகாரத்தைத் தட்டிக் காட்டினாள்.

''இன்னும் ஒரு மணி கூட ஆகலை. அடுத்த இருபது நிமிஷத்தில் வீட்டுக்குப் போயிடலாம்.''

''எனக்கு ஏதும் தேவையில்லையே?''

''குருவிற்கு வரும் தேங்காய் பழமெல்லாம் அவருக்குத் தேவையா என்ன? மறுக்காமல் பயன்படுத்திக்கறார் - அவ்வளவுதான்... சேலை அல்லது சல்வார்?''

''நான் சொல்றபடிதானே?''

''நிச்சயமாய்.''

''எனக்கு ஏதும் வேணாங்க.. ப்ளீஸ்.''

இவளையே விழுங்குவது போல பார்த்தவன் பார்வையில் என்ன தெரிந்தது...?

ஏமாற்றம்... கோபம்.. இல்லை... ஒரு வித பிரமிப்பு?

கடையின் படியிறங்கியபடி கேட்டான்.

''அப்ப லஞ்ச் சாப்பிடலாமா?''

''ரிச் ஐஸ்-க்ரீம் - நான் இன்னும் மூணு கிலோ கூடணும்னு டயட்டீஷியன் சொன்னதால்தான் அதையே சாப்பிட்டேன். வீட்டில் அவங்களின் பட்டியலின்படி கீரை, மசியல், சாலட், நெய்யில் தாளிச்ச, பருப்பு, முட்டை எல்லாம் தயாராய் இருக்குது.''



''அப்படீன்னா நான் அங்கே சாப்பிடலாமா?''

''நிச்சயமாய்'' - மகிழ்வுடன் சம்மதித்தாள். ''ரெண்டு பாக்கெட் தயிர் சாதம் மட்டும் ஆர்ய பவன்ல வாங்கிட்டுப் போயிருவோம். சாதம் போதாமல் போச்சுன்னா?''

இறங்கியவன் சாதத்துடன், அவியல், இனிப்பு வகைகள் என்று பல பார்சல்களுடன் வந்து சேர, பதினைந்தாம் நிமிடம் இவளது வீட்டில் அப்பாவிற்கும் ரவி தேவிற்கும் அறிமுகம் நடந்தது.

''வாங்க தம்பி - உங்க பெரியப்பா உங்களைப் பற்றி பெருமையாய் பேசுவார் அவரையும் கூட்டி வந்திருக்கலாமே?''

''பெரியப்பாவுக்கு சென்னை நகரின் புகையும் தூசும் ஒத்துக்கலை. சிம்லாவிலுமே அவர் வீடு ஒதுங்கித்தான் இருக்கும்.''

''தனியாய் இருப்பாரே... அதுதான்.''

''இன்னுதான் அவருக்கு ஒத்தாசைக்கு விமலி வந்து சேர்ந்தா. சிம்லா செய்திகள் எல்லாம் ஒலிபரப்பிக் கொண்டிருக்கா.''

''அவங்க கால் முழுக்கக் குணமாயிடுச்சா?''

''ஆமா. பெரியப்பாவிற்கும் இந்த கடற்கரையின் அயோடின் காற்று, மீன் எல்லாம் பிடிச்சுப் போச்சு. தினம் காலை நடக்கறதால் ஆரோக்கியம் கூடியிருக்குது.''

கூட ஓடியாடிப் போட்டு தேனுகா பரிமாற, இரு ஆண்களும் தொழில் பற்றி சுவாரஸ்யமாய் பேசியபடி சாப்பிட்டனர்.

''அடேங்கப்பா, தம்பி, சிறு வயசிலேயே உங்களுக்கு எத்தனைப் பெரும் புள்ளிகளோடு பழக்கம்!''

''அவங்களோடு ரொம்பக் கவனமாய் பழகணும்ங்க. சில பேர் காரை வாங்கிய மறுவாரமே, 'இது ராசியில்லை - வேறு மாற்றிக் கொடு'ம்பாங்க - எல்லாத்தையும் சமாளிக்கணும்.''

அது போன்ற சம்பவங்களை ரவிதேவ் சுவாரஸ்யமாய் விவரிக்க, பொழுது ஓடியேப் போனது.

தேநீருக்குப் பின் சுந்தரையும் கூட்டிக் கொண்டுதான் கிளம்பினான். ''பெரியப்பாவிற்கு காலை முழுக்க பட சம்பந்தமாய் வேலை இருந்தது. இப்பப் பொழுது போகாமல் எனக்காய் காத்திட்டிருப்பார் - நீங்களும் வந்தால் சந்தோஷப்படுவார் சார்.''

குளிரூட்டப்பட்ட உயர்ரகக் காரில் பயணம் வெகு சுகமாகவே இருந்தது... யோகினுடன் அறிமுகமானதும் பெரியவர்கள் இயல்பாகவே நெருங்கிக் கொண்டனர்.

அவர்கள் பேசியபடி மெள்ள நடக்க, இளையவர்கள் தனித்து விடப்பட்டனர்.

சிறு வயதிலிருந்தே கடற்கரை தேனுகாவைக் குதூகலப் படுத்தும். ஓடி ஓடி சிப்பிகளைப் பொறுக்குவாள் - எடுத்த கடல் குச்சிகளைக் காய வைத்து சிலேட்டு பலப்பமாய் உபயோகிப்பாள்... அப்படி எடுத்த சில சங்கு, சிப்பிகள் இன்னும் கூட உண்டு...

## 15

தானே தனக்குக் குழி வெட்டிக் கொண்டாயிற்று...! வேறென்ன சொல்ல... இப்படி மருகினாள் அவள். ஹைதராபாத் போன ரவி, அங்கிருந்தே மான்ட்டி கார்லோ போவதாய்த் தகவல் வர இவளுக்குத் தவித்தது.



''மான்ட்டி கார்லோ, பிரான்ஸில் இருக்கிறதோ?'' யோகினிடம் விசாரித்தார்.

''ஆமம்மா - அங்குள்ள காஸினோ உலகப் புகழ் பெற்றது. கேளிக்கை சூதாட்டம் நடக்கும் அந்த 'கேஸினோ' வாசலில் உலகின் அத்தனை அதி நவீனக் கார்களையும் பார்க்கலாமாம்! விமானத்தில் வரும் கோடீஸ்வர பயணிகளுக்கு டிரைவரோடு கூடிய பென்ஸ் டாக்ஸிகள். அவர்களோடு வரும் பெண்களின் நகைகளும் அலாதியாய் இருக்குமாம்.''

இவளுக்குள் சிறு பொறாமை நெளிந்தது. இப்படி பிரத்யேக நகைகளைப் போடக் கூடிய பெண்கள் சாதாரண அழகுடனா இருப்பார்கள்..? என்ற கடுப்பு.

''சிலர் சூதில் ஜெயிக்கும் பணத்தில் காரை விலைபேசி வாங்குவதுண்டு. பலர் இருப்பதை, கார் உள்பட இழந்து விட்டுப் போவதும் உண்டாம்!''

''அதிர்ஷ்ட சக்கரம் எப்படி வேணுமென்றாலும் சுழலும்...'' ஆனால் இரண்டு நாட்களில் ரவிதேவ் சென்னைக்கு எதிர்பாராமல் வர, அது தன் பக்கமாய் சுழலுவதாய் மகிழ்ந்தாள்!

அன்று புதிய உணவிற்குப் பின் யோகின் படுத்துவிட இவள் வேணுகாந்தினியின் படங்களை மீண்டும் மீண்டுமாய் ஓட விட்டு அதில் அமிழ்ந்திருந்தாள் - அந்த அழகிய நட்சத்திரத்தின் ஒவ்வொரு அசைவிலும் அலாதி நளினம், புதுமை இருந்தது உண்மை. அதை அப்படியே ஒற்றி தனக்குள் உறிஞ்சி எடுத்தாள். அந்த நடையை, சிரிப்பை தான் மிக இயல்பாய் செய்யும் அளவில் தன்னில் பதித்துக் கொண்டிருக்கையில்தான் அந்த 'ஹார்ன்' ஒலி அவளை உசுப்பியது.

குதித்து எழுந்தவள் ஜன்னலருகே ஓடினாள்.

ரவி இப்படித்தான் ஹார்னை அழுத்துவார் - இசை போல... வெள்ளை முயல் போன்றிருந்த காரின் கதவைத் திறந்து ரவி இறங்க இவள் முகம் பூவாய் மலர்ந்தது!

''வாங்க... பிரான்ஸ் போறதாய் சொன்னாங்க...?''

''போகும் முன் இங்கே ஒரு நாளாவது வர வேண்டிய நிர்பந்தம்.''

''பெரியப்பா தூங்கறாங்களே... எழுப்பவா?''

''எழுந்ததும் பார்த்தால் போதும்.''

''என்ன சாப்பிடறீங்க?''

''பிளைட்ல சாப்பிட்டேன்... டீ போதும். உன்னுடைய ஜிஞ்சர் டீ பிரமாதமாய் இருக்கும்.''

''ஒரே நிமிஷம்'' - குழந்தைபோல உள்ளே ஓடினாள் - ஆவி பறக்கும் பானத்தோடு, சூடாக்கப்பட்ட கட்லெட்களைப் பரிமாறினாள். அவன் சாப்பிட்டபடி பேசியதை ரசித்தாள்.

காலிக் கோப்பையை வைத்தவன் சிறு பெட்டியிலிருந்து எடுத்த அட்டைப் பெட்டியை இவளிடமாய் நீட்டினான்.

''இது உனக்குப் பிடிக்குதா பார்.''

பெட்டிக்குள் இருந்தது இளம் நீல நிறப் புடவை - கிரிஸ்டல் வேலைப்பாடுடன் மின்னிய புடவை.

''நல்லாயிருக்குது.''

''குட்-உனக்குத்தான்.''

''எனக்கு இதெல்லாம் தேவையில்லையே.''



''எனக்கும்தான் புடவை தேவையில்லை. ஒரு பொட்டீக் திறப்பிற்குப் போக நேர்ந்தது - தெரிஞ்சவங்க - ஆக ஏதேனும் வாங்க வேண்டிய நிர்பந்தம் - அதான் வாங்கினேன்.''

''உங்களுக்கு ஹைதராபாத்தில் யாரைத் தெரியும்?''

''யாரையா? இந்த 'பொட்டீக்' உரிமையாளரின் புருஷனை அவருக்கு ஒரு பி.எம்.டபிள்யூ காரை விற்கத்தானே அங்கே போனேன்.''

''ரொம்ப நன்றி.''

''பரிசை ஏற்றதற்கு நன்றி. அப்புறம் உனக்கு இன்னுமொரு நன்றி.''

''அது எதற்கு - டீக்கா?''

''சரி. வஞ்சனை பண்ணாமல் அதற்கும் சொல்லிடறேன் - நன்றி டீக்... ஆனா நான் சொல்ல வந்த நன்றி நவிலல் பெரிய விஷயத்திற்கு... அதாவது உன் உபதேசம் நல்லா வேலை செய்யுது.''

விஷமமாய் சிரித்தன அவன் விழிகள்.

''அதாவது யமுனா விஷயத்தில்?''

''ம்ம்... நான் சற்று விலக, அம்மா எம்பறாங்க... பொங்கிவரும் கடலலை போல ஒரே ஆர்ப்பரிப்பு!''

''அப்ப... அப்ப எல்லாம் சரியாயிடுச்சா?''

கேட்டவளுக்குத் தொண்டை அடைத்தது.

''இப்பத்தான் விஷயமே சரியாய் புரியுது தேனுகா...'' என்றான் இலேசாய். இவளுக்கு முழுக்கப் புரியாவிட்டாலும் பிறரது காதல் சமாச்சாரத்தை அதிகம் கிளறுவது நாகரீகமில்லை என்று மௌனமானாள்.

''சரி, உன் விஷயமெல்லாம் எப்படி?''

''ம்ம்.. டான்ஸ் க்ளாஸ் போறேன், ஒரு சம்பவத்தை கிரஹித்து வெளிப்படுத்துவது எப்படிங்கறதை ரக்ஷா தாஸ் அற்புதமாய் சொல்லித் தராங்க, டயட்டீஷியன் சொல்படி சாப்பாடு, டெய்லர் வந்து உடைகளுக்கான அளவெல்லாம் கூட எடுத்தார்.''

''ஷூட்டிங் எப்ப ஆரம்பம்?''

''பணம் திரட்டலை போல...''

''உனக்கு ஏதும் பணப் பிரச்சினை...?'' அவனும் இழுத்தான்.

இதுவரை சேமிப்பில் வண்டி ஓடியிருந்தது. முதலில் முறுமுறுத்து மறுத்த அப்பா இப்போது உற்சாகமாய் பேசினார்.

''யோகதேவ் பாந்தமான பெரிய மனுஷர்ம்மா - என்னை அவரோட வந்து தங்கச் சொல்றார் - ரெண்டு பேருக்கும் ஒரே ரசனை - பழைய படங்கள், நாவல்கள், ஹூடோ, நடை... எல்லாத்துக்கும் மேல நீ! அன்று பீச்ல நடந்துட்டு வந்த பிறகு எத்தனை சுகமாய் தூங்கினேன்... தெரியுமாடா?

அவர்ட்ட இப்ப பணம் பற்றியெல்லாம் பேச்செடுக்க வேணாம்...''

ஆக பணப்பிரச்சினையை இவளும் மறந்திருந்தாள்.

''ஏன் கேட்கிறேன்னா... பணம் இல்லையேன்ற பதட்டத்தை இந்த சினிமா ஃபீல்டில் நீ காட்டினால் அது தப்பாயிடும்.''

''அந்த நபர் ஒரு பெண்ணாய் இருந்தாலும் கூடவா?''

இவள் சீண்டினாள்.



''ச்சு.. விளையாடாதே தேனுகா... இப்ப கம்பெனியின் அதாவது பெரியப்பாவின் நிதி நிலைமை இறுக்கமாய் இருக்குது - சீக்கிரம் உனக்கான சம்பளம் வரும்... அது வரை...''

''சமாளிச்சிடுவேன்...''

''குட்..'' பிறகு அவர்களது சம்பாஷணை வேறு விஷயங்களில் படர்ந்தாலும், இவளுக்கு அவன் காட்டிய அந்தக் கரிசனை பிடித்திருந்தது. அவன் பிரியமுடன் கேட்ட விதம் உள்ளே தித்தித்தபடி...

தன் பணத்தேவையைப் பற்றி சொல்லியிருக்கலாமோ?

குடும்பத்தில் இருவருக்குமே சம்பளம் நின்ற பிறகு, மொட்டைத் தலைக்கு சவுரி வைத்துக் கட்டியது போல இவர்களுக்கு ஒரு வேலைக்காரி வேறு... எகிறும் செலவுகள்.. எப்படிச் சமாளிப்பது?

ஆனால் அந்தக் கவலை எதையும் காட்டாமல் சிரித்துப் பேசினாள். இனி ரவியை எத்தனை நாள், வாரங்கள் கழித்து இப்படிப் பார்க்கக் கூடுமோ? அதுவும் யமுனா இன்றித் தனியே...

## 16

வீட்டின் உரிமையாளர் அப்படிக் கத்துவார் என்று அவள் நினைக்கவில்லை...

ஏன் அந்நாள் வரை அவரை நின்று நிலைத்துப் பார்த்தது கூட இல்லையே! அப்பாவே நேரில் போய் பிரதி மாதம் ஐந்தாம் தேதி வீட்டு வாடகையை தந்து விடுவார்.

போன மாதம் தாமதமாயிற்றாம்.

இம்மாத வாடகை இன்னும் வரவில்லையாம்... -

அப்பா மறந்து விட்டாரா?

அதுவும் அனல் போன்ற வார்த்தைகளில்...? ''நாடகம், நடிப்புன்னு போயிட்டா மரியாதையான நடப்பெல்லாம் மறந்திடும் போல? மாசம் முடியப் போவுது - இன்னமும் வாடகை வந்தபாடில்ல. வேலையும் போயிடுச்சாமே? இதோ பாருங்க சுந்தரம் சார்... இந்த வீடு என்னுதில்லை - எந்தங்கச்சிக்கு ஒரு வருமானம் போல இருக்கட்டுமேன்னு எங்கப்பா வாங்கிப் போட்ட சொத்து. வாடகையை வசூலிச்சு அனுப்ப வேண்டியது மட்டும் நான்... பணம் வரலைன்னா மாப்பிள்ளையோட பொல்லாப்பு எனக்குல்ல வந்து சேரும்? இந்த எட்டுநூறைக் கொடுக்க முடியலைன்னா சொல்லிடுங்க... ஆயிரம் தர டெனன்ட்ஸ் தயாராய் இருக்காங்க... நீங்க நாடக க்ரீன் ரூமிலேயே தங்கிடலாம்.''

சொற்களின் தாக்குதலில் திணறி விட்டாள்.

கூசிப் போய் உடனே கிளம்பியது யோகதேவ்வைக் காணத்தான்.

''இனி பஸ்ஸில் கிளம்பாதே தேனுகா - வாடிப் போயிடறதே - இந்த நம்பருக்குப் போன் போட்டால் டாக்ஸி வீட்டுக்கே வரும்'' என்று ரவி கொடுத்திருந்த எண்ணைப் புரட்டக் கூட சமயமில்லாதது போல ஒரு தவிப்பு.

பஸ் ஏறிவிட்டாள்... வீட்டு வாடகைத் தர முடியாத வளுக்கு கார் சவாரியா என்ற எக்களிப்பான ஆத்திரமும் காரணம்தான்!

பணம், பதவி பெரிதாய் இல்லாவிட்டாலும் போதிய கௌரவத்துடன் வளர்ந்தவளுக்கு இச்சிறு சலசலப்பும் கூட தாளவில்லை - மிரண்டு போனாள்.



அப்பா விக்கித்து விட்டார்.

மோர் குடிக்க வைத்து, ஆசுவாசமாய் பேசி, பக்கத்து வீட்டு மாமியைப் பார்த்துக் கொள்ள கேட்டுக் கொண்டே கிளம்பினாள்.

அப்போதுதான் அப்பா மெல்ல விபரம் சொன்னார் - இனி மளிகை, பால் எல்லாரும் பாக்கிக்காக வந்து தொண்டையை நெரிக்கும் முன் ஏதேனும் செய்ய வேணும்.

க்ரீன் - ரூமில் அதாவது ஒப்பனை செய்யும் அறையிலேயே தங்கிக்கோ - என்ற எக்களிப்பு குத்திக் கண்களைக் கலங்கச் செய்தது.

இப்படிக் காசுக்காக மற்றவர் படி ஏற வேண்டி வந்ததே என்ற அவமானத்தில் கண்ணீர் வழிந்தது...

களைத்த முகத்தில் கண்ணீரைத் துடைத்துப் பரப்பியபடி மோகினியின் வீட்டினுள் நுழைந்தவளுக்கு இங்கும் அதிர்ச்சிக் காத்திருந்தது.

மோகினியின் அருகே அமர்ந்து பேசியபடி இருந்தவள் - யமுனா ச்சே... சுத்த அசட்டுத்தனம்... முகத்தைத் துடைத்து, சிரிக்கக் கூட இல்லாமல் இதென்ன அவசரம்?

தளைத்த கண், கன்னங்களுமாய் ஒரு வீட்டிற்குப் போகும்படி... அப்படி என்ன ஆகிப் போனது?

அப்பாவிற்கு ஒன்றுமில்லையே... பிறகென்ன?

ஆனால் அப்பா அதிர்ந்து சோபாவில் சோளக் கொல்லை பொம்மை போல சரிந்திருந்த விதம் சரியில்லை.

ஆக விரைவில் காசுடன் போக வேண்டும்.

''அப்பா... காசுதானே... இதோ கைநிறைய இருக்கப்பா... இதுக்காகவா சோர்ந்து போறது?'' என்று தேற்றி அவரை நிற்க வைக்க வேணும்...

''வாம்மா தேனுகா... ஏன்.. என்ன... பஸ்ஸிலே வந்த அலுப்பா?''

சற்று பதறி எழுந்தார் யோகானந்த்.

''உங்களைப் பார்க்கலாம்னுதான்.''

''உட்காரம்மா. விமலி லைம் ஜூஸ் பிழிஞ்சு எடுத்து வாம்மா.''

''இருக்கட்டுங்க... அவசர காரியமாய் வந்தேன்.''

''உட்கார்ந்து, குடிச்சுப் பிறகு சொல்லலாம். அப்பாக்கு... அப்பா நல்லாயிருக்காங்கல்ல?''

கேள்வியில் இவளுக்குள் மறுபடி அழுகை முட்டியது.

யமுனா முன்பு தன் அவல நிலையைச் சொல்வதா என்ற அவமானச் சங்கடம்.

''நான் வரேன் மாமா... அவ ஏதோ தனியாய் பேசணும்னு நினைக்கறாப் போல... நாமதான் சாவகாசமாய் எப்ப வேணும்னாலும் பேசலாமே...?''

உரிமையும் உல்லாசமுமாய் அறையை விட்டு வெளியேறினான்.

''என்னாச்சு தேனுகா... உன்னை இப்படிப் பார்த்ததில்லையே?''

''பிரச்சினை ரொம்பப் பெரிசில்லைங்க... ஆனா எனக்கு அதையும் தாங்கத் திராணியில்லை... அப்பாவும் துவண்டுட்டார்.''

''சரி.. என்ன பிரச்சினை?''

''பணம்... பணம் தேவைப்படுது. அப்பாக்கு, எனக்குமே வேலை... அதாவது சம்பளம் இல்லை - போதாததற்கு வேலைக்காரி - டான்ஸ் ஃபீஸ்னு எங்க வண்டி இரண்டாம்



மாசமே இடிச்சு நின்னுடுச்சு. நிலைமை இப்படி தொட்டுக்கோ துடைச்சுக்கோன்னு இருப்பதை நான் உணரலை...''

''நானும் உணரலையேம்மா... அத்தான் சங்கடமாயிருக்குது - ரக்ஷா தாஸிற்கு பத்துன்னு, உன் செலவுகளுக்குமாய் இருபது, இருபத்தையாயிரமாவது தேவைப்பட்டிருக்குமே...''

''ஐயோ... அவ்வளவெல்லாம் வேணாங்க. ஆறாயிரம் எங்க செலவுக்குப் போதும் - சமாளிச்சிடலாம்... உங்களைத் தொந்தரவு செய்யக் கூடாதுன்னு...''

''படத்துக்கான முதலை எப்படிப் புரட்டறதுங்கற யோசனையில் அத்தியாவசிய செலவுகளைப் பற்றி நினைக்க விட்டுட்டேன் பாரம்மா. விசாரிச்சுக் கொடுத்திருக்கணும்... ஆனா நாம பண விஷயத்தை இதுவரை பேசினதில்லை. ரஸியைப் போல எனக்கு மகள் உறவில் நீ இருக்கேன்னு பூரிப்பாய் நினைத்தவன் கடமைகளை மறந்துட்டேன் பார்த்தியா...?''

பரிவுடன் இவள் தலையைக் கோதி விட்டார்.

''அந்த உரிமையில்தான் நானும் ஓடி வந்துட்டேங்க.''

''அப்பா மாமான்னு கூப்பிடேன். அந்த உரிமையை நானும் ரசிக்கட்டும்.'' சற்று தயங்கினாலும் பிரியமாகவே ஒத்துக் கொண்டாள்.

''ஆகட்டும் மாமா.''

''இப்போதைக்கு எவ்வளவு தேவை?''

''வாடகைப் பணம் எண்ணூறுதான்... ஆனால் மளிகை, பால்னு...''

''ஒரு நிமிஷம்மா'' - என்று உள்ளே போனவர் ஐந்தாம் நிமிஷம் பணக்கட்டோடு வந்தார்.

‘‘கைப்பை ஏதும் இல்லையாம்மா?’’

‘‘இல்லை மாமா... இந்தக் குட்டி பர்ஸ்தான் அவசரத்தில் எடுத்துட்டு வந்தேன் -

அங்கிருந்த கனத்த பிளாஸ்டிக் கவரில் பணத்தைப் பொதிந்தவர்,

‘‘சாப்பிடறியா?’’ கேட்டார்.

‘‘அப்பா காத்திருப்பாங்க... நன்றி.’’

வாசல் வரை வந்து பையைத் தந்தார்.

‘‘இருபது போதும்ல?’’

‘‘தாங்க்ஸ் மாமா.’’

‘‘சந்தோஷம்மா... என் கவனக் குறைவால்தான் உனக்கிந்த மனக்கஷ்டம்...’’

‘‘எனக்கே எங்க நிலைமை சரியாய் தெரியலையே - வரேன்.’’

‘‘அப்பாட்ட நீ வந்துட்டு இருக்கறதாய் தெரிவிக்கறேன்’’

‘‘ம்ம்... நன்றி... வரேன்.’’

தாழ்வாரத்தின் மூலையில் ஒரு மூங்கில் நாற்காலியில் அமர்ந்திருந்த யமுனாவையும் நோக்கி மரியாதை நிமித்தம் புன்னகையுடன் விடைபெற்றாள்.

ஆனால் அங்கே பதிலுக்கு முறுவல் இல்லை.

## 17

அன்று அந்த இருண்ட முகத்தைக் கவனிக்கும் மனநிலையோ, ஆராயும் சாதுர்யமோ தேனுகாவிற்கு



இல்லை... அவசரமாய் வீடு திரும்பினாள்... அதே அவசரத்தில் நாட்கள் வாரங்களாகி, மாதங்களாகவும் திரண்டு மறைந்தன.

இது இன்னது.. இப்படி என்று உணரும் முன்பாகவே அடுத்தது நிகழ்ந்து அவளை ஆச்சரியச் சுழலுள் இழுத்து அமிழ்த்தியது... எல்லாம் இனிய சுழல்களே!

பணம் பற்றிய கவலை விலகியதுமே அவள் மனது இயல்பாய் ஏற்ற பாத்திரத்திற்குள் இறங்கி விட்டது.

கவனமாய் சாப்பிட்டு, அழகுக் குறிப்புக்களை சலிப்பின்றி செய்ய, அவளது தோற்றப் பொலிவு சகட்டுமேனிக்குக் கூடியது!

துலக்க மெனக்கெடாமல் எண்ணை விட்டுவிட்டு ஏற்றப்படும் விளக்கு பிசுக்கேறி கிடப்பது போலத்தானே மனித உடலும்.

இது சாதாரண அரப்புப் புளி தேய்த்தல் இல்லை.

மிக மென்மையான ஆனால் உயர்ரக சுத்திகரிப்பு.

ஆக தேனுகா பொன் விளக்காய் மாறியிருந்தாள்.

ரேணுகாதேவியின் சில படங்களைப் பார்த்துப் பார்த்துத் தன்னுள் பதிவாக்கியிருந்த அசைவுகளை அவள் மிக இயல்பாய் வெளிக்காட்ட முடிந்தது.

காட்சிகளை இயக்குனர் மயன் விளக்கியதுமே அதை [illegible] ரேணுகா தேவியாகவே அவள் ‘வாழ்ந்த’ அழகில் பிரமித்துப் போனார்கள் மயனும் யோகினும்.

‘‘அபாரம்!’’

சரியான நடிகை கிடைத்து விட்ட மகிழ்வில் குழுவே ஒன்றி, ஒற்றுமையாய் இயங்கியது. ஆர்ட் டைரக்டரும்

ஒளிப்பதிவாளரும் அக்குறும் படத்தில் தங்கள் திறமைகளைக் காட்டுவதைச் சவாலாய் எடுத்துக்கொள்ள, படம் கவிதையாய் உருப்பெற ஆரம்பித்தது.

நாயகியின் உடைகளுக்கு 'ஷி' எனும் முன்னணி ஆங்கிலப் பத்திரிகை ஸ்பான்ஸர்ஷிப் ஏற்க, இந்தியாவின் பிரபல டிஸைனர் நீது அகர்வால் சென்னை வந்து போனாள்.

நடித்த இரு படங்களிலேயே பல விருதுகளை வென்று திரைவானில் நீங்காத நிலாவாய் பதிந்திருக்க வேண்டிய ஒரு நிலாப் பெண் முழுக்கப் பிரகாசிக்கும் முன்னர் மறைந்தே போனதே என்று பார்ப்பவர் ஏங்கும் அளவிற்கு படம் உருவானது.

ரேணுகா தேவியின் ஆவிதான் தனக்குள் புகுந்து விட்டதோ என்று தேனுகாவே மிரளும் அளவில் அவள் மாறிப் போனாள்.

இப்படி ஒரு நாயகியோடு ஒவ்வொரு காட்சிக்கும் உணர்விற்கும் தோதான உடைகளும், அலங்காரமும், செட்டிங், ஒளி, ஒலியுமாய் ஒரு அரிதான கனவை அங்கு நனவாக்கி அதைப் பதிவும் செய்தார்கள்.

அந்த அழகிய முப்பது நாள் உழைப்பை எடிட்டிங் முடிந்து அரை மணி நேரப் படமாய்... குறும் கவிதையாய்ப் பார்த்ததும் அவள் அழுதாள்.

தன் கனவு கைவரப்பெற்ற ஒரு கலைஞனின் மனவெழுச்சியில் ஊற்றெடுக்கும் அழுகை...

அவள் தன்னிலைக்கு வந்தபோது மற்றவர்களின் கண்களில் நீரும் உதடுகளில் திருப்தியும் கசிந்திருந்தன.

''எப்போ பிரிமியர் ஷோ வைக்கலாம்?''



அத்தனை நாட்களாய் உள்ளே சன்னமாய் குத்திய முள் இப்போது அழுத்தமாய் நெருடியது... யோகின் அருகே போய் அவரது தோளைப் பற்றி மெள்ளக் கேட்டாள்.

''அவர்... ரவி வந்திடுவாரில்லை மாமா?''

''அப்பப்ப படம் பற்றி கேட்கறான். என் சுகம் பற்றி சதா விசாரிக்கிறான் - ஆனால் அது தவிர எப்ப இந்தியா திரும்பறான்றது வாய் திறக்க மாட்டேங்கறானேம்மா.''

''நீங்க சொல்லுங்க - பிரிமியர் ஷோ வந்து பார்த்துட்டு, படம் எப்படி வந்திருக்குன்னு அவர் சொல்லணும்னு.''

கனிவும் பெருமையாய் தன் நாயகியைப் பார்த்தார் - ''அப்படி யாரேனும் வந்து சொன்னாத்தானாம்மா?''

அவரை முறுவலுடன் பார்த்தாள்.

''படம் அற்புதமாய் வந்திருக்குது. உங்களுக்குத் திருப்திதானே?''

''அதனால்தான் தென்னிந்திய மொழிகளிலும் 'டப்' பண்ணப் போறோம்...''

''அப்ப நம்ப பக்கமும் திரையிடப்படுமா?''

''ரெகுலர் தியேட்டர்களில் முடியாது - ஆனால் பிராந்திய மொழி குறும்படங்களில் இது தனியிடம் பெறும்...''

''நீங்க சொன்னால் வருவார் மாமா.''

படத்தில் மூழ்கியிருந்தவளுக்கு வெளி உலகம் பற்றி நினைப்பூட்டியது ரவி பற்றிய நினைவுகள்தான்.

அவர்களின் முதல் சந்திப்பு...

சுக்கச் சுக்க அவள் எரிந்து விழுந்தது.

இவளுடைய சமையலை அவன் ரசித்து ருசித்துச் சாப்பிட்ட தினம்.

அன்றுதானே 'தேனுகா' என்று முதன் முதலாய் தன்னைப் பெயர் சொல்லி அழைத்ததும் கூட? அதன் பிறகு இயல்பாய் ஏன் இனிப்பாகக் கூட பேசிய சந்தர்ப்பங்கள்...

அவன் வாங்கித் தந்த ஐஸ்க்ரீம்.

வாங்கி வந்த நீலச் சேலை...

எல்லாமே... ஒவ்வொன்றும் விசேஷித்த, பொக்கிஷ ஞாபகங்கள்...

ஏன் அப்படி?

அவனது மனதில் மற்றொருத்தி உண்டு என்பது முழுக்க அறிந்த பிறகும் ஏனிந்த ஈர்ப்பு?... தறிக்கெட்ட உணர்வு ஈஷல்?

அவள் முன்பே முடிவு செய்துவிட்டாள்.

பிரிமியர் ஷோவிற்கு அந்த நீலச் சேலைதான் என்று. ஃபால் தைக்க அதைப் பிரித்தபோதுதான் அதன் முழு ஜொலிப்பும் விரிந்தது - அதோ இணைக்கப்பட்டிருந்த ரவிக்கைத் துண்டில் கச்சிதமான ரவிக்கையும் தயார்!

மழை நீர் சொட்டுக்களைக் கோர்த்தது போன்ற கிரிஸ்டல் நகைச்செட்டும் பொருத்தமாய் எடுத்து வைத்திருக்கிறாள்.

ரேணுகாதேவி பாணியில் தழைவாய் பிச்சோடா போட்டு அதை கிரிஸ்டல் பதித்த வலை பின்னலால் மூடினால்... அன்றிரவிற்கான அலங்காரம் எல்லாம் முடிவாகி விட்டது... எல்லாம் அவனுக்காய்... தன் பரிசுப் புடவையில் தன்னைக் கண்டதும் அவன் கண்கள் சொல்லும் சேதியைப் படிப்பதற்காய்...

பாராட்டும் பரிவுமாய் அவன் முகத்தில் விரியப் போகும் புன்னகைப் பூவிற்காய்...



## 18

அப்படத்தின் ஸ்டில்கள் படத்துறையின் பெருந்தலைகள் பலரின் புருவங்களை உயர்த்தியிருந்தன.

ரேணுகாதேவி வட இந்திய நட்சத்திரம் என்பதால் வடக்கே படம் பற்றிய கிளர்ச்சி அதிகம் என்றாலும் படத்தை உருவாக்கிய சிற்பிகள், முக்கியமாக நாயகியும் தமிழர்கள் என்பதால் தென் இந்திய படப்புள்ளிகளும் ஆவலுடன் நிமிர்ந்து உட்கார்ந்தார்கள்.

''ஆளு அசத்தலாய் இருக்காம் - தூள் நடிப்பாம்... யாருப்பா அது தேனுகா''

''மாறன் சார் நாடகக் குழுவில் இருந்துச்சாம்...''

''நேரே பெரிய லெவலுக்குப் போயிடுச்சு?''

''அடுத்து மயன் படத்துல மெயின் ரோலாம்.''

''எது அந்த சரித்திரப் படத்திலா?''

''ம்ம் - ஆளை மரத்தைச் சுத்தி ஆடிப் பாட வராதாம்.''

பொறுமைக்க விட்டாலும் பெருந்தலைகள் எல்லாம் பிரிமியர் ஷோவிற்குக் கூடி விட்டனர். முதலில் சென்னையிலும் பின்பு மும்பையிலும் திரையிடுவதாய் திட்டம். மும்பைக் கலாச்சாரத்திற்கு ஏற்கும்படி உடை டிஸைனர் இவளுக்கு மென்மையான தங்க டிஷ்யூவில் முத்துக்கள் பதித்த ஆடையை வடிவமைத்திருந்தாள் - பழுப்பு முத்தில் ஆபரணங்கள்.

''இதற்கான செலவு எக்கச்சக்கமாய் இருக்குமே?''

''இது உனக்கான உடை இல்லை தேனுகா... நீ இதற்கான மாடல் மட்டும்தான்... இது மும்பை கோடீஸ்வரன் மனைவியின் வார்ட் ரோபிற்குப் போயிடும்...''

''ஒருத்தர் போட்டுக் கழற்றியதையா?''

''பிரிமியர் ஷோவிற்கு தேனுகா போட்ட உடைங்கறதால் அதற்குரிய மதிப்பு அது!''

ஆக இந்த சிறு படத்திற்கு இத்தனை எதிர்பார்ப்பு? கவர்ச்சி?

''தரமான படைப்புகளுக்கு எப்பவுமே மதிப்புண்டு தேனுகா - படத்தை ரேணுகாவின் படத்தின் சில பகுதிகளோடு ஸி.டி.க்களாகவும் வெளியிடறாங்க... வசூலிக்க முடியாத படத்திற்கு எப்படி வருமானம் கிடைக்கும்னு நினைச்சது போக, லாபமே கூட வரும்ங்கற நிலை இப்போது.''

மனதுக்குள் இறைவனுக்கு நன்றி செலுத்தினாள்.

''எல்லாருக்கும் லாபமாகவே அமையட்டும்...'' தனக்கும் இது ஒரு அற்புத அனுபவம்தான்... முக்கியமாக ரவியைச் சந்தித்தது. சற்றேனும் பழகியது... பெரியப்பாவின் வேண்டுதலுக்கு இணங்கி அவன் பட வெளியீட்டு வைபவத்திற்கு வரலாம்.. ஆனால் அதன் பிறகு...?

'உடைந்து போகும்தான்
ஆயினும் எத்தனை அழகு
நீர் மேல் குமிழி!'

குட்டி கவிதை ஒன்று நினைவில் ஓடியது.

உடைந்து போகுமென்று தெரிந்தே இவள் ரசித்த அழகுக் குமிழ் அவன்... இனம்புரியாத குதூகலத்தை இவளுள் குமிழிடச் செய்தவன்.

இப்பிரிவு அவன் மீதான ஈர்ப்பை அதிகரித்திருந்தது. ஆனால் ரவிதேவிற்குள் எந்தப் பாதிப்பும் இல்லை...



நேர்ந்திருக்காது. மற்றொருத்தி மேல் பிரேமைக் கொண்டவனுக்கு தன்னைப் பற்றி நினைப்பும் வருமா?

''அவர் போனில் பேசும்போது... நான்... அவரைக் கேட்டதாய் சொல்லுங்க மாமா...'' - என்பதற்கு மேல் பெண்ணான இவளாலும் ஏதும் சொல்ல முடியவில்லை.

அவனுடன் நேர்ந்தது ரயில் பயணிகளுக்கிடையே முகிழ்க்கும் நட்புதான்... பேசிப் பழகுவதோடு சரி... மறந்தே போகும் தொடர்புகள்.

அது தொடரவில்லையே என்ற மறுகலில் நியாயமில்லை. அதிலும் யமுனாவின் காதலனைப் பற்றித்தான் இப்படி நினைப்பது, மருகுவது... மகா தப்பு... பாவம்!

ஆனாலும் ஒருமுறையேனும் பார்க்க மனம் தவித்தது.

சோமதேவும் இவளுக்கு எந்தப் பதிலையும் தராமல் மழுப்பினார். ''பயல் ஐரோப்பா முழுக்க சுற்றுறான்மா - மார்ச் 7-ம் தேதி நம் விழா என்று தேதியையும் சொல்லிட்டேன்... அவன் தீர்க்கமாய் ஏதும் சொல்லலை...''

''அவனுடைய போன் நம்பர்...?''

''செல் நம்பர் போல ஏதோ நீளமாய் தந்தான்... எழுதி எங்கே வச்சிருக்கேன் கூட நினைவில்லை...''

அழுத்திக் கேட்க முடியவில்லை...

ஆனால் தவிப்பும் துக்கமும் அவளை அழுத்தின.

''காதல் நமக்கு எப்பொழுதும் எதையேனும் தருகிறது. அவன் அருகே இருக்கையில் சந்தோஷத்தை... வெட்கத்தை. அருகே இல்லாத போதோ தவிப்பு... துக்கத்தை,

படத்தில் ரேணுகாதேவியாகத் தான் பேசிய ஒரு வசனம் அவளுக்கு இப்போது முழுதுமாய் விளங்கியது.

அப்படியானால் இதுதான் காதலா?

அசடே... ஆரம்பத்திலேயே மற்றொருத்தியோடு பார்த்தவனிடம் நீயும் ஆசை வைக்கலாமா?

''காதல் ஒருவித தற்காலிக மனநோய் - திருமணமானால் குணமாகி விடும்!'' என்று சிரிப்பார் மாறன்.

யமுனாவோடு ரவிக்கு திருமணமானால் தனக்கு நோய் குணமாகும் போலும்...! - வேடிக்கையாக்க முயன்றாலும் வாதித்தது!

''தேவதையாட்டம் தெரியறே தேனுகா... இந்த நீலமும், நட்சத்திர தெறிப்பும் உன் அழகை அலாதியாக்கிடுச்சு...'' பிரமிப்புடன் ஏற இறங்கப் பார்த்தபின் மனமாரப் பாராட்டினாள் தன்மதி.

இயக்குநரின் மனைவியாக அவளும் பிரிமியர் ஷோவில் சற்று பரபரப்புடனேயே ஈடுபட்டிருந்தாள்.

''நன்றிங்க...''

''நாலே மாசங்களில் எப்படி மாறிப் போய் நீ? உழைக்கத் தயங்காதப் பொண்ணு நீ - கூடவே அதிர்ஷ்டமும் உண்டு போல.''

நெற்றியில் இட்டிருந்த சந்தனக் கீற்றிற்குப் பொருத்தமாய் அதே நிற எளிய சேலையில் இருந்த தன்மதியின் கைகளைப் பற்றினாள் இவள் -

''எனக்குப் பயமாயிருக்குதுங்க தன்மதி.''

''எதுக்காம்? விலையாகாதுன்னு தெரிஞ்சும் எல்லாரும் ஆசை ஆசையாய் பண்ணப் படம் இது. அந்த உழைப்பு வீண் போகலையே... ஸி.டி.யெல்லாம் பயங்கர டிமாண்டில் உண்டு. இன்னொரு 'லாட்' தயார் பண்றாங்க. விருதுகளும் நிச்சயம் - பிறகென்ன?''



''ம்ம்... எனக்கிதெல்லாம் தெரியாத... புரியாத விவரம். அப்போ யோகின் மாமாவும் பணம் பற்றிய பதட்டத்தில் இருந்தாரா?''

''பின்னே... படம் சின்னதானாலும் தேவைப்பட்ட காசு சொற்பமல்ல... யோகினிடம் அத்ர காசு இல்லையே...''

''உங்க கணவர், டைரக்ஷனுக்குப் பணமே வாங்கிக்கலைன்னு சொன்னாங்க.''

''அவருக்கும் யோகினின் கனவு பிடிச்சிருந்தது. அவருடைய நிதி நிலைமையும் தெரியும். அதான் செய்து கொடுத்தார்.''

''உடை, நகை எல்லாம் 'ஷி' பத்திரிகையின் தயவு.''

''உண்மைதான் - ஆனாலும் கேமரா, ஃபிலிம் ரோலிலிருந்து, மற்ற டெக்னீஷியன்ஸ், ஆர்ட்டிஸ்ட்ஸ், செட்டிங், இசை என்று...''

''ம்ம்...''

''ரவி இல்லைன்னா இந்தப் படம் இல்லை.''

''யார்... ரவிதேவனா?''

''பின்னே? உலகம் முழுக்கச் சாடி கார் கமிஷனாய் சம்பாதிக்கும் பணத்தை இங்குதான் அனுப்பறார். அதிகக் கடனெல்லாம் வாங்கினா வட்டி கட்டறதுக்குள்ளே ஓய்ஞ்சிருப்போம்...''

''ஓ... மாமா இதை பற்றி ஏதும் சொல்லலை.''

''ஆரம்பத்தில் ரவியிடம் யோகின் விவரமாய் ஏதும் சொல்லலை போல - பிறகு ரவிக்கு எப்படியோ யோகினின் இக்கட்டான நிலைமை புரிஞ்சு உதவினாராம்.''

''இக்கட்டாய் என்ன நிலைமை?''

''ரேணுகா தேவியிட நினைப்பாய் யோகினிடம் ஒரு மோதிரம் மாத்ரமே உண்டு - மாணிக்க மோதிரம் - நவாபுகளுடைய காலத்து நகை. அதை ரேணுகா கண்டு ஆசைப்பட அப்பமே லட்ச ரூபாய் கொடுத்து அதை அவளுக்குப் போட்டு அழகு பார்த்தாராம்.''

''அவர் அவங்க் மேல வச்சிருந்த பாசம் அப்படி.''

''அவங்க நினைவாய் இவருக்கு மிஞ்சிய அந்த மோதிரத்தையும் யோகின் விற்கப் பார்க்கறார்னதும்தான் ரவி உதவிக்கு வந்தது.''

மயனின் அதட்டல் பெண்களின் பேச்சை வெட்டியது. ''தன்மதி, உன்னை ஹீரோயினைக் கூட்டி வரச் சொன்னா, நிற்க வைத்து கதையடிக்கறே... கிளம்புங்க ப்ளீஸ்.''

அறியாத முகங்களிடையே இவள் கொண்டு போய் நிறுத்தப்பட்டாள்... அறிமுகங்கள் நடந்தன.

ஆனால் எந்தப் பேரும் முகமும் கருத்தில் பதியவில்லை.

படம் பற்றிய பதட்டம் தவிர அத்தனை கண்களும் பிரமிப்புடன் தன்னையே மொய்ப்பது உணர்ந்த கூச்சம்...

இன்னும் அவனைக் காணவில்லையே என்ற ஏக்கமுமாய் நின்றாள்.

விளக்குகள் அணைந்து படம் ஓட,

எல்லாரையும் போல அவளும் அதில் ஒற்றினாள். ரேணுகாதேவியின் நடிப்பாற்றல், கலைநுணுக்கம்... அதனோடு வரும் சன்னத் திமிர், ஒயில், அபார அழகு அனைத்தையும் உணர்ந்து... அது முழுநிலவாய் பூரித்து ஒளிவீசும் முன்னே அழிந்த ஏக்கத்துடன் எழுந்தார்கள்.



இப்போது தன்னைப் பார்த்த பார்வைகளிலிருந்த பாராட்டு அவளுக்குப் புரிந்தது.

[illegible] வார்த்தைகளால் வாழ்த்தினார்கள்.

புகழின் அலாதி வெளிச்சம்... அவ்வெளிச்சம் தரும் போதை அவளுக்குப் பரிச்சயமாகத் தொடங்கியது.

''நன்றி. ஆனால் என்னுடையது சிறு பங்கு. நான் யோகின் சாருக்கும் டைரக்டருக்கும் தான் கடமைப்பட்டவள்.''

என்று திரும்பத் திரும்பச் சொன்னாள்.

அவளது நாடக மன்ற நண்பர்களும் இறுகக் கைப்பற்றி பாராட்டினார்கள். மாறனுக்கு வார்த்தையே வரவில்லை.

தலையில் கை வைத்து ஆசீர்வதித்தார்.

பத்திரிகையாளர்களின் கேள்விகள் ஒருபுறம்...

அத்தனையும் [illegible] அவளது கண்கள் அவனுக்காய் அலைபாய்ந்தன...

அவன் எங்கே...? ஏன் வரவில்லை...?

## 19

''நீ இந்தக் காரில் ஏறு, ரேணுகா...''

[illegible]

''அப்பா?''

''உங்கப்பா என்னோட வர்றாங்க. அவர் இத்தனை [illegible] சிரிக்க இப்பதான் பார்க்கறேம்மா.''

''நானே அவரை இப்படிப் பார்த்ததில்லையே மாமா - அவர் முகமெல்லாம் எத்தனைப் பெருமை, பூரிப்பு?''

''எம்பொண்ணா இப்படி நடிச்சது? தேவதையாட்டம்ல இருந்தா. கடைசியில ஐயோ இத்தனை அம்சமான நடிகை அல்பாயுசில போயாச்சுன்னு பார்த்த கண்ணை எல்லாம் கலங்கப் பண்ணிட்டா?'ன்னு மாயறார்!''

''எல்லாத்துக்குமே நான் உங்களுக்குத்தாம் மாமா கடமைப்பட்டிருக்கேன்... அவர்...''

''ஏறும்மா - முதல்ல பீச் ஹவுஸுக்கு. அங்கேயே தங்கிட்டு...''

''இல்ல மாமா... எங் கட்டில்ல படுத்தாத்தான் இன்னைக்குக் கொஞ்சமேனும் தூங்க முடியும்...''

''சரி எல்லாருமாய் சேர்ந்து சாப்பிடலாம்ல?''

''ஆகட்டும் மாமா.''

தாழ்வான அக்காரினுள் ஏறி அமர்ந்ததுதான் அதன் அடுத்த இருட்டு மூலையில் யாரோ உட்கார்ந்திருப்பது புரிந்தது.

''யாரது?''

பதிலில்லை.''

''டிரைவர் - காரை நிறுத்துங்க...'' காரோட்டிக்கு உத்தரவிட்டாள். அடுத்த மூலையிலிருந்து மிருதுவாய் குரல் வந்தது.

''நான்தான் - ரவிதேவ்.''

அதற்குள் காரின் வேகம் குறைந்திருந்தது.

டிரைவர் தயக்கமாய் காரைச் செலுத்தினான்.

''ஓரமாய் நிறுத்தி இறங்கிக்கோப்பா'' - இறங்கிய ஓட்டுநரின் கையில் பணத்தைத் திணித்தவன் -



''முன்னே வந்து உட்கார் தேனுகா'' - என்றான், உத்தரவு போல. இறக்கை முளைத்தது போல அடித்துக் கொண்டது அவளது இதயம். இதுவரை அனுபவித்தது மகிழ்வு என்றாலும் இப்போதுதான் மனம் நிறைந்திருந்தது. பசும்பால் சுவைதான் என்றாலும் அதில் பனங்கற்கண்டை சேர்த்துக் காய்ச்சினால்... நாலூறுமல்லவா?

''எப்ப வந்தீங்க?''

''ஆறு மணிக்கு'' - காரைக் கிளப்பியபடி சொன்னான்.

''படம்... படத்தைப் பார்த்தீங்களா?''

''ம்ம்...''

''இந்த.. சேலை... புடவையைப் பார்த்தீங்களா?''

கேட்ட தன்னையே கடிந்து கொண்டாள் - காரின் இருளில் அவன் பார்வை, பாவனை ஏதும் புலப்படவில்லையே...?''

''பார்ப்பதை எல்லாம் நம்ப முடியலை.''

''நீங்க தந்த பரிசைக் கூடவா?''

இடறினாலும் இலகுவாய் பேச முயன்றாள்.

''சேலை கட்டிய மாதரை நம்பாதேன்னு ஒரு அனுபவசாலி எழுதிவச்சிட்டான்.''

''உங்களுக்கென்ன கோபம்? அதுதான் இதுவரை தகவல் ஏதும் சொல்லலை...?''

''கோபமில்லை ; ஏமாற்றம், தேனுகா, காசும் அது தரும் பொருட்கள் மேல் மோகமில்லாத வித்தியாசமான பெண் நீன்னு நினைச்சேன். என்னை மட்டுமே நேசிக்கும் அபூர்வ ரகம்னு கணிச்சேன்.''

''எனக்குப் புரியலை...''

''எனக்குந்தான் புரியலை.. நிஜ வாழ்க்கையில் நீ ஏன் நடிக்கறேன்னு.''

அதுவரை அவளுள் கொப்பளித்த மகிழ்வெல்லாம் நொடியில் வற்றி வறண்டது.

"என்னிடம் பணம் தேவையில்லை - சமாளிச்சிடுவேன்னு சொன்ன நீ உடனே. சில நாட்களில் பெரியப்பாட்ட பணத்துக் காக ஏன் போய் நின்னேன்னு அழுதேன்னு புரியலை."

மரத்த புத்தியை சிந்திக்கச் செய்தாள் -

"ஓ... அது... அதாவது..."

"பணம் தேவையான்னு நேரே கேட்டேன். காசு உனக்கொரு பொருட்டில்லாதது போல பேசினவ ஏன் பெரியப்பாவிடம் ஓடிப் போகணும்?"

"என்னை நடிக்க அழைச்சது அவர்."

"படத்திற்கான பைனான்ஸ் நான். கடன் வாங்கினது என் பேரில். நான் இப்படி பைத்தியமாட்டம் உழைச்சது வேண்டிய பணத்தைத் திரட்ட."

"அதெல்லாம் எனக்குத் தெரியாதே... தவிர பெரியவர்ட்ட கேட்பதுதான் முறை."

"எது முறை? அழுகையோடு ஓடி வந்து கெஞ்சறதா?"

இவளுக்குள் கோபம் கிளர்ந்தது.

"அந்நேரம் அங்கே யமுனா இருந்தாங்க... அவங்க சொன்னதை வைத்து.. அதாவது உங்க காதலிங்கறதால் அவங்க சொல்றதை எல்லாம் நம்ப அவசியமில்லை."

"யமுனா - என் காதலியா? இதென்ன புது வம்பு?"

இவளுக்குள் வாயடைத்தது!

அவன் சொல்வதல்லவா புது வம்பு... புரியாத வம்பு?

"நீ உடுத்தியிருக்கும் சேலை கூட ஒரு விதத்தில் அதற்கான பரிசுதானே?"



"எதற்கான? புரியும்படி பேசுங்க..."

"யமுனாவோடு நான் அதிகம் பழகினது உண்மை. சதா ஒரு பெண் - அதிலும் அழகிய பணக்காரப் பெண் தன்னைச் சுற்றுவதில் ஆணுக்குப் பெருமிதம் உண்டாகும். பல ஆண்கள் துரத்திய யமுனா என்னைத் துரத்தியதில் கொஞ்சம் அசட்டுத்தனமாய் குழம்பிட்டேன். அவளைக் கல்யாணம் செய்யலாமோன்ற வரை..."

"அப்படின்னா இப்போது..."

"நான் யமுனாவைக் காதலிக்கலை - இதை புரிய வைத்த உனக்கு நன்றி."

"இதில்... இதிலே என் பங்கு என்ன?"

உலர்ந்த உதடுகளால் கேட்டாள் -

"எனக்கு அந்த பலூன் கதை சொன்னே."

போக்குவரத்துக் குறைந்த சாலையில் கார் காற்றைக் கிழித்தபடி பறந்தது.

"ஓ... அன்னைக்குக் காரில்... அது கொஞ்சம் விலகியிருந்தால் கா... பிரியம் பலப்படும்னு சொன்னேன்."

"யமுனாவிடமிருந்து கொஞ்சம் விலகியதுதான் தெரிந்தது - அவள் திமிரும் சதா அற்ப விஷயங்களைப் பற்றிப் பேசியபடி ஷாப்பிங் ஒன்றே பொழுதுபோக்காகக் கொண்ட அவள் இன்மையின் ஆசுவாசமாய் இருந்தது."

"ஸாரி - நான் இப்படி ஒரு திருப்பத்தை எதிர்பார்க்கலை."

"நான் எதிர்பார்க்கலையே? எனக்கது ஒரு இனிய அதிர்ச்சி. சதா என்னை செலவழிக்க வைக்கும் அவளோடு உன்னை ஒப்பிட்டுப் பார்த்தேன். பற்றில்லாத ஒரு கலை யோகி போலிருந்த உன் மேல் ஒரு பிரமிப்பு வந்தது. நீ பெரியப்பாவை கவனிச்ச விதம், ஏன் எனக்கும் கூட பசியறிஞ்சு உணவு பரிமாறிய

பெண்மை, பதிலுக்கு எதுவும் எதிர்பாராத உன் கம்பீரம் ஏற்றுக் கொண்ட வேலையில் உன் பக்தி, சிரத்தை, இப்ப உன் திறமை எல்லாமே என்னை மடக்கிடுச்சு... ஆனா ஏன் பெரியப்பாட்ட போய் பணம் கேட்டேன்னுதான்...''

''ஏன் கேட்டேனா? வீட்டு வாடகைக்கான எண்ணூறு ரூபாயைக் கொடுக்க முடியாமல் வீட்டுக்காரர் வந்து கத்த, அவமானப்பட்டோம்... எங்க நிலைமையைச் சொன்னேன்... அது தப்பா?''

''இத்தனைப் பெரிய தொகையைக் கேட்டால் பெரியப்பா எங்கே போவார்?''

''உடனடியாய் ரெண்டாயிரம் தந்தாலும் கூட போதும்னு நினைச்சேன் - டான்ஸ் கிளாஸுக்கே பத்தாயிரம்... ஆக மாமாதான் இருபதாயிரமாய் தந்தார்...''

காரின் வேகம் 'மளுக்'கென குறைந்தது.

இவளை வியப்புடன் திரும்பிப் பார்த்தான்.

''அவ்வளவுதானா? நீ கேட்டது இருபது லட்சம் இல்லையா?''

''லட்சமா?'' இவள் கண்களோடு வாயும் சற்று விரிந்தது!

அது நடிப்பல்ல. பாசாங்கு இல்லாத அவளது பளிங்கு முகம் சாலை ஓர விளக்குகளின் ஒளியில் பிரகாசித்தது.

''அப்படீன்னா பெரியப்பா ஏன் அந்த ரூபி மோதிரத்தை விற்க நினைச்சார்?'' அவன் தனக்குள்ளாகவே கேட்டது போலிருந்தது.

''எது? ரேணுகா தேவிக்கு மாமா தந்ததா?''

''ஆக அது பற்றியாவது தெரியுமில்லை?''

''சற்று முன்... அதாவது இன்றுதான் தன்மதி குறிப்பிட்டாங்க.''



''இதென்ன குழப்பம்...'' என்றபடி காரை ஓரங்கட்டி நிறுத்தினான். ''அந்த மோதிரத்தை விற்று 20 லட்சம் தனக்குத் தரச் சொன்னதாய்... யமுனா நேரடியாய் சொல்லலை... அனுமானித்ததாய் சொன்னாள்.''

''நீங்க நம்பிட்டீங்க...''

மிக மெதுவாகத்தான் சொன்னாள்.

காரின் கண்ணாடிகளை இறக்கி விட அதுவரை காத்திருந்த ஆவேசத்துடன் கடல் காற்று உள்ளே புகுந்து அவர்களைத் தடவிக் கலைத்தது.

''பெரியப்பா ரேணுகாதேவிக்குக் கொடுத்த மாணிக்க மோதிரம் விசேஷம்... நவாபின் சொத்து அது. ரஷ்ய மன்னர் ஒருவர் பரிசளித்ததாம் தொன்மையானது என்பதால் ஒரு லட்ச ரூபாய்க்குப் பெரியப்பா அதை வாங்கினாராம்... ரேணுகாம்மா ஆசைப்பட்டதால்.''

''கேள்விப்பட்டேன்.''

இயல்பாகச் சொன்னாலும் தொலைதூரத்தில் கட்டிய மின்னல் போல குமுறிச் சீறிய அலைகளைப் போலவே இவள் மனதுக்குள் தத்தளிப்பு.

இவன் என்ன சொல்ல வருகிறான்... என்னதான் சொல்லப் போகிறான் என்ற குழப்பம் குமுறல்!

''அதை அவங்க விரல்ல போட்ட அன்றுதான் அந்த விபத்து நேர்ந்து ரேணுகாம்மா இறந்தது.''

''ஓ...!''

''அவங்க சாவிற்கு அந்த மோதிரம்தான் காரணம்ங்கற மூட நம்பிக்கையில் அந்தம்மாவின் சொந்தக்காரங்க அதைப் பறிக்கலை... ஆக அது மட்டும் பெரியப்பாவிற்கு மிஞ்சியது...

இப்போது அதன் மதிப்பு பல மடங்காகி 20 லட்சத்திற்குச் சுலபமாய் போகும் எனும் நிலை...''

இவள் அவனையே பார்த்தபடி இருந்தாள்.

''உன்னை முதன் முறையாய் சிம்லாவில் பார்த்த அன்றுகூட அந்த மோதிரத்தை சொற்ப விலைக்குத் தட்டிப் போகப் பார்த்த ஒருத்தனை அடிக்காதக் குறையாய் துரத்தி யிருந்தேன்... எல்லாரும் பெரியப்பாவை ஏமாற்ற நினைக்க றாங்கன்ற எண்ணம் - அதில்தான் உன்னிடம்கூட சிடு சிடுப்பாய் பேசிட்டேன்.''

''அந்த மோதிரத்தை விற்கக் கூடாதுன்னு ஏன் நினைக் கறீங்க?''

ஒரு நகைக்காகவா இத்தனை மெனக்கெடல் என்ற தொனியில் வினவினாள்.

''ஏன்னா பெரியப்பாவின் ஆன்மாவே அதில் இருக்கிறதாய் நினைக்கிறேன். அவர் அதில் ரேணுகாம்மாவின் ஆன்மா இருப்பதாய் நினைக்கறார்...''

''என்ன சொல்றீங்க?''

''தன் நிலாப் பெண் ஆசைப்பட்டதைத் தன்னால் வாங்கிக் கொடுக்க முடிந்த பெருமிதம் அவருக்கு... அந்தத் திருப்தியோடு... தன் மனைவியாகவே அவங்க உயிர் பிரிந்ததுங்கற திருப்தி... சின்ன ஒளியையும் கூட பிரமாதமாய் பிரதிபலிக்கும் அந்த ரூபி. அந்த ஜ்வலிப்பின் அசைவு ரேணுகாம்மாவின் உதடு பேசுவது போலவே அவருக்குத் தோன்றும். இது இருக்கும்வரை எனக்குத் தனிமை உணர்வில்லை என்பார்...''

இவளுக்கு யோகினின் உணர்வுகள் புரிந்தது.

''முதலில் ரேணுகா தேவி பற்றி புத்தகம் எழுதுவதாய் இருந்தார்... வழவழ தாளில் புகைப்படங்களுடனான உயர்தர



புத்தகம்... உன்னைப் பார்த்ததும் சினிமாவாய் எடுக்கும் ஆசை அதிகரித்தது... அதற்குள் பலர் அந்த மோதிரத்தை அற்ப விலைக்குத் தட்டிப் போக முயல... எனக்கு யார் மீதும் நம்பிக்கை இல்லை... கடைசியில்...''

''நானும் மாமாவிடம் பணம் கறக்கறேன்னு நினைச்சீங்க.''

''உன்மீதான என் நம்பிக்கையும் தகர்ந்தபோது ரொம்ப நொறுங்கிட்டேன். எல்லோருக்கும் வேண்டியது பணம் தான்னு புரிய, அதைத் தேடத்தான் ஓடினேன்...''

''என்னிடமோ, மாமாவிடமோ எங்க தேவைகள் என்னென்றதைக் கேட்காமல்..?''

''உன்னிடம் கேட்க முடியாதபடி கசப்பு... பெரியப்பாட்ட கேட்டால் மழுப்பினார். நீ முடிஞ்சதை அனுப்பு - மற்றதை சமாளிக்கறேன்னார்.''

''ரேணுகாவிற்கு எவ்வளவு பணம் தந்தீங்கன்னு?'' கேட்டாள்.

''அதெல்லாம் உன் பிரச்சினையில்லை'ங்கறார்!''

''ஆயிரக்கணக்கான மைல்கள் தள்ளி இருக்கும் உங்களை [illegible] விடக் கூடாதுன்ற எண்ணம்தான்.''

''ரேணுகா உன்னைப் பற்றி அடிக்கடி விசாரிக்கறான்னு பெரியப்பா சொன்னதுதான் ஒரே ஆறுதல்!''

இவளது முகம் 'ஜிவ்'வென சூடானது.

பாதி வெட்கம்... பாதி கோபத்தில்...

''ஆனால் நீங்க என்னுடன் பேசவேயில்லை?''

''இப்ப உன் முகத்தில் பார்த்த அந்த ஒரு பாவனையை போனில் பேசியிருந்தால் நான் ரசிச்சிருக்க முடியாதே?''

காற்றால் கலைந்த கேசத்தை ஒதுக்கும் சாக்கில் முகம் திருப்பினாள்.

''லட்சமா?''ன்னு நீ திகைக்கவும்தான் யமுனா சொன்னது முழுக்கப் பொய்ங்கறது புரியுது தேனுகா.''

''ஆக முதலில் அந்த நம்பிக்கை இல்லை...''

''நிறைய ஏமாற்றுக்காரங்களைக் கண்டு மழுங்கிய புத்தி என்னுது. தேனுகா அழுதபடி உங்களிடம் வந்தாளாமேன்னு பெரியப்பாவிடம் விசாரிக்க, அவர் 'யாருப்பா இதெல்லாம் உன்னிடம் சொன்னா?'ன்னாரே ஒழிய மறுக்கலை... ஆக அந்த அழுகை லட்சங்களுக்கான்னு தப்புக் கணக்கு போட்டேன்... பெரியப்பா மோதிரத்தை விற்க முயலுகிறார்னு வேறு தகவல் வர எல்லாம் உனக்காங்கற வருத்தம். ரெண்டு பேரும் என்னிடம் மூச்சு விடலையேங்கற எரிச்சல்! ஆனால் இப்போ புரிஞ்சுடுச்சு.''

என்ன என்பதாய் திரும்பி அவனையே பார்த்தாள்.

இருவரும் மூச்சு விடவில்லை...

அவர்கள் பதுமைகள் அல்ல என்பதற்கு அவர்களது பலத்த நெஞ்சத் துடிப்பு மட்டுமே சாட்சி!

''நீயும் எல்லோரையும் போல பணமே குறின்னு இருந்தாலும் கூட எனக்கு நீ வேண்டும்ங்கறதுதான் அது...!''

அதுவரை அனுபவித்த மகிழ்வெல்லாம் ஒன்றுமேயில்லை என்பது போல உள்ளே ஒரு இராட்சச சந்தோஷ அலை பொங்கி எழும்பியது... அந்த அலையின் சிதறல்கள் கண்களில் துளிர்த்தது.

''இன்று மட்டும் நீ என்னைப் பற்றி நாலைந்து முறை பெரியப்பாவிடம் கேட்டாயாம்... ஆக உனக்கும்.''



அவனையே விழுங்குவது போலக் கண்டு களித்தத் தனது கண்களைத் தாழ்த்திக் கொண்டாள்.

''ஆக என்னைப் பற்றி முழுக்கத் தெரியாமல், சந்தேகத்தோடேதான் வந்திருக்கீங்க...''

''தப்புதான்...'' அவனது கைகள் பறந்த அவளது கேசத்தை ஒதுக்கி விட்டுப் பின் மெள்ள அவளது குளிர்ந்த விரல்களைப் பற்றின. ஆனா என்னையும் நீ புரிஞ்சுக்கணும் தேனுகா... நம் கல்யாணங்கள் எல்லாம் முழுசும் புரிஞ்ச தம்பதி களிடையேவா நடக்குது?''

இவளுக்கு நிமிரத் திராணியில்லை.

குளிர்ந்தஅவள் தலையை தன் மார்போடு சேர்த்தணைத் தான்.

அந்த வெம்மை... காதலின் இதம் அவளைச் சுகப் படுத்தியது. ''உன்னை நடிகையாய் பார்க்கவும் நான் பிரியப்படலை... ஆனால் பெரியப்பாவிடமிருந்து கற்றது - 'உன் துணையின் திறமைகளை உலகுக்குக் காட்டு' என்பதாயிற்றே... ஏதோ சரித்திரப் பட நாயகியாய் அடுத்து நீ நடிக்கப் போவதாய்...?''

''கேட்டாங்க... அதற்கு வேற ஹீரோயின் கிடைக்கும். ஆனா எனக்கு இப்படி ஒரு ஹீரோ இனி கிடைக்க மாட்டாரே?'' சிரித்தவளை இறுக்கி அவளது உச்சந்தலையில் முத்தமிட்டான்.

உச்சியில் சந்தோஷப் பொறிகள் கிளம்பி உடலெங்கும் தெறித்தது அவனுக்குள்.

''உன் வசனகர்த்தா டச் போகலை மேடம்... நீ நடிப்பதோடு கூட எழுதவும் வேணுங்கறது என் விருப்பம்... நம் கல்யாணத்துக்குப் பிறகும்...''

அவன் அறிய மாட்டான் என்ற துணிவில் முகம் பதிந்தி அவன் மார்பில் தன் உதடுகளைக் குவித்து அழுத்தினாள்...

மனதின் தாங்கொண்ணா மகிழ்வை வெளிப்படு வேண்டியிருந்ததே...!

''தேனுகா, கொடுக்கறதை முதல்ல கன்னத்தில் இல் என் நெற்றியிலிருந்தாலாவது ஆரம்பிச்சிருக்கலாம்...'' - கே செய்தான்.

''இதெல்லாம் சரியாய் தெரிஞ்சிடுது... நான் இருப லட்சம் கேட்டேன்ங்கறதை மட்டும் நம்பிடறதா?'' ஊடினாள். 'இருபது போதுமா'ன்னு என்னிடம் மா கேட்டாங்க... பணக்காரப் பெண் என்கிறதால் அ லட்சம்னு நினைச்சுட்டாங்களோ யமுனா?''

''அப்படியே வைத்தாலும் பெரியப்பா மோதிரத்தை வி மெனக்கெடறதா ஏன் சொல்லணும்?''

''நீங்க பணத்துக்காய் அலையறது தாளாமல் மாமா அப்ப ஒரு முயற்சியில் இறங்கியிருக்கக் கூடும்... அவருக் உறவுன்னு இருப்பது நீங்க மட்டும்தானே?''

''எனக்கும் அவர்தான் தேனு... சிறு வயசிலேயே எம்மே பாசம் காட்டினவர்... அதனால் அவர் மனம் வாட கூடாதுன்னு நினைப்பார்?''

அவன் பிடியிலிருந்து சற்று ஒதுங்கிக் கேட்டாள்.

''சந்தோஷப்படுவார்... ஆனா இனி யாருக்காக என்றாலும், எந்நிலையிலும் நான் உன்னைவிட மாட்டேன் தேனுகா... உன்னை சந்தேகிச்சதுக்கு நான் தனியே இத்தனை மாசங்கள் மரு கியதே போதும்... ஒரு வாரத்தில் கல்யாணத்தை வச்சிடலாமா?''

''இன்னும் ஏழு நாளா?'' சின்ன பெருமூச்சுடன் மறுபடி தன்னவன் மார்பில் ஒண்டிக் கொண்டாள் தேனுகா.

# ஆலமரத்துக் கிளிகள்



1

அலுமினியத் தட்டில் ஆறு செங்கல்கள் வைக்கப் பட்டன. வெயில் தாங்காமல் வழிந்த வியர்வையை வழித்த அந்தச் சித்தாள் அலுத்தாள்.

''ந்தா நன்நாலாய் வை போதும்னு சொன்னேன்லை?''

''இதுக்கெல்லாம் சட்டமாப் பேசு. ஆனா கதை கேட்க உக்காந்தா வாயில கொசுவென்ன தும்பிகூட போவும்...''

மேற்பார்வைக்காக நின்ற மேஸ்திரி அதட்ட, அலரிப் பாட்டி சிரித்தாள்.

''ஆமப்பா, கதை பேசுவம், கேப்போம்... அதுவும் விஜய விலாஸை மராமத்து பண்ணி எடுத்துக் கட்டற வேலையில்ல நடக்குது? வாயை மூடிட்டா சுமப்போம்? எம்புட்டு கதை நடந்திருக்குது இங்க?''

''போதுங் கிழவி... சாப்பாட்டு நேரத்துல தொட்டுக்க வச்சிக்கோ உன் கதைய...''

என்ற மேஸ்திரி மேலும் ஒரு துண்டு புகையிலையை வாயில் அதக்கிக் கொண்டு நகர்ந்தான். வேலை தொடர்ந்தது.

கட்டிடத்தின் மேலே செங்கலுக்கான சாந்தைப் பூசிக் கொண்டிருந்த இரு இளவட்டங்கள் தொடர்ந்து பேசினார்கள்.

''இந்த மேட்டுல இருந்து பார்க்க, நம்ப ஊரு கூட தெரியுதுல்ல ராசு?''

''ம்ம்... இதுக்குப் பேரே ஆலம் மேடுதான்ல?''

''பொருத்தமான பேருதான். இந்த வூட்டுக்கு ரெண்டுபக்கமும் எத்தனாம் பெரிய ஆலமரங்க?''

சடைசடையாய் தலையை விரித்து விட்டிருந்த ராட்சதர்கள் போல நின்ற மரங்களை வியப்பாய்ப் பார்த்தான்.

''நடுவே நிக்குற இந்த வீடும் பெரிசுதான்...''

''விஜய விலாஸு - அமர்க்களமான பேருல்ல?''

''மூணு தலைமுறையா இங்க பெரிய குடும்பம் வாழ்ந்திருக்குப்பா - ஆனா கடைசி ஆளு விஜயநாதன்கறவர் கல்யாணங் கட்டிக்கலை. அவருக்கு உடம்பிறந்தது ஒரு அக்கா, ஒரு தங்கச்சி.''

''அவுக பேரும் விஜயன்னுதானே... வருமாம்?''

''ஆமாம்வ. அக்கா, தங்கச்சியை பெரிய மிராசு குடும்பத்து அண்ணந் தம்பிக்கு கட்டிக் கொடுத்தாவ. ஆனா நிலத்தகராறுல இந்த அண்ணந்தம்பி ரெண்டு பேரையுமே வெட்டிட, பொட்டை அழிச்சுப்பிட்டு இந்த அக்காவும் தங்கச்சியும் ஆளுக்கு, ஒரு பொட்டைப் பிள்ளையோட பிறந்த வீட்டுக்கே வந்துட்டாவளாம்.''

சிமெண்ட்டை அளைந்தபடி பரிதாபப்பட்டான் அடுத்தவன்.

''அப்ப நல்லபடி வாழ்ந்த வீடில்லை இது...''



''ம்ம்... கூடப் பிறந்ததுங்க மூளியாய் வந்ததுல மனசு கசந்த விஜயநாதனும் ஒண்டியாவே காலத்தை ஓட்டிட்டாராம்.''

''ஆக அப்ப இந்த வீடு வேற கைக்குப் போயிடுச்சா?''

''ஆதாம்ல இல்லை - மூத்த அம்மாவோட மகள் இந்த ஊரிலேயே வாக்கப்பட்டிருக்காம்... நாம் பாத்ததில்லை...''

''பின்ன எப்படி தெரியும் - நம்ப அலரிப் பாட்டி சொல்லுச்சா?''

''பின்னே? இளையவக மகள் படிக்கப் பட்டணத்துக்குப் போயி, அங்க யாரோ ஒரு கிழவருக்கு மூணாந்தாரமாய் வாக்கப்பட்டிருச்சாம்...''

''அட கோராமையே.''

''காசுக்காகக் கட்டியிருக்கும் போல... இப்ப அந்தப் பொண்ணுதான் இந்த வீட்டை மீட்டு, புதுப்பிக்குதாம்.''

''அதாவது விஜய நாதருடைய தம்பிப் பொண்ணு? இந்த ஆலம்மேட்டு பட்டிக் காட்டுல வந்து இப்படி மெனக்கெடாட்டி என்ன? ம்ப்ச்... மனுஷ மனசு நமக்குப் புரிஞ்சாத்தான?''

என்றான் ஒரு கரண்டி சாந்தை வீசி லாவகமாய் மெழுகியபடி.

மதியம் மரங்களுக்குக் கீழே சித்தாள்கள் வெயிலிலும் வியர்வையிலுமாய் காய்ந்த உடல்களைச் சற்று இளைப் பாற்றினார்கள்.

தூக்குச் சட்டிகள் திறந்ததும் கலவையான உணவின் மணம் பரவியது. பருப்பு, புளி, மோர் இவற்றின் நெடி நாக்கை நிமிண்ட, சோற்றை உருட்டியபடி அவசரப்பட்டாள் ஒரு குமரி.

''பாட்டி, அப்புறம் கதையச் சொல்லு.''

''இருடி. முதல்ல பசிக்கு நாலு கவளத்த உள்ளேத் தள்ளுவம்...''

''விஜயநாதனுடைய பாட்டனார் கட்டினது இந்த வூடு. பிறவு சுத்து சுவரு, கிணறு, மண்டபம்னு மாளிகையாய் எடுத்துக் கட்டினவரு அவரு அப்பா.''

''நாலைஞ்சு வருஷமாப் பூட்டியே கிடந்த வூட்டை வாங்கிப் புதுப்பிச்சது அவரு தங்கச்சி மவளாமே? பேரென்ன சொன்னேத்தா - விஜி... விஜுலா?''

''அந்தக் குட்டிய நான் இருபது வருஷத்துக்கு முன்ன சுமந்திருக்கேன் - ரெண்டு மூணு வயசுல பூச்செண்டாட்டம் இருப்பா...''

''அப்ப இருவது, இருவத்து மூணு வயசிருக்குமா... ஐயோ... இம்புட்டு இளைய பிள்ளையா மூணாம் தாரமா வாக்கப்பட்டிருச்சு?''

''அதெல்லாம் காதுல விளுந்ததுடி - நிசம் என்னவோ? பரம்பரை வீட்டை மீட்கோணும், நிமுத்திக் கட்டணும்னு ஒரு பொட்டப் புள்ள ஆசைப்படறது, மெனக்கெடறது பெருசுல்ல?''

''ஆண் வாரிசுதான் இல்லையே... பிறவு பொம்பளைதான பொறுப்பு ஏத்துக்கணும்?''

பச்சை மிளகாய் நுனியை நெடுக்கென கடித்து, சுள்ளென்ற அதன் காரத்தை அனுபவித்து உள்ளிறக்கிய கிழவி, சற்று குனிந்து குரலையும் தணித்தாள் -

''ஆண் வாரிசெல்லாம் இருக்குதுடி. என்ன ஒண்ணு... நாந்தான் வாரிசுன்னு அந்தப் பிள்ளை மார்தட்டி சொல்லிக்க முடியாது.''



கூட்டிய சோற்றைவிட இந்த விவரம் சுவாரஸ்யமாய் இருக்க, மற்றவர்களும் கேட்க வாகாய் சற்று குனிந்தார்கள்.

''பய தம்மூருலதான் இருக்கான்.''

''அதாரு பாட்டி?''

''அவனைக் கண்டதும் உங்க ஒவ்வொருத்திக்கும் நெஞ்சும் கண்ணும் படபடங்கும். மூஞ்சு சிவக்க சனசனப்பீங்க.''

''யாரு விநோதனா?''

''அப்படிப் போடு. இந்த விடுகதையப் 'பட்'டுன்னு அவுத்துட்டியே... கூறான செறுக்கி!''

''அதெப்படி? விஜயநாதங் கலியாணம் கட்டிக்கலைன்னே பிறவு விநோதன்தான் இதுக்கான வாரிசுன்னா...?''

''கூட பிறந்தவுக ரெண்டும் அமங்கலியா வூடு திரும்பவும் அவரு ஒண்டியா நின்னுட்டாரு. கலியாணங் காட்சி இல்லையின்னேன்... தவிர குழந்தக் குட்டி இல்லேன்னேனா?'' நக்கலாய் இழுத்தாள் கிழவி.

பாட்டியின் கதைக்கு ஊர் முழுக்க ரசிகர்கள் இருந்ததற்கான காரணம் இது.

ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொன்றாய் சுவாரஸ்யங்களை தத்தளிய கட்டி வைப்பாள் - எல்லாவற்றையும் மொத்தமாய் அவிழ்த்து பரத்தி விடுவதில்லை.

''எந்தங்கச்சியோட ஓடம் படிச்சவ சந்திரா - அவதான் விநோதனைப் பெத்தவ. அவ அப்பன் விவசாயி - சந்திராவுக்கு படிப்பு வரவும் டவுனில போயி படிச்சா... கூடவே ஸ்டைலும் கத்துக்கிட்டா... கலர் கலராய் ரிப்பனு, பாசி நெக்லஸ்னு இந்தக் காட்டுல அலைஞ்சா, பயலுவ சும்மா விடுவாளுவளா?''

உணவை மெல்லும் சத்தம் தவிர வேறு மூச்சில்லை.

இடையே பிறர் பேசினாலும், பாட்டிக்குப் பிடிக்காது.

'ஒண்ணு நீ பேசு இல்ல நானு' என்பாள் கறாராய்.

''பொண்ணைப் பயலுவ மொய்க்கது பார்த்து அஞ்சிய அப்பன் சந்திராவுக்கு ஒருத்தனைப் பார்த்து நிச்சயம் பண்ணிட்டாரு. ஓரளவு நிலம் இருந்தாலும் படிப்பு, ஸ்டைலெல்லாம் அந்த பயபுள்ள. ஆக இந்த சந்திராவுக்கு மனசு ஒப்பலை... அதுக்கு கலர் கலராக் கனா! அதிலே விஜயநாதரு வர ஆரம்பிச்சாரு...!'

2

''டிரைவர், ஏ.ஸி.யை அணைச்சிடுங்க. அசோக், ஹோப் யூ டோன்ட் மைன்ட்.''

என்றாள் விஜுலா.

''இல்லை... ஆனா வெளியே புழுதிக் காற்று...''

''இதை அனுபவிக்கத்தானே இந்தப் பயணம்?'' புன்னகைத்தாள். அவள் விழிகள் ஆவலுடன் வெளியே பார்த்தன. முகத்தைக் காற்றுக்குத் தந்து வந்து மோதிய பொடி தூசியையும் ரசித்தாள்.

பட்டணத்தில் நாய்கள் கூட கடற்கரைக் காற்றை காரில் இதே போல தலையை வெளியே நீட்டி அனுபவித்துப் போவதைப் பார்த்ததிலிருந்து சொந்த ஊருக்கு இப்படி திரும்ப வேண்டுமென்ற ஆசை!

கல்லூரிப் படிப்பிற்காய் பட்டணம் போன தனக்கு வாழ்க்கை எப்படியெல்லாம் அனுபவங்களைத் தந்து விட்டது...!



ஆலம்பேட்டில் கழித்த 17 வருஷங்கள் - வசந்த காலம்.

[illegible] விசாலமான வீடு.

கண்ணாய்ப் பேண பெற்றவள் - கண்டிப்போடு கனிவு காட்டும் மாமா விஜயநாதன் - சண்டை பிடித்து கலகலப்பூட்ட ஒன்றுவிட்ட அக்கா குமாரி...

விஸ்தாரமான தோட்டம் -

வீட்டின் முன்னே நிற்கும் ஜோடி ஆலமரங்கள் அதன் கிளைகளில் சதா பேசும் பச்சைக் கிளி கூட்டம்.

அதன் விழுதுகளில் தொங்கி ஆடிய குதூகலம் தனி பம்ப் செட் குளியல், விறகடுப்பு சமையல், வீடு பூரா நிறைந்திருக்கும் கடலை, தேங்காய், பழம், புளி...

'பெரிய வீட்டுப் பாப்பா' என்று சுற்று வட்டாரத்தில் சிறப்பு... முழுதாய் ஆறு ஆண்டுகளாயிற்று அதையெல்லாம் அனுபவித்து...

விஜய விலாசத்தின் ஏலம் கூட ஊர்த்தலைவர் முன்னிலையில் குற்றாலத்தில்தான் நடந்தது.

அங்கு... அன்றுதான் அவனை... ஆறு ஆண்டுகளுக்குப் பின் பார்த்தது - விநோதன் மாறியிருந்தான்.

பால் அடுப்பில் சுண்ட சுண்ட கெட்டித்து, ருசியும் கூடுவது போலவோ ஆண்கள்...?

18 வயது இளைஞனாய் பார்த்ததை விட இப்போது கம்பீரம் கூடியிருந்தது.

மார்பும் தோளும் அகன்று திரண்டிருந்தன.

ஆனால் முகத்தில் மட்டும் முன்பிருந்த கனி, கலகலப்பு இல்லை.

இறுகிக் கடுத்திருந்தது.

ஆனால் தன்னைப் பார்த்தபோது அந்தக் கண்களின் வெளிச்சத்தில்...

இவளுக்குக் கூசியது.

முன்பும் அவன் கண்கள் இவளைக் கண்டதும் பளபளக்கும். அதற்குச் சற்றும் சளையாத சிரிப்பும்தான்.

'விஜூ' என்று எத்தனை பாசமாய் அழைப்பான். இவர்கள் இருவரோடு எப்போதும் ஒன்றுவிட்ட அக்கா விஜய குமாரியும் உண்டு. விளையாட்டில் பெண்களுக்கு விட்டுக் கொடுத்து ஒதுங்கி விடுவான். விஜூலாவையே பார்த்துக் கொண்டிருந்தால் போதும் - தவிர பொறுமையாய் அவள் பாடங்களையும் தெளிவாக்குவான்.

விஜூலா நன்கு படிக்க, அவளது மாமா அவளை உயர்நிலைப் பள்ளிப் படிப்பிற்கு நெல்லை அனுப்ப நினைத்து, கூடவே மூத்தவள் விஜயகுமாரியைச் சீண்டினார்.

''குமாரி, உயரத்திலே நீ விஜூவை விட மட்டு, அதே போல புத்தியிலேயுமா?'' என்று.

அதிலும் ஓரிருமுறை வகுப்பைத் தாண்ட முடியாத தோல்வி மூத்தவளுக்கு படிப்பை பாகற்காயாக்கி விட்டது.

''இப்ப நான் படிச்சு என்னத்தை முறிக்கணும்?'' - கசந்தாள்.

''ஏடீ, இப்பல்லாம் கிராமத்துப் பெண்டுக எம்.ஏ. என்ஜினியருன்னு படிச்சு வேலைக்குப் போவேன்னு நிக்குதுக - நீயான்னா ஸ்கூலு முடிக்கவே சுணங்குத?''

''போம்மா... நா உன்னைவிட ருசியாகக் குழம்பு வைப்பேன்.''



''அதுனாலே?''

''குடித்தனம் பண்ணா அது போதும் - அதுல டெஸ்ட் வச்சா நான் பெஸ்ட் மார்க் வாங்கிடுவேன்ல?''

அன்று விஜூலா புன்னகையுடன் பெரியம்மாவிற்கும் அவளது மகளுக்குமான இந்த சம்பாஷணையைக் கேட்டபடி ரெக்கார்ட் நோட்டில் படம் வரைந்து கொண்டிருந்தாள்.

குமாரிக்கும் இவளுக்கும் மூன்று வயது வித்தியாசம்.

குணத்தில் பற்பல வித்தியாசங்கள்.

''முதல்ல பிளஸ் டூவை முடிக்கற வழியப் பாரு. குழம்பு வைப்பாளாம்ல? நீ குடித்தனம் நடத்த இன்னும் மூணு வருஷம் போவணும்.''

''நான் அம்புட்டு நாளெல்லாம் காத்திருக்க முடியாது'' வெடுக்கென வந்தது பதில்!

கேட்டுக் கொண்டிருந்த விஜூக்கே சற்று வெட்கமாகிப் போனது.

பிறகு அதிர்ச்சியும் வந்தது.

''அத்தானும் காத்திருக்க மாட்டார் - முதல்ல எங்கக் கல்யாணத்தை முடிம்மா.''

''த்தூ கூச்சங்கெட்ட கழுத.. யாருடி அத்தான்? அந்த விநோதனா? ஆக நீங்க அவனோட பேசிப் பழகறதா பண்ணையாட்கள் சொன்னது நிஜந்தான்... ம்ம்? அவன் பிறப்பே விநோதம்ங்கறதாலத்தானே அவன் அம்மை அந்தப் பேரை மகனுக்கு வச்சிருக்கா?''

''எல்லாரும் சொல்லியிருக்காரு - குடும்பத்துல சண்டைன்னு அவங்களை ஒதுக்கிட்டீங்கன்னு. மாமாக்குப் பிறந்தவருதான எனக்கு முறைப் பையன்?'' சவுரி கொண்டு இணைத்த நீண்ட

பின்னலை முன்னும் பின்னுமாய் அலட்டலாய் அசைத்த படியே பேசினாள் குமாரி.

''யாரு சொன்னா? உம்மாமா அதான் எங்கண்ணன், அந்த சந்திரா கழுத்துல தாலியோ மாலையோ ஏத்தலை... இந்த வீட்டில அவளோட குடித்தனமும் பண்ணலை - அவளா சொல்லிக்கறா இவுருக்குத்தான் பெத்தேன்னு - அந்தப் பயலும் தான்தான் வாரிசுன்னு நெஞ்சை நிமிர்த்திட்டு திரியறானாக்கும்? உங்கிட்ட, விவரம் சொல்லாதது எந்தப்பு - இனி அவங்கிட்ட பேசக் கூடாது.''

பெரியம்மா பொரிய விஜுலாவிற்குள் தேள் கடியாய் வேதனையும் விஷமும் பரவின.

அப்படியானால் விநோதன் தங்களுக்கு உறவா இல்லையா?

இப்படி ஒரு நெருடல் இருப்பதால்தான் விநோதனும் மறைவிடங்களிலேயே தங்களை சந்தித்தானா?

''நான் உங்க அத்தான்'' என்று சிறு வயதிலேயே வந்து ஒட்டிப் பழகியதெல்லாம்...

அதனால்தான் வீட்டிற்கு வந்ததில்லை - உண்டு உறவாடியதில்லை.

உறவில் விரிசல் என்று இவர்கள் நினைத்திருக்க, உறவே இல்லை என்கிறாளே பெரியம்மா?

அத்தானுக்கும் தனக்கும் உயரமும் அழகும் ஒத்துப் போனது போலவே குணமும் ஒத்துப் போக, விஜுலாவிற்கு அவனிடம் அசாத்திய ஈர்ப்பு.

அவனும், தான் அவனுக்கு விசேஷமானவள் என்பதைத் தன் பார்வை, பேச்சால் தெரியப் படுத்தியிருந்தான்.



தகப்பன் முகம் அறியாத, உடன் பிறந்த ஆண்களும் இல்லாதவளுக்கு அவன் எல்லாமுமாய் இருந்தான்.

பரஸ்பர ஈர்ப்பினால் நெருங்கியிருந்தவர்களுக்கு இடையே...

அக்கா குமாரிக்கு அத்தானை கட்டிக் கொள்ளுமளவு நேசமா...? தன்னையும் அறியாமலேயே தன்னதாய் தன்னுள் பொத்தி வைத்திருந்த தன்னவனை, தமக்கை பறித்துக் கொண்டதில் அலமலந்து போனாள் தங்கை.

அது கல்யாணம் பற்றியெல்லாம் சிந்தியாத பருவம்.

இனந்தெரியாத லஜ்ஜையும் விநோதனைக் கண்டதில் உவகையும் மட்டுமே உணர்ந்த வயது.

ஆனால் தன் அத்தானை பொம்மை போல அக்கா பிடுங்கிக் கொள்ள மிகவும் வலித்தது.

இனி அத்தானை பற்றி அடிக்கடி நினைக்காமல், அவனுக் கான பலகாரங்களை மறைத்து எடுக்காமல், அவனருகே பூரிக்காமல் இருக்க வேண்டுமே என்ற நினைப்பில் நெஞ்சு பதைத்தது.

இரு பெண்கள் அவனைத் தேடிப் போய் விளையாடி, பேசி களித்திருக்க, தான் மட்டுமே எப்படி அவனை உரிமைக் கொண்டாட முடியும்?

மூத்தவள் அதிக உரிமை எடுத்துக் கொண்டாள்...

இப்படி தன்னையே தேற்ற முயன்றாள் விஜுலா.

ஆனால் மனம் தேறாமல் காந்தியது.

அதனால்தான் படிப்பிற்காக மாமா அவளை வெளியூர் அனுப்ப நினைத்தபோது, ஆர்வமாய் சம்மதித்தாள்.

குமாரி, விநோதனை விரும்பும் விஷயம் மாமாவின் காதை எட்டியபோது கிளம்பிய அவரது ரௌத்திர தாண்டவத்தை இப்போது நினைத்தாலும் வயிறு நடுங்குகிறது.

அமரிக்கையாய் பேசும் மாமா அன்று வீட்டின் ஜன்னல், கதவுகளைச் சாத்தி விட்டு கத்தித் தீர்த்தார்.

''என்னது அந்தப் பய உனக்கு முறையா? யாரு வச்ச முறை அது? முறை கெட்டு பிறந்தவனுக்காக ஏங்கிச் சீரழியப் போறியா? உங்கிட்ட பசப்பிட்டு வேற ஒருத்தியோட இழைஞ்சிட்டு இருப்பான் அந்தக் குடும்பம் அப்படி... உம் புத்தி இந்தளவுக்கா மட்டு?

எடீ... அவன் எதுக்காக உன்னைக் கட்ட நினைக்கறாம் தெரியுமில்ல... இந்த வீட்டுக்காக. ஆலம்மேட்டுல மாளிகையாட்டம் நிக்குற இந்த சொத்துக்காக. எம்மவன்னு சொல்லி அவனால இதை அடைய முடியல... உன்னைக் கட்டிக் குடியேறிடலாம்ற திட்டம். மூத்தவ மூலம் சொத்தைப் பிடுங்கிடணும்ற வெறி... அதெல்லாம் நடக்காது... இத்தனை நாளாய் எங்கே அந்த வெறியனைப் பார்த்தியோ அங்கேயோ போய் அவன்ட்ட சொல்லு -''

''அடேய் உன் திட்டமெல்லாம் வட்டமாயிடுச்சு - மூஞ்சில கரிதான். எனக்குத் தாலி கட்டினாலும் விஜய விலாஸு உன்னுதில்ல. அது கடனுல மூழ்கிடுச்சு'ன்னு சொல்லுடீ... போ.''

அன்று அம்மா பெரியம்மாவின் முகங்களும் அதிர்ச்சியில் கறுத்தன.

''ஜபர்தஸ்தாய் வாழ்ந்தோமுல்ல... வானம் பொய்ச்சாலும் ராஜா போல திரிஞ்சோமுல்ல...? எல்லாம் இதும் மேல வாங்கின கடனு...''



தேக்கு தூணைத் தட்டியபடி சீறினார்.

மற்றவர்கள் திகைக்க, காதலில் மூழ்கியிருந்த குமாரி மட்டும் எதையும் சட்டை செய்து கொள்ளவில்லை!

3

மறுநாள் மதியம் வானம் சற்று இருட்டிக் கொண்டு வர, கட்டுமான வேலையை விரைந்து நடத்திய பணியாளர்கள் சிறு தூறலில், தூக்குப் போணியுடன் ஒதுங்கி விட்டார்கள்.

இளம்பெண் ஒருத்தி ஆவலாய் ஆரம்பித்தாள் -

''பாட்டி, விநோதன் சாரு பற்றி சொல்லிட்டிருந்தே...''

''அப்ப அவருக்கும் இந்த வீட்டுல உரிமை உண்டுங்கற?''

''சத்தியாவுக்கு விஜயநாதரு மூலமாப் பிறந்தவந்தா அந்தத் தம்பி. ஆனா தாய்க்கு தாலி இல்லியேடீ. தவிர கடனுல மூழ்கிட்ட வீட்டை ரெட்டியாருக்கு வித்துட்டாரு பெரிய [illegible] இப்ப அதை அவரு தங்கச்சி மவ மீட்டுருக்கு.''

நடு வயதுக்காரி ஒருத்தி இடைபுகுந்தாள்.

''விநோதனுக்கு இந்த வீடு மேல நோக்கம் உண்டு - ஓரளவு [illegible] இருக்காரு...? தானே வாங்கியிருக்கலாம்ல?''

''ரெண்டு ரெண்டரை லட்சம் பெறுமான இதை அஞ்சு லட்சம் விலை கொடுத்துல்ல மீட்டுருக்காம் விஜ''லாப் பொண்ணு.''

[illegible] வாய்கள் தொய்ந்து திறந்தன.

''அடேங்கப்பா.''

''பாவம் விநோதன் தம்பியோட கல்யாணம் அத்தனை [illegible] ஊரில் பேச்சு...''

''ஆங்... அது தனிக் கதை.''

''அவரு கல்யாணம் ஆறு வருஷத்துக்கு முன்னே நடந்துச்சாமே... அப்ப நான் உக்காரவேயில்லை... இல்ல அவரை எப்படியானும் வளைச்சுப் போட்டுருப்பேன்.''

சவடாலடித்த சின்னவளை அலரிப்பாட்டி அதட்டினாள்.

''ஆசைதான்டீ... அவனுக்கான முறைப்பொண்ணுங்க ரெண்டும் லட்டும் ஜாங்கிரியாட்டம் இருக்க, சவ்வு மிட்டாயாட்டம் சளிஞ்ச உங்கிட்ட தான் மயங்கி வராரு...''

''தம்பி கட்டினது முறைப் பொண்ணுகளில் மூத்தவளை... இல்லியாக்கா?''

''சின்னதுக்கும் அவனுக்கும் அம்சமான பொருத்தம்...''

இளைய பெண்கள் பொறாமைக் கண்களுடன் கேட்டிருந்தனர். அவர்களுக்கு விநோதன் எட்ட நின்று மட்டுமே பார்க்கக் கூடிய எட்டாக் கனி. ஆனால் இப்படி உரிமை உரசலோடு பேசுவதில் ஒரு இன்பம்.

''ஜாடியும் மூடியும் போல பொருத்தம்னாலும் மூத்த வளுக்கு அத்தும்மேல் வெறியான ஆசை... தவிர அவளுக்கு ஆசை வந்தளவு படிப்பு வரலை...''

''ஆக கல்யாணங் கட்டி அனுப்பிட்டாங்களா?''

''அதுவும் அப்படி ஒண்ணும் சுளுவாய் நடந்திடலை. பெரியவருக்கு இதில் மனசே இல்லை.''

''அவருக்குப் பிறந்த பயலை, அக்கா மகளுக்குக் கட்டித்தர என்ன சுணக்கம்?''

''அது தனிக் கதைடீ... சிங்காரமாய் சுற்றி வந்த சந்திராவை அவரும் ஆசைப்பட்டாருதான். தொட்டுப் பழகற வரைக்குமான நெருக்கம். வீம்பாய் சந்திராவோட அப்பன்



தனக்கேத்த ஒரு மாப்பிள்ளையைத் தேடி பிடிச்சுட்டான்... முறைப்படியாய் பரிசமும் போட்டாச்சு. ஆனா இவ.. அதான் சந்திரா, வந்த பயல்ட்ட பிறவு விவரத்த சொல்லிட்டா...''

''தான் வேற ஒருத்தரோட சிநேகமாயிருக்கறதை?''

''மாசமாயிருக்கறதையும் சொல்லிட்டா...''

''ஐயோ... அப்படி போவுதா கதை?''

''அந்தக் காலத்துல நடக்காத சிலுசிலுப்பா? ஒண்ணு மூடி மறைச்சிருவாங்க. அல்லது கலைச்சிருவாங்க... ஆனா சந்திரா துணிஞ்சவ. ஓரளவு படிச்சவ - இது ரெண்டையுமே செய்யலை. நேரே அவனிடம் சொல்ல, பரிசம் போட்ட பயல் இவ கர்ப்பமாயிருக்கறதை வெளியே பரப்பிட்டான்... பரிசப் பேச்சு நடந்தப்ப ஊரை விட்டே போன விஜயநாதரு மனசு தேறி, மாறி ஊரு திரும்பினப்போ சந்திரா வயிறு தொழுக்கட்டையாட்டம் வீங்கிருக்கு.''

''அதாவது... இவரு... விநோதன் சாரு?''

''வயித்துக்குள்ளே அவந்தான்டி.. அலையறவனே.. பரிசத்தன்போது புதுசு கட்டி சிங்காரமாய் நின்ன சந்திரா அவனுக்கு தரிச்சதுதான் இந்தக் குட்டின்னுட்டாரு விஜயநாதன்...''

''அடப் பாவமே!''

''அவருட்ட தான் முழுவாம இருந்ததைப் பத்தி சந்திரா ஏதும் சொல்லலையாம் - தன்னை மீறி என்ன நடந்திடும்ன்ற தைரியத்தில் அவ புதுசு கட்டி பரிசத்துக்கு நின்னிருக்கா... அந்த சேதி காதுல விழுந்த பெரியவருக்கு ரோஷந் தாங்காம ஓடிப் போயிட்டாரு போல. திரும்ப வந்தா இவ கர்ப்பமாய் நிக்கறா. அது அடுத்தவனுக்கு பிறந்ததுங்கவும் சந்திராவுக்குப் பொத்துக்கிட்டது ஆங்காரம்.''

''நியாயந்தான?'' மற்ற பெண்களும் ஒத்துக் கொண்டனர். ''எவனும் வேண்டாம், சுமந்து பெத்தது. போதுங்கற முடிவுல மவனை வளர்த்தெடுத்தா - ஆனாலும் உள்ளே 'ஏமாத்திட்டானே, அவமானம் பண்ணிட்டானே'ங்கறே ஆங்காரத் தீ எரியுமில்ல? ஆக மவன்ட்ட,

''டேய், அதுதான், உவ்வீடு - நீ அதை வாங்கி அதுல வாழ்ந்து அனுபவிக்கணும்னு'' உசுப்பேத்துவா.''

''அத்தனை செய்தும் என்ன - மூத்தவளைக் கல்யாணங் கட்டியும் கூட வீடு விநோதன் கைக்கு வரலியே...''

''விதிங்கறது இருக்குடீ செம்பகம் மனுஷன் போடற திட்டமெல்லாம் மசிஞ்சு வந்துடாது. மேலே இருக்கவன் போடற தாளத்துக்குத்தான் நாம ஆடணும்.''

ஆலம்மேட்டை நெருங்கிக் கொண்டிருந்தார்கள். அயல்நாட்டுக்கு வழுக்கு சாலைகளுக்காய் உருவான அந்த உயர்ரக கார் அந்த மண் சாலையில் தடுமாறியது.

அதிலிருந்த விஜுலா அலரி பாட்டியின் அதே கருத்தைத்தான் தானும் அசை போட்டுக் கொண்டிருந்தாள்.

மதி முக்கால் என்பதெல்லாம் வெறும் மழுப்பலோ? ஏதும் புரியாத வயதிலேயே ஏன் தனக்கு விநோதன் மீது அத்தனை ஈர்ப்பு?

எட்டு வயதேனும் இளைய தன்னை ஏன் அவனும் அத்தனைப் பாசமாய் போற்றினான்?

சிறுக சிறுக எழும்பிய இவர்களது, நேச வீடு ஒரே நிமிஷத்தில் -

''நான் அத்தானை கட்டிக்கணும்'' என்று குமாரி சொல்ல ஏன் இடிந்தது? குமாரியும் ஏன் விநோதனையே நேசித்தாள்?



அதெல்லாவற்றையும் விட அத்தான் தன் கனிவு, கண்ணியம் எல்லாவற்றையும் விட்டு அப்படி கீழ்த்தரமாய் நடந்து கொண்டது ஏன்?

சொத்துக்காகத்தானே குமாரியின் கைப்பிடித்தான்?

ஹூம்... இதெல்லாம் ஆணின் வக்கிரம்... சதிகள்...

இதற்கு விதியை பழிப்பானேன்?

ஆறேழு வருஷங்களுக்கு முந்தைய நடப்புக்களை நினைத்ததிலும் கூட அவளுக்குள் உஷ்ணமேறி மூச்சிரைத்தது.

ச்சே... அத்தனை கேவலமானவனையா நேசித்தேன்... கூசியது. 16 வயதான தனக்கு அன்று கண்ணால் மட்டும் காதல் புரிபவன், மூத்தவள் குமாரியிடம் உடம்பால் காதல் செய்திருக்கிறான்... அதைக் காதல் என முடியாது... வெறும் காமம்... காமாந்தகன்.

குமாரி தன் ஆசையை எளிதாகச் சொல்லிவிட்டாள்.

ஆனால் அத்தான் குமாரியை விரும்புவதாய் தான் நினைக்கவேயில்லையே. அக்கா அத்தானின் அன்பு கிடைக்காமல் ஏமாந்துவிடக் கூடாது என்ற தவிப்புதான் இருந்தது...

இந்தச் சிக்கல் எப்படி அவிழும் என்று குழம்பியவளுக்கு அந்த நவம்பர் மாதம் மழை இரவில் விடை வந்தது.

அன்று மாடியின் இறுதிக்கு ஓரமாயுள்ள அறையில் படித்துக் கொண்டிருந்தாள் விஜுலா. கூரையில் மழையில் தடதடப்பை ரசித்தபடி யாரோ தட தட வென ஓடியும் வந்த சத்தத்தில் பதறி திரும்பியவளின் எதிரே வந்து நின்றது குமாரிதான் -

சற்றே கலைந்த கூந்தலும் மேலாடையுமாய்...

''என்னக்கா... என்னாச்சு?''

''ஐயோ... பயம்மாருக்கு விஜு.''

''என்ன பயம்? யாரு?''

''அவருதான்...'' கூச்சத்துடன் குனிந்து முணங்கினாள். இப்போது யார் என்று கேட்கும் துணிவற்றுப் போனது இளையவளுக்கு.

''அத்தான் நம்ப தோட்டப் பக்கமாய் நின்னுட்டிருந்தார். இந்த பக்கம் வர மாட்டாரே என்ன விஷயம்னு கிட்டே போனேன். பேச்சுக் கொடுக்கவும் மழை வந்துடுச்சு... அங்க இருந்த கொட்டகையில் ஒதுங்குனோம்...''

''அங்க அவர்... என்னைக் கட்டிக்கிட்டாரு...''

மேலாடையை அவள் இழுத்துப் போர்த்த இவளுக்குக் கூசியது.

''யப்பா.. முரட்டுப் பிடி... மாமாவுக்குத் தெரிஞ்சுட்டா... அதான் அவரிட்டேருந்து விடுபட்டு வர்றதுக்குள்ள... பயந்துட்டேன் விஜு...''

உலர்ந்த தொண்டையிலிருந்து இவளுக்கு வார்த்தைகள் வரவில்லை.

''ஈர டிரஸ்ஸை மாத்தணும்... இல்ல அம்மா நூறு கேள்வி கேக்கும்.'' என்ற குமாரி விலகிய பின்பும் இவள் விதிர்த்தே நின்றாள். ஆனால் மனம் தமக்கையை முழுவதுமாய் நம்பவில்லை. அன்று விநோதன் மீதிருந்த நம்பிக்கை அப்படி. அத்தானின் கனிவும் கண்ணியமும் அப்படி அவளை மயக்கி வைத்திருந்தன.

ஆக அவனிடம் கேட்டே விடுவது என்று முடிவெடுத்தாள்.

எப்படிக் கேட்பது?



''நேற்றிரவு வீட்டுப் பக்கம் வந்தீங்களா... அக்காவைப் பார்த்தீங்களா?'' என்று.

மறுநாள் காலை பள்ளிக்கு சற்று சீக்கிரமே கிளம்பியவள் அத்தானின் வீடு நோக்கி நடந்தாள். அது ஊரை விட்டே சற்று ஒதுங்கியிருந்த பகுதி.

மிக எளிய வீடு.

வெளியே அத்தை கண்ணில் படாததால் நிம்மதியாகத் திறந்திருந்த வீட்டுக்குள் நுழைந்தாள். விநோதனின் மேஜை, படுக்கை எல்லாமே முன்னறையில்தான் -

அவனும் அங்கில்லை... பின்புறம் நீரின் சலசலப்பு...

மேஜை மீது அவன் கையெழுத்தில் இருந்த காகிதத்தில் இவளது விழிகள் தன்னிச்சையாய் ஓடின.

அது ஒரு கடிதம்...

''*குமாரி,*

*நேற்று நடந்த சம்பவத்திற்காய் நான் மிக வேதனைப் படுகிறேன். அது இதுவரை நம்மிடையே இருந்த உறவை மாற்றி விட்டது.. இனி...''*

அரை குறை தகவல்தான். ஆனால் அதுவே அவளுக்கு பெரிய விபரத்தைத் தந்து விட்டது.

ஆக நேற்று குமாரியிடம் அத்தான் முறை தவறியது உண்மை! அந்த உண்மை சுட்டது...!

அது தாளாமல் மறுபடி வீடு திரும்பினாள்.

பள்ளிக்குப் போக மனமில்லை.

அதிலிருந்து விநோதனை வெகு கவனமாய் தவிர்த்தாள்.

இனி தனக்குப் படிப்புதான் புகல் என்பது புரிந்தது. கூடவே இந்த கிராமத்தில் கிடந்து மனதை மேலும் வேக விட

முடியாதென்பதும்... முதலில் குற்றாலத்தின் மகளிர் கல்லூரியில் படிப்பைத் தொடர நினைத்திருந்தவள் விலகியிருப்பதற்காக பள்ளி இறுதிக்கே நெல்லை போனாள்.

முழு மூச்சாய் படித்ததற்குக் கிடைத்த மதிப்பெண்களுக்கு மதிப்பாய் சென்னை கல்லூரியில் இடம் கிடைத்தது.

அப்படி போனதுதான்... விடுமுறைகளைக் கூட தவிர்த்தாயிற்று.

## 4

சென்னையில் அன்று மிகத் தெரிந்தவர்கள் என்று யாருமில்லை. பட்டணத்து பரபரப்பு நெரிசலான சாலைகள் அவளைப் பயமுறுத்த வெளியே எங்கும் போகக் கூடாது என்று முடிவெடுத்தவள், கல்லூரியின் என்.எஸ்.எஸ்ஸில் சேருவதற்காய் தன் பெயர் தந்தாள்.

சமூகப் பணியில் ஆர்வம் கொண்டிருந்த இளம் பெண்களை அகன்ற மருதமரத்தின் கீழே கூட்டிச் சேர்த்த ஆசிரியை விவரம் சொன்னார்கள் -

''முதலில் நாம் போக வேண்டியது காது கேளாதோர் பள்ளிக்கு அதிலேயே இப்ப ஸி.பி.ஸெண்டர் ஆரம்பிச்சிருக்காங்க. அங்குள்ள குழந்தைகளுக்கு சில புது முகங்களைப் பார்த்துப் பேசினால் உற்சாகமாயிருக்கும். ஒவ்வொரு சனிக்கிழமையும் காலை 9 மணிக்கு நீங்க 'மொட்டுக்க'ளில் இருக்கணும் - இங்கேருந்து 21C நேரே அங்கே போகும்.''

இவள் விழித்தாள் -

''மெட்ராஸுக்குப் புதுசா... தனியா போயிருவியா?'' அருகில் நின்ற உள்ளூர் மாணவி கேட்க, விஜூலா பரிதாபமாய் தலையசைத்தாள்.



''என் வீடு பக்கத்துலதான் - ரெண்டு மூணு பேராய் சேர்ந்தால் ஆட்டோவிலேயே போயிடலாம் - ஷேர் பண்றியா?''

நிம்மதியாய் தலையாட்டினாள்.

''தாங்க்ஸ் - ஸி.பி.ன்னா என்ன?''

''ஸெரிப்ரல் பால்ஸி - மூளை வளர்ச்சி குறைந்த பிள்ளைங்க...''

அங்கு போய் மலராத... மலர முடியாமல் தவித்த அந்த மொட்டுக்களைப் பார்த்தவளுக்குக் கண்களில் ரத்தமே வடியும் போலானது. குறிப்பிட்ட சனிக்கிழமை போக, தன் ஞாயிறுகளையும் விஜூலா அங்கேயே கழிக்க, ஒரு மாதத்தில் அப்பிஞ்சுகள் அவளில் பதிந்து கொண்டன... அதிலும் ரகு விசேஷமாய் ஒட்டிப் பழகினான்.

பத்து வயதிற்கு ஒவ்வாத உடம்பு - அந்த மழுங்கிய கூட்டிற்குள்ளிருந்து செயல்பட முடியாமல் தவித்த அக்கண்களின் ஏக்கம்... இவளை மிகப் பாதித்தன.

அதிலும் ரகு அதிக நாட்கள் வாழ முடியாதபடி அவனது கிட்னிகளும் பிரச்சினை தருகின்றன என்று அறிந்தவள் தன் விடுமுறைகளைக்கூட அங்கேயே கழித்தாள்.

சம்பளம் எதிர்பாராத இத்தனை ஆத்மார்த்தமான உதவியை, கரிசனையை ஆவலாய் ஏற்றுக் கொண்ட சிஸ்டர் அவளுக்கு அங்கேயே தங்கவும் உதவினார்கள்.

இரண்டு நாள் காய்ச்சல், வலிப்பில் கொண்டு போய் விட, ஹாஸ்பிட்டலில் இருந்த ரகு முணகலாய் தேடியது.

'க்கா'வை.

சிஸ்டர் இவளது விடுதி வார்டனோடு பேசி வந்து அழைத்துப் போக, ரகுவோடு அன்று இரவும் தங்கினாள்.

அவனது பிஞ்சுக் கையைப் பற்றியபடி, புடைத்த முன்நெற்றியை நீவியபடி இருக்க அவன் ஆசுவாசமானான்.

''இனி ஆபத்தில்லைம்மா - மனசு குளிர்ந்தா உடம்பும் தேறும்'' என்று நர்ஸ் விடியற்காலையில் சொன்ன நேரம் அந்த மனிதர் அறையுள் நுழைந்தார். கசங்கிய வேட்டி, ஜிப்பாவும் கலைந்த வெள்ளை முடியுமாய் -

இரும்பு கட்டிலில் குறுகிக் கிடந்த ரகுவை கட்டிக் கதறியவரை தாதி அதட்டினார்.

''யாரு சார். உங்களை உள்ளே விட்டது.''

ரகுவின் கண்கள் உறக்கம் கலைந்தன.

''ப்பா... ப்பா...''

''நீங்க குழந்தைக்கு அப்பாவா? சத்தம் போடாம பார்த்துட்டுப் போங்க...''

கான்ட்டீனில் காலை உணவிற்காக போய் அமர்ந்தவளிடம் போய் நன்றி சொன்னார் -

''உனக்குப் புண்ணியங் கோடி சேரட்டும்மா - எம்பிள்ளையை ராமுழுக்க மெனக்கெட்டு கவனிச்சுட்டியே.. படிக்கற பொண்ணு வேற...?''

''பரவால்லீங்க... ரகு தேறினதே பெரிசு...''

தந்தையைக் கண்ட ரகு மேலும் விரைவாய் தேறினான் - பிடித்த கை விடாமல் ''ப்பா ப்பா'' என்றபடி தலையை விநோதமாய் ஆட்டித் திரும்பி அவரையேப் பார்த்தது இவளுக்குத் தாளவில்லை. இப்படி ஏங்கும் குழந்தையைத் தவிக்க விடுவானேன்...?

ஆனால் அவரும் தளர்ந்து, ரகுவிற்கு தாத்தா போலத் தெரிகிறாரே...?

அவரை மறுபடி தனியே பார்க்க நேர பேச்சை நீட்டினாள்.



''நீங்க எங்கே இருக்கீங்க ஸார்?''

''கூர்க்கிலே காபி எஸ்டேட் இருக்கம்மா.''

கன்னங்கள் முழுக்க உப்பைத் தூவினாற் போல வெள்ளை முடியில் மேலும் சோர்ந்து தெரிந்தார்.

''ரகுவை அங்கேயே...''

''அங்கு மருத்துவ வசதி போதாதேம்மா.''

''நீங்களாவது அடிக்கடி வந்து... இவனை.''

அவரது உதடுகள் துடித்தன.

''தாங்கலையேம்மா. தவமிருந்து பெத்த வாரிசு இப்படி அரையும் குறையுமாத் தவிக்கறதைப் பார்க்க நெஞ்சு பொறுக்கலையே...''

''ஆனா ரகுக்கு உங்களைப் பார்க்க, கூடவே இருக்கணும்னு இருக்குதே சார்.. அதைக் கூட சொல்ல முடியாத குழந்தை அவன்...''

வருத்தமாய் எங்கோ வெறித்தார்.

''சென்னையிலேயே ஒரு வீடு எடுத்து ரகுவோடு இருங்க சார். நீங்க கூர்க் போற சமயம் நாங்கூட தங்கி அவனைப் பார்த்துக்கறேன். அப்ப சிஸ்டர்கூட மறுக்காமல் அவனை விடுதியில ஏத்துக்குவாங்க... ரகு சந்தோஷமாய் இருக்கட்டுமே... சொச்ச நாளைக்கு...''

''புண்ணியம்மா...''

''செலவுதான் - போக வர, வீடெடுக்க, சமைக்க ஒரு ஆள்னு...''

''அதுக்கெல்லாம் ஆண்டவன் குறையே வைக்கலம்மா... பிள்ளை முழுசாப் பிறக்காததுதான் பெருங்குறை.''

''ரகுவோட அம்மா?''

''அவ இதையெல்லாம் காண சகியாது போயிட்டா... வலிய தன் உயிரைப் போக்கிட்டா...''

மறு மாதமே சென்னையில் வசதியான ஒரு வீட்டை விலை பேசி வாங்கியவர் ரகுவுடன் அதில் தங்கினார்.

கூர்க்கிலிருந்தே சமையல், மற்றும் உதவிக்கு வேலையாட்கள். பரிச்சய முகங்களும் பாசமும் பெருக, ரகுவின் நிலை தேறியது.

விஜுலா முழுக்க சந்தோஷப்பட முடியவில்லை.

ஒரு விபத்தில் அவளது தாயும் பெரியம்மாவும் இறந்தது அப்போதுதான் - திருச்செந்தூர் கோயிலுக்குப் போனவர்கள் நேரே வைகுண்டத்திற்கே போய்விட,

ஆலம்மேட்டிற்கு போவதைத் தவிர்த்து வந்தவள் அன்று அலறியபடி ஓடினாள்.

''இந்த அதிர்ச்சியோடு நீ தனித்து போகக் கூடாதம்மா'' என்ற பெரியவர் தன் காரிலேயே ஒரு ஆயாவையும் துணைக்கு அனுப்பினார்.

இனி தனக்கென்று பெரிதாய் உலகில் யாருமில்லை என்று உறைக்க விஜுலா உரக்க அழுதாள்.

மாமாவைப் பார்க்கவும் சகிக்கவில்லை-

அதுவரை வீம்பும் விறைப்புமாய் நின்றவர் இப்போது ஓலைக் கொட்டானுள் சுருளும் பாம்பாய் முடங்கி விட்டார்.

பத்து நாட்களுக்குப் பின் அந்தத் தனிமையும் வெறுமையும் தாளாமல் விஜுலா கிளம்பிய போது, மாமா முணங்கினார் -

''உன் அக்கா அவ இஷ்டப்படி செய்யட்டும்னு விட்டுட்டேன்.''



''என்ன சொல்றீங்க மாமா?''

''அதான்... அவ ஆசைப்பட்டவனையே கட்டிக்கட்டும்னு... இந்த வீடு அவுகளுக்குப் போகாதுன்னு சொன்ன பிறகும் அவ அவன்தான் வேணுமுன்னு துடிக்கா... போகட்டும்...''

''அவர்...? விநோதன்...?''

நெஞ்சடைக்கக் கேட்டாள். மாமா முன்னிலையில் அவனை அத்தான் என்று குறிப்பிடுவதில்லை.

''அவம் மனசுல என்ன இருக்குதே தெரியலை - இவளைச் சிந்துனாப்பல தெரியல - இவதான் அவம் பின்னால திரியறா...''

இவளுக்குள் சீறியது.

ஒரு மழை இரவின் தனிமையில் மட்டும் அவன் அவளைத் தேடி இழந்திருக்கிறான். பின்பு பெண் தான் தன்னைத் தொட்டவனின் பின்னே அலைய வேண்டும் போல!

''நீ என்ன செய்யப் போறே?''

[illegible] அனுப்புமான அவரது விழிகள் அவளைக் [illegible] நோக்கின -

''நான் படிக்கணும் மாமா - இப்போதைக்கு அவ்வளவு தான்...!''

''இப்ப [illegible] எப்போ... விட்டுட்டுப் போயிட்டாங்க [illegible]... ஹூம்...''

''[illegible] அக்கா [illegible] தனக்கு வராது என்பது தெரிஞ்சும் அ... விநோதன் எப்படி கல்யாணத்துக்கு சம்மதிக்கறார்?''

''ஏதோ வீம்புல சரிங்கறான். எங்கேயோ உள்ள ஆத்திரத்தை இப்படிக் காட்டறான்னு தோணுது.''

விஜூலாவிற்குப் புரியவில்லை.

புரியும் ஆர்வமுமில்லை.

மறுபடி சென்னைக்குப் போனால் போதும் என்றிருந்தது. பாடங்களும், தன்னைப் பாசமாய் தேடும் ரகுவுமே திருப்தி தரும் மனநிலை.

துக்க வீட்டிலும் குமாரி மேம்போக்காய் பேசினாளே ஒழிய நெருங்கவில்லை... ஆதரவு காட்டவுமில்லை.

''ஐநூறு அறுநூறு கிலோ மீட்டர் காரிலேயேவா வந்தே? கார் யாருது - பெட்ரோல் கார் வேற... பெரியவர்னா... அவருக்கு எத்தனை வயசிருக்கும்?''

இப்படிக் கேள்விகளால் துருவினாள்.

இவள் ரகு பற்றி, அவன் தகப்பன் ரத்ன பாண்டியன் பற்றி சொன்னதை கவனமாய்க் கேட்டாள்.

''அட, அவரு பிள்ளைக்காக ரெண்டு தாரம் கட்டியும் கடைசியில இப்படித்தான் ஒரு பிள்ளை கிடைச்சுதாக்கும்?''

''அப்படிப் பேசாத குமாரி... அத்தனை நல்ல மனுஷருக்கு ஏன் இப்படிப்பட்ட வேதனைன்னு நானே தவிக்கறேன்...''

''ரெண்டாம் பொண்டாட்டியும் இப்ப இல்லியா?''

''கர்ப்பமானதும் ரொம்ப சந்தோஷப்பட்டிருக்காங்க. தான, தர்மம், பூஜைன்னு எஸ்டேட்டே கொண்டாடியிருக்குது. நிறைஞ்ச சொத்துக்கு ஒரே வாரிசாய் பிறந்த ரகு... ம்ப்ச்... பெரியவரின் அம்மா வாரிசில்லைங்கற ஒரே காரணத்திற்காய் ரகுவின் அப்பாவை மறுகல்யாணம் பண்ணச் செய் தாங்களாம்...''

''அந்தப் பாவந்தான் இப்படி பிறந்த பிள்ளையத் திருகிப் போட்டிருக்குது!''



''ப்ளீஸ்க்கா... பெரியவங்க பாவத்துக்கு இந்தக் குழந்தை எப்படி பொறுப்பு?''

''பெத்தவன் லட்சணம் பார்த்து பெத்த மனம் துடிக்கும்ல?''

விளக்கினாள் குமாரி.

இவளுக்கு அப்பேச்சு விரசமாய், விகாரமாய் பட்டது. தாய் விபத்தில் இறந்த சமயம் கூட இளகாத இதயத்துடன் ஏன் இப்படி மற்றவர்களைப் பற்றி பேசுகிறாள்?

''அப்புறம்...?''

''குழந்தைக்கு முழு வளர்ச்சியில்லாத வருத்தத்தில் ரகுவின் அம்மா தற்கொலை செய்துக்கிட்டாங்க...''

''அடடே... முதல்ல பையனை ஹாஸ்டலில் விட்டவர், இப்ப சென்னையில்... ம்ம்?''

''நான்தான் சொன்னேன். இத்தனைப் பாசமான குருத்துக்கு உங்க நிழல் வேண்டும்னு எடுத்துச் சொல்ல இப்ப ரகு தேவலை. நானும் அடிக்கடி அவனோட இருக்கறேன்.''

''ஓஹோ?''

அடுத்த செமஸ்டர் விடுமுறைக்கு வீடு வந்த விஜூலா சற்றுத் தயங்கி பின் மாமா விஜயநாதனிடம் கேட்டாள் -

''மாமா, ஹாஸ்டல்ல இருந்தா ரகுவை அடிக்கடி போய்ப் பார்க்க முடியலை... அவன் கூடவே நான் சதா இருக்கணும்னு பாவம் ஆசைப்படறான்...''

நீண்ட மர நாற்காலியில் சாய்ந்திருந்த விஜயநாதரின் கண்கள் மட்டும் நிமிர்ந்து அவளை நோக்கின. தங்கை, தமக்கையை இழந்த இந்த மூன்று மாதத்தில் முதுமை அவரை மிக நெருங்கி விட்டிருந்தது. கலைந்த முடியும், துவண்ட

தோள்களும் பழுப்பு வேஷ்டியுமாய் கிடந்தவரின் கண்களில் மட்டும் அனல் மிச்சமிருந்தது.

அந்தக் கண்களில் வழிந்த வெறுப்பில் கலங்கினாள் -

''ஏது அனுமதி கேட்கறே? மூத்தவ தனக்கு வேண்டியவனை, அவன் எனக்கு வேண்டாதவன்னு தெரிஞ்சும் கல்யாணம் கட்டிகிட்டா. நீ ஒரு கிழவனுக்கு மூணாம் தாரமாய் போறேங்கற? இவளுக்கு வாட்ட சாட்டமா ஒரு ஆம்பிளைத் தேவைன்னா, உனக்கு சொகுசாய் வாழற அளவு பணக்காரனாய் இருந்தாப் போதும் போல... ச்சே... வெட்கங் கெட்டதுக...''

இவள் விக்கித்துப் போனாள் -

ரகுவின் அப்பாவுடனா தன்னை இணைத்துப் பேசுகிறார் மாமா? இவருக்கு இத்தனை விவரங்களை யார் சொன்னது?

தவிர குமாரிக்கும் அத்தானுக்கும் திருமணமாகி விட்டதா?

தன்னை அழைக்காமல்... ஏன் ஒரு வார்த்தை தெரிவிக்காமல்...?

அதுதான் வீட்டில் ''குமாரி எங்கே'' என்ற இவளது தேடலுக்குப் பதிலே இல்லையா...

## 5

சொகுசான காரில் பயணித்தாலும் உள்ளே ஓடிய எண்ணங்கள் சுகமானதாய் இல்லை... நெஞ்சை உறுத்தின.

பெருமூச்சுடன் குனிந்தவள் தன் விரல்களை ஆராய்ந்தாள்.

மனதை அடக்கி ஆசுவாசப்படுத்தும் முயற்சி அது -



மணிக்கட்டிலிருந்த தழும்பு நினைவுகள் மீண்டும் கிளறி விட்டது.

குமாரியால் ஏற்பட்ட வடு அது.

பத்தாவது பரீட்சை முடித்த பின் நீண்டிருந்த விடுமுறையில் தாயுடன் சேர்ந்து வீட்டை ஒதுக்கி சீர்படுத்திக் கொண்டிருந்த சமயம்...

பாட்டியின் அலமாரியை அடுக்கியபோது, செந்நிற மரத்தில் செதுக்கிய அப்பெட்டி கிடைத்தது. கூம்பு வடிவில் மூடி வைத்த அலங்காரப் பேழை. அதைத் துடைத்த போதுதான் அதன் விளிம்பின் வெள்ளி வேலைப்பாடும் கைப்பிடியின் யாழீ முகமும் தெரிந்தன.

''பெரியம்மா, இதை நான் வச்சுக்கலாமா?''

''தங்கமாய்... உங்க பாட்டி பொருளு உனக்குத்தானடீ...''

தச்சரிடம் தந்து முறையாய் அதைச் சுத்தப்படுத்திய பின் பெட்டியின் அம்சம் அசத்தியது. விஜுலாவிடம் நகை என்று அதிகமில்லை. ஆனால் இருந்ததை அதனுள் அழகுற வைத்த போதுதான் தடதடவென்று நுழைந்தாள் குமாரி - எதிர்பாராத கரங்களிலிருந்து பெட்டியை ஆவேசமாய் பிடுங்கினாள்...

நகைகள் நழுவி சிதறின.

பிடித்த வேகத்தில் யாழியின் பிடிமுனை இவளது மணிக்கட்டை கீறி, ரத்தம் பெருக்கியது.

''ஏன்... குமாரி... கேட்டால் நானே தந்திருப்பேனே?''

''உன்கிட்ட என்ன கேட்கணும். எப்படி எடுத்துக்கணும்னு எனக்குத் தெரியும்.''

அந்த வீம்புடன்தான் குமாரியின் திருமணமும் நடந்திருக்கும். எனக்கு வேண்டியதை நான் எடுக்க யார் தயவும் தேவையில்லை என்ற வீம்பு.

தோள்களும் பழுப்பு வேஷ்டியுமாய் கிடந்தவரின் கண்களில் மட்டும் அனல் மிச்சமிருந்தது.

அந்தக் கண்களில் வழிந்த வெறுப்பில் கலங்கினாள் -

''ஏது அனுமதி கேட்கறே? மூத்தவ தனக்கு வேண்டியவனை, அவன் எனக்கு வேண்டாதவன்னு தெரிஞ்சும் கல்யாணம் கட்டிகிட்டா. நீ ஒரு கிழவனுக்கு மூணாம் தாரமாய் போறேங்கற? இவளுக்கு வாட்ட சாட்டமா ஒரு ஆம்பிளைத் தேவைன்னா, உனக்கு சொகுசாய் வாழற அளவு பணக்காரனாய் இருந்தாப் போதும் போல... ச்சே... வெட்கங் கெட்டதுக...''

இவள் விக்கித்துப் போனாள் -

ரகுவின் அப்பாவுடனா தன்னை இணைத்துப் பேசுகிறார் மாமா? இவருக்கு இத்தனை விவரங்களை யார் சொன்னது?

தவிர குமாரிக்கும் அத்தானுக்கும் திருமணமாகி விட்டதா?

தன்னை அழைக்காமல்... ஏன் ஒரு வார்த்தை தெரிவிக்காமல்...?

அதுதான் வீட்டில் ''குமாரி எங்கே'' என்ற இவளது தேடலுக்குப் பதிலே இல்லையா...

## 5

**சொ**குசான காரில் பயணித்தாலும் உள்ளே ஓடிய எண்ணங்கள் சுகமானதாய் இல்லை... நெஞ்சை உறுத்தின.

பெருமூச்சுடன் குனிந்தவள் தன் விரல்களை ஆராய்ந்தாள்.

மனதை அடக்கி ஆசுவாசப்படுத்தும் முயற்சி அது -



மணிக்கட்டிலிருந்த தழும்பு நினைவுகள் மீண்டும் கிளறி விட்டது.

குமாரியால் ஏற்பட்ட வடு அது.

பத்தாவது பரீட்சை முடித்த பின் நீண்டிருந்த விடுமுறையில் தாயுடன் சேர்ந்து வீட்டை ஒதுக்கி சீர்படுத்திக் கொண்டிருந்த சமயம்...

பாட்டியின் அலமாரியை அடுக்கியபோது, செந்நிற மரத்தில் செதுக்கிய அப்பெட்டி கிடைத்தது. கூம்பு வடிவில் மூடி வைத்த அலங்காரப் பேழை. அதைத் துடைத்த போதுதான் அதன் விளிம்பின் வெள்ளி வேலைப்பாடும் கைப்பிடியின் யாழீ முகமும் தெரிந்தன.

''பெரியம்மா, இதை நான் வச்சுக்கலாமா?''

''தங்கமாய்... உங்க பாட்டி பொருளு உனக்குத்தானடீ...''

தச்சரிடம் தந்து முறையாய் அதைச் சுத்தப்படுத்திய பின் பெட்டியின் அம்சம் அசத்தியது. விஜுலாவிடம் நகை என்று அதிகமில்லை. ஆனால் இருந்ததை அதனுள் அழகுற வைத்த போதுதான் தடதடவென்று நுழைந்தாள் குமாரி - எதிர்பாராத கரங்களிலிருந்து பெட்டியை ஆவேசமாய் பிடுங்கினாள்...

நகைகள் நழுவி சிதறின.

பிரித்த வேகத்தில் யாழியின் பிடிமுனை இவளது மணிக்கட்டைக் கீறி, ரத்தம் பெருக்கியது.

''ஏன்... குமாரி... கேட்டால் நானே தந்திருப்பேனே?''

''உன்கிட்ட என்ன கேட்கணும். எப்படி எடுத்துக்கணும்னு எனக்குத் தெரியும்.''

அந்த வீம்புடன்தான் குமாரியின் திருமணமும் நடந்திருக்கும். எனக்கு வேண்டியதை நான் எடுக்க யார் தயவும் தேவையில்லை என்ற வீம்பு.

குமாரிக்குப் பெண் குழந்தை பிறந்தது. அறிந்து தாளாமல் ஓடிப் போய் பார்த்தாள். இவள் எடுத்துப் போன கொலுசும், வளையலும், பாசமும் குமாரியை அசைக்கவில்லை.

''நான் இதுக்காக எல்லாம் வீங்கிட்டுக் கிடக்கலை... யாரும் பிறந்ததைப் பாக்கற சாக்கில் இவங்க வர வேணாம். எதுக்காக நீ வர்றேன்னு எனக்காத் தெரியாது...?''

இதயத்தில் நறுக்கென்ற கிள்ளல்!

ஆலம்மேட்டு விஜய விலாஸத்திலிருந்து ஐந்து கல் தொலைவிலுள்ள சகோதரியின் வீட்டிற்குப் போக விடாதபடி தள்ளி வைத்த நாக்கு!

முன்பு விஜய விலாஸத்திற்கு சற்று அருகாமையில் சிறு தோட்டத்துடன் இருந்த வீட்டையே விநோதன் எடுத்துக் கட்டியிருக்கலாம். ஆனால் சற்று ஒதுங்கி இருக்க வேண்டுமென்றே... குமாரியின் தூண்டுதலிலேயே இப்படி இங்கு வீடு கட்டி குடியேறியிருக்கிறார்கள் போலும்.

மனைவிக்கு இருக்கும் அதே வீம்பில் அவனும்...?

இப்போது குமாரி எப்படியிருப்பாள்?

தினத்துக்கு ஒரு அலங்காரம், சமையல், கண்ணிறைந்த கணவன்,

ஆசைக் குழந்தை என்று மிக மிக மகிழ்வாக...

இருக்கட்டும்... இருக்க வேணும். ஆனால் அவளைத் தொடர்பு கொள்ள முயன்ற போதெல்லாம் அங்கிருந்து வந்த மறுப்பு அல்லது மௌனம் விஜுலாவின் கால்களைக் கட்டிப் போட்டு விட்டது.

ஆனால் தன்னைப் பற்றிக் கற்பனைக் கதைகளைத் திரித்து மாமாவிற்கு தன் மீது வெறுப்பு வர வைத்ததுதான் பொறுக்க வில்லை.



இதுவரை ரகுவின் அப்பா ரத்னபாண்டியரைத் தானும் ''அப்பா'' என்றே அழைத்தது, அவரும் ரகுவை தன்னிடம் மேலும் நெருங்க வைத்த மூத்த மகளாகவே தன்னிடம் பாசம் கொண்டது எல்லாம் இவர்களுக்குப் புரியாது.

ஆனால் அவர் தன்னை மூன்றாம் தாரமாய் மணந்ததை மட்டும் கல்யாணத்திற்கு வந்து அட்சதைத் தூவியவர்கள் போல ஏன் இட்டுக்கட்டி பேசுகிறார்கள்?

பொறுமை மட்டும்தான் முடிந்தது.

ரகுவின் தகப்பனாரும் ஊரின் வாயில் விழுந்து அரைபட்டிருப்பார் போலும்... இத்தனைக்கும் நடுவே ரகு இறந்ததுதான் பெரிய சோகம். தனக்காக மெனக்கெடுபவர்களின் பெயர் தன்னால் கெடுவானேன் என்பது போல, தேறி வந்தவன், திடீரென உலகிலிருந்து ஒதுங்கிக் கொண்டான்.

பெரியவர் ரத்னபாண்டி இவள் எதிர்பார்த்ததுபோலக் கதறவில்லை.

''போதும்மா... ஒரு வருஷம் எம்மகனோடு கழித்த திருப்தி போதும்... நீ இல்லைன்னா இது சாத்தியப்பட்டிருக்காது... அவனும் தன், பாசக்கூட்டிலே இருந்த நிறைவோடு போயிட்டான்... நன்றியம்மா...''

என்றவர் நன்றியை செயலாலும் காட்டினார் -

மகனுக்கென்று வாங்கிய அடையாறு பங்களாவை விஜுலாவின் பெயரில் எழுதி வைத்து!

''இதை விற்கணும்னால் விற்றிடம்மா - ஐம்பது லட்சத்திற்குக் குறையாது. வாடகைக்கு விட்டால் மாசம் இருபதினாயிரம் வரும். வங்கியில போட்டால் கூடுதல் வட்டி வரலாம். ஆனால் வீட்டுப் பராமரிப்பு, டெனன்ட்ஸ் தொல்லை, வரி கட்டும் நச்சரிப்பெல்லாம் உண்டு. நம்ப

வக்கீலோடு பேசி உன் நோக்கப்படி செய்யம்மா'' என்றதோடு ஒதுங்கிக் கொண்டார்.

இங்கு 'விஜய விலாஸ்' கடனில் மூழ்கியதும் முதலியார் கைக்குப் போயிருந்தது. மாமாவிடமிருந்து ஒரு அற்ப தொகையை வாடகைப் போல வசூலித்தவர் அதில் பெரியவரை தங்கியிருக்க அனுமதித்து இருக்கிறார்.

கவலைகள் அரித்துத் தின்னாவிட்டால் மாமா இன்னும் ஆயுளோடு இருந்திருக்கலாம்.

முதலியார் விஜய விலாஸத்தை மூன்று அல்லது இரண்டு லட்சத்திற்கே தந்து விட்டிருப்பார் - மராமத்தில் இறங்கினால் எத்தனை லட்சங்களைத் தின்னுமோ என்ற கிலி அவருக்கு. அந்தத் தொகையைத் தரத் தயாராயிருந்த விநோதனுக்கு விஜுலா ஐந்து மடங்கு பணத்தை இரைத்து அவ்வீட்டை வாங்கியதில் ஆச்சரியம்... எரிச்சல்?

பெரிய வக்கீலுக்கும் இதில் உடன்பாடில்லை.

''அம்மா விஜுலா, இந்த கிராமத்து வீட்டிற்கு இது பெருந்தொகை. ஆனா முதலியார் உடனே விள்ளாமல் விரியாமல் உன்னிடம் ஒப்படைச்சுட்டார் - ஆனா இதைச் செப்பனிட, புதுப்பிக்க மேலும் காசு கரையும் - ஜாக்ரதை...''

''பரவால்ல சார் - இது செண்ட்டிமெண்ட்ஸ் இருக்குது.''

''புரியுது. நான் உன்னோட அலைய முடியாது என் ஜுனியர் அசோக் உங்கூட வருவான்... சரிதான?''

அசோக்கிற்கு இவள் ஓரளவு விவரங்கள் சொல்லி யிருந்ததால் பத்திரம் பதிவு செய்வதைக் கருத்தாய் செய்தானே ஒழிய வாய் திறக்கவில்லை...

ஆனால் விநோதன் வாய் மூடி நிற்கும் ரகமாயில்லை...

நாக்கு விஷயமாய் கொட்டியது -



''சுலபமாய் வந்த காசில்லையா? அதான் அளவு, அருமை தெரியாமல் இறைபடுது'' - என்றான்.

இவளும் விடவில்லை.

''காசு வந்த விதம் எப்படியோ - ஆனா இந்த வீடு உங்களுக்கு வர வேணாம் - விட மாட்டேன்னே சொல்லுங்களேன்...''

அவன் வெறுப்பாய் விழித்தான்.

அதைப் பொருட்படுத்தாமல் -

''தெரிஞ்ச காண்ட்ராக்டராய் ஏற்பாடு பண்ணுங்க அசோக்...''

இவள் அலட்சியமாய் திரும்ப அன்று விநோதனின் விரல்கள் முஷ்டியாய் இறுகின...



## 6

மூன்றடிக்கு இரண்டடி தேக்குமரச் சட்டத்திற்குள் இருந்த [illegible] பழைய கண்ணாடியில் தன்னை இப்படியும் அப்படியும் பார்த்துக் கொண்டிருந்தாள் விஜுலா.

அதில் தெரிந்த பிம்பம் ஒரு பழங்கால ஓவியம் போலிருந் தது. சிறு வயதில் அவளும் குமாரியுமாய் இணைந்து அந்த பெரிய கண்ணாடியில் தங்களைப் பார்த்ததுண்டு.

குமாரி பெருமையடித்துக் கொள்வாள் -

''எனக்கு கலர் கூடுதல்... எங்கன்னம் நல்லா பொஸு பொஸுன்னு இருக்குது பார்'' என்று.

ஆனால் பருவ வயதில் அப்படி சேர்ந்து நிற்க, குமாரியின் முகம் கன்றிப் போனது.

பாலும் கடலை மாவும் பூசித் தேய்த்து வெளுப்பாய் தன் சருமம் மின்னினாலும், தன்னை விட ஒரு பிடி உயரமாய் வரைந்து விட்டது போன்ற முக அழகோடு மெருகாய் நின்ற தங்கையை விட்டு 'வெடுக்'கென விலகினாள் - குமாரியின் கன்னங்கள் தழைந்து, ரெட்டை மோவாயுடனிருந்த முகம் சற்று முற்றித் தெரிந்தது.

உருவியெடுத்தது போன்ற உடலும் சேர விஜுலாவின் தோற்றம் பல பெண்களின் பொறாமையைக் கிளறி விடுமளவில்தான் இருந்தது.

"நெட்டைக் கொக்கு விஜு... நீதான் எனக்கு அக்கா போல இருக்கே..." என்ற நக்கல் வேறு...

ஆனால் விஜுலா புன்னகைத்தே சமாளித்து விடுவாள்.

இன்று அதே கண்ணாடியில் கடல் பச்சை ஜார்ஜெட் புடவையுடன் தெரிந்த தன் பிம்பம் அதிக அழகாய் பட, அதன் முன் நின்றபடியே அடர்ந்த தன் கூந்தலை அவிழ்த்து சிக்கு பிரிக்கலானாள் -

இத்தனை நீளமும் அடர்த்தியுமான கூந்தலைப் பட்டணத்தின் நீர் பற்றாக் குறையில் பராமரிப்பது சிரமமாயிருக்க, அதை வெட்டி விடலாமா என யோசித்ததுண்டு.

ஏனோ... மனசு வரவில்லை...

ஏனோ என்ன... விநோதனுக்கு நீண்ட கூந்தல் பிடிக்கும் என்ற காரணத்தால்தான் அவனுக்கப் பிடித்த நிறம், சுவை, பாடம், பாடல் என்று அவன் ரசனையின் பரிமாணங்களை அறிந்தவள் தன்னையும், மிகப் பிடித்திருந்ததாய் அல்லவா தப்புக் கணக்குப் போட்டு விட்டாள்!

'உனக்குப்
பிடித்தவைகள்



அனைத்தும்
எனக்குத் தெரியும்
என்னை
உனக்குப்
பிடிக்குமா
என்பதைத் தவிர'

என்று மற்றொரு பெண் எழுதிய கவிதையை பெருமூச்சுடன் படித்ததுண்டு.

சிறுவயதில் அவளும் அத்தானுமாய் சேர்ந்து ஒளிந்து கொள்ள நேர்ந்தபொழுது வெகு அதிசயமாய் இவளது பின்னலைத் தொட்டு நீவுவான் - இவளை விரட்டிப் பிடிக்க முயலுகையில் கைக்கு வாகாய் பின்னல் சிக்கினாலும் கூட அதைப் பற்றி 'வெடுக்'கென கடிவாளமென இழுத்ததில்லை.

அந்தப் பிரியமும் பரிவும் விநோதனின் கண்களில் இப்போது இல்லை. மாமாவிடம் இல்லாத பொல்லாததைச் சொன்னதைப் போல கணவனிடமும் சொல்லியிருப்பாளோ குமாரி?

அதுதான் பேச்சில் இத்தனை இகழ்ச்சி... குத்தல்!

ஆனால் அதன் பிறகு அவன் இவளது கண்களில் படவில்லை. வீட்டைப் புதுப்பிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து விட்டு சென்னை சென்று அங்கு வேலைகள் முடித்து வந்த போது வீடு வீடாகத் தோன்றியது.

முன்பு போல வீடெங்கும் இரைபடும் தானியங்கள், கடலை, பழக்குலைகள் இல்லைதான்.

மாமாவின் அதிகாரக் குரலும் அம்மா பெரியம்மாவின் பாசப் பேச்சும் அற்ற சூன்யம்...

ஆக இது இப்போது வெறும் கூடுதான்...

''யக்கா, டாக்டரு சம்சாரம் வந்திருக்காக...''

அவசரமாய் பின்னலிட்டபடியே முன்னறைக்குப் போனாள். பழைய மர நாற்காலிகள் லாக்கர் பூச்சில் பளபளத்தன - நடுவே பத்தமடை விரிப்பு.

''வாங்க பானு...''

ஆவலுடன் வரவேற்றாள்.

பானு இங்கு உடன் வளர்ந்த தோழி அல்ல - சில வருடங்கள் முன்பே இங்கு தங்கி விட்டிருந்த மருத்துவர் சேகரனின் மனைவி. படிப்பும் பண்பும் இருந்ததால் பானு எளிதாக இவளுடன் பழகி விட்டாள்.

''வாழ்த்துக்கள் விஜுலா'' - வாஞ்சையுடன் கைக்குலுக்கினாள்.

''என்ன?''

''என்னிடமே விவரத்தைச் சொல்லலியே?''

''விவரத்தைச் சொல்லுங்க பானு...''

''நீங்க இங்கே வந்தபோது மக்களுக்கு மகிழ்வைவிட, எனக்கு இந்த விஜுப் பொண்ணு பட்டணத்திலிருந்து இங்கே வரணும்ற கேள்வி இருந்ததுங்க விஜி.''

''சும்மை ஒருமையிலேயே பேசுங்க.. சரி.. அப்புறம்?''

''அப்புறம் நீ இங்கேயே தங்கி எல்லாரிடமும் எளிமையாய் பழகினதில் திருப்தி பட்டாங்க...''

''அதுதானே முறை... இதுதானே நான் பிறந்து வளர்ந்த இடம்...''

புன்னகைத்த விஜுலாவை ஏற இறங்கப் பார்த்தாள் பானு.

''அதைத்தான் நம்ப முடியலை. நீ பகட்டாய் இல்லை. ஆனால் பட்டணத்து படித்த பெண்ணின் தோரணையில் இருக்கே.''



''சரி - அதற்கா வாழ்த்துக்கள்?''

''வேற விஷயம் அது. இந்த வீடு உங்க பரம்பரை சொத்து - அதை இத்தனை இளவயதில் மீட்டது பலருக்கு ஆச்சரியம்... ஆனால் சிறு அதிருப்தியும் இருந்தது.''

விஜுலாவின் புருவங்கள் மென்மையாய் மேலேறின.

''டவுனிலிருந்து காண்ட்ராக்டர், மேஸ்திரி வந்து, செங் கல்லும் சிமெண்ட்டுமாய் குவிய, நம்ப கிராமத்து அமைதி போயிடும் போல எதுக்கு இப்ப இந்த வீட்டை எடுத்துக் கட்டணும் - ஃபேக்டரி வரும் போல... அதிலிருந்து வரும் நச்சுப் புகை, தண்ணீரெல்லாம் நமக்குக் கேடு'ன்னு ஊருக்குள்ள முணுமுணுப்பு.''

''ஓ... லச்சு இதெல்லாம் என் காதில் போடவே யில்லையே?'' லட்சுமி பல வருஷங்களாக இந்த வீட்டில் வேலைக்கு இருந்தவள் - ஊர் நடப்புக்களை வீட்டுக்குள் ஒலிபரப்புவாள்.

''சரி - நான் இப்படி ஊராரின் அதிருப்திக்கு ஆளானதிற்கா வாழ்த்துக்கள்?''

''இப்ப அதே ஊர் பாராட்டுதே! பள்ளிக்கூடம் ஆரம்பிக்க போறாங்களாம் - நம்ப பிள்ளைகளுக்கு இனி அலைச்ச லில்லைன்னு. வயலுக்கு சித்தாள் வேலைக்குப் போகும் பெண்களின் கைக்குழந்தைகளை கவனிக்க சின்ன கிரஷ்ஷும் ஆரம்பிக்கறியாம்... இது யாருமே எதிர்பார்க்காத, ஆலம் பேட்டுக்கு மிகத் தேவையான வசதிகள்.''

''இதெல்லாம் என் கடமை பானு... மோர் எடுத்துக் கோங்க.''

மோர் கிளாஸை எடுத்து நீட்டியவள் -

''கூடவே சின்ன லைப்ரரியும் போடணும்ற ஆசை...''

''குட்... நாங்களும் இங்குள்ள பிள்ளைகளுக்காக கேரம், செஸ் போல சில விளையாட்டு உபகரணங்களை வாங்கினோம்... வாகாய் போட இடமில்லாமல் சுவரோடு சாய்ந்து கிடக்குது... ஒரு ரெக்ரியேஷன் அறை போட்டால்... ஜஸ்ட் ஒரு மேசை, சுற்றி நாலு ஸ்டூல்னு...?''

''கண்டிப்பாய்.. இடமிருக்குது... சொல்லிக் கொடுக்க?''

''நானிருப்பேன் - எங்க ஹாஸ்பிடல் கட்டும்போது நாலே அறைகள் போதும்னு நினைச்சோம். இப்ப சின்னதாய் ஒரு ஒப்பரேஷன் தியேட்டர் சேர்க்கலாமான்னு யோசிக்கறார். உங்க முயற்சியை பார்த்ததால் வந்த ஊக்கம்...''

''சந்தோஷம் பானு... இப்படி சேவை மனப் பான்மையோட நீங்க...''

''ஆ... ஆங்...'' மறுப்பாய் கையசைத்தாள். பானு... ''இதில் தன்னலமும் உண்டு விஜூலா - எனக்கும் டாக்டருக்கும் நகர வாழ்க்கையின் கூச்சல் அவசரமெல்லாம் ஆகாது. காலேஜ் என்.எஸ்.எஸ். டீமில் இருந்தோம். அவர் பி.எஸ்ஸி செய்தபோது - பிறகு அவர் மருத்துவம் பயில அப்பப்ப சந்திச்சு பழகினோம்.''

''நானும் என்.எஸ்.எஸ்.ஸில் இருந்ததுண்டு.''

இப்படி பேச்சு இயல்பாய் நகர்ந்தது. அரை மணி நேரம் சென்று பானு கிளம்பிய போது அவர்களது பரிச்சயம் பலப்பட்டிருந்தது -

''சாப்பிட்டு போகலாமே, பானு...?''

''இப்ப அவர் வர நேரமாச்சு... டாக்டர் பக்கத்துக் கிராமங் களுக்கு வாரம் ஒரு முறை போவார். அப்ப வரேன். வரட்டுமா?''

விஜூலா மதிய உணவை முடித்து கைகழுவிய போது அடுத்த விருந்தாளியின் வருகை...



''யம்மா வக்கீலய்யா வந்திருக்காக...''

''யாரு லச்சு?''

''பட்டணத்திலிருந்து உங்களோட வந்தவரு...''

''ஓ... வாங்க அசோக்... இனிய ஆச்சரியம் இது...''

என்றவளை மிக ஆர்வமாய் பார்த்து பின் புன்னகைத்தான் அசோக்.

''சும்மாதான் - நெல்லையில் ஒரு கிளையென்ட்டை வேலை நிமித்தம் பார்க்க வந்தேன் - சரி கொஞ்சம் பகுதியிலே பயணம் செய்தால் உங்களையும் பார்க்கலாம்னு தோண, துணிஞ்சிட்டேன்.''

''தாங்க்ஸ் - சாப்பிடுங்களேன். லச்சுவின் மீன் குழம்பு அருமையாய் இருக்கும்.''

''நோ தாங்க்ஸ் - சாப்பிட்டாச்சு'' - என்றவன் சாவகாசமாய் அமர்ந்தான் - எப்படிப் போகுது கட்டட வேலையெல்லாம்?''

''பெரும்பாலான வேலை முடிஞ்சாச்சு.''

''பொழுது போகறதுதான் கஷ்டமில்லையா - அதுவும் கார் இல்லாமல்? டவுனிற்குப் போய் ஏதேனும் வாங்கணும்னால் தான் அழைச்சுட்டுப் போறேன்.''

ஒரு நன்றிப் புன்னகையுடன் வந்தவனுக்கு பழரசமும் பலகாரமும் தந்து உபசரித்தாள்.

தேன் குழலை நொறுக்கியவன் கேட்டான்.

''இன்னும் நம்ப ஆன்ட்டி - ஹீரோவின் கோபம் அடங்கலை போல?''

''யாரைச் சொல்றீங்க?''

''உங்க அத்தான்... அதாவது கவின்.''

''குட்... நாங்களும் இங்குள்ள பிள்ளைகளுக்காக கேரம், செஸ் போல சில விளையாட்டு உபகரணங்களை வாங்கினோம்... வாகாய் போட இடமில்லாமல் சுவரோடு சாய்ந்து கிடக்குது... ஒரு ரெக்ரியேஷன் அறை போட்டால்... ஜஸ்ட் ஒரு மேசை, சுற்றி நாலு ஸ்டூல்னு...?''

''கண்டிப்பாய்.. இடமிருக்குது... சொல்லிக் கொடுக்க?''

''நானிருப்பேன் - எங்க ஹாஸ்பிடல் கட்டும்போது நாலே அறைகள் போதும்னு நினைச்சோம். இப்ப சின்னதாய் ஒரு ஒப்பரேஷன் தியேட்டர் சேர்க்கலாமான்னு யோசிக்கறார். உங்க முயற்சியை பார்த்ததால் வந்த ஊக்கம்...''

''சந்தோஷம் பானு... இப்படி சேவை மனப் பான்மையோட நீங்க...''

''ஆ... ஆங்...'' மறுப்பாய் கையசைத்தாள். பானு... ''இதில் தன்னலமும் உண்டு விஜுலா - எனக்கும் டாக்டருக்கும் நகர வாழ்க்கையின் கூச்சல் அவசரமெல்லாம் ஆகாது. காலேஜ் என்.எஸ்.எஸ். டீமில் இருந்தோம். அவர் பி.எஸ்ஸி செய்தபோது - பிறகு அவர் மருத்துவம் பயில அப்பப்ப சந்திச்சு பழகினோம்.''

''நானும் என்.எஸ்.எஸ்.ஸில் இருந்ததுண்டு.''

இப்படி பேச்சு இயல்பாய் நகர்ந்தது. அரை மணி நேரம் சென்று பானு கிளம்பிய போது அவர்களது பரிச்சயம் பலப்பட்டிருந்தது -

''சாப்பிட்டு போகலாமே, பானு...?''

''இப்ப அவர் வர நேரமாச்சு... டாக்டர் பக்கத்துக் கிராமங் களுக்கு வாரம் ஒரு முறை போவார். அப்ப வரேன். வரட்டுமா?''

விஜுலா மதிய உணவை முடித்து கைகழுவிய போது அடுத்த விருந்தாளியின் வருகை...



''யம்மா வக்கீலய்யா வந்திருக்காக...''

''யாரு லச்சு?''

''பட்டணத்திலிருந்து உங்களோட வந்தவரு...''

''ஓ... வாங்க அசோக்... இனிய ஆச்சரியம் இது...''

என்றவளை மிக ஆர்வமாய் பார்த்து பின் புன்னகைத்தான் அசோக்.

''சும்மாதான் - நெல்லையில் ஒரு கிளையென்ட்டை வேலை நிமித்தம் பார்க்க வந்தேன் - சரி கொஞ்சம் பகுதியிலே பயணம் செய்தால் உங்களையும் பார்க்கலாம்னு தோண, துணிஞ்சிட்டேன்.''

''தாங்க்ஸ் - சாப்பிடுங்களேன். லச்சுவின் மீன் குழம்பு அருமையாய் இருக்கும்.''

''நோ தாங்க்ஸ் - சாப்பிட்டாச்சு'' - என்றவன் சாவகாசமாய் அமர்ந்தான் - எப்படிப் போகுது கட்டட வேலையெல்லாம்?''

''பெரும்பாலான வேலை முடிஞ்சாச்சு.''

''பொழுது போகறதுதான் கஷ்டமில்லையா - அதுவும் கார் இல்லாமல்? டவுனிற்குப் போய் ஏதேனும் வாங்கணும்னால் நான் அழைச்சுட்டுப் போறேன்.''

ஒரு நன்றிப் புன்னகையுடன் வந்தவனுக்கு பழரசமும் பலகாரமும் தந்து உபசரித்தாள்.

தேன் குழலை நொறுக்கியவன் கேட்டான்.

''இன்னும் நம்ப ஆன்ட்டி - ஹீரோவின் கோபம் அடங்கலை போல?''

''யாரைச் சொல்றீங்க?''

''உங்க அத்தான்... அதாவது கஸின்.''

''விநோதனா - அவரை எங்கே பார்த்தீங்க?''

''அவர்தான் என்னைக் கோபமாய் முறைச்சார். எங்கேன்னால் உங்க வீட்டு வாசல்ல நின்று என்னைப் பார்வையால் பொசுக்கினார்!''

''ஓ...'' உள்ளே சற்று பதட்டமாகப் பேச்சை மாற்றினாள்.

ஒரு மாற்றம் வேண்டி அசோக்குடன் குற்றாலம் வரை போய் வரலாம் என்று போய், வீட்டிற்கான சில பொருட்களுடன், ஒரு கூடை மங்குஸ்தான் பழங்களுடன் திரும்பிய போது... மேட்டின் ஆலமரத்தின் கீழே அந்த பைக் நின்றிருந்தது.

கூடவே விநோதனும் சுடும் பார்வையுடன்...

ஏனித்தனை ஆத்திரம்...?

எதற்காக இப்படி அலைபாய்கிறான்...

அசோக் கிளம்பியதும் ஒரு முடிவுடன் டார்ச்சைக் கையில் எடுத்தவள் வெளியே நடந்தாள்.

நெடிய நிழருவமாய் இன்னும் அவன் அங்கேயே நிற்பது கண்டதும் உள்ளே 'திக்'கென்றது.

7

''இது போதி மரமில்லைன்னு நினைக்கிறேன்'' என்றாள் சற்று இயல்பாக.

''நான் வேண்டுறது ஞானமில்லையே?'' இருளிலிருந்து இடக்காக பதில் வந்தது!

''வீட்டுக்கு வரலாமே அத்தான்... வந்து பாருங்க...''



''லான்சரில் வரும் 'ஷோக்' பேர்வழிகள்தான் அங்கே தடாலடியாய் நுழையலாம்... நானெல்லாம்...''

கசப்பாய் இழுத்தான்.

''குமாரியோடு நீங்க வந்து சாப்பிடணும்... ஒரு நேரமாவது... குழந்தை...''

''வக்கீல் என்ன வேலையாய் வந்தான்?''

''வேலைன்னு இல்லை... நெல்லை வரைக்கும் வந்ததால் அப்படியே இங்கேயும் ஒரு எட்டு வந்துட்டுப் போறார்...''

''இத்தனை பெரிய வீட்டிற்கு நீ ஒரே வாரிசு... வந்து பார்க்கணும்தான். அவர் மெனக்கெடறது தப்பில்லை.''

இவளுக்குள் 'கடுகடு'வென கோபம் கிளம்பியது.

''தான் திருடன் பிறரை நம்பான்றது உண்மைதான். எல்லா ஆண்களும் வீடு கிடைக்குங்கற நினைப்பில்தான் கல்யாணம் செய்துக்கறாங்கன்னு அபிப்ராயப் படறீங்க... ம்ம்?''

பதிலுக்குக் காத்திராமல் திரும்பி நடந்தாள் -

இவள் இரவு முழுக்க கால் கடுக்க இங்கேயே நின்றால் என்ன என்று இருந்திருக்கலாம்... இப்படி பேச வந்திருக்கக் கூடாது என்று பொருமலுடன் நடந்தவளுக்கு முதுகை அவன் கண்கள் துளைப்பதான பிரமை.

வந்து படுத்தவளை தூக்கம் நெருங்கவில்லை. ரத்ன பாண்டியர் மூலம் வந்த பணத்தை சிறிதும் அவள் எதிர்பார்க்கவில்லை. அதை என்ன பண்ணப் போகிறோம் என்று திகைத்தது நிஜம்.

ஒரு வழியாய் திகைப்பு தெளிந்தது.

'வாழ்க்கை புல்லாங்குழல் போன்றது. தன்னிலே அது உள்புறம் வெறுமையானதுதான். ஆனால் மாபெரும்

சங்கீதத்தைப் பிரதிபலிக்கும் தகுதி கொண்டது' என்ற கருத்தில் உடன்பாடு ஏற்பட்ட நேரம்தான் மாமாவும் இறக்க, இந்த வீட்டைக் கவனிக்க நேர்ந்தது.

பலருக்கு சாபமாய், சோகமாய் இருந்த 'விஜய விலாஸ்'த்தை இந்த ஊருக்கே பயன்படும் வகையில் மாற்ற வேண்டுமென்ற எண்ணம் முகிழ்த்தது...

ஆனால் இதுவும் தப்போ?

பார்ப்பவர்களை கடுப்பேற்றாமல் சென்னையிலேயே இருந்திருக்கலாம். கிடைத்த பணத்தை வங்கியில் போட்டுவிட்டு, அல்லது சின்னதாய் ஒரு ஃபிளாட் வாங்கி, வேலையும் தேடிக் கொண்டு 'அக்கடா' என கிடந்திருந்தால் எல்லோருக்கும் நிம்மதி...

ஆனால் சிரமப்படாமல் எதைத்தான் சாதிக்கக் கூடும்?

பெருமூச்சுடன் புரண்டாள் -

''என்னம்மா தூக்கம் பிடிக்கலையா?''

''ஏதோ யோசனை, லச்சு.''

''காலார நடப்பீங்கன்னு நினைச்சேன் - சட்டுன்னு திரும்பிட்டீங்க?''

லட்சுமி தெரிந்தேதான் கேட்கிறாளோ?

''போனேன்... விநோதன் அத்தான் வெளியே நிற்பது தெரிந்துதான் போனேன் - வேறு ஒண்ணுமில்லை.''

''இப்ப அவருக்கு இங்கன என்ன வேலைன்னுதான் தெரியலை...''

லட்சுமியின் குரலில் காட்டமிருந்தது.

இவள் பதிலளிக்காமல் சுற்றும் மின் விசிறியையே பார்த்திருந்தாள். நீலவிளக்கும் மின் விசிறியின் சன்ன



[illegible] வேறு உலகில் இருப்பது போன்ற பிரமை...

இன்னும் இந்த இடமாற்றம் முழுக்கப் பழகவில்லை -

லட்சுமி உடனிருந்தாலும், தனிமையும் பழைய நினைவுகளும் அவளை நடுச்சாமத்தில் எழுப்பி பிய்த்துப் பிறாய்ந்தன.

''முன்னே இருந்தது போல இல்லைம்மா அந்தத் தம்பி...''

''ஏன்?'' இருளில் காற்றாய் கிசுகிசுத்தாள் இந்தக் கேள்வியை.

''அந்த மட்டுக்குமாய் நம்பக் குமாரி பொண்ணு இவரைப் போராடி கட்டிக்கிட்டதுக்கு சந்தோஷமாய் இருக்கக் காணோம்.''

துணுக்கென்றது.

ஆசைப்பட்டது குமாரி என்றாலும் அந்தளவு அவளுக்குள் ஆசையைத் தூண்டி விட்டது அவன் - விநோதன்.

இல்லாமலா மழை இரவில் குமாரியை இழுத்து அணைத்தான்...?

இதை குமாரி மட்டுமே சொல்லியிருந்தால் நம்பியிருக்க மாட்டாள். விநோதனின் கடிதமே அந்த சம்பவத்தை ஒத்துக் கொண்டதே...

ச்சே... எத்தனை கீழ்த்தரமான அதிர்ச்சியைத் தந்து விட்டான். தன் மனப் பீடத்தில் வைத்து பூஜித்த ஒரு அன்புச் சிலை திடீரென குனிந்து பயங்கரமாய் இளித்தது போன்ற வெலவெலப்பு!

''அவங்க சந்தோஷமில்லாமல் இருப்பதாய் எப்படி சொல்ல முடியும் லச்சு?''

''அப்படி ஐக்கியமாய் இருக்கவங்க இடையே இன்னொருத்தி வர ஏலுமா?''

''வேறு ஒருத்தியா... யாரு?''

''குமாரி பொண்ணுக்கு மேலுக்கு முடியலைம்மா... ஆனா நம்ப யாரையும் அண்டவும் விடாது...''

''ம்ம்... அதான் எங்கேயும் காண முடியலையே...''

சொன்னாலும் விஜுலாவிற்குள் குற்ற உணர்வு குடைந்தது. இதே வீட்டில் தன்னுடன் வளர்ந்தவளை போய் முதலில் பார்த்திருக்க வேண்டும் என்ற தவிப்பு.

''அக்காவுக்கு என்ன?''

''உடம்புக்கு கேடுங்கறதை விட மனசு தொய்ஞ்சு போச்சும்மா. எங்களுதுல பெண்டுங்க வயக்காட்டு வேலைக்கு நடுவே கூட பிள்ளைய பெத்து எடுத்திருங்க - குமாரிப் பொண்ணு ஒண்ணைப் பெக்கறதுக்கே ஐயோ அம்மான்னு படுத்திருச்சு. ஆக பிறந்ததோடு, பெத்தவளையும் கவனிக்க தம்பி ஒரு ஆளைப் போட்டாரு...''

''பாவம்... அம்மா இருந்திருந்தால்...''

''ம்ஹும்.. யாரையும் படியேற விடமாட்டேங்குதேம்மா. எல்லாரும் தம் புருஷனைப் பிரிச்சு எடுத்துக்க வர்றாங்கறது போலொரு சந்தேகம். அப்படி அஞ்சறப் பொண்ணு. எழுந்து ஓடியாடி வீட்டைக் கட்டிக் காபந்து பண்ண வேணாம்?''

''பாவம் - அவளால முடியலை...''

''இப்ப நர்ஸுங்கற பேர்ல ஒரு மேனாமினுக்கி அங்கே போகுறா - பேரு குமுதா. சிறு வயசுத்தான்... என்னாத் தளுக்கும்மா! தேர் தொம்பையாட்டம் மூஞ்சுக்கு இரு பக்கமும் சுருண்டு கிடக்கும் முடி, ஜிகினாப் பொட்டு, கண்ணாடி சேலைன்னு...''



விஜுலாவிற்கு நெஞ்சை யாரோ ஏறி மிதித்தது போல மூச்சடைத்தது. தன்னுடையவன் என்று பல வருடங்களுக்கு முன் தான் தன்னுள் வைத்துக் கொண்டாடிய விநோதனா இப்படி...? லட்சுமி இட்டுக் கட்டும் ரகமில்லை -

கேட்டதைத்தான், கண்டதைத்தான் சொல்லுகிறாள் -

ஆக ஊருக்குள் இப்படி ஒரு பேச்சு உலாவுகிறது.

மனைவி முடியாமல் படுக்கையில் கிடக்க, ஐயா ஒரு அலங்கார தாதியோடு சரசம் பண்ணுகிறார் என்று!

கண்களை இறுக மூடினாள் -

உள்ளே ஆத்திரம் குபுகுபுத்தது - உடலெங்கும் பரவியது.

''எங்காத்தா சொல்லும்மா. தண்ணியக் காய்ச்சுப்பிட்டா அதன் ருசி மாறிப்போயிடும்... தம்பதிகளுக்கு இடையே இப்படி இன்னொருத்தி புகுந்துட்டா பழைய நேசம் இருக்காதுன்னு...''

''கேட்க யாருமில்லை என்று நினைச்சுட்டாரா?'' தனக்குள்ளாகப் பொருமினாள் விஜுலா.

இரு நாட்களில் விநோதனை போஸ்ட் ஆபீஸின் அருகே கண்ட போது அதே எரிச்சல் மீண்டும் பரவி சூடேற்றியது.

தனக்காக வந்திருந்த ஒரு சில தபால்களைப் பெற்றுக் கொண்டவள் மெள்ள நடக்கலானாள் - இந்த நடைக்காகவே அவள் விலகியது. வந்த இடத்தில் வாக்குவாதம் எதற்கு?

ஆனால் வலை விலகிப் போனாலும் மீன் வலிய தேடி வந்து சிக்கியது!

''என்ன... நடப்பது மறக்காமலிருக்க காலார வந்தாயா?'' என்றான்.

''நடை எப்படி மறக்கும்?''

''லான்ஸர் சவாரிக்குப் பழகிய உடம்பில்லையா?''

''அது அசோக்கின் கார்... ஆக எனக்கானது நடைதான். புதுசு வர வர பழசை மறக்கறவன் நானல்ல...''

அவளையும் மீறி வேறு அர்த்தத்தால் குத்தினாள்.

''நானும் எதையும் மறக்கலை...''

''குமாரியை... கட்டியவளையே மறந்துட்டதாய் ஊரில் பேச்சு.'' என்றாள் நறுக்கென்று.

விநோதனின் கண்கள் இடுங்கிக் கூர்மையாகின.

''ஊர் கண்டதையும் பேசும்...''

''கண்டதைத்தான் பேசும்னு நம்பறேன்.''

அந்த சிலேடையில் அவனது உதடுகள் சற்றே நக்கலாய் மடிந்தன.

''ஆக மாமா உங்களைச் சரியாய்தான் கணிச்சிருக்கார்... ஏதோ எதிர்பார்த்துதான் நீங்க குமாரியைக் கல்யாணம் செய்து...''

குறுக்கே வெட்டினான் -

''ஏதோ என்ன? விஜயவிலாஸத்தை... உங்க வீட்டை எதிர்பார்த்து - அப்படித்தானே?''

''ஆமா... ஆனா உங்க கைக்கு எங்க வீடு வராது...''

தீர்மானமாய் சொன்னாள்.

''அதோ நீ கடவுள்ங்கற தோரணையில் பேசறே விஜு.''

''தெய்வம் நின்று கொல்லும்... நான் ஏன் காத்திருக்கணும்?''



''அன்றே கொல்லும் அரசியா நீ? சரி - அடியேனைக் கொல்ல நான் செய்த தப்பு என்ன?''

''அது உங்களுக்கேத் தெரியும் - எங்கக்கா குமாரி சந்தோஷமாய் இல்லை... தவிர...''

''பரவாயில்ல... சொல்லு...''

''வேறு ஒரு பெண்ணோட நீங்க நெருக்கமாய் இருப்பதாய் பேச்சு...''

''விசித்திராவைப் பற்றிக் கேள்விப்படலை?''

''ஓ... குமுதாவை விட்டுட்டு வேறு ஒருத்தியோட...''

அவள் படபடக்க அவன் அமைதியாய் விளக்கினான் -

''விசித்ரா எம் மகள் - அஞ்சு வயசாகுது...''

வாயடைத்து நின்றாள்.

குமாரியின் வாழ்வில் புகுந்த வேறு ஒருத்தியின் பெயர் அறிந்த தனக்கு அக்கா மகளின் பெயர் கூட தெரியவில்லையே என்ற குற்ற குறுகுறுப்பு...

கால்கள் குழைய அவள் நடையின் வேகம் குறைந்தது.

''என் மகள் என்னை நம்பறா... பிரியமாய் இருக்கறா... இப்போதைக்கு அது போதும்...''

''அவளுக்கு இன்னும் விவரம் புரியாத பருவம்... பிறகு... பிறகாவது நீங்க திருந்தினால் சரி...''

கீழே விழுந்தும் மீசையில் மண் ஒட்டாதது போன்ற கெத்துடன் அவள் நடக்க, அவனும் கால்களை எட்டிப் போட்டு உடன் நடந்தான்...

''உனக்கு வயசு 33ன்னு நம்ப முடியலை விஜு... டீன் ஏஜ் பொண்ணு மாதிரி தோணுற... பணத்தால் இளமையையும் வாங்கிவிட முடியும் போல... ம்ம்?

''செல்வம் சுந்தரமும் தரும்...!'' தலை சாய்த்து கவிதை போலச் சொன்னான்.

''இளமையும் தெளிவான முகமும் இருக்கணும்னா அதற்கு செல்வம் அவசியமில்லை... சுத்தமான மனசே போதும்...''

அவன் முகம் கசந்தது -

''போதும் விஜு... ஊருக்குப் போகும் உபகாரி, உத்தமி வேஷத்தை எங்கிட்டேயும் காட்டாதே... எனக்கு உன் வண்டவாளமெல்லாம் தெரியும்...''

அதிர்ச்சியில் இவள் உறைந்து நிற்க, அவன் பெரிய எட்டுக்களை வைத்து விலகிப் போனான்...

## 8

இலவம் பஞ்சு தலையணைகளும் கூட நொந்தன.

உடம்பைச் சற்று புரட்டி வைத்தாள்... இப்படி படுக்கையிலேயே பல மாதங்களைக் கழித்ததால் உடம்பு கனத்து உருமாறியிருந்தது.

அறையின் மூலையிலிருந்த கண்ணாடி வைத்த தேக்கு மர மேஜையை துடைத்துக் கொண்டிருந்தவளின் உடம்பையும் ஆராய்ந்தன குமாரியின் கண்கள்.

உருவி விட்டது போன்ற இடுப்பு...

அதை எடுத்துக் காட்டுவதற்காய் சேலையின் முந்தானை மொத்தமாய் இழுத்து செருகப்பட்டிருந்தது.

தவிர புடவையை இடுப்பில் இத்தனை தழைத்துக் கட்டணுமா? எல்லாம் காரியமாய்த்தான்.



ரவிக்கை விளிம்பிற்கும் சேலைக் கட்டிற்கும் இடைப்பட்ட அந்த சிறுத்த சிவந்த இடுப்பைக் காட்டத்தான்...

சிலருக்கு மட்டும் எப்படி இத்தனை வடிவாய் அமைகிறது?

வஞ்சகமாய் வருந்தினாள் குமாரி!

தனக்கு இப்படி இடை சின்னதும் சிங்காரமுமாய் என்றுமே இருந்ததில்லை!

சற்று உருளையான தேகம்தான்...

அதனால்தான் கட்டியவனுக்கு தன் மேல் ஆசையில்லையோ?

ஏனோதானோ என்றமைந்த ஒரு தாம்பத்யம்.

சினிமாவின் நாயகர்கள் போல விநோதன் ஒரு பொழுதும் தன்னை இழைந்ததில்லை. தாலி கட்ட வைத்து விட்டால் போதும்... வழிக்கு வந்து விடுவார் என்று போட்ட கணக்கில் மகா குளறுபடி.

இப்போது பெரியவர்களின் ஆதரவும் இல்லை -

குழந்தை பெற்றதிலிருந்தே உடம்பு ஊதி சோர்ந்து விட, இப்போது தன்னையே தனக்குப் பார்க்கச் சகிக்கவில்லை -

ஆக கண்ணுக்குக் குளிர்ச்சியாய் ஒருத்தி வீட்டில் வளைய வரட்டும் என்றுதான் இந்த மேனாமினுக்கியை வேலைக்கு அமர்த்தி விட்டாரா?

பொறுக்காமல் அதட்டினாள்..

''ஏய் சேலையை ஒழுங்காகக் கட்டு.''

இன்னுமே கண்ணாடி மேஜையைத் துடைத்தபடி இருந்த பெண், இந்த அதட்டலைக் கவனித்தாளில்லை.

கண்ணாடியில் தெரியும் தன் வயிற்றை, சுழித்த தொப்புளை ரசிக்கிறாளோ?

''ஏய் குமுதா, உன்னைத்தான்... தேய்ச்சது போதும் - கண்ணாடி தேய்ஞ்சிடும்... முதல்ல சேலையைத் தழைய விடு...''

மிக சாவகாசமாய் திரும்பிய குமுதினி, புன்னகைத்தாள்.

உடம்பின் கவர்ச்சி இல்லாத அந்த சாதாரண முகம், சற்றும் கோபத்தைக் காட்டவில்லை.

குமாரிக்கு நெஞ்சடைத்தது...

மற்றவளின் இந்த அணுகுமுறை மிரட்டியது.

'நீ எப்படித் துச்சமாய் பேசினாலும் நான் அஞ்சி இங்கிருந்து ஓடிவிட மாட்டேன்' என்பதை அழுத்தமாய் தெரிவித்ததே அந்த புன்னகை.

''புடவையை எடுத்துச் செருகிகிட்டால் வேலை செய்ய சௌகர்யம் - உங்களுக்குப் பிடிக்கலைன்னா வேணாம்... அவ்வளவுதான...'' என்றபடி புடவையைத் தளர்த்தினாள்... சீராய் கட்டப்பட்டிருந்த சேலைக்கட்டில் இன்னுமே வடிவாய்தான் தெரிந்தாள்.

வெறுப்புடன் குமாரியின் முகம் திரும்பியது.

''கீழே யாரோ கதவைத் தட்டறாப்ல இருக்கு...'' என்று ஓடினாள் குமுதினி.

கீழே பேச்சுக் குரல்கள் கேட்க, உடம்பைப் படுக்கையில் புரட்டியபடி கிடந்தாள்... தான் வந்தவர்களை எல்லாம் வார்த்தைகளால் கடித்துத் துப்பிவிட இப்போதெல்லாம் யாரும் மேலே வந்து தன்னைப் பார்க்கத் துணிவதில்லை... தனிமை வறுத்தெடுக்கிறது... இப்போது வந்திருப்பது யார்...?

இவளுக்காய் படியேறி மாடி வருவது வைத்தியர் மட்டும்தான். மற்றவர்கள் வருவதற்கான காரணமும் தான் அறியாததா...? சந்தோஷமாய், செழிப்பாய் வாழ்வை



அனுபவிப்பவர்களுக்கு இந்த சீக்காளியை பார்க்க வருவதில் ஒரு வித திருப்தி.

''நான் நல்லவள் - கஷ்டப்படும் குமாரியைப் போய் விசாரித்து, அன்பொழுகப் பேசி தேற்றுபவள்'' என்னும் மாய்மாலம்!

நம்மைவிட துன்பத்தில் இருப்பவர்கள் இந்த உலகில் உண்டு என்பதான ஆசுவாசப் படல்!

இப்படி ஆரோக்கியமற்ற எண்ணங்களால் தன்னைச் சுற்றி ஒரு வெறுப்புக் கூட்டை இறுக்கிக் கொண்டதால் வெகுவாய் மூச்சை அடைத்ததுதான்...

மாடிப்படிகளில் ஏறும் காலடிச் சத்தம்...

''அக்கா, உங்களைப் பார்க்க உங்களுக்கு வேண்டியவங்க வந்திருக்காங்க...''

''ந்தா, நீ எங்கூட பிறந்தவளா? பிறகேன் 'அக்கா'ன்னு இழையறே- அதாரு வேண்டியவங்க...?''

நிஷ்டூரமாய் கேட்டாள்.

வாசலில் வந்து நின்ற உருவத்தைக் கண்டு நம்ப முடியாமல் கண்களை இடுக்கினாள்.

''நான்தான்க்கா விஜுலா.''

மூத்தவளுக்கு அது அதிர்ச்சியென்றால் மூத்தவளின் தோற்றம் சின்னவளுக்கு பெரிய அதிர்ச்சி..!

சுந்தரி... சதா கண்ணாடி முன் நின்று தன் அழகில் கர்வப்படும் குமாரி..?

தோலின் பளுப்பான மஞ்சள் நிறம் களிம்பு போல் ஏறியிருந் தது. முன்பு காதளவு மை தீட்டிய கண்களும் இப்போது மங்கி, மஞ்சள் பாய்ந்து சதை மடிப்பில் இடுங்கிக் கிடந்தன.

''சாரிக்கா... உன்னை உடனே வந்து பார்த்திருக்கணும்.''

''மனசில்லைல்ல...''

''நீ பிரியப்பட மாட்டேன்னு...''

தழுதழுத்த குரலோடு நெருங்கினாள்.

''இப்ப ஏன் பார்த்தோம்னு தோணுதா? பார்க்கறதுக்கு விகாரமாய் இருக்கிறேன்ல்ல?''

''உடம்புக்கு என்னக்கா...?''

''கல்யாணம் கல்யாணம்னு ஆலாய்ப் பறந்தேன்ல... அதுதான் வினை - மறு வருஷமே குழந்தையும் பெத்ததில் உடம்பு இப்படி முறிஞ்சிடுச்சு.''

''டாக்டர் என்ன சொல்றார்...? அவர் சொல்படி...''

''இருந்தால் என்னுயிர் உடம்பிலே தங்காது...''

கசப்பாய் வந்தது பதில்.

மருத்துவரின் சொல்படி இருந்தால், தன்னுயிர் தரிக்காது என்ற பதில் விஜுலா மற்றபடி புரிந்திருக்காதுதான்...

ஆனால் டாக்டரின் மனைவி பானு சொன்ன விவரங் களால் இப்போது புரிந்தது.

பானு சொன்னது இதுதான் -

''குழந்தை பெற்றதும் சில பெண்களுக்கு போஸ்ட் - நேட்டல் டிப்ரஷன்னு ஏற்படும் விஜுலா. ஹார்மோன்கள் வித்தியாசப்படுவதால் ஏற்படும் குளறுபடி அது. தாய் வீட்டில் பாசமும் தகுந்த போஷாக்கும் பராமரிப்புமாய் இருப்பதால் நம்ப நாட்டுப் பெண்களுக்கு அதன் பாதிப்பு அதிகம் தெரியாது. சிலர் குழந்தையைத் தூக்கக் கூட பிரியப்பட மாட்டாங்க. தனிமையிலிருந்த தாயில்லாத குமாரிக்கு அதன் பாதிப்பு அதிகமாயிருந்திருக்கக் கூடும். உள்ளூர் நாட்டு



வைத்தியர் தந்த மருந்து என்ன தெரியுமா...? பனங்கள்ளு! போஷாக்கு, மனசாந்திக்கு தரப்பட்ட கள், சீக்கிரமே ஒரு பழக்கமாகிப் போனது. ஆற்றில் மூழ்கப் போனவன் பரிதவிப்பில் மரக்கிளை என்று நினைத்துப் பற்றியது ஒரு கரடியாய் இருந்து, பிறகு அதன் பிடியிலிருந்து விடுபட முடியாமல் அழிந்த கதைதான்.''

''அத்தானுக்கு இது ஏதும் தெரியாதா?''

''பிள்ளைப் பெற்ற மகராசிகள் எல்லாரும் இப்படித்தான் மயங்கி, சோர்ந்து கிடப்பாங்கன்னு நினைச்சுட்டார் போல. நிறைய காசு கொடுத்து வேலையாளை கள்ளு கொண்டு தர ஏற்பாடு பண்ணிட்டாங்க குமாரி. கூடவே போஷாக்கான சாப்பாடு, சதா படுக்கை என்றிருக்க உடம்பு பெருத்திடுச்சு... தவிர ஈரலும் பாதிக்கப்பட்டிடுச்சாம் - நம்ப டாக்டர் இதைச் சொல்லி, குடிக்கறதை விடச் சொல்ல, அவங்க அழுது, ஆவேசப் பட்டிருக்காங்க... ஆக இவர் தூக்க மருந்து தந்திருக்கார் - மிஸ்டர் விநோதனுக்கும் கள் பழக்கத்தைப் பற்றிச் சொல்ல.. எத்தனை ஜாக்ரதையாய் இருந்தும் பழக்கம் எப்படியோ தொடருது... கிடைக்காத நாட்களில் அவங்க செய்யும் ஆர்ப்பாட்டம் அதிகமாம்... புருஷன் அனுசரணை யாய் இருந்தும், பார்க்க தான் அழகற்றுப் போனோம்ன்ற, தாழ்வு மனப்பான்மையில் குமாரி தன்னையே அழிச் சிட்டிருக்காங்க...''

பானுவின் இந்தப் பேச்சுதான், குமாரி தன்னை அடித்து விரட்டினாலும் பரவாயில்லை என்ற திடத்தோடு இளையவளை இங்கு அழைத்து வந்திருந்தது.

பிரியமும் ஆசையுமாய் திருமணம் செய்து கொண்ட வளிடம் ஏனிந்த குணக்கேடு? மற்றவரின் மனமறிந்து விட்டுக் கொடுக்காத வீம்பு ஏன்... ஏனிப்படி தன்னையே வதைத்து, அழித்துக் கொண்டிருக்கிறாள்?

படுத்திருந்தவளை கனிவுடன் பார்த்தாள் -

''மன்னிச்சிருக்கா... ஆலம்மேடு வந்ததும் முதல் காரியமாம் உன்னைத்தான் வந்து பார்த்திருக்கணும்... இனிப்பும் பழமும் கீழே சாப்பாட்டு மேஜையில் வச்சிருக்கேன். விசித்ரா ஸ்கூல் போயாச்சு போல?''

''ம்ம்.. அப்படியே வீட்டில் இருந்தாலும் அவ எங்கூட இருக்கறதில்லை - அவங்கப்பா பின்னாடியே திரிவா.''

''ம்ம்... பெரும்பாலான பெண் குழந்தைகள் அப்பா செல்லம்தான்னு கேள்விப்பட்டிருக்கேன்.''

அவ்விரு பெண்களுமே தகப்பனின் வலுவான தோளும் பாசக் கண்டிப்பும் இன்றி வளர்ந்தவர்கள் என்பதால் சற்று மௌனமாய் இருந்தனர் -

''நாலு வருஷங்களுக்கு மேலாச்சு உன்னைப் பார்த்து... உம்மகள் பிறந்ததும் - அப்ப அவளுக்குப் பெயர் வைக்கலை... குழந்தையைப் பார்க்க வந்தது...''

அப்போது முகத்திலடித்தது போல பேசி குமாரி தன்னை விரட்டியது நினைவு வர, விஜுலா அவசரமாய் பேச்சை மாற்றினாள்.

''எப்படிக்கா இருக்கே?''

''பார்த்தாலே தெரியலை - போக சமயம் பார்த்திட்டிருக்கேன்.''

''26 வயசுல ஏனிந்த பேச்சு?''

''இன்னும் உனக்கு அவர் மேல் ஆசைதான்... ம்ம்? அவருக்கும்...'' பல்லை இறுகக் கடித்ததில், தாடைகள் இறுகி குமாரியின் முகம் மேலும் கோரப்பட்டது.

''அவருக்கு இப்ப இந்த மேனா மினுக்கி குமுதினி மேல கண்ணு... ச்சே.''



ஆக குமாரி மாறவில்லை. தன்னைப் பாசமாய் பார்க்க வருபவர்களைக் காயப்படுத்துவதில் மும்முரமாய் இருக்கிறாள்...

அயர்ந்து நின்றாள் விஜுலா.

## 9

நாவைக் காப்பதே அரும் பெரும் சாதனைதான் என்று தனக்குத் தானே உபதேசித்தவள், விளக்கினாள் -

''இல்லைக்கா.. இது எனக்குப் பரிச்சயமான ஊர். நம்ப வீட்டை மீட்டு, இங்கேயே தங்கி என்னாலான நல்லதை இந்த ஆலம்மேட்டுக்குச் செய்யணும்ற நோக்கம் மட்டும்தான். யாருக்காகவும் - ஏன் உனக்காகக் கூட இல்லை... நம்ப வீட்டை விரிவுபடுத்தியிருக்கேன் - ஆரம்பப் பள்ளிக்கூடமாய் அது இருக்கும். நாம அந்தக் காலத்தில் செல்வாக்காய் இருந்ததால் ஜட்கா கட்டி ஐந்து மைல் போய் படிச்சோம். பின் ஹைஸ்கூலுக்கும் போக முடிந்தது... எளியதுகளால் முடியுமா?''

மறுபடி குமாரியின் கண்கள் மூடிக் கொண்டாலும் அவள் கவனிப்பதாகவே தோன்றியது.

''அவுட் - ஹவுஸை நமக்காக சௌகர்யமாய் கட்டியிருக்கேன் - உனக்கு ஒரு மாற்றம் தேவைன்னா... தாராளமாய் அங்கு வந்து இருக்கலாம்... நமக்கு தாய் வீடு இல்லையேன்னு ஏக்கமே வரவேணாம்...''

கண்களை மூடியபடியே சீறினாள் - பருத்த மார்புகள் தாழ்ந்து விம்மின -

''ஓ... என்னை இங்கிருந்து கிளப்பப் பார்க்கறே? இது என் வீடு. என் விநோதனின் வீடு... இங்கேருந்து நான் ஏன் போகணும்?''

- கிரீச்சிட்டாள்.

''கூல் டவுன் குமாரி...'' தங்கை அவசரமாய் விலகினாள்.

''உனக்கு தெரியுமில்ல? விநோதனுக்கு... தோ இந்தத் தாலியைக் கட்டினவருக்கு என்னைப் பிடிக்கலை... என்னால் அவரு நிம்மதியும் போச்சு. ஆனா ஒன்னைத் தெரிஞ்சுக்கோ.''

சிரமப்பட்டு உட்கார்ந்தவள் விரல் உயர்த்தி எச்சரித்தாள் -

''அவரை யாராலும், ஏன் உன்னாலும் கூட என்னளவுக்கு நேசிக்க முடியாது... ஆக அவரு எனக்குத்தான்.''

''சரிக்கா... யார் இல்லைன்னா? அத்தான் உனக்குத்தான்.''

அவசரமாய் அறையிலிருந்து வெளியேறியவள், படிகளில் இறங்க, எதிரே ஏறிக் கொண்டிருந்தான் விநோதன் - திகைத்த முகத்துடன் -

அவன் பின்னே காபி கோப்பைகளுடனான தட்டுடன் குமுதினி.

''என்ன நடக்குது இங்கே... குமாரி?''

அவசரமாய் போய் மனைவியின் அறையை எட்டிப் பார்த்தான் -

''நல்லவேளை வந்திட்டீங்களா? இவ சொல்றதைக் கேட்டீங்களா? இவ விஜய விலாஸத்தை எடுத்துக் கட்றாளாம்... நான் அங்கேயும் போய் இருக்கணுமாம் - நம்மைப் பிரிக்க சதி செய்றா... நீங்க என்னைய விட்டுட்டுப் போயிட மாட்டீங்களே?''

இடுங்கிய விழிகள் கெஞ்சின.

''அலட்டிக்காதே குமாரி - படு...''

என்ற விநோதன் இவளைப் பார்வையால் 'கிளம்பு' என்று உத்தரவிட்டுவிட்டு அறையை விட்டு விலகினான்.



''வரேன்க்கா...''

''போ.. போயிடு.. ஏற்கனவே இங்கே கலங்கின குட்டை. வந்து மேலும் மேலும் குழப்பாதே... போயிடு.''

படியில் இறங்கியவளை அவ்வார்த்தைகள் நெட்டி விரட்டின.

நல்ல வேளையாய் கீழே யாருமில்லை. ஆழ மூச்சிழுத்து தன்னை ஆசுவாசப்படுத்திய பின் வாசற்கதவை திறக்க முற்பட்டாள் - கதவின் மேல் மூலையிலிருந்த கொக்கி இறுகிக் கிடந்ததால் சற்று அழுத்தி முயற்சித்தபோது துரு ஏறிய இரும்பு இவளது விரல்களைக் கடித்தது.

''ஸ்ஸ்...''

''விலகு விஜு..'' என்றபடி அதைத் திறக்க முயன்றவனின் ஆண்மை இவளை சுட்டது.

அந்த ஆணுடலின் வெப்பமும் வாசனையும் இவள் உடம்பில் மின்சாரம் போன்ற ஒரு உணர்வை உற்பத்தி செய்தன.

இதென்ன விநோதனின் அருகிலிருந்ததால் ஏற்பட்ட பதட்டமா அல்லது பரவசமா?

உடம்பும் உள்ளமும் சேர்ந்து நடுங்கின.

''நீ பார்க்க வந்தது என்னைத்தானே விஜு... பார்த்தாச்சு. இன்னும் ஏன் பதறுறே?''

அவனது சீண்டலான வார்த்தைகள், பார்வை விரட்ட அவள் அவசரமாய் வீட்டின் படியிறங்கினாள்.

'சீச்சே என்ன திண்ணக்கம் - இவரைத் தேடி ஓடினதுபோல என்ன ஒரு ஆணவமான பேச்சு... கிண்டல்.. அதுவும் மனைவி உருமாறி கட்டிலில் கிடக்கும்போது...'

மனதின் ஆத்திரத்தையெல்லாம் விரல் நுனிகளுக்குக் கொண்டு வந்து தோட்டத்தில் களை பிடுங்கிக் கொண்டிருந்தாள்.

அவை வேரோடு பிய்த்து விசிறப்பட்டன!

''உங்களுக்கு ஏம்மா சிரமம். எழுந்திரிங்க... கையைக் கழுவிட்டு போய் உங்களைத் தேடி வந்தவுகளைப் பாருங்க...'' லட்சுமி உரிமையோடு அதட்ட நிமிர்ந்து கேட்டாள் -

''யார் வந்திருக்கா லச்சு?''

''உங்க டீச்சரம்மா - டிஸ்ஸியோ புஸ்ஸியோன்னு ஒரு வாய்க்கு விளங்காத பேரு... உங்களைப் பாக்க வந்திருக்காவ.''

அவசரமாய்க் கை கழுவியவள் முன்னறைக்குப் போனாள் -

பல ஆண்டுகளுக்கு முன்பு கண்ணாடியும் கண்டிப்புமாய் நிமிர்ந்து நின்ற அந்த உருவம் இப்போது தளர்ந்து சிறுத்துத் தோன்றியது.

கைகுவித்து வரவேற்றாள்.

''வாங்க டீச்சர், நீங்க ரிட்டையரான பிறகு இங்கே இல்லைன்னாங்க... அதான்...''

தான் போய் முறையாய், ஆசிரியையை பார்க்க முடியவில்லையே என்ற பரிதவிப்பில் பேசினாள் -

''பரவாயில்லம்மா... நானும் மகன், மகள் வீடுகள்னு மாறி மாறி போய் வந்திட்டு இருக்கேன்... நீ வந்திருக்கிறது கேள்விப்பட்டு வந்தேன்.. நல்லாயிருக்கே இல்லையாம்மா...''

''உங்க ஆசீர்வாதத்துல...''

''சந்தோஷம்'' - நெருங்கி இளையவளின் இரு தோள்களையும் பற்றி ஆர்வமாய் பார்த்தார்கள் டீச்சர்.



''விஜய விவாஸை பள்ளிக்கூடமாய் உருவாக்கப் போறது அறிஞ்சு ரொம்பப் பெருமையடா விஜு... கிரஷ் கூட வைக்கப் போறியாம் - நீயும் இங்கேயே தங்கிடப் போறியா?''

''ஸ்கூலுக்கு திறமையான டீச்சர்ஸ் அமைந்து, தலைமைக்கும் சரியான ஒருத்தர் பொறுப்பேற்கும் வரை இங்கேதான்... பிறகு மேற்படிப்பை தொடரணும்னு எண்ணம்... ஆக சென்னையிலும் இங்கேயுமாய்...''

''அப்ப இன்னும் உனக்குக் கல்யாணம் ஆகலை?''

''இல்லை டீச்சர்... காபி எடுத்துக்கோங்க...''

''நன்றிடா... மழைக்காலம் ஆரம்பிக்குதா? மூட்டுவலியும் கூடவே ஆரம்பம்... இங்கே முடக்கத்தான் கீரை உண்டு. ஒருகைப்பிடி இலை பறிச்சு போய் சமைச்சு சாப்பிடலாம்னு வந்தேன்...''

''சொல்லி விட்டிருந்தா நானே எடுத்து வந்திருப்பேனே?''

''நாமே ஒரு நடை வர்றதும் மூட்டுகளுக்கு நல்லதுதானே... குமாரியைப் பார்த்தியாம்மா?''

''ஆமா டீச்சர்... நீங்க...?''

''பார்த்த மனசு ஆறலை. உன்னைப் போல அவ படிக்கையான மாணவி இல்லைதான்... ஆனா நம்ப கையில படிச்ச குழந்தை நல்லாயிருந்தாத்தானே எங்களுக்குத் திருப்தி? கல்யாணம் காதல்னு ஆலாய்ப் பறந்தா... ம்ப்ச்... அதுலேயும் சுகப்படலை... நீ படிப்பும் பவிசுமாய் இருந்தாலும்...'' பாசமான முதிய கண்கள் இவளை வருடின, ''காலம் கடக்கும்முன்னே கல்யாணம் பண்ணிக்கணும்டா...''

''நீங்க பல வருஷங்களுக்கு முன்பு சொன்ன அறிவுரை எனக்கு இன்னும் பசுமையாய் ஞாபகமிருக்கு டீச்சர்.''

''கனவை ஊன்றி நீரூற்றுங்கள்...'' என்னால் முடியும்ங்கற நினைப்புதான் நீர் - 'முடியுமா'ங்கற சந்தேகக் களை வராமல் கவனமாய் பாதுகாக்கணும்...'ன்னு...''

டெய்ஸி டீச்சரின் முகத்தில் பெருமிதம் கலந்த ஆச்சரியம். ''நம்ப ஊருக்கே ஏதேனும் அடிப்படை நன்மை செய்யணும்ங்கறதுதான் இப்ப என் கனவுங்க டீச்சர்... கல்யாணமில்லை... அதுக்கு உங்க ஆசீர்வாதம் தேவை... குமாரியின் மகளைப் பார்த்திருப்பீங்க?''

''பின்னே... அவங்கப்பா பின்னால் வாலு போல துருதுருன்னு அலையுமே...''

''நம்ப ஸ்கூல்லதான் படிக்கிறாளா டீச்சர்? ப்டிப்பிலே எப்படி?'' ஆர்வமாய் விசாரித்தாள்.

''நான்தான் ரிட்டையர் ஆயிட்டேனே. ஆனாலும் அப்பப்ப ஸ்கூலுக்குப் போறதுதான். விசித்ரா அவ பாட்டியைப் போல திண்ணக்கமான குட்டி...''

விஜு"லாவின் புருவங்கள் உயர்ந்தன -

''பாட்டின்னா... என் பெரியம்மாவையா சொல்றீங்க?''

''இல்லைம்மா - சந்திரா - விநோதனின் அம்மாவைச் சொல்றேன்.''

''ம்ம்...''

''ஆனா ஒண்ணும்மா - ஒரு குழந்தைக்கு பெத்தவங்க ரெண்டு பேருமே சரியாய் அமையணும்... நீரும் நிலமும் போல - அப்பத்தான் வேர் பிடிச்சு குருத்து நிமிரும்... இங்கேப் பெற்றவள் படுக்கையில் கிடக்க, இந்தச் சின்னது தகப்பன் பின்னாடியே அலையும் - தவிர பெற்றவளுக்குத் தன்னைப் பிடிக்கலையேன்ற வீம்பு, வருத்தம் வேறு... ஆக நறுக் சுருக்குன்னு பேசும்... இல்லை வாயே திறக்காது...''



விஜு"லா புன்னகைத்தாள் -

''அவளைத்தான் இன்னும் பார்க்கக் கூடலை டீச்சர்.''

''தாய்ப்பாசத்துக்கு ஏங்கற அவளுக்கு உன் பாசம் கிடைச்சால் நல்லதுதான்... ஆனால்...''

''சொல்லுங்க.''

''உனக்கு கல்யாணமாயாச்சுன்னு இங்கே ஒரு வதந்தி...''

குமாரி ஊதிய பொறி ஊரை நன்கு கொளுத்தியிருந்தது.

''சரியாய் சொல்லிட்டீங்க... அது வெறும் வதந்தி.''

டீச்சர் சற்று நேரம் மௌனமாய் இருந்து பின் மெள்ள சொன்னார்கள் -

''அதைக் கேள்விப்பட்டதும்தான்... நம்பித்தான். விநோதன் குமாரியை கட்டினது.''

இவளுக்குள் படபடக்க, தலை குனிந்தாள் -

''அக்கா... அத்தானை விரும்பறது தெரிஞ்சதும் நான்... பட்டணத்திற்குப் போயிட்டேன் - இங்கேயிருந்து யாருக்கும் ஏன் எனக்குமே சஞ்சலத்தை, சலனத்தை ஏற்படுத்த விரும்பலை...''

இவர்கள் மூவரை நன்கு அறிந்த ஒரு சிலருக்கு விநோதன் விஜு"லாவை விசேஷமாய் நேசித்ததும் அவர்களின் பரஸ்பர விருப்பமும் தெரிந்திருந்தது என்பதால் வாய்விட்டு சொன்னாள்.

''அப்படீன்னா, இத்தனை பணம், சொத்தை உனக்கு விட்டுட்டுப் போனது யாரும்மா?''

''அவரை நான் அப்பான்னு அழைச்சேன் டீச்சர்... அப்படியேத்தான் நினைக்கவும் செய்தேன்...'' என்றவள் ராஜனைப் பற்றி அவனது தந்தை பற்றி அத்தனையையும் சொல்லி தெளிவாக்கினாள் -

''அப்ப இப்படி ஒரு புரளியைக் கிளப்பி, பரப்பியது யாரு?''

அதற்கான பதில் விஜுலாவிற்குத் தெரிந்ததுதான் - ஆனால் வதந்தியை நம்ப ஊரார் தயாராய் இருக்க, இவள் யாரை நோவது? குமாரியை குற்றம்சாட்டி இனி ஆகப் போவதென்ன?

## 10

தவிர வீங்கிய பழுப்பு நிற உடம்போடு கூச்சலிட்ட குமாரியே நினைவிற்கு வந்தாள். தன் தாயை அப்படி ஒரு நிலையில் சதா காணும் ஒரு சிறுமியின் மனநிலை பரிதாபம்தான்.

தாயின் அன்பு கிடைக்காததால் தகப்பனின் பின்னே அலைகிறாள் - ஆனால் விநோதன் முன்பு போலில்லை.

கசந்து இறுகிய அவனது முகம் இவளை வறுத்தது. தன்னிடம் காட்டும் குரோதத்தை அவர் மகளிடம் காட்டமாட்டார்தான்... ஆனால் உடலும் மனமும் நோயுற்ற தன் மனைவியிடம் கசந்த ஒரு கணவன் பாசமுள்ள நல்ல தகப்பனாய் இனிக்க முடியுமா?

கழிப்பறைக்கான டைல்ஸ் வாங்க தென்காசிக்குப் போனவள், கூடவே ஐந்து வயது சிறுமிக்கான இரு ஆயத்த ஆடைகளையும் வாங்கினாள் -

வாங்கிய பின் விசித்ராவை போய் பார்க்கும் ஆவல் கூடியது. 'வெடுக் நறுக்'கென பேசுவாளே... தோற்றத்தில் யாரைக் கொண்டிருப்பாள்?

மாடிக்குப் போய் குமாரியை கலவரப்படுத்தாமல் சிறுமியை மட்டும் பார்த்துவிட வேணும்...

உடைகளோடு, ஒரு இனிப்பு டப்பாவுடன் வீட்டிற்குள் தயக்கமாய்தான் நுழைந்தாள் - ஐந்து மணிக்கே பள்ளி



யிலிருந்து வீடு திரும்பி விடுவாளே... பின்புற தோட்டத்தில் விளையாடியபடி இருப்பாளோ? வீடு அசாத்திய அமைதியில் இருந்தது.

நிறைய இலைகளை உதிர்த்து விட்டு விச்ராந்தியாய் நின்றது பின்புறத் தோட்டம். தினுசுக்கு இரண்டாய் கனி மரங்கள். இவளுக்குக் கொய்யாக்காய் பிடிக்கும் என்பதால் விநோதன் இவளுக்காய் எப்போதும் அதைக் கொண்டு வருவான் -

''என்னத்தான் - எனக்கு மட்டும் ஏதுமில்லை?'' குமாரி சிணுங்க,

''பலாப் பழத்தை தூக்கி வர ஆள் போயிருக்கு'' என்று கிண்டலடிப்பான்.

அரவமே அற்ற அந்த இடம் அவளை அச்சுறுத்தியது. அருகே வேறு வீடுகளோ, கடை கண்ணி, ஆள் நடமாட்டமோ அற்ற தனிமை... பழங்கொத்திய களிப்பில் கூச்சலிடும் கிளிகள் மட்டுமே...

திரும்பி நடந்தாள்.

யாரோ மிக அருகில் நிற்பதைப் போன்றும்... தன்னைத் தொட வருவதும் போன்ற உணர்வில் கால்கள் அஞ்சி விரைந்தன -

அப்பொழுது இவளது சேலை முந்தானை இழுபட - 'விடுங்க வினோ...' சன்ன பய அரற்றலுடன் திரும்பியவளின் முகம் வெளுத்தது.

காரணங்கள் இரண்டு.

இவளது ஆடைத் தொட்டு இழுத்தது அவனில்லை!

ஆனால் சற்று எட்டி அவன் நின்றிருந்தது நிஜம்! விநாடியின் அத்தன்மையான தோப்பிலும் கூட வியர்த்து விட்டது.

இதயம் எம்பித் துடிப்பது அவனுக்குக் கேட்டு விடுமோ...?

பதறிய நெஞ்சை கை வைத்து அடக்கினாள் -

மெள்ள இவளை நோக்கி முன்னேறினான் -

''ஆக உன்னை இப்படி சீண்டி விளையாடினால் அது நானாய்தான் இருக்க முடியும்னு இன்னும் நினைக்கறே - இல்லையா விஜு?''

ஒரு கணம் குழம்பித்தான் போனாள்.

தன்னை அப்படி இழுத்தது அவன் என்று ஏன் நினைத்தேன்? அப்படி அந்நியோன்யமாய் சீண்டும் உரிமை அவனுக்கு உண்டா என்ன? இப்போதைக்கு அந்த உரிமையை எடுத்துக் கொண்டிருந்தது, ஒரு போகன்வில்லா கொடியின் முள்கிளை!

''இந்தச் செடியத்தனை எனக்கு துணிவில்லை விஜு...''

தலையாட்டியபடி சொன்னான்.

''ஆனால் முள்ளுண்டு - உத்தமனாய் பேசுகிறவர் இதைவிட கீழ்த்தரமாய் முன்பு குமாரியிடம் நடந்து கொள்ளவில்லை?'' உள்ளே பொருமினாள் -

இவள் முக மாற்றத்தை கணித்து விட்டவன் கேட்டான் -

''அப்படி நான் என்ன தப்பு செய்துட்டேன்?''

''உங்களைப் பற்றி பேச வரலை... விசித்ராவைப் பார்க்கலாம்னு வந்தேன்...''

''ஓ... விசி எங்கம்மாவோடு குற்றாலம் போயிருக்கா...''

ஏமாற்றத்தில் இவள் முகம் கூம்பியது.

''அங்கேயுள்ள கடைகளை ஒரு பார்வை பார்த்துட்டு வர்றதுல எங்க சின்னம்மாவிற்கு ஒரு குஷி.''

''ஓ... அவ அம்மா குமாரியைப் போலவே...? விசித்ராவிற்கு சிலது வாங்கினேன்... தாழ்வார மேடையில் வச்சிருக்கேன் - அவ வந்ததும் கொடுத்திடுங்க...''



''குமாரி எங்கேயும் வெளியே போறதில்லையே... சதா படுக்கையில்தான்...''

''நான் இளவயசுக் குமாரியைச் சொல்றேன் - ஆசையாய் ஷாப்பிங் பண்ணுவாள் - அவளை இப்படி உருக்குலைஞ்சு பார்க்க... ரொம்பப் பரிதாபமாய் இருக்குது...''

''அந்த மாற்றத்திற்கு நான் காரணம்னு நினைக்கறியா?''

அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

''அக்காவிற்கு வேண்டிய மட்டும் அன்பும் அனுசரணையும் கிடைச்சிருந்தால் அவளுக்கு ஏன் இந்த நிலை? ஆனால்... இன்னும் நீங்க முயன்றால் அவளை வாடாமல் பார்த்துக்கலாம்.''

கோபமாய் குறுக்கிட்டான் -

''என் உள்ளேயும் ரணமாய் இருக்குதே விஜு? நாம நமக்குள்ளே இருந்த பிரியத்தை வார்த்தைகளால் பரிமாறிக் கொண்டதில்லை... அப்போது அச்சிறு வயதில் அதற்குரிய பக்குவமோ பருவமோ இல்லை... ஆனால் நீ படிப்பிற்காக கிளம்பிய போதும் என்னிடம் ஒரு வார்த்தை சொல்லாமல் போனது எனக்கு முதல் அதிர்ச்சி. பிறகும் என்னைப் பார்த்து பேச உனக்கு மனமில்லை... பட்டணத்திற்குப் போனதும் பெரிய இடத்து சம்பந்தம் ஏற்படுத்திகிட்டே... எங்களை எட்டிப் பார்க்கவும் விடாதளவு உன்னைக் கட்டிப் போட்ட வசதி.''

''ஸாரி... நான் அங்கே போனது படிக்க...''

''இல்லை... இங்கேயிருந்து தப்பா...! அதுதான் ஏன்னு புரியலை... அச்சமயம் எனக்கு ஆறுதலாய் நின்றது குமாரிதான்... கடைசியாய் நீ பணத்திற்காய் ஒரு கிழவனை கல்யாணம் பண்ணினது தெரிந்ததும்...''

இவள் வலது கையை 'போதும்' என்பதாய் உயர்த்தினாள்.

''உங்களைப் பற்றி மட்டும் பேசுங்க... என்னைப் பற்றிய கற்பனைகள் வேண்டாம்...''

''அந்த ஏமாற்றத்தில் குமாரியை கல்யாணம் செய்துகிட்டேன்'' - சுருக்கமாய் முடித்தான்.

''கல்யாணத்திற்கு அது சரியான காரணமில்லை. சரி அதற்குப் பிறகாவது உங்க வாழ்வை நிறைவாய் அமைச்சிருக்கலாமே?''

''குமாரிக்குத் தெரியும்... அவளுக்கு என் மேலிருந்த வெறித்தனமான காதல் எனக்கு அவ பேரில் இல்லை. ஆனால் அதைத் தாலி ஒரு மந்திரக்கோல் போலாகி உருவாக்கித் தந்திடும்னு நினைச்ச அவளுக்கு அது அதிர்ச்சிதான்... சரி அடுத்த முடிச்சாய் குழந்தைதான்னு நினைச்சு உடனேயே கர்ப்பமானாள்... ஆனா கர்ப்பகால, பிரசவ சிரமங்களை அவளால் தாள முடியலை. படுக்கையிலேயே கிடந்த உடம்பு பெருக்க, எனக்கு அவள் மேலிருந்த எளிய பிரியமும் கூட இளைச்சிடுன்னு அவளாய் கற்பனை செய்தா... தன்னைத் தானே சமாதானப்படுத்த குடிக்கவும் ஆரம்பித்து...''

ஆகப் பழி தன் மீது சுமத்தப்படுகிறதா?

இவள் இங்கேருந்து விலகியதால் ஏற்பட்ட குளறுபடிதான்.

இத்தனைக்கும் காரணம் எனும் மாய்மாலம்.

''கதையை உங்க விருப்பத்திற்கு ஏற்ப திருகிக்கிட்டீங்க... நான் ஊரிலிருந்து சொல்லாமலே கிளம்பினது உண்மை... ஆனால் அதற்கு ஒரு காரணமும் இருக்கணுமில்லையா?''

இப்படிப் பேச இனி ஒரு சந்தர்ப்பம் வாய்க்காது -ஆக துணிந்து பேசினாள் -

''நீங்க அக்காவிடம் முறை தவறி நடந்து... நடக்க முயற்சித்த அன்றிரவே குமாரி என்னிடம் விஷயத்தைச் சொல்லிட்டா.''

அவன் கண்கள் இடுங்கின.



''என்ன சொல்றே?'' குரல் கடுத்தது.

''எல்லாம் எனக்குத் தெரியும்ங்கறேன்...மழை பெய்த அன்றிரவு... வீட்டு பின்பக்க ஷெட்டில் அக்காவைத் தொட நீங்க முயன்றது...''

உதட்டை அழுந்தக் கடித்து, கண்ணீரை மறைப்பதற்காய் வேறு பக்கமாய் பார்த்தாள் -

''குமாரிக்கா பாவம் பயந்துட்டா... அன்று அவளிடம் நீங்க அப்படி கீழ்த்தரமாய் நடக்க வேண்டிய அவசியம்? மோகமா... இல்லை அவள் மூலம்தான் விஜயவிலாஸை அடையக் கூடும்ன்ற வெறியா? இத்தனை முறையாய் நடந்து கொண்ட உங்களிடம் நான் சொல்லிட்டுப் போக... ஸாரி எனக்கு மனமில்லை...''

வார்த்தைகள் வெடித்து வடிந்தன.

''நீ சொல்றது... ஆறு வருஷங்களுக்கு முந்தின நவராத்திரி சமயமா? ஊரில் கூத்துப் பார்க்க பண்ணை வேலையாட்கள் போயிருந்த நாள் அது...?''

பாதி யோசனையும் மீதி கேள்வியுமாய் வினவினான்.

இவள் ஆமோதிக்கக் கூட மனமின்றி நின்றாள் -

''குமாரி சொன்ன அந்த சம்பவத்தால்தான் நீ... ஊரிலிருக்கப் பிடிக்காமல் கிளம்பினாயா விஜு?''

''நான் போனது உங்களுக்கு வசதிதானே? ஆனால் தயவு பண்ணி குமாரியை நல்லபடி கவனியுங்க... இங்கேயே இப்படியே விட்டுட்டால்... நோ... அவளை குணப்படுத்தணும்... ஹாஸ்பிடல்ல அக்காவைச் சேர்த்து அவளை [illegible]...''

படபடவென்று பேசியவள் ஏதோ யோசனையில் திகைத்து [illegible] தாண்டி வெளியே நடந்தாள் -

## 11

சிணுங்கிய செல்போனை காதிற்கு கொண்டு போனாள். விஜுலா லேசில் வீட்டிற்கு தொலைபேசி தொடர்பு கிடைக்காது போல... தவிர இந்த எண் யாருக்கும் தெரியாது.

''யெஸ்... விஜுலா ஹியர்.''

''குட்மார்னிங் - பானு பேசறேன்.''

''சொல்லுங்க பானு...''

''உங்க கஸின் குமாரி இப்ப நம்ப நர்ஸிங் ஹோமில் அட்மிட் ஆயாச்சு.''

''ஏன்... என்னாச்சு?''

''பதற அவசியமில்லை. ரொம்ப நாளாய் டாக்டர் ஒரு முழுமையான செக்-அப் தேவைன்னு சொல்லியும் குமாரி வரமுடியாதுன்னு அடம் பண்ணிட்டிருந்தாங்க... நேற்று ராத்திரி குடிச்சிட்டு மயக்கமாய் இருந்தவங்களை அதிகாலமே தூக்கிட்டு வந்து அட்மிட் பண்ணிட்டார் மிஸ்டர் விநோதன். ஸெடேட்டிவ் தந்திருக்காங்க... அவங்களை அமைதிப்படுத்தி பரிசோதனைக்கு, சிகிச்சைக்கு சம்மதிக்கப் பண்ணலாம்னு நம்பறாங்க... பிறகு சத்துள்ள ஆகாரமாயும் தந்து, நடக்க வைத்தால் ஹெர்ஹெல்த் வில் இம்ப்ரூவ்...''

''நன்றி பானு... நான் உடனே அங்கே வரேன்... விசித்ரா அதாவது குமாரியின் மகள் அங்கேயா இருக்கா?''

''ஸ்கூலுக்கு அனுப்பிட்டார்.''

''குமாரியின் உடம்பு எப்படி இருக்கறதாய் டாக்டர் சொல்றார்?''



''நிலை மோசம்தான்... லிவருக்கான பொதுவான மருந்து தந்திருக்கார் - பரிசோதனை செய்த பிறகுதான் நிஜமான பிரச்னை என்னன்னு தெரிய வரும்...''

''ஏதேனும் சமைத்து எடுத்து வரவா...''

''ஏதும் அவசியமில்லை. சாயங்காலம் விசித்ராவிற்கு பொறுப்பேற்றுக் கொண்டாலே விநோதனுக்கு நிம்மதிதான்... அவரின் அம்மாவும் இப்போது இங்கில்லைன்னார்...''

''நல்லதுங்க பானு... சீக்கிரம் பார்ப்போம்...''

சாயங்காலம் ஒரு டாக்ஸியை வரவழைத்து விசித்ராவின் பள்ளிக்குக் கிளம்பினாள்.

அவளை அழைத்துப் போவது குறித்து தலைமை ஆசிரியையிடம் பேசப் போனவளிடம் இவளது புதுப் பள்ளிப்பற்றி பல கேள்விகள் ஆர்வமாய் கேட்கப்பட்டன.

பள்ளி மணி ஒலிக்க,

''விசித்திராவின் வகுப்பு இங்கேருந்து நாலாவது அறை - கூட ப்யூனை அனுப்பறேன்...''

வகுப்பின் வாசலில் நின்று, சற்றே பெரிய பைகளை சுமந்தபடி தப்பிக்கும் அவசரத்துடன் வெளியேறிய சிறுமிகளைப் பார்த்திருந்தாள் - இவர்களுள் யார் விசித்ரா?

பரிச்சயமான ஜாடைகளை அச்சின்ன பட்டு முகங்களில் தேடினாள். ப்யூன் உதட்டைப் பிதுக்கியபடி வகுப்பறைக்குள் போனதும், அவரது முகம் கனிந்தது -

''என்ன பாப்பா? கிளம்ப மனசில்லையா?''

அவசரமாய் எட்டிப் பார்த்தாள் விஜுலா. கடைசி பெஞ்சில் உட்கார்ந்திருந்த குட்டிப் பெண் பையை தோளில் ஏற்றிக் கொண்டது.

''அப்பா காலைலேயே சொல்லிட்டாங்க...''

''என்ன?''

''சாயங்காலம் லேட்டாகும்னு...''

''வெளியே வாங்க பாப்பா...''

கொத்தமல்லி கட்டுக்கள் போல வகிடிற்கு இருபுறமும் இழுத்துக் கட்டியிருந்த கூந்தலில் ஒரு பக்கம் அவிழ்ந்து தொங்கியது. சோர்ந்த முகமும், உடலும்... தயக்கமான பார்வையுமாய்...

இப்படி எதிர்பார்க்கவில்லை. இந்தக் குழந்தையை. இவளுக்குள் பரிவு நுரைத்தது.

மேலும் முன்னேறி மிருதுவாய் அழைத்தாள் - ''விசித்திரா...'' பதிலுக்கு அந்த வஞ்சகமில்லாத விழிகள் இவளில் பதிந்தன.

''நான் விஜுலா - உன் சித்தி... உங்கப்பாவின் அனுமதியோட உன்னை உங்க வீட்டிற்குக் கூட்டிப் போக வந்திருக்கேன்ம்மா...''

''அப்பா ஏதாச்சும் தந்து விட்டாங்களா?''

''ம்ம்... இந்த கார்ட்.''

வாங்கிக் கவனமாய் அந்த முகவரி அட்டையைப் பார்த்த சிறுமி அதைத் தன் பைக்குள் செருகிக் கொண்டது.

''போலாம்...''

''நாளைக்குப் பார்ப்போங்க பெரிய மனுஷி'' என்றபடி ப்யூன் வெளியேற, விஜுலா கை நீட்டினாள் -

''உன் பையைத் தாம்மா.''

''வேணாம்... அப்பா ஏன் வரலை?''

காரியக்கார குட்டித்தான் - மனதுக்குள் மெச்சிக் கொண்டாள்



''காரில் போகும்போதே சொல்றேனே... உனக்கு கேக், முறுக்கு கொண்டு வந்திருக்கேன்.''

''நீங்கதான்... அன்னிக்கு எனக்கு சாக்லெட், டிரஸ்... தந்தது?''

''நானேதான்... இந்தா...''

காரில் ஏறியவளுக்கு எலுமிச்சம் பழரசத்தையும் தந்தாள் - அதைத் தாகத்துடன் பருகியவள் பலகாரத்தை மறுத்துவிட்டு,

''அம்மா... எப்படியிருக்காங்க?'' கேட்டாள்.

''நல்லாயிடுவாங்க... குமாரி எனக்கு அக்கா முறை...''

ஆற அமர இவளைப் பார்த்து விட்டு தீர்ப்பு சொன்னாள் -

''நீங்க அம்மா மாதிரி இல்ல...''

''நாங்க கூடப் பிறந்தவங்க, இல்லையே... எங்க அம்மாமார்தான் கூடப் பிறந்தவங்க...''

''அம்மாக்கு என்ன?''

''செக்-அப்... அதாவது உடம்பு நல்லாயிருக்கான்னு பார்த்துடறது நல்லதுன்னு ஹாஸ்பிட்டல்ல சேர்ந்திருக்கார் அப்பா...''

பக்கவாட்டில் நழுவி மறையும் சாலையைப் பார்த்தாள் -

''அம்மாக்குப் பிடிக்காது...''

''ஏது... யாரை...'' சிறு பதற்றத்துடன் கேட்டாள்.

''வீட்ல இருக்கத்தான் பிடிக்கும்.''

''சீக்கிரம் வீட்டிற்குத் திரும்பிடுவாங்க...'' ஆசுவாசமாகி ஆறுதல் கூறினாள்.

''அப்ப நான் எங்கே இருக்கது?''

''விஜய விலாஸிற்கு வாரியா விசிம்மா? அந்த பெரிய்ய வீட்லதான் நானும் உங்கம்மாவும் பிறந்து வளர்ந்தோம்...''

''அப்பா காட்னாங்க... இப்ப அம்மாப் பாக்கணும்...'' அதிகமாய் உணர்வுகளைக் காட்டாத முகத்தோடு தோரணையாய் பேசினாள்.

''சரி...'' உடனே ஒத்துக் கொண்டான். பானு மூலமே குழந்தையைப் பள்ளியிலிருந்து கூட்டி வர, விநோதனிடமிருந்து அனுமதி பெற்றிருந்தாள் - இனியும் எதைச் செய்தாலும் அவனது அனுமதி பெற்றே செய்வது நல்லது.

''தலைமுடி ஓம்பக் கலைஞ்சிருக்கே... சரி பண்ணட்டுமா?''

சிறுமிக்கு ஒத்த மழலையில் கேட்க, பதிலில்லை.

''அம்மாக்கு உன்னை நீட்டாப் பார்த்தாத்தானே சந்தோஷம்?''

சற்று பொறுத்து அந்த பதில் வந்தது -

''அம்மாக்கு என்னப் பாக்க பிடிக்காது...'' அதிர்ச்சியைக் காட்டாத விஜுலா, கைப்பையிலிருந்த சீப்பை எடுத்து மேலாக கூந்தலை வாரி விசித்ராவைச் சீர் படுத்தினாள் -

முகத்தைத் துடைத்துவிட்ட போது மருத்துவ மனையின் முன்னே கார் நின்றது.

தாழ்வாரத்தில் குமாரியின் அறையின் முன்பு நின்றிருந்த பெண்மணியை சற்று கூர்ந்து பார்க்கவும் புரிந்தது - சந்திரா அத்தை - விநோதனின் தாய்.

பேத்தியும் பாட்டியும் ஒருவரை ஒருவர் கண்டு கொள்ளாமல் நின்றார்கள் -

இவள்தான் அவசரமாய் கைகுவித்தாள் -

''அத்தை, நான் விஜுலா...''

''புரியது... அதிகம் மாறலை நீ.''

''விசித்ராவை ஸ்கூலிலிருந்து கூட்டி வந்தேன்.''



''விநோ சொன்னான்... விசி, இந்தக் கூஜாவில் பால் இருக்குது - ஊற்றிக் குடி.''

மறுபேச்சின்றி கீழ்ப்படிந்தாள் குழந்தை.

''குமாரிக்கு எப்படியிருக்குது அத்தை?''

மூத்தவள் சற்று நடக்க, குழந்தையிடமிருந்து சற்று விலகி நிற்கவே அது என்று புரிய விஜுலாவும் உடன் நடந்தாள்.

''தன் உடம்பையும் பாழ்படுத்தி, எம்மகன் வாழ்வையும் பாழாக்கிட்டா...'' அடிக்குரலின் சீற்றத்தில், விஜுலாவிற்குள் கோபம் தலை நீட்டியது.

நோயில் வாடும் மருமகளைப் பற்றிய பரிவில்லாமல் இதென்ன குற்றம் சுமத்தல்?

''ஆறு வருஷமாய் குமாரி உங்க மருமக... நீங்க இப்படி பேசறது... தப்புத்தை...''

''இவளைக் கல்யாணம் பண்ணினது அவனுடைய தப்பு... மடத்தனம் - எங்க குடும்பத்துக்கே இதொரு சாபம் போல... விஜய விலாஸத்து ஆட்களில் ஆசை வைக்க... கவிழன்னு...''

விறைப்பாய் நின்று காட்டமாய் பேசினாள் பெரியவள் - மகன் ஓரளவு செயலாய் இருந்தும் கூட, அவன் நிழலில் அண்டாமல் டவுனில் இருக்கும் ஒரு மகளிர் கல்லூரியில் விடுதிக் காப்பாளராக சந்திராத்தை பணிபுரிவதாய் கேள்விப் பட்டிருந்தாள் -

''இனி குமாரியின் உடம்பு தேற, குணமும் மாறிடும் அத்தை...''

''ஆறு வருஷக் குடித்தன அழகைத்தான் பார்த்தேனே... புருஷனுக்கு தொண்டூழியம் செய்ய வேண்டாம்- அன்பாய், அனுசரணையாய் பேசவும் கூட தெரியாத ஒரு மருமகள் - பொம்பளை குடிச்சா குடித்தனம் மேம்படுமா? வழிகாட்டியாய் முன்நடக்க வேண்டியவ வழுக்கிக் கிடந்தால்?

எனக்குத் தான் வாழ்வு அமையலை - குமாரி தனக்கு அமைந்ததை இப்படி நாசம் பண்ணிட்டாளே...''

வாழ்வில் கசப்பையே ருசித்த அம்முதிய கண்களில் கண்ணீர் இல்லை... ஆனால் மிதமிஞ்சிய வருத்தம் தெரிந்தது.

''ஷ்... இங்கே வேண்டாமத்தை... வீட்டுக்கு வர்றீங்களா...?''

''அதெல்லாம் வேணாம்மா -லீவ் சொல்லிட்டு வந்திருக்கேன் - இப்ப காலேஜ்ல பரீட்சை சமயம் - மறுவாரம் காலேஜ் மூடிட்டா நான் விநோவுடனேத் தங்கி இந்தக் குட்டியை பார்த்துப்பேன்... அதுவரை நீ இப்படி ஒத்தாசை செய்றதேப் போதும்...''

''குமாரிக்கு உடம்பு நல்லானதும்...''

மறுபடி மூத்தவள் குறுக்கிட்டாள் -

''எனக்கு நம்பிக்கை இல்லை. டாக்டர் முகத்தில் அருளே இல்லையே... டவுனாஸ்பத்திரிக்கு கூட்டிப் போய் பெரிய சோதனைங்க செய்யணும்ங்கறார் - இப்பவே பத்து, பனிரெண்டு போன் போட்டுட்டார்... விபரந்தான் ஏதும் தெரியலை...''

இவள் உள்ளத்தை ஒரு இருள் வந்து மூடியது... தன் தாயின் அறையை எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த சிறுமியைப் பார்த்தவளின் உடம்பு நடுங்கியது.

## 12

ஒரு கல்லூரிச் சூழலில் இருந்தவளுக்குள் நிறைய புத்துணர்வு ஏறியிருந்தது. நந்தவனத்தில் நடப்பவருக்கு நாசி நிறைய நறுமணம் ஏறுவது போல...

குற்றாலத்தின் கல்லூரியில் நடந்த பாட்டு, பேச்சு போட்டிகளுக்கு விஜுலாவையும் ஒரு நடுவராய் அழைக்க, இவள் தயங்கினாள் -



''எனக்கென்ன தகுதி இருக்குதுன்னு...?''

''உங்க ஊரே உங்களை மதித்துப் பாராட்டுதே... இத்தனை இளவயதில் உங்களின் பணத்தை ஊரின் உபகாரத்திற்காய் செலவழிக்கும் குணம் அரிது... பெரிது. டாக்டரின் மனைவி பானு மற்றொரு நடுவராய் இருப்பதால் உங்களுக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை... இளமையும் திறமையுமான உங்களைச் சந்திக்கும் எங்க மாணவிகளுக்கு அது பெரிய ஊக்கம் தரும். காலை ஒன்பதிற்கு உங்களை அழைத்துவர கார் அனுப்பிடட்டுமா?'' முதல்வர் இவளை சம்மதிக்க வைத்தார்.

ஒரு முழு நாளை கல்லூரி மாணவிகளூடே கழித்தது அருமையான அனுபவமாய் இருந்தது. நன்றி உரை முடித்து திரும்பியவளை வழியனுப்ப வந்த முதல்வர்,

''பள்ளிக்கூட வேலை எப்போது பூர்த்தியாகும்?'' - வினவினார்.

''நினைத்ததற்கு மேலாவே நேரத்தை பணத்தை இழுக்குது... ஆக நிச்சயமாய் சொல்ல முடியலை...''

''தனியாளாய் தேரை நகட்டுவது சிரமம்மா - ஊரார் உதவியையும் நீங்க கேட்கலாமே...''

''எப்படி?''

''நிகழ்ச்சி வைத்து அதன் மூலம் ஒரு தொகையை சேர்த்து...''

''நம்மூர் ஜனங்க... எளியவங்க... பாவம்...''

''உங்க பள்ளி, லைப்ரரி, கிரஷ் எல்லாம் அவங்களுக்குத் தானே - அதில் அவர்களுக்கும் ஒரு பங்குண்டு எனும் திருப்தி அவங்களுக்கு இருக்கட்டுமே...?''

பானுவும் இந்தக் கருத்தை ஒத்துக் கொண்டாள் -

''உங்களுக்கு சம்மதம்னால் அடுத்த மாதம் அருகிருக்கும் மற்ற கல்லூரிகளின் இடையேயான ஆடை அலங்கார அணிவகுப்பைக் கூட நிதித் திரட்ட பயன்படுத்திக்கலாம்...''

''குட் - டிக்கெட் போட்டு, இந்தக் கலையரங்கத்திலேயே பக்காவாய் நடத்தலாம்'' - பானுவின் உற்சாகம் கூடியது -

''டிக்கெட் விற்பதானால்... ஒரு பிரபலத்தின் பெயர் இருக்கணும்... எனக்கு ஜீவகனைத் தெரியும்... வந்து பாடுவாரான்னு கேட்கவா?''

தயக்கமாய் பேசினாள் விஜுலா.

''யார்... பிரபலமான யங் ஸிங்கரா?''

''ம்... அவர் தங்கை என் காலேஜ் மேட்... அப்படி பழக்கம்... நல்ல மனுஷர். தகுதியான காரணம்ங்கறதால் கேட்கலாம்...''

உற்சாகமாய் திட்டம் வளர்த்தனர் - இளமையுடன் கழித்த நாளின் பலன் போலும்...!

ஜீவகன் பிகு பண்ணாமல் சம்மதித்ததோடு பாடகர் குழுவோடு வருவதாய் சொல்ல, திட்டம் சூடு பிடித்தது.

இளம் வக்கீலான அசோக்கும் கை கொடுத்தான் -

''எது தேவைன்னாலும் போன் போடுங்க விஜுலா -

சென்னையில் எதுவுமே பிரச்சனையில்லை'' என்றதோடு அனுமதி சீட்டுக்கள், போஸ்ட்டர்ஸ் எல்லாம் அச்சடித்து அனுப்பினான் - பாடகர் குழுக்கான பயண ஏற்பாடுகளும் அவன் பொறுப்பானது.

நிகழ்ச்சி சம்பந்தமாய் அசோக் ஆலம்மேட்டிற்கு வர, விருந்து பலப்பட்டது. எம்பி எம்பி விருந்தாளியின் இலையில் அப்பளம் வடகம் இட்ட விசித்ராவை புன்னகையுடன் பார்த்தான் -

''எங்கக்கா பொண்ணு'' - விஜுலா அறிமுகப்படுத்தினாள் -

''ஓ... உங்க முறைக்கும்... ம்ம் முறைப் பையனின் மகள்?''

சறுக்கி உடனே சமாளித்தான்!

அசோக் கைகழுவும் சமயம் வெளியே ஜீப்பின் ஹாரன் ஒலித்தது -



''அப்பா வந்தாச்சு சித்தி...'' விசித்ரா பறந்தாள் -

''அப்பாவும் இங்கே சாப்பிடறாங்களான்னு கேளேம்மா...''

வழக்கத்திற்கு மாறாக இறங்கி வாசல் வரை வந்து நின்ற விநோதன், வழக்கம் போல அசோக்கைத் தீவிரமாய் முறைத்தான்!

இவளுக்குள் சிரிப்பு குமிழிட்டது.

அப்போதுதான் அந்த முறைப்பைப் பற்றி பேச்சு வந்ததா வும் இருக்கலாம்! ஆனாலும் வீம்பாய் நிற்கும் ஒரு சிறுவனைப் பார்ப்பது போல மனம் குழைந்து பரிதவிக்கவும் செய்கிறதே...

குமாரியை உள்ளுக்குள் இருந்து அரிப்பது கான்ஸராய் இருக்கலாம் என்று மருத்துவர் சொன்னதிலிருந்து இதே தவிப்புதான்...

அவன் முகம் உள்குமுறலை வெளிக்காட்டவில்லை.

''வந்து சாப்பிடுங்களேன் அத்தான்'' - இதமாய் அழைத்தாள் - ஆனால் விநோதனின் பார்வை என்னவோ அசோக் மீதேதான்... இயந்திரத்தனமாய் பதில் வந்தது.

''இல்ல... வீட்ல அம்மா காத்திருப்பாங்க.''

''ஒரே நிமிஷம்... கேரியரில் தர்றேன்... அத்தையும் சாப்பிடுவாங்கல்ல?'' அவன் மறுக்கும் முன் காரியத்தில் இறங்கினாள். உணவை அவன் ஜீப்பில் ஏற்றும்போது அடிக்குரலில் விசாரித்தான் -

''இந்த அசோக் நிஜமாவே வக்கீலா... இல்லை வக்கீல் ஜாலியாய் வேஷங் கட்டும் நடிகனா?'' என்று!

ஒரு கணம் விழித்தவள் மறு கணம் புன்னகைத்தாள் -

''இவருக்குக் கடவுள் புத்திசாலித்தனத்துடன் அழகையும் சேர்த்தே தந்திடுறார், அத்தான்...''

''சிரிப்பும் சிங்காரமும் இருக்குது... அறிவும் இருக்குன்றே?''

மெய்யான சந்தேகத்துடன் வினவினவன் கூடவே,

''இப்ப அதோடு உன் மூலம் பணமும் சேர்ந்திடுது... ம்ம்?'' என்று முடிக்க, இவளுக்குள் கோபம் 'சுர்'ரென ஆரம்பமானது.

''எல்லா ஆண்களும் உங்... அதேபோல... இருப்பாங் கன்னு நினைக்கக்கூடாது... பெண்ணின் பணம், சொத்திற்காக அவளை விரும்பறாங்கன்றது தப்பான எண்ணம்.''

அதற்குள் விசித்ராவையும் ஏற்றிக் கொண்ட வாகனம் புகையைக் கக்கி விட்டுக் கிளம்பியது.

குமாரியை மருத்துவமனையில் போய். பார்த்த போதெல்லாம் நோயாளியின் அழுகையும் அலறலையும் தாள முடியவில்லை. ஆக விஜுலா வீட்டிற்கான ஒத்தாசைகளோடு நிறுத்திக் கொண்டாள் -

அத்தை முதல் நாளே சொன்னதுபோல டாக்டரின் முகம் இருளோடிதான் கிடந்தது -

''கான்ஸர்ல செகன்ட்ரீஸ் கூட வந்தாச்சுன்னு தெரியுது... இத்தனை பரவிய புற்று நோயை, குணப்படுத்த முடியாது... வேதனையை மட்டும் மட்டுப்படுத்தலாம்...''

அவர் வருந்த, குமாரி மறுபக்கம் அலறினாள் - ''ஏன் என்னை வீட்டுக்குக் கூட்டிப் போக மாட்டேங்கறீங்க? இங்கேயே எனக்கு சமாதி கட்டறதாய் முடிவு பண்ணியாச்சா? அதான் நான் என் வீட்டை விட்டு வரலைன்னேன்... இது... இது... சித்ரவதை...''

நோய் முற்றிப் போனது அறிந்ததும் சூழலே மாறிப் போனது - ஒரு வார்த்தை பேச, புன்னகைக்கக் கூட எல்லாரும் யோசித்தார்கள்.



பெரும்பாலும் மயக்க மருந்தின் தயவில் உறங்கி வலியை, பயத்தை மறக்கடிக்கப்பட்ட குமாரியின் உடல் வற்றி சுருங்கலானது.

விழித்திருந்த வேளைகளில் ஒரு புலியைப் போன்ற ஆக்ரோஷத்துடன் கணவனைக் குதறி எடுத்தாள். ஆனால் விநோதன் அவளை விட்டு விலகவில்லை.

ஆக சில சமயம் பரிவும் காட்டினாள் -

''ஆறு வருஷம்... 2,100 நாளுக்கு மேல் நீங்க எனக்கே எனக்குன்னு இருந்தாச்சு... அது போதும்... இனி நீங்க உங்க மனசு போல வாழணும்... இதுக்கும் மேல இந்த குமாரிக்கு வேண்டாம்னு ஆண்டவனே தீர்மானிச்ச பிறவு... நான் வாழ ஆசைப்பட்டுத்தான் என்ன?''

''பிழைச்சிடுவேன்னு நினைக்கணும், நம்பணும் குமாரி... விசித்ராவுக்காக வேணும்...''

''ம்ஹூம்... எனக்கு... எனக்கு உயிர் மேல ஆசை வர்றதே உங்களை நினைக்கறப்பதான்... ஆனா நான் பண்ண பாவத்திற்கு அது நடக்காது...'' மூச்சிரைப்பவளைப் பார்ப்பவன் நெகிழ்ந்து நிற்பான்.

விஜுலா நிதி திரட்டும் விழாவிற்கான சில நுழைவு சீட்டுக் கட்டுக்களுடன் நெல்லைக் கல்லூரிகளுக்குச் சென்ற இடத்தில்தான் செய்தி அவளை எட்டியது -

''குமாரி இறந்து விட்டாள்'' - என்று!

இவளின் முக அதிர்வைக் கண்ட கல்லூரி பேராசிரியர்கள் பலர் ஆறுதலும் உதவியுமாய் துணை நின்றனர் -

''ப்ச்... ரொம்ப நெருங்கினவங்க போல... இந்த நேரத்தில்...''

''அவளைத் தவிர உறவுன்னு இப்ப எனக்கு யாருமே இல்லை...'' சொல்லி முடிக்கவும் முடியாமல் விம்மினாள் -

அந்த சகோதரியை முழுக்க அறியாமலேயே இழந்து விட்டேனோ என்ற துக்கம் வேறு...

''அப்படி சொல்லாதேம்மா... கடவுள் எடுத்த உறவுக்கு ஈடாய் உனக்கு இரட்டிப்பாய் தருவார்... தைரியமாய் இரு...''

ஆறுதல் சொன்னார் ஒரு மூத்த பெண்மணி.

## 13

சாவு விழுந்ததால் கழுவி விடப்பட்ட வீடு தலைக்குக் குளித்ததால் சோர்ந்த மூதாட்டி போல அயர்ந்து கிடந்தது.

விஜுலாவின் சொற்படி அவள் வீட்டில் சமைத்து இங்கு கொண்டு வந்து பரிமாறிய பணியாட்கள் கேரியர்களுடன் கிளம்பி நின்றார்கள் - லட்சுமி கேட்டாள் -

''நாம போலாமாம்மா...?''

விஜுலா பாயை உதறி விரித்தாள் -

''இல்லை ஆயா... இன்னைக்கு இங்கேயே படுத்துட்டு நாளை வரேன்...''

''காலை பத்து மணிக்கு டாக்ஸியை வரச் சொல்லவா?''

''ம்ம்...''

ஓரக்கண்ணால் சந்திரா அத்தையைப் பார்த்தாள் - அங்கு மறுப்பேதும் தெரியவில்லை.

விசித்ராவின் உற்சாகம் தெளிவாய் தெரிந்தது - ஒரு சிறு கூஜாவை நிரப்பி,

''ராத்திரி உங்களுக்குத் தாகமெடுத்தால் குடிக்க, சித்தி'' என்று இவளருகே கொண்டு வைத்தாள் -

''சமத்துடீ - உங்கப்பனோட போய் படு... அவனும் தனியா இருக்க வேண்டாம்'' தாயின் கரிசனையுடன் சொன்னாள் விநோதனின் தாய்.



''ம்ம்... அப்பா அழுதாங்க, பாட்டி... நாம் பார்த்தேன் - சொல்லும் போதே குழந்தையின் முகம் கோண, இவள் கண்களையும் உப்பு நீர் குத்தியது. பிறர் முன்னிலையில் சமாளித்து நின்றாலும் அவனது மனவேதனை இவளுக்குப் புரிந்தது.

இனி தன் மனைவியை இந்த வீட்டில்... ஏன் எங்குமே பார்க்க முடியாது என்ற ஆறாத ஆற்றாமை!

விளக்குகளை அமர்த்தி விட்டு படுத்தாள். விடிவிளக்கின் நீல ஒளி ஏதோ ரகசியம் பேச அவர்களைத் தூண்டியது.

குமாரி புலம்பியது போல இரண்டாயிரம் நாட்களுக்கு மேல் அவளின் ஆசைப்படியே வாழ்ந்த இந்த வீட்டை விட்டு அவளைக் கிளப்பியதுதான் தப்போ?

குணப்படுத்தி விடலாம் என்ற நம்பிக்கையில் அல்லவா விநோதனைத் தூண்டினோம்...

இப்படி குமாரி சடலமாய்தான் திரும்புவாள் என்று நினைக்கவில்லையே?

பெருமூச்சுடன் புரண்டு படுத்த அதே சமயம் அத்தையும் புரண்டார்கள் -

''தூக்கம் வரலையாத்தை?''

''மனசு ஆறலையே... இப்படிப் போவான்னு யார் நினைச்சா?''

நீல விளக்கின் பளபளப்பையே பார்த்திருந்தாள் -

''நீ எம்மருமகளாய் வந்திருந்தால் இந்த அவலமெல்லாம் இல்லை...!''

''அத்தை!'' - மெள்ள அதட்டினாள் -

''விநோ மனசுல நீ இருந்தது தெரியும் - பிறகு எப்படி [illegible]னு குமாரி புகுந்தாங்கறது புரியலை... -அவ அவனுக்கு

ஏத்தவளில்லை. ஆனாலும் எங்களைக் கேட்டுட்டா அவங்க கல்யாணம் நடந்துச்சு? ஏன் அத்தனை ஆத்திரம்... அவசரம்... ஒண்ணும் புரியலை...''

''பிரியப்பட்டுத்தான் சேர்ந்தாங்க அத்தை...''

''அப்படின்னா இந்த வீட்ல ஏன் சந்தோஷம் இல்லை? நான் உங்க மாமாக்கு வாழ்க்கைப்படாமல் வீம்பாய் நின்னேன் - கல்யாணம் கட்டுனதுகளுக்கு ஏன் வீம்பு?''

இதுபோல ரகசியங்களுக்குத் தோதான நேரம் வேறு அமையாது என்று பட கேட்டாள்.

''விநோதன் எங்க மாமாக்குப் பிறந்தவர்னு தெரியும்- பின்னும் ஏன் நீங்க சேர்ந்து... அதாவது திருமணம் செய்துக்கலை அத்தை?''

''வெறுப்பு... வீம்பு! பெரிய இடத்து பையன் மேல மகள் ஆசைப்படறது தெரிஞ்சதுமே எங்கப்பா,எங்க தகுதிக்கு ஏத்த இடமாய் தேடி எடுத்து பரிசமும் போட்டுட்டார்... அப்பமும் தெனாவெட்டாய் உடுத்திட்டு நின்னேன்... என்னைய மீறி என்ன நடந்திடும்னு... பரிசம் போட்ட பயல் ஊரெல்லாம் கதை திரிச்சிருக்கான்... நிச்சயித்த கையாலே என்னைத் தொட்டுட்டதாயும் கொஞ்சினதாயும்...''

''ஆனா அதற்கும் முன்னமே எங்க மாமாவோட பழக்கமில்லையா?''

''அவரால ரெண்டு மாசம் முழுகாத நிலை எனக்கு! அது எப்பேர்ப்பட்ட தப்பு, அசட்டு தைரியம்ங்கறது இப்ப தெரியுது... அது அப்ப புரியாத பருவம்! எப்படியானாலும் ராஜா போல வந்து இவர் என்னை மீட்டு கூட்டிட்டுப் போவார்ன்ற எதிர்பார்ப்பு...''

இருவரும் கலைக்கத் துணியாத மௌனம் சற்று நேரம் அவர்களிடையே நின்றது.



''ஆனா... அவர் நான் எதிர்பார்க்காததைக் கேட்டுட்டார்...''

''உங்க பரிசச் சமயம் மாமா வெளியூர் போயிருந்ததாய்...?''

''ஆமா - குத்தகைக்கு விட்டிருந்த இவர் நிலத்தை அவன் விற்க முயன்றதாய் கேள்விப்பட்டு ஓடினார்... வேலை அங்கே ஒரு மாசத்துக்கு இழுத்திடுச்சு... வீட்லேயும் எங்க காதல் தெரிஞ்சதால் ஏற்பட்ட கலவரம்... ஆக எல்லாம் ஆறட்டும்னு அசலூரிலேருந்துட்டு வந்தவர் கேட்டாரே கணக்காய் -

''இது அவம் பிள்ளைதானேன்னு...?''

வருவாய் மாறியிருந்ததும் வலித்தது போலும் -

''நான் கர்ப்பங்கறது தெரிஞ்சதும் பரிசம் போட்டவனும் தலைமறைவாயிட்டான்...''

''நீங்க மாமாட்ட பேசி புரிய வச்சிருக்கணும்...''

''ரெண்டு ஆண் சிங்கங்களும் ஓடிப் போயாச்சு. பிடரியைப் பிடிச்சு வந்து உலுக்கி சொன்னாலும் கேட்பவரில்லை உன் மாமா - தவிர எனக்குந்தான் வீம்பு. தாலி கட்டறதுக்கு முன்னே சேலைக்கட்டை அவிழ்த்தவருக்கு இப்படி ஒரு சந்தேகம் வரலாமான்ற வெறி... ஆனா அப்படி உடன்படும் பெண் மேலே ஆண் பிள்ளைக்கு மரியாதை இருக்காதுன்றது பட்டுப் புரிஞ்சுது... சரி... இது நாம பண்ண தப்புக்கான பிராயசித்தம்னு ஒண்டியாய் நின்னுட்டேன்...''

''மாமாவும்தான்... அவரை மாப்பிள்ளையாக்க பலர் முயற்சித்தும் முடியலியே?''

''அதான் சொன்னேனே... வெட்டி வீம்பு... அவர் காலில் விழுந்து நான் கதறியிருந்தால் தூக்கியெடுத்துத் தாலி முடிஞ்சிருப்பார்... ஆனால் இப்படிக் கேவலமாய் ஒரு கேள்வி கேட்டவரிடம் என்ன பஞ்சாயத்துன்னு நானும் வெட்டிகிட்டேன்...வயித்துல இருப்பது யார் பிள்ளைங்கறது விவாதம் பண்ற விஷயமா விஜுலா?''

''புரியுது...'' பெருமூச்சுடன் ஆமோதித்தாள்.

''அவருக்கு எனக்கு சம அந்தஸ்தில்லைன்றது தெரிஞ்சும், ஏன் எங்களுக்கிடையே ஆசை கிளம்புச்சோ... எல்லாம் விதி...''

''விதியை மதியால் மாற்ற முடியுமோ என்னவோ... அன்பால் முயற்சி செய்து பார்க்கலாம்... அன்பிற்கு மசியாதவங்க யாரு? பழசை எல்லாம் மறந்திடுங்க அத்தை... நான் சென்னையில் எடுத்திருக்கும் டிப்ளமோ கோர்ஸ் சம்பந்தமாய் அங்கே ஒரு மாசமேனும் போகணும். நீங்க நம்ப ஸ்கூலை பார்த்துட்டா, எனக்குக் கவலையேயில்லை...''

''எனக்கெதுக்கும்மா அந்த பொறுப்பு, பெருமை எல்லாம்?''

''ஏன்னா நீங்கதான் விஜய விலாசத்தின் மருமகள் - வேறு யாரும் அங்கே அந்தப் பேரோடு நுழையிலியே - மாமா தன் மனசுக்குள்ளும் வேறு யாருக்கும் இடம் தரலை...''

லேசான விசும்பல் அத்தை அழுவதைக் காட்டித் தந்தது.

''கசப்பெல்லாம் இதோடு கரைஞ்சு போகட்டுமத்தை. நிம்மதியாய் தூங்குங்க... சிட்டாட்டம் விசி இருக்கா...''

''அப்ப அவளுந்தான் ஏன் ஸ்கூலுக்கு அத்தனை தூரம் போகணும்? உன்... ம்ம் நம்ப ஸ்கூலிலேயே சேர்த்திடலாமே...?''

''சேர்த்திடலாமே!''

நிம்மதியாய் அத்தையின் விரல்களை அந்த அரை இருளில் தேடிப் பற்றிக் கொண்டாள் - குளிர்ச்சியான விரல்கள்.

ஆனால் இருவருக்குள்ளும் பாசம் வெப்பமாய் பரவி யிருந்தது.

''காலையில் விசித்ராவைக் குளிக்க வைத்து ஆசையாய் உணவை ஊட்டினாள் -



பள்ளி பஸ்ஸின் ஹாரன் ஒலியில் சிறுமியின் முகம் சாம்பியது.

''நான் போகணுமா?''

''பரீட்சை சமயமாச்சே - அதற்குப் பிறகு நீண்ட ஹாலிடே... தவிர வீட்டில இருந்தும்தான் என்ன பண்ணப் போறே... பிறகு விழா நடக்கும்... எனக்கு ஒத்தாசையாய் இருப்பே...''

''ம்ம்... எங்க ஸ்கூல்ல கூட அந்த டிக்கெட் விக்றாங்க, சித்தி.''

''குட். நம்பஊருக்குன்னு ஸ்கூல் வர்றதில் எல்லாருக்கும் அத்தனை ஆர்வம்.''

வாசலுக்கு வந்தவள் வருத்தமாய் கேட்டாள் -

''சரி சித்தி... ஆனா ஸ்கூல்லிருந்து நா வர்றப்ப நீங்க இருக்கமாட்டீங்களே...''

வீட்டிற்குள் நுழைய கேட்டைத் திறந்த குமுதாவின் புருவங்கள் உயர்ந்தன -

''அடே விசிக் குட்டி, இன்னைக்குமா உன்னை ஸ்கூலுக்குக் கிளப்பிட்டாங்க... பாவம்டீ... அதென்ன சித்தின்னு புது உறவு முறை? ஆன்ட்டின்னுதானே...?'' இழுத்தாள்.

''அது பிறருக்கு... நான் குமாரிக்குத் தங்கை முறை...''

''ஓ... அதான... ஆனா இத்தனை நாளாய் விட்டு இப்பத்தானே உங்களைப் பார்க்கறேன்... ஒரே தரம் அக்காவப் பார்க்க வந்தீங்க... இப்ப அவங்களே இல்லை..''

''பை பை சித்தி.''

பொடி வைத்துப் பேசியவளைக் கண்டுகொள்ளாமல் குழந்தைக்கு கையாட்டினாள் -

வீட்டினுள் சுயாதீனமாய் திரிந்த குமுதாவைப் பார்க்க பார்க்க எரிச்சல் மண்டியது.

நோயாளியான குமாரியைப் பராமரிக்க வீட்டில் ஏற்றப் பட்ட இந்தப் பெண்ணிற்கு இன்னும் இங்கென்ன வேலை?

மெல்லிய அரக்கு நிற வாயில் புடவையை மூங்கில் போன்ற உடம்பில் இறுகக் கட்டியபடி ஏனிங்கு அலைகிறாள்? யாருக்காய்...?

ஆனால் இதுபோன்ற கேள்விகளுடன் அதிகம் குமைய அவளுக்குப் பொழுதில்லை... அத்தையிடம் சொல்லிக் கொண்டு தன் வீட்டிற்குக் கிளம்பினாள் -

அங்கு காத்திருந்த வேலைகள் இவளைச் சுற்றிக் கொள்ள நாள் பறந்தே போனது.

மாலைப் பொழுது கருக்க, ஆலமரத்துக் கிளிகளின் கூச்சலும் ஓய்ந்து, சுற்றுப்புறமே அமைதியானது...

இவளுக்குள் மட்டும் ஏதோ ஒருவித அமைதி இன்மை... ஒரு மூலையில் பல்லி கத்தியதில் கூட உடம்பு திடுக்கிட்டது... அதே நேரம் அந்த பரிச்சயமான ஹாரன் ஒலியில் இதயத் திற்குள் இன்னுமொரு 'திடுக்'... ஆனால் இது உல்லாச உதறல்...!

வாசலுக்கு ஓடிப் போனாள்.

சின்ன டிபன் டப்பாவுடன் அதே ஆவலுடன் ஓடி வந்து கொண்டிருந்தது விசி.

''அடடே வாடா எந்தங்கம்... பரீட்சை எப்படி எழுதினே?''

''நீங்க காலைல சொல்லித் தந்ததுதான் கேட்டாங்க சித்தி.''

''அப்படியா? இதென்ன கையிலே?''



''எனக்கு இஷ்டமான பொம்ம பிஸ்கெட் - உங்களுக்குத் தா எடுத்துட்டு வந்தேன்...''

டப்பாவைத் திறந்து ஆந்தை வடிவிலிருந்த ஒரு பிஸ் கெட்டை இவளது வாயில் இட்ட அக்கணம் இவளுக்குள் நிறைந்து போனது.

ஆக தனக்கென்று ஒரு குடும்பம்... தன்னை நினைத்து ஓடி வரும் அன்பான மற்றொரு உயிருக்காய் ஏங்கித் தவிக்கிறது தனக்கும்...

ஊருக்கு உபகாரம் செய்தாலும் தனக்கென்று யார் என்ற மருகல் தன் உள்ளே இருக்கிறது.

''அப்பா எங்கே விசி?''

''டாக்டர் அங்கிள் வீட்ல வேலையிருக்காம்... வரும் போது என்னக் கூப்பிட்டுக்குவாங்க...''

''ஆயா சுண்டல் செய்தாங்க - சாப்பிடறியா?''

''உங்களுக்குச் சமைக்க தெரியுமா சித்தி?''

தூக்கி மடியில் இருத்தியபடி வினவினாள் -

''ஏன் கேட்கறே?''

''இந்தாங்க ஸ்டார் பிஸ்கெட்...''

''ம்ம்... சமையல் தெரியும் - ஆனா ரொம்ப மெனக்கெடற தில்லை - ஆயாதான் இருக்காங்களே?''

''கொழுக்கட்டை செய்வீங்களா?''

''தெரியும் - உனக்குப் பிடிக்குமா. எப்ப செய்லாம்?''

''நிஜம்மா? வெல்லம் பப்பெல்லாம் போட்டு...?''

''தேங்காயும்தான்... அடுத்தாப்பல உங்க வீட்டுக்கு வர்ற போது சேர்ந்தே செய்வோம்...''

''இப்ப இன்னொன்னும் நீங்க பாக்கணும்.''

''காட்டேன்.''

வெளியே ஓடிய சிறுமி அங்கிருந்தே கேட்டாள் -

''உங்களுக்குச் சத்தம்னா பிக்குமா பிக்காதா?''

சற்று முன்பு பல்லியின் பேச்சுகூட உதறத்தான் செய்தது. ஆனால் குழந்தையின் பேச்சால் வீடே களையாகி விட்டதே.

''உன்னுதெல்லாம் பிடிக்கும்தான்...'' சிறுமியை உச்சி முகர்ந்தவள் அதன் கையிலிருந்த பொருளை ஆர்வமாய் கண்டாள்.

''இதென்ன 'டப்டப்' வண்டியா?''

''அய்... நானும் அப்படித்தான் சொல்வேன்'' - விசித்ராவின் பச்சரிசிப் பற்கள் அனைத்தும் தெரிந்தன.

தரையில் வைத்து கயிறால் இழுக்கப்பட்ட அச்சிறு மாட்டு வண்டியின் பொம்மைச் சக்கரங்கள் சுழன்றன... அந்த லயத்திற்கேற்ப 'டப்டப்' என நடுவிலிருந்த முரசில் தட்டி ஒலியெழுப்பியது... அதில் பொருத்தப்பட்ட ஒரு குச்சி.

''உங்கப்பா செய்து தந்தாரா?''

''ஆமா... ஜிகினா பேப்பர் ஒட்டி... அழகா இருந்துச்சு...''

''நானும் சின்ன வயசில இதை இழுத்தபடி ஓடுவேன்...''

''அப்ப உங்களுக்கும் பிக்குமா? அம்மாக்கு இது பிக்காது...'' வருத்தமாய் சொன்னாள்.

''சுகமில்லாமல் படுத்திருந்தபோது... சப்தம் தொந்தரவாய் இருந்திருக்கும்டா சமாதானம் சொன்னாள்.''

''கொழுக்கட்ட கூட செய்தே தந்ததில்லியே? மத்த அம்மால்லாம் செய்வாங்க?''

''முடிஞ்சா செய்து தரமாட்டாங்களா?''

''இந்த வண்டி கத்துதுன்னு தூக்கிப் போட்டுட்டாங்க...''



''அதான் சொன்னேனே விசிம்மா... தலைவலியோடு படுத்திருக்க காதைக் குடையும்... கஷ்டமாயிருக்கும்...''

''நானே அம்மாக்கு கஷ்டந்தான்...''

கணம் திடுக்கிட்டு பின் தேற்றினாள் -

''நீ பொக்கிஷம்டீ, செல்லம்.''

விசித்ராவின் முகமலர் கூம்பியது.

''இல்ல சித்தி - அம்மாக்கு என்னை பிக்காது... அவங்களை படுக்கவே வச்சுட்டேனே?''

''அப்படி யார் சொன்னா?'' - 'குமுதாவா' என்ற கேள்வியை அடக்கினாள்.

''அம்மாதான் - அவங்க ரூம் போனா தொரத்திட்வாங்க... படுக்க வச்ச... இப்ப கொல்ல வர்றியான்னு?''

இருவரின் கண்களிலும் நீர் கோர்த்துக் கொண்டது.

''உடம்பின் வேதனை தாங்காமல், சொல்லிட்டாங்கம்மா கட்டிலில் கால் முட்டியைத் தட்டிட்டு 'சனியனே'ன்னு கட்டிலைத்தானே திட்டறோம் - வலிக்கு அதுவா பொறுப்பு... அது நம்ப முட்டாள்த்தனம்...''

''அப்போ அம்மா செத்தது...''

''நோய்தாம்மா காரணம் - யாருக்கு எப்போ வியாதி வரும்னு யாருக்கும் தெரியாது - அம்மாக்கு உம்மேல் ஆசைதான். இனி இப்படியெல்லாம் தப்பாய் நினைக்கவேக் கூடாது - என்னடா?''

முத்தமிட்டு இட்டுதேற்ற, குழந்தையின் முகம் தெளிவானது.

வெளியே ஜீப்பின் சன்ன உறுமல் கேட்க, விசி கிளம்பினாள் -

''அடுத்த தரம் பாட்டியையும் கட்டாயம் கூட்டிட்டு வா விசி''

''கூப்பித்தேன் சித்தி... அவங்களுக்கு நிய்ய வேலை... இனிமே குமுதாக்கா வேலையும் அவங்கதான் பாக்கணும்...''

''ஏன்?''

''நாளையிலேந்து அவங்களை அப்பா வேலைக்கு வர வேணாம்ன்ட்டாங்க... அக்கா அழுதெல்லாம் பாத்துச்ச... அப்பா திட்டினாங்க...''

''ஓ?''

விடை தந்து கையாட்டியவளுக்கு நிம்மதியாகவும் சற்று மகிழ்வாகவும் கூட இருந்தது... விநோதன் அத்தனை மோசமானவனல்ல என்ற எண்ணம் தந்த மகிழ்வோ...?

## 14

'சேவல் கூவி
செங்கதிரைக் கூப்பிட்டது
செங்கதிர் வந்து
இருட்டைச்
சிறுகச் சிறுகச் சாப்பிட்டது'

என்ற வாலியின் கவிதை வரிகளை கண் எதிரே கண்டு கொண்டிருந்தாள் -

கண்கள் உதயத்தின் ரம்யத்தைப் பருகியது போல ஆவி பறந்த காபியை நாவு ருசித்தது.

மன நிறைவுடனான சில பொழுதுகளில் இதுவும் ஒன்று என்று அக்கணத்தை மனத்துக்குள் பத்திரப்படுத்தினாள் - பள்ளிக்கான நன்கொடை திரட்டும் விழா இத்தனை



அம்சமாய் நடக்கும் என்று அவளே எதிர்பார்க்கவில்லை. இத்தனை கூட்டத்தைக் கூட்டினால் என்னென்ன குளறுபடிகள் எழுமோ... கிராமத்து ஜனம், வரும் நவீன இசை நிபுணர்களை ரசிப்பார்களா... கலைஞர்களுக்கும் ரசிகர்களுக்கும் திருப்தி வருமா என்ற பதட்டமெல்லாம் கரைந்து போய் மனம் நிறைந்திருந்தது.

ஊரின் பெரியவர்களோடு அசோக்கும் முனைய, திணறாமல் திகைக்காமல், பள்ளிக்கு செலவழிக்கக்கூடிய அளவில் தொகையும் சேர்ந்திருந்தது. ஆசிரியர்கள் தங்குமளவில் சின்ன விடுதியும் எழுப்பி விடலாம் -

ஆனால் அந்த நிறைவான கணத்தை நீடிக்க விடக்கூடாது என்பதாய் போன் கிணுகிணுத்தது -

கூப்பிட்டது விசித்ராவின் பதட்டமான குரல் -

''பாட்டி கீழ வுழுந்திட்டாங்க, சித்தி...''

''கடவுளே - அப்பா எங்கேம்மா?''

''அவங்க... அவங்கதான் பாட்டிய ஆஸ்பத்திரிக்கு கூட்டிட்டுப் போயிருக்காங்க... வலிக்குதுன்னு பாட்டி அழுதாங்க சித்தி...''

''நீ வீட்ல தனியாவா இருக்க விசிம்மா?''

''ம்ம்... வீடு பூட்ட முடியாதுன்னு...''

''தோ - பத்தே நிமிஷத்துல வந்துடறேன்...''

மேஸ்திரியின் உடைசல் டூவீலரின் பின்னே தொற்றிக் கொண்டு கிளம்பினாள். இதுபோன்ற நேரத்தில் குழந்தையைத் தனியே விடலாமா? நல்ல வேளையாய் விசியின் நோட்டில் தன் செல் நம்பரை எழுதி வைத்தேன் - என்றெல்லாம் நினைத்தபடி விநோதனின் வீடு போய் சேர்ந்தாள் -

விசித்ராவை அமைதிப்படுத்துவதற்காய் கொழுக்கட்டை செய்யப்பட்டது... அதன் தயாரிப்பில் மும்முரமாய்

ஈடுபட்டதில் விசியின் பதட்டம் ஆவியாகிப் போக, வீட்டையும் சேர்ந்து சுத்தம் செய்ய ஆரம்பித்தார்கள் -

ஆயா மூலம் தோசை மாவை வரவழைத்து சட்னியுடன் இரவு உணவை தயாராய் சமையலறையில் வைத்தாள் -

கடைசியாய் படுக்கை விரிப்புக்களையும் மாற்ற, அறை பளிச்சென்று தெரிந்தது -

அயர்ந்து வீடு திரும்பிய விநோதனிடம் அத்தையைப் பற்றி விசாரித்தாள் -

''டவுனிற்குக் கூட்டிப் போக வேண்டியதாயிடுச்சு... எக்ஸ்ரே எடுத்தாச்சு... காலைல ஆர்த்தோ ஸ்பெஷலிஸ்ட் வந்து பார்க்கும் வரை அங்கதான் இருக்கணும்னு...''

''நாளைக்கு பாட்டி வந்திருவாங்கப்பா... இப்ப சித்தி நம்ம கூட இருக்கட்டுமே?'' விசி கெஞ்சினாள் -

''ஊர்ல அவங்களுக்கு நல்ல பேர் - அதை நாம கெடுத்திடக் கூடாதில்லையா? அவங்களைப் போய் அவங்க வீட்டிலயே விட்டிடுவோம்...''

நக்கல்தான் - ஆனால் விழாவிற்காய் விநோதனும் முழுமூச்சாய் உழைத்ததை மறக்க முடியாது... கலைஞர்கள் இங்கு கூட்டி வருவதிலும், வசதியாய் தங்க வைப்பதிலும் எத்தனை ஒத்தாசையாய் நின்றான்...

இவளை இறக்கி விட்டவன் மறுபுறம் பார்த்தபடி பேசினான் -

''நன்றி விஜு... விசியைப் பார்த்துக்கிட்டதிற்கு களைத்து வந்த எனக்கு தோசையும் கொழுக்கட்டையுமாய் பரிமாறின துக்கு... வீடு கூட சுத்தமாய் தெரிஞ்சது...''

''நாளை விசிக்கு ஸ்கூல் இருக்குதே... உதவிக்கு வரவா?''



''சமாளிச்சிடுவோம்... இதுவே பெரிய உதவி. குட்டிப் பெண் தனியாய் வீட்டில் இருப்பாளேன்னு பதறியடிச்சு வந்தேன்... அம்மாவும் அங்கே பேத்தியைப் பற்றிதான் புலம்பினாங்க...''

''அவசர ஆத்திரத்திற்கு உதவத்தானே உறவு? என்னிடம் ஒரு வார்த்தை சொல்லிட்டு கிளம்பியிருக்கலாம். நீங்க...''

''இன்னும் எங்களை உறவாய் நினைக்கறதுக்கு நன்றி..''

மெள்ள இவள் புறமாய் திரும்பினான்.

''எனக்கும் வேறு யாரும் இல்லையே அத்தான்...''

இருளில் அவனது விழிகள் பளபளத்தன -

''அப்பா நாளைக்கு நான் கொஞ்ச நேரம் சித்தி வீட்டுக்குப் போட்டுமா?''

''ம்ம்...''

''நீங்களும் வரலாமே - இருந்து சாப்பிட்டிட்டு போகலாம்...'' இருளில் அவனது முக பாவனையை புரிந்து கொள்ள இயலவில்லை. தயக்கமா... அல்லது என்ன சொல்லி இந்த அழைப்பைத் தட்டிக் கழிப்பது என்ற குழப்பமா?

''அப்பாக்கு நிறைய வேலை இருக்கும் போல விசி... அவங்க அலைய வேண்டாம்- நான் கேரியரில் சாப்பாட்டை உங்க வீட்டுக்கே எடுத்து வரேன்... நேரமிருந்தால் அங்கேயும் வந்து சாப்பிடுவார்...''

இவள்தான் அவனுக்காய் பதில் தந்தாள் -

''அப்பிடியாப்பா?''

''சித்தி சொல்றபடிதான்...''

இவளுக்கு ஏனோ மிக மகிழ்வாய் போனது... பறந்து விடலாமோ என்றளவில் உடலுமே கூட சிறகுபோல லேசாய்... பாரமின்றி...

ஒரு சின்ன ஜீவனால் வீட்டின் களையே மாறிவிடக் கூடும் என்பது புரிந்தது விஜுலாவிற்கு.

சதா ஓடித்திரிந்த விசித்ரா, நூறு கேள்விகள் கேட்டாள். அவளைப் பார்த்த பானு கூட வியந்து போனாள் -

''உன்னோட பழகியதில் சின்னது கூட மாறி, சந்தோஷமாய் இருக்குது விஜுலா'' என்று.

விசித்ரா பள்ளிக்குப் போன பின் இரு பெண்களும் தோட்டத்தைச் சுற்றியபடி அளவளாவினார்கள்.

''விசித்ராவின் பேச்சும் சிரிப்பும் புதுசாய் இருக்குது விஜுலா... முன்னே தண்ணி விடாதத் தளிர் போல வாடிக் கிடப்பா...''

''தன் தாய்க்கேத் தன்னைப் பிடிக்கலைங்கற கலக்கம், ஏக்கம் அதுக்கு...''

''குமாரியும் பாவம்தான்... அவ யாரையும் நேசிக்கவே அஞ்சினா... டாக்டரிடம் மனம்விட்டுப் பேச, அவர் புரிஞ்சுகிட்டது. அதைத்தான் - அன்பு... அதீத அன்பு தன்னை பலவீனப்படுத்தும்னு நினைச்சா... போல... தான் அன்பு செலுத்துபவருக்காக எதுவானாலும் தந்து அவரை எப்படியானாலும் தன் கைக்குள் வைக்கணும்ற வெறி வருது... அந்த வெறி தன்னை அடிமையும் படுத்திடுதுன்னு புலம்பினாளாம்... அதனாலேயே நான் எல்லாரிடமும் எரிஞ்சு விழறேன்... விலகிடறேன்னு... சொன்னாளாம்...''

உணர்வின் மிகுதியால் விஜுலாவின் முகம் சிவந்து துடித்தது.

''வெறுப்பைத் தன் கேடகமாக்கி அதன் பின்னே ஒளிஞ்சு வாழ்ந்திருக்கா...''

''சாவு அவளுக்கும், அவளது வெறுப்புக்கு ஆளானவங்களுக்குமே ஒரு விடுதலையாயிடுச்சு... மிஸ்டர் விநோதன்



கூட இப்ப சாந்தமாய் தெரியறார்... அவருக்கும் இதுவரை சோதனைக் காலம்தான் - என் பாட்டி எப்போவும் சொல்வாங்க -

''மனைவியைக் கொண்டுதான் புருஷனின் உயர்வுன்னு. கணவன் பால் என்றால் மனைவி அவனில் சர்க்கரையாய் கலந்து அவனை மேம்படுத்துவது முதனிலை தாம்பத்யம். சில மனைவிகள் பாலில் டிகாக்ஷன் போல கலந்து அதன்நிறம், சுவையை மாற்றிடுவாங்க...''

''அது இரண்டாம் நிலை தாம்பத்யமா?''

''தயிராய் பாலில் கலந்து திரித்து விடுவது - அதாவது கணவனின் மொத்த இயல்பையுமே மாற்றி விடுவது மோசமான நிலை...''

''பாவம் அத்தானுக்கு வயசு 32 தான் இருக்கும்... அதற்குள் அவருக்கு இத்தனை சோதனைகள்...''

இப்படி சொல்லும்போதே விஜுலாவிற்கு வரும் வாரம் விநோதனின் பிறந்தநாள் என்பதும் ஞாபகத்திற்கு வந்தது.

''ஒரு நல்ல சேதி விஜுலா... உன் அத்தைக்கு வெறும் ஹேர்லைன் க்ராக்தான் எலும்பு முறிவில்லை. சில வாரங்கள் ஓய்வாய் இருந்தால் போதும் - வீட்டை நீ பொறுப்பாய் கவனிச்சுக்கறே போல...?''

''ஏதோ என்னாலானது...''

''இந்த அன்பான அக்கறைதான் நிஜமான மருந்து விஜுலா... அத்தைகூட இப்ப இதமாய் இணக்கமாய் பேசறாங்க... தனக்கும் ரெண்டு பேர் உண்டுங்கற தெம்பு.''

''எனக்கும் அவங்களை விட்டா யாரிருக்கா? அன்பைப் பெறுவது ஒரு சந்தோஷம்னா, நாம் அன்பு காட்ட நமக்குன்னு சிலர் இருப்பதும் கொடுப்பனைதானே?''

''ம்ம்... செங்கோட்டையிலிருந்து போன் வந்தது. நம்ப ஆர்டர் செய்த பெஞ்ச், டேபிள் எல்லாம் ரெடியாம்...''

''இந்த வாரமே கிரஷ்ஷை ஆரம்பிச்சிட்டா என்ன பானு?''

''பொறுப்பாய்... அதை நடத்த...''

''டெய்ஸி டீச்சர், ஆயா, ஓடியாட ரெண்டு பெண்கள் போதாது...?''

''தாராளம்... ம்ம்... அப்புறம் முக்கியமான விஷயம் - உன் செல்போனை சார்ஜ் செய்ய மறந்திட்டே போல... வக்கீல் ஜுனியர் அசோக் எனக்கு போன் பண்ணிட்டார். நீ எப்படி இருக்கே, எப்ப சென்னை வர்ரேன்னு என்னைத் துளைச்செடுத்தார்... உன் மேல நிறைய பிரியம் விஜுலா அவருக்கு... அதைப் புரிஞ்சுக்கோ... உடனே அவருக்கு போன் செய்து பேசிடு... என்ன? ஊருக்கு உபகாரம் பண்றீங்க ரெண்டு பேரும் ஆனா உங்க வாழ்க்கையை அலட்சியம் பண்ணிடக்கூடாது... ம்ம்?''

கரிசனையான ஆலோசனை... இவளுக்குள் அது வேலை செய்தது...




அந்த மாடிப்படிகளை ஏறவே பாதம் கூசியது.

மாடியில்தான் குமாரியின் அறை - அதையும் சுத்தப்படுத்திவிடலாம் என்று வந்தவளுக்குள் தமக்கையைப் பற்றிய நூறு நினைவுகள்...

இருண்ட அறையில் மக்கின நாற்றம் -

ஜன்னல்களைத் திறந்து விட வெளிச்சம் காற்றும் உள்ளே நுழைந்து அவற்றை விரட்டின.



வேலைக்காரி இவளிடம்,

''நீங்க போங்கம்மா - இம்புட்டு தூசாய் கிடக்குது - நா முதல்ல தண்ணி தெளிச்சு கூட்டிடறேன் - பிறவு வாங்க'' என்று சொல்ல தூசி படிந்த தலையணை உறை, படுக்கை விரிப்புகளுடன் இவள் கீழிறங்கினாள்.

சொல்லி விட்டிருந்ததால் வண்ணாத்தியும் வந்து திரைச்சீலைகளைக் கழட்ட, கழுவி விட என்று உதவியதில் சற்று நேரத்தில் மேல் அறையும் சுத்தமானது. அலமாரிகளில் அடைந்து கிடந்த துணிகளை என்ன செய்யலாம் என்று யோசனையாய் கிளறிய போதுதான் அது கையில் தட்டியது...

சிவப்பு மரத்துண்டில் இழைத்த நகைப் பெட்டி - யாழி முகக் கைப்பிடியுடனானது.

அவள் பார்வை தானாய் தனது மணிக்கட்டின் தழும்பைப் பார்த்தது - இதற்காக நேர்ந்த இழுபறியில் ஏற்பட்ட வடுவல்லவா?

மெள்ள திறந்தாள் - உள்ளே நகை ஏதும் இருக்குமோ?

இத்தனை அஜாக்ரதையாய் இங்கு கிடந்திருக்கிறதே...? உள்ளே இருந்தது ஒரு புத்தகம். ஆர்வமுடன் எடுத்துப் பிரித்தாள். இல்லை - அது ஒரு டைரி.

கருப்பில் *1998* என்று தங்க எழுத்துக்களுடன் இருந்தது. அது குமாரிக்கு திருமணமான ஆண்டு... மேலாக பக்கங்களைப் புரட்டினாள் - நிறைய வெள்ளைப் பக்கங்கள்தான்... எழுதப்பட்ட சில பக்கங்களில் தம்பதிகளின் அந்தரங்கம் பதிவாகி இருக்குமோ?

இதை இத்தனை பத்திரப்படுத்தி வைக்க என்ன காரணம்?

ஏதோ குமாரியின் கையையே பற்றியிருப்பது போல ஒரு உணர்வில் இவள் கண்கள் கலங்கின -

தன்னுடனேயே வளர்ந்து, தன்னவனாய் எண்ணிய வனையே அவளும் நேசித்து, பின் கட்டிய அவனுடன் ஒதுங்கி இப்போது மறைந்தே போன ஓர் உறவு.

நாளை விநோதனின் பிறந்த நாள் - அவனுக்குப் பரிசாகத் தர விஜயநாத மாமாவின் கைக்கெடிகாரத்தை எடுத்து வைத்திருந்தாள் - விலையுயர்ந்ததில்லை ஆனாலும் அவன் தந்தை இறுதி வரை கையில் கட்டியிருந்தது. தன்னை மகன் என்று அழைத்து, அணைக்காத ஆற்றாமையை தீர்க்கக் கூடிய ஒரு எளிய பரிசுப் பொருள் - அதை இந்த நகைப்பெட்டியில் குமாரியின் டைரியோடு வைத்து தந்து விடலாம்.

கீழே விநோதனின் அறையில் சம்பங்கிப் பூக்களுடன் ஒரு குவளையை அலங்காரமாய் வைத்தவள் - அதனருகே இந்த பெட்டியையும் துடைத்து வைத்தாள் -

கிரஷ் நல்லபடி ஆரம்பிக்கப்பட்டு நடக்கிறது - இதேபோல பள்ளியும் செயல்பட ஆரம்பித்தால்... தான் இங்கிருந்து கிளம்பி விடலாம்... இனி இங்கு வராதபடி சென்னை யிலேயே ஒரு வேலையைத் தேடிக் கொண்டு... கூடவே அசோக்கின் நினைப்பும் அலைக்கழித்தது... தான் அன்று சொன்னதெல்லாம் அவனுக்குப் புரிந்ததா... ஏற்பானா?

மறுநாள் விடியலிலேயே விழிப்பு தட்டியது.

இன்று விநோதனின் பிறந்தநாள் என்ற ஆர்வத்துடன் -

காலைக்கடன்களை முடித்தவள் ஜன்னலின் வழியே கிழக்கை, உதயத்திற்காய் பார்த்தாள் -

கோடி ஆண்டுகளாய் முளைக்கும் அதே சூரியன்தான்... ஆனால் இன்று புதிதாய் தெரிந்தான்.

காற்றும் ஒன்றும் புதியதல்ல... ஆனால் இந்த குளிர்மாத அதிகாலையில் அவளை வருடியதோ புதிதாய் பிறந்த சிசுவின் சுவாசம் போல அத்தனை தூயதாய் பட்டது.



கசங்கியிருந்த புடவையை உதறி மீண்டும் சுற்றியவள் ஆழ மூச்செடுத்தபடி வெளியே நடந்தாள் -

கண்கள் இடுங்கின -

ஆலம்மேட்டில் நிற்பது யார்?

அந்த உயரம் அது விநோதன்தான் என்றது.

கால்கள் தயங்கின என்றாலும் அவற்றை விரட்டினாள் -

அதிகாலமே அவனை வாழ்த்தி விட வேணுமென்ற வேகம். நெருங்கியவளையே பார்த்தபடி சிலையாய் நின்றிருந்தான் -

செருமிக் கொண்டு மெள்ள சொன்னாள் -

''பிறந்தநாள் வாழ்த்துக்கள் அத்தான்...''

''நன்றி - வாழ்த்துக்கும் -பரிசுக்கும்...''

அவன் கண்கள் சிவந்து கிடந்தன -

''சரியாய் தூங்கலையா... எப்போதிருந்து இங்க நிக்கறீங்க?''

''என் தப்பு புரிஞ்சதிலேருந்து - சீக்கிரம் சென்னை போகப் போறதாய் பானுவிடம் சொன்னியாம்...''

''ம்ம்...''

''அசோக் அங்கிருப்பதாலா?''

''அவர் ஒருவேளை அப்படி ஏதும் நினைச்சிருக்கலாம் - அது அப்படி ஒரு நேசம் தப்புன்றதை அவருக்குச் சொல் லிட்டேன் - குமுதாவை உங்களோட இணைச்சு ஊர் பலதும் பேசுச்சு... ஆனா அதில் உண்மையில்லாதது போல... இதிலும்...''

அவன் முகத்தில்தான் எத்தனை நிம்மதி..!

''தாங்க்ஸ் விஜு... என்னை நம்புவதற்காய் ரொம்ப நன்றி... அப்போது - அதாவது ஆறு வருஷங்களுக்கு முன்பு

என்னை ஏன் நம்பலைன்றதும் இப்ப புரியுது... புரியாமல் அநாவசியமான ஆத்திரத்தில் நான் தான் பெரிய தப்பைப் பண்ணிட்டேன்.''

என்ன என்பதாய் பார்த்தாள்.

''என்னை மன்னிச்சிடு விஜு... குமாரி உன்னைப் பற்றிக் கட்டிய கதைகளை நம்பி, உன்னைப் பழிவாங்கறதாய் நினைச்சுதான் குமாரியை அத்தனை அவசரமாய் கல்யாணம் பண்ணினேன்...''

''குமாரி உங்களை நிஜமாவே நேசிச்சாள் அத்தான்...''

''தெரியும் - அது ஒண்ணுதான் ஆறுதல் - அவளுக்கேனும் ஆசைப்படி வாழ முடிஞ்சுதேன்றது... ஆனா அவளும் நிம்மதியாய் வாழலை... நான் இன்னும் பொறுமையாய் இருந்திருக்கணும் - ஆனா அவள் உன்னைப் பற்றி, அதாவது நீ மூணாம்தாரமாய் ஒரு கிழவனுக்கு வாக்குப்பட்டதைச் சொன்னதை நம்பி அவளைக் கல்யாணம் பண்ணிய நான், அது உண்மையில்லை, நீ அவருக்கு மகள் போலன்றது இப்போது புரிய.... ச்சே... நொந்துட்டேன்...''

''இப்ப யார் சொன்னா?''

''உண்மை கொஞ்சம் மெதுவாய் பரவுது - ஆனாலும் பல நல்லவங்க வாயிலேருந்து வந்ததே - இனி நமக்கு ஒரு புது வாழ்வு அமையுமா விஜு...''

இவளுக்குள்ளே ஏதோ அதிரத் துவங்கியது. இதேபோல ஏழெட்டு வருடங்களுக்கு முன்பு அவன் புதுவாழ்வு பற்றி பேசியதுண்டு... அதை வெட்கமும் வியப்புமாய் தான் கேட்டு நின்றதும்... நிழலாய் நினைவிலுண்டு.

மணல்வீடு போல அந்த ஆசைகள் சிதைந்தது ஏன்?

அதைக் கலைத்தது குமாரியா?



கொடிய விதியின் கைகள் அல்லவா?

இல்லை விநோதனின் முறைகெட்ட மோகம்...

அந்த வெறுப்பு அவளின் முகத்தில் தெரிந்தது போலும்...

''இன்னும் என்ன கோபம் விஜு? நான் குமாரியிடம் தவறாய் நடந்ததாய் அவள் சொன்னதை நம்பித்தானே என்னிடம் ஒரு வார்த்தைகூட இல்லாமல் படிப்புன்ற சாக்கில் நீ ஊரை விட்டுப் போனே?''

''குமாரி உங்கமேல் ஆசைப்படுவது தெரிஞ்சதுமே விலகிட்டேன் - பிறகு உங்களின் நடத்தை...''

''குமாரி சொன்னதை முழுக்க நம்பினே... ஆனா என்மீது நம்பிக்கை இல்லை இல்லையா?''

''அந்த மழை இரவில் அக்காவை நீங்க கட்டியணைச்சதாய் குமாரி சொன்னதை நான் முதலில் முழுக்க நம்பலை... ஆனா அது உண்மைதான் எனும் ஆதாரத்தை உங்கக் கையெழுத்திலேயே கண்ட பிறகு... எப்படி நம்பாதிருக்க முடியும்?''

''என்ன சொல்றே? தெளிவாய்ச் சொல்லு...''

புருவம் சுருக்கிக் கேட்டவனின் முகம் ஒரு சிறுவனது போலத் தோன்றியது.

''அக்கா அப்படி சொன்ன மறுநாள் உங்க வீட்டிற்கு வந்தேன் - நீங்க குமாரிக்கு எழுத ஆரம்பித்த கடிதம் மேசையில் இருந்தது... 'நேற்றிரவு நடந்த சம்பவத்திற்கு வருந்துவதாய்' ஆரம்பித்திருந்தீங்க...''

''ஆமா'' யோசனையூடே சொன்னான்.

''அதை விட வேறென்ன ஆதாரம் வேணும்... நீங்க ஆசைப்பட்டது அக்காவைத்தான்றதுக்கு...''

''அரைகுறை அறிவு ஆபத்தாயிருக்குது விஜு. என்னிடம் வந்து தீர விசாரித்திருக்கலாமே? நான் அந்தக் கடிதத்தைக் குமாரிக்கு எழுதினது உண்மை அந்த ராத்திரியின் சம்பவமும் நிஜம் -

ஆனால் அது என்னங்கறதில்தான் வித்தியாசமே அந்த மழைநாள்... ஷெட்டில் ஒதுங்கின என்னை அங்கே நின்ற குமாரி வந்து கட்டிகிட்டா... முத்தமிட முயற்சி பண்ணினா... பிதற்றினாள் - இனி இதுபோல தப்பாய் நடந்தால் நேரே மாமாவிடம் நான் சொல்லிடுவேன் - ஆக அதுபோன்ற எண்ணத்தையே தவிர்த்திடுன்னு தான் எழுதினேன் - முதல் வரியை எழுதிட்டு நான் எதற்கோ எழுந்து பின்புறம் போனப்ப வீட்டிற்கு வந்த நீ அதை மட்டும் வாசிச்சுட்டு.''

இவள் விழிகள் விரிய விக்கித்து நின்றாள் -

''தவிர நான் உன்னை விரும்புவதாயும்... உன்னைத் தவிர எம்மனசில் வேறு யாருக்கும் இடமில்லைன்னும்... அதே கடிதத்தில் எழுதினேன்... என்ன அப்படி பார்க்கறே? குமாரியின் டைரிக்குள்ளே அந்தக் கடிதத்தைத்தான் பத்திரப்படுத்தி வைத்திருந்தா...''

அவன் எடுத்து நீட்டிய பழுப்பு நிற கடிதத்தை படர்ந்து கொண்டிருந்த சூரிய செவ்வொளியில் அவசரமாய் வாசித்தாள் -

பல வருடங்களுக்கு முன் அவள் வாசித்து வெறுத்து அதே முதல் இரு வரிகள்... பிறகு விநோதன் சொன்னதைப் போலவே!

பெருமகிழ்வின் அலை ஒன்று அவளை அலசிச் சென்றது...

உடலெங்கும் நிம்மதியின் சுக தளர்ச்சி...

''நான் செய்தது பெரிய தப்பு விஜு... நீ ஒதுங்கியதும் நானும் தனித்தே நின்றிருக்கலாம் - குமாரியைக் கல்யாணம் செய்தது பெரிய தப்பு... என்னால் மனமொன்றி அவளை சேர்ந்திருக்க முடியலை... முயற்சி செய்தேன்... ஆனா முடியலை... நான் ஆசைப்பட்டவள் கிடைக்கலைன்னா என்னை விரும்பியவளையாவது சேர்ந்து இருக்க செய்த முயற்சி என்னளவில் தோல்விதான்... ஏன்னா கையில கிடைச்ச பொம்மையைச் சிதைத்து தூக்கி எறிவது போல குமாரி என்னைப் பந்தாடினா... விசிக்குட்டிக்காக பொறுத்துக் கிட்டேன்... ஆனால் உலகத்தையே வெறுத்தேன்... உள்ளே ரணமும் சீழுமாய் இருக்க நானும் அருவெறுப்பாய் மாறிப் போனேன்... உன்னை வார்த்தையால் கீறினேன்.



''மறந்திடுங்க அத்தான்...''

''குமாரியால் தன் துரோகத்தை மறக்க முடியலை... ஏதோ ஒரு குற்ற அரிப்புதான் அவளை அடிச்சுச் சாய்த்திருக்கும்னு மருத்துவர் கூட சொன்னார் - அவளுக்கு அதிலிருந்து மீள முடியலை - குடிச்சு உளறிய அவளிடம் என்னால் பாசங்காட்ட முடியலை... ஆசைங்கறது பவித்ரமாய், கண்ணியமாய் இருக்கணும்... கட்டுப்பாடில்லாமல் பாய்ந்து நம் வாழ்க்கைகளை நாசமாக்கிடுச்சு...''

''அதைச் சரியாக்கணும்னுதான் இந்த டைரியை பத்திரமாய், உங்கக் கடிதத்தோட வச்சிருக்கா...''

''அவனது பொய்களை, ஆசைகளை அப்பப்ப எழுதியிருக்கா... கடைசியாய் நம்ப இடையிலே அவ நிற்க விரும்பலைன்றதையும்...''

கதிரவனின் ஒளி கூடக் கூட தெளிவாய் தெரிந்த நேச முகங்களை ஒருவருக்கொருவர் வாஞ்சையுடன் பார்த் திருந்தனர் -

விஜய விலாசம் கூட முழு வெண்மையில் அசாதாரண அழகுடன் நின்றது.

"அழகான வீடு... ஆனால் சபிக்கப்பட்டதோ விஜு... இங்கிருந்த யாருக்குமே நிம்மதியான வாழ்வு அமையலை... என் எண்ணம் முட்டாள்தனமாய் தோணலாம்... ஆனால்..."

"எனக்கும் அப்படி தோணியது அத்தான் - அதுதான் நான் உங்களை இதை வாங்க விடலை" பெரும் பணம் தந்து வாங்கி ஊராரின் நல்லதிற்காய் பயன்படுத்தினால்... இதன் தோஷம் கழியுமோ எனும் எண்ணம்! பின்னால் வசதியாய் வீடும் கட்டினேன்... அத்தை இங்கு வந்திருந்து பள்ளியை நிர்வகிக்க ஏறக்குறைய சம்மதித்தாச்சு... இனி எல்லாம் சரியாயிடும்..."

"நீ... உன் எதிர்காலம்...?"

அதுவரை ஆலமரத்தின் ஆடும் விழுதுகளைப் பார்த்திருந் தவள் அவனை நோக்கினாள்... கண்கள் கலந்து தழுவின.

"நாமும் இந்த ஊரிலேயே தங்கி இல்லை... நீ எங்கே போகணும்னாலும் நானும் விசியும் உங்ககூட வரத் தயார் விஜு... இனி நீயில்லாமல் என்னால வாழ முடியாது... ஆனா நான் ஒரு குழந்தையோட இருக்கும் மனைவியை இழந்தவன்... நீ அற்புதமாய், அறிவும் அழகுமாய்..."

"அதனால்?"

"பேராசைதான்... ஆனா..."

"ஆனால் என்னைப் பிறந்தநாள் பரிசாய் உங்களுக்குத் தந்திடலாம்னு நினைக்கறேன்" என்றாள் சிறு வெட்கத்துடன்.

கதிரவனின் செம்மையோடு அவள் முகமும் சூரிய வெம்மையோடு அவன் விழிகளும் போட்டியிட்டன.

"தோஷமெல்லாம் போச்சு விஜு... இனி சந்தோஷம் மட்டும் தான்" அவள் கைகளை எடுத்துத் தன் கன்னங்களில் பதித்த வன் பின் மாறி மாறி உள்ளங்கைகளில் முத்தமிட்டான்...

ஆலம்மேட்டு கிளிகள் மேலும் உற்சாகமாய் கூச்சலிட்டன...

⌘